349

கலைமகள்

பொங்கல் மலர்

Jan 44

KALAIMAGAL PONGAL NUMBER

211, N20Km
N44.25.1
157837

கூந்தலுக்கு
வளர்ச்சி, பிரகாசம், சுகந்தம் வேண்டுமானால்

பாத்கேட்டின் சுகந்தமான ஆமணக்கெண்ணெய்

உபயோகியுங்கள்

உங்கள் மூதாதையர்
உபயோகித்து வந்தது.

போலியைக் கண்டு
ஏமாறாதீர்கள்

Bathgate & Co.
CHEMISTS CALCUTTA

பாத்கேட் அண்டு கம்பெனி
மருந்து வியாபாரிகள் : : கல்கத்தா

சென்னை டிஸ்டிரிபியூடர்கள் :
ஒக்ளே, பௌடன் அண்டு கோ. (மதராஸ்) லிமிடெட்,
11-12, முதல் லைன் பீச், சென்னை.

ஸ்ரீமதி. எம்.எஸ்.
ஸுப்புலக்ஷ்மியின்
புதிய "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டு

கண்ணோடுத்தாகிலும்
நிம்மேர்திரமதிமம்—2 பாகங்கள் } N 18218

H. SAMUEL

நீண்டகாலம் உபயோகிக்கக் கூடிய "எச். எம். வி."
— ஹைபிடெலிடி ஊசிகள் —

• ஒரு ஊசியினால் பல ரிகார்டு கணைப் பாட வைக்கலாம்

10 ஊசிகளடங்கிய பாக்கெட் 1-க்கு விலை ரூ. 2-4.

மதுரையில் நம்பிக்கையான ஜவுளி ஸ்டோர்

*

கலியாண காலங்களுக்கும், இதர விசேஷங்களுக்கும் தேவையான நவீனரக கைத்தறி அண்டு மில் சேலை, வேஷ்டி, துப்டா, கோட்டிங், ஷர்டிங், சீட்டி, பெட்ஷீட், கைலி, பனியன் வகையரா ஜவுளிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படுகின்றன.

தினுசு நாணயம்! **விலை சகாயம்!!**

இன்றே விஜயம் செய்யுங்கள் !!!

*

அல்லு பிரதர்ஸ்

HANDLOOM & PIECE GOODS MERCHANTS

40, மேலக் கோபுர வீதி, : : : : மதுரை.

(**A. S. Lakshmana Iyer**, *Managing Partner*).

யுத்த கால விலைவாசியினால் உங்கள் பணத்தின்

மதிப்புக் குறைகிறது.

டிபென்ஸ் பாண்டுகளிலும்

தேசீயச் சேமிப்புப் பத்திரங்களிலும்

பணத்தைச் சேமியுங்கள்

கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதம்

நல்ல ரக கலர் ஜவுளிகளை மக்கள் விரும்பி வாங்குவது எதற்காக ?

அதில் நெய்யப்பட்ட பாவுக்கும் உண்டைக்கும் உத்தரவாதமுடைய கெட்டிச் சாயம் ஏற்றப்பட்டிருப்பதனுல்தான் !

கை நெசவாளர்கள் அனைவரும் எமது உத்தரவாதமுள்ள



"உஷா" டிரேட் மார்க்

கலர் சாய பாவு நூல்களையே உபயோகிக்கின்றனர்.

தமிழ், ஆந்திரா, கன்னட, மலையாள ஜில்லாக்களில் எமது நூல்கள் ஏராளமாகச் செலவாகின்றன

M. K. Rajagopalier,
Fast Colour Yarn Merchant,
5, Manjanakara Street,
MADURA.

Branches:—

3/76, Mint Street,
P. T. MADRAS.

8/962, Manjukonda Street,
VIZIANAGARAM CITY.

மு. கு. ராஜகோபாலய்யர்,
கலர் நூல் வியாபாரம்,
5, மஞ்சனக்கார தெரு, மதுரை.

பிராஞ்சுகள்:

3/76, தங்கசாலை தெரு,
P. T. மதராஸ்.

8/962, மஞ்சுகொண்ட வீதி,
விஜயநகரம் ஸிடி.

★ Telegraphic Address: "MUKU" ★

நவீன தினுசு
கட்டிடங்கள்,
ஸ்நான அறை
கள், சானிடரி
பிட்டிங்ஸ்
முதலியவை
கள் சுகாதார
முறையில் கட்
டிக் கொடுக்
கத் தயாராக
இருக்கிறோம்.

மதுரை இஞ்சினீரிங் கம்பெனி

102, சந்தைப்பேட்டைத் தெரு, :: மதுரை.

* ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் விஷயத்தில் *

தி நியூ கார்டியன் ஆப் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

சென்னை

ஆலோசனையைக் கேளுங்கள்

சேர்மன் :

கனம் ஸ்ரீ M. CT. M. சிதம்பரம் செட்டியார்

தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட், (தபால் பெட்டி, 142,) சென்னை.

என்றும் டிபனுக்கு வராதவர்

அவளும் எவ்வளவோ நாளாகப் பல விதமான சிற்றுண்டிகளைச் செய்து அவர் வரவுக்காகக் காத்திருந்தாள். என்ன காரணமென்று அவளுக்குத் தெரியவில்லை.

இன்று திடீரென்று டிபனுக்கு வருகிறாரென்றால் அவளுக்குப் பெரிய ஆச்சரியம் உண்டாவது இயற்கைதானே? இந்த ஆச்சரியத்திற்குக் காரணம்? .... காரணம்?

ஆ! தெரிந்துவிட்டது. ராஜம் அண்டு கோவின் பேபி பிராண்டு நெய்தான் காரணம். நேற்றுத்தான் வாங்கினாள்; இன்று அதை உபயோகித்து 'டிபன்' தயாரித்தாள். அதன் மணந்தான் அவரை இழுத்து வந்துவிட்டது!

ராஜம் & கோ.
கோயமுத்தூர்

JUPITER PICTURES
ஜுபிடர் பிக்ச்சர்ஸ்
மஹா
மாயா
P.U.சின்னப்பா
P.கண்ணாம்பா
M.S.சரோஜா
M.K.மீனலோசனி
நடித்தது
டைரக்ஷன்:-
T.R.ரகுநாத்
"இளங்கோவன்"
வருகிறது!
S.I.P
ரிலீஸ்
S.I. PUBLICITIES
G.H.RAO

புதுவருஷ லாபம்

புதுமோஸ்தர் - உறுதியானவை - 4 ஜுவெல்கள்-லீவர் மெஷனரி-எல்லாம் ஸ்விஸ்மேக்- 3 வருஷம் உத்தரவாதம்



நெ. 651—க்ரோமியம் கேஸ் .. ரூ. 25
.. உயர்ந்த ரகம் .. ரூ. 28
.. ரேடியம் டயல் .. ரூ. 30

நெ. 652—க்ரோமியம் கேஸ் .. ரூ. 30
.. உயர்ந்த ரகம் .. ரூ. 36
.. ரோல்டுகோல்டு பிளேட் .. ரூ. 39

நெ. 653—க்ரோமியம் கேஸ் .. ரூ. 40
.. ரோல்டுகோல்டு (உத்தரவாதம் 10 வரு) ரூ. 48

நெ. 654—க்ரோமியம் கேஸ் .. ரூ. 35
.. ரோல்டுகோல்டு (உத்தரவாதம் 10 வரு) ரூ. 45



நெ. 655—க்ரோமியம் கேஸ் .. ரூ. 35
.. ரோல்டுகோல்டு (உத்தரவாதம் 10 வரு) ரூ. 50

நெ. 656—க்ரோமியம் கேஸ் .. ரூ. 27
.. உயர்ந்த ரகம் .. ரூ. 32

தபால் கூலி பாக்கிங் தனியே அணா 10. இரண்டிற்கு ஆர்டர் பண்ணினால் இவை இலவசம். 100-ரூபாய்க்கும் மேற்பட்ட ஆர்டருக்கு 6¼% கமிஷன். 100-ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டருக்கு ரூ. 10 முன்பணம் அனுப்புக.

H. DAVID & Co., (K.)
P. B. 11428 - CALCUTTA.

இந்தியன் பாங்க்
லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கிய மான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம் - ரூ. 1,00,00,000

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - - ரூ. 60,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் 1-11-'43-இல் - ரூ. 28,80,000

ரிஸர்வ் நிதி - ரூ. 29,00,000

மொத்த ஆஸ்தி 8 கோடிக்குமேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதித் தெரிந்துகொள்ளலாம்

செக்ரெடரி:

N. கோபால அய்யர்.

- - ஒரு மாதம் படிக்கலாம் - -

மலைகளில் பெரியது இமயமலை

"மன்னும் இமயமலை எங்கள் மலையே,
மாநில மீதிதுபோற் பிறிதிலையே"

கதைப் புத்தகங்களிலே பெரியது

கதைக் கோவை

"கதைக் கோவை" மூன்று தொகுதிகளில் மூன்றாவது மிகவும் பெரியது.

60 - பேர் எழுதிய 60 - கதைகள் — 634 - பக்கங்கள்

ஒரு மாதம் ஆற அமர இருந்து படித்து இன்புறலாம்.

யார் யார் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா?

- உலகம் போற்றும் மேதாவியாகிய
  மகாகனம் வ. ச. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்
- தமிழ் இலக்கிய சிருஷ்டியில் இணையற்ற
  சுவாமி சுத்தானந்த பாரதியார்
- தமிழ் முது புலவராகிய பண்டிதமணி
  மகாமகோபாத்தியாய மு. கதிரேசச் செட்டியார்
- பழுத்த தமிழ்க் கவிஞர்
  ராவ்ஸாஹேப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
- தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்
  ராவ்ஸாஹேப் எஸ். வையாபுரிப் பிள்ளை

இன்னும் பெ நா. அப்புஸ்வாமி, மஞ்சேரி ஈசுவரன், கா. ஸ்ரீ. ஸ்ரீ, 'கொனஷ்டை', 'சசி', கோ. த. சண்முகசுந்தரம், அ. சீநிவாஸராகவன், டாக்டர் வே. ராகவன், தங்கம்மாள் பாரதி, 'நாடோடி', ப. நீலகண்டன், 'புதுமைப் பித்தன்', மயிலேறு, வேங்கடலக்ஷ்மி, 'ஸோமாஸ்' முதலிய எழுத்தாளர்களின் கதைகளும் உள்ளன. **(இத் தொகுதியில் 13 பெண்மணிகளின் கதைகள்.)**

கிளேஸ் ரூ. 7 8 0 : : ஆண்டிக் ரூ. 9 0 0

(தபால் ரிஜிஸ்டர் செலவு 0—13—0)

31 - 1 - 1944-வரை தபால் செலவு இனாம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

அழகிய கூந்தல்—இதன் இரகசியம் என்ன?

வேறெந்தக் காலத்தையும் விட குப்தர்கள் அரசாண்ட காலந் தான் மிக நேர்த்தியான பலவிதக் கூந்தல் சிங்கார ஜோடிப்பு களுக்குப் பிரசித்தி பெற்றதாக இருந்தது. ஏனெனில் கனத்த மேனி வாய்ந்த கூந்தல் வனப்பிற்கு இன்றியமையாததென அந்நாளில் கருதிவந்தார்கள்.

இந் நாகரிகத்திற்கும் அழகிற்கும் அஜந்தாவிலும் பாகிலுமுள்ள சிற்பங்கள், களிமண் வேலைப்பாடுகள், சித்திர எழுத்துக்கள், இவைகளே போதுமான அத்தாட்சிகள்.

ஏன், இந்நாளிலும் அழகிய மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தல் தேக வனப்பையும் வசீகரத்தையும் அதிகப்படுத்தத்தான் செய்கிறது என்பதில் ஆக்ஷேபமே இல்லை.

டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும்

A TATA PRODUCT

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

மிகப் பத்திரமுள்ள சேமிப்புத்திட்டம்

யுத்தம் நின்று, சமாதானம் நிலவும்போது சேமித்த பணமெல்லாம் மாயமாக மறையுமென்றால். வருங்காலத்திற்காக சேமிப்பதின் பயன் என்ன? தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் வாங்குவதில் உங்கள் சேமிப்பை முதலிட்டால், உங்கள் பணத்திற்கும் இக்கதிதான் நேரும். இப்பொழுதிருந்தே இந்தப் பொருள்களின் அநியாய விலைகள் சாதாரண அளவுக்கு இறங்குமென்று எதிர்பார்க்கலாம். உங்கள் சேமிப்பு அப்பொழுது என்ன ஆகும்?

யுத்த காலத்தில் விஷயம் தெரியாதவர்கள் விலையேற்றத்தைக் கவனியாமல் தங்கம், வெள்ளி, வீடு வாசல்களை கண்ணை மூடிக் கொண்டு வாங்குவதால் ஏராளமான பணத்தை இழக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறியவேண்டியது அவசியம். நீங்கள் இம்மாதிரியான நஷ்டத்திற்கு ஈடாகாதீர்கள். மிச்சப்படுத்தும் பணத்தைக்கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்குங்கள். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு அதன் உத்தரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15.

முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கிச் சேமித்த பணம்

என்றும் பத்திரமானது

பதிவு செய்தல் — ஒரு நல்ல முன்னேற்பாடு

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விவரங்களை இலவசமாகப் பதிவு செய்துகொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ் சரி, அழிந்து விட்டாலுஞ் சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விவரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஸேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

தியாகராஜ பிலிம்ஸ் சிருஷ்டிகள்!

உள்ளத்தைக் கவரும் உயரிய படங்கள்

★

★ திருநீலகண்டர் —

★ சத்தியசீலன் —

★ தமிழறியும் பெருமாள்

?

அடுத்த படம் எதிர்பாருங்கள்!

விவரங்களுக்கு :

திருச்சி தியாகராஜ பிலிம்ஸ் லிமிடெட்.



தேயிலை சுருட்டும் இயந்திரத்தில் கொடுக்கப்படுதல்.

தோட்டத்திலிருந்து கிளம்பி

புதிதாய்ப் பறிக்கப்பட்ட தேயிலை தொழிற்சாலையில் பலவிதமாய்ப் பக்குவப்படுத்தப்படுகிறது.

முதலாவதாக, சருகாக்கப்படுகிறது. இதன் மூலம் ஜாஸ்தியான தண்ணீரை இலையிலிருந்து வெளியாக்கப் படுகிறது. உஷ்ணமான இடத்தில் பலகையில் சமனாய்ப் பரப்பப்படுவதால் இது சாத்தியமாகிறது.

வேண்டிய அளவு சருகுகளானவுடன் தேயிலைகள் சுருட்டும் இயந்திரங்களில் (Rolling Machine) கொடுக்கப் படுகின்றன. இதனால் இலைகள் முறுக்கப்பட்டுப் பிழியப்படுகின்றன.

இதன் பிறகு புளிக்கவைத்தல்.

வெகு சீக்கிரம் நாம் சாதாரணமாய் உபயோகிக்கும், கரகரவென்ற கறுத்த வாசனையுள்ள தேயிலையாக மாறிவிடுகிறது.

ப்ரூக் பாண்டு

சின்னப்பா
கண்ணாம்பா
கிருஷ்ணன்...
மதுரம் நடித்த
ஹரிச்சந்திரா
ஜனவரி
14 உ
பொங்கல் தினத்தன்று
சென்னையிலும் மற்றும்
பல முக்கிய நகரங்களி
லும் ஆரம்பமாகிறது....
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரிப்பு.......... ஜெமினி ரிலீஸ்.

G. S.

என்பது, மற்ற இடங்களைவிட மலிவான விலையில் சிறந்த துணிமணிகளும் இதர சாமான்களும் கிடைக்கும் கடையை உங்களுக்கு ஞாபகமூட்டும் அடையாளம். சுதேசிப் பட்டு, கம்பளம், பருத்தி ஆடைகளும் பல்வேறு வகையான துண்டுத் துணிகளும், சில்லறைத் துணிகளும் கிடைக்கும்.

தி ஜெனரல் ஸ்வதேசீஸ் லிமிடெட்,

(ஹைகோர்ட்டுக்கு எதிரில்)

பிராஞ்சு: கிளாக் டவருக்குக் கிழக்கே, வேப்பேரி.

<u>திருவாங்கூர் ஆயுர்வேதப் பகுதி</u>

கவர்மெண்டு ஆயுர்வேத வைத்தியசாலை,

மெயின் ரோட், திருவனந்தபுரம்.

திருவாங்கூர், ஆயுர்வேத கௌரவ டைரெக்டரின் திறமையான மேற்பார்வையில், சாஸ்திரோக்தமாகத் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத ஔஷதங்கள் யாவும் இந்த வைத்தியசாலையில் விற்கப்படும்.

வி. பி. ஆர்டர்கள், விலையில் கால் பாகம் முன் பணத்தோடு வந்தால்தான் ஏற்றுக்கொள்ளப்படும்.

விற்பனை டிபோ ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காலை 8–30 மணியிலிருந்து மாலை 5–30 மணிவரையில் பொது ஜனங்களுக்காகத் திறந்திருக்கும்.

CERTIFIED
PAINTING
CONTRACTOR

PAINT PROBLEMS

வர்ணப் பிரச்னைகள்

வர்ணவேலையும் அலங்காரங்களும் செய்வதற்கு நம்பகமான காண்டிராக்டர் வேண்டியிருக்கும்போதெல்லாம், மேற்கண்ட முத்திரையை அத்தாட்சியாக அவர் வைத்திருக்கிறாரா என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

தற்காலத்தில் உயர்தர வர்ணங்கள் கிடைக்காமல், அவற்றிற்குப் பதிலாக உபயோகமற்ற சரக்குகள் பல மலிந்துகிடப்பதால் பொதுமக்கள் படும் கஷ்டங்களை நாம் அறிவோம். ஜனங்களின் சௌகரியத்துக்காக, நாங்கள் சில குறிப்பிட்ட வியாபாரஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து, ஜே. அண்டு என். ஸர்டிபைட் பெயிண்டிங் காண்டிராக்டர்கள் என்று நியமனம் செய்திருக்கிறோம்.

தொழில் திறமையையும் வியாபார உயர்வையும் பொறுத்த மட்டில் இந்த வியாபாரிகள் நம் பூர்ண நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். கவர்மெண்டார் தம் தேவையை உத்தேசித்து விதித்துள்ள எல்லைக்கு உட்பட்டு, எங்களுடைய மிகவும் உயர்ந்த ரகங்களை நாங்கள் இவர்களுக்கு என்றும் தவறாமல் ஸப்பிளை செய்துவருகிறோம்.

QUALITY
PAINT PRODUCTS

ஜென்ஸன் & நிக்கல்ஸன்

(இந்தியா) லிமிடெட்

அறிமுகப்படுத்தவே தேவையில்லாத இங்க்



கே-இங்க், பௌண்டன் பேனாக்களை உபயோகிப்பவர்களுக்கு வெகு நன்றாகத் தெரியும். அருமையான அசல் சரக்குகளைக் கலந்து விஞ்ஞான முறையில் தயாரிப்பதால், பொதுமக்கள் அதின் மதிப்புக்களை உணர்ந்து மேன்மேலும் அதை ஆதரித்து வருகிறார்கள். கே-இங்கைப் பௌண்டன் பேனாக்களுக்குச் சிறந்த இங்காகச் செய்பவை அந்தக் குணங்களே

கே-இங்க் ரசாயன முறையில் ஒரு வெற்றி: பேனாவுக்கு எவ்விதத் தீங்குமின்றி, எழுதுவோருக்கு அது எப்போதும் இன்பமளிக்கிறது.

'K' CHEMICAL Ink

- திடையற்ற பெருக்கு
- பேனாவை அரிக்காதது
- வண்டல் இல்லாதது

பாலிகஞ்ச் கெமிகல் வொர்க்ஸ்
பாலிகஞ்ச் • கல்கத்தா

BC6 SPS

எமது பொங்கல் வாழ்த்துக்கள்

எமது அடுத்த படம்

?

கைவசம் இருக்கும் படங்கள் :

- பிரிதிவிராஜ்
- மீனாக்ஷி கல்யாணம்
- மாணிக்கவாசகர்
- சோகாமேளர்
- விப்ரநாராயணா
- வீர ஜகதீஸ்

★

விவரங்களுக்கு :

HARAN TALKIES

181, EAST GATE, MADURA.

Tel. Address : "HARANTALKY."

முதன்மை ஸ்தானம்!

ஜீவாம்ருதம்

எந்தத் துறையிலும் தலைமைப் பதவியைப்பெறுவதும் அல்லது அதைப் பாது காத்துக் கொள்வதும் சுலபமல்ல. டானிக்குகளுள் பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

: ஜீவாம்ருதம் :

பெருமை வாய்ந்த ஸ்தானத்தை வகிக்கிறது. ஏனெனில் அது பல வருஷங்கள் செய்த ஆராய்ச்சியினால் ஏற்பட்ட பலன்கள். தேகத்தையும், மூளையையும், நரம்பையும் வளர்த்துவதிலும், சக்தி குறைவையும், வீரியக் குறைவு முதலியவற்றையும் அகற்றுவதிலும் இதற்கு ஈடே கிடையாது. உடற்கூறு பூராவுக்குமே அது புதிய ஜீவன் அளிக்கிறது.

எல்லாக் கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

ஆயுர்வேதாஸ்ரமம்

கோபதி நாராயணசாமி ரோட்,
தியாகராயநகர் :: சென்னை.

SUN BARLEY

PEARL & POWDER

உண்மையான தேசீயச் சரக்கு

THE NEW STANDARD BARLEY MANUFACTURING CO.
105, COTTON ST., CALCUTTA

குழந்தைகளுக்கும் பலவீனர்களுக்கும் மிகவும் மேன்மையான உணவாகிறது. சாதாரணமாக எல்லா ஸைஸ்களிலும் கிடைக்கும். டாக்டர்களாலும் மருந்து ஸ்டோர்களாலும் பெரிதும் புகழப்பெற்றது.

எங்கும் ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதுக.

குழந்தை சாப்பிட மாட்டேனென்ருல்

அவனுக்கு வயிற்றில் ஏதோ கோளாரு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அது குணமடைய ஐ. டி. எல். கிரைப்சிரப் வேண்டுமென்பதையும் எச்சரிக்கிருன். அதிலிருக்கும் வாயுவை கண்டிக்கும் மருந்துகளின் குணங்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் ஜீரண கோளாருகளையும், பல் முளைக்கும் சமயம் ஏற்படக்கூடிய வாந்தி, பேதி, முதலியவற்றையும், மிக நேர்த்தியாக குணப்படுத்தும். குழந்தைக்கு எப்போது வயிற்றுக் கோளாரு ஏற்பட்டாலும் அவனுக்கு கிரைப் சிரப் கொடுங்கள்.

அவனுக்கு கிரைப் சிரப் கொடுங்கள்

I.T.L.

விற்பனை ஏஜெண்டுகள்: பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், மதருஸ்.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஆபீஸ்: மாயவரம்

மத்திய ஆபீஸ்: சென்னை

செலுத்தப்பட்ட மூலதனம் (31-12-42) ரூ. 18,75,000

மொத்த வருமானமூலம் 2 கோடிக்குமேல்

டெபாஸிட்டு விகிதம்

பிக்ஸெட் டெபாஸிட்டுகள்	நகர ஆபீஸுகள்	வெளியூர் ஆபீஸுகள்
ஒரு வருஷம்	$2\frac{3}{4}\%$	3%
இரண்டு வருஷம்	3%	$3\frac{1}{4}\%$
சேவிங்ஸ் பாங்க்	$2\frac{1}{2}\%$	$2\frac{1}{2}\%$
கரண்ட் டிபாஸிட்	$\frac{1}{4}\%$	$\frac{1}{2}\%$

மாத டெபாஸிட்டுக் கணக்குகள் வைத்துக்கொள்ளப்படும். காஷ் ஸர்ட்டிபிகேட்டுகளும் வழங்கப்படும்.

எல்லா வகையான பாங்கு வேலைகளும் நடைபெறும்.

எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்

மானேஜிங் டைரக்டர்

ஜூபிடர் ஜெனரலின்

இன்ஷ்யூரன்ஸ் வியாபாரம் தொடர்ச்சியாக மூன்றுவது வருஷத்தில் முன்னேறிய விவரம் :

1941	முடிவான தொகை	ரூ. 44,82,875
1942	,, ,,	ரூ. 66,94,820
1943	,, ,,	ரூ. 1,10,00,000

டைரெக்டர்களும் மானேஜ்மெண்டாரும், தமக்கு இடைவிடாமல் ஆதரவும் உதவியும் தந்த தம்முடைய பாலிஸிதார்களுக்கும், ஏஜெண்டுகளுக்கும், எல்லா இடங்களிலுமுள்ள சிப்பந்திகளுக்கும் தமது நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறார்கள்.

ஜூபிடர் ஜெனரல்
இன்ஷ்யூரென்ஸ் கோ., லிமிடெட்,
(இந்தியாவில் ஸ்தாபிதம் : 1919)
போர்ட், பம்பாய்.
கிளை ஆபீஸ்: 167, பிராட்வே, சென்னை.

ஆயுள், நெருப்பு, கப்பல், மற்றும் எல்லாவிதமான இன்ஷ்யூரென்ஸ் அலுவல்களையும் கவனிக்கும், மொத்த ஐவேஜு ரூ. 1,00,00,000 க்கு அதிகம்

"Quality, Quantity, Durability and Fast Colour" — our Motto.

"நல்ல ரகம், குறைந்த விலை, நீடித்த உழைப்பு, கெட்டிச் சாயம்" ஆகியவை எங்களது கொள்கை

நம்மிடம் கைத்தறி வேஷ்டி, புடைவை, துண்டு, துப்பட்டி, ஷர்டிங், கோட்டிங் ஆகியவை நவநாகரிக முறையில் தயாராகி, சகாய விலைக்குக் கிடைக்கும்.

K. R. வெங்கடகிரி சர்மா & ஸன்ஸ்
123, தெற்கு மாசி வீதி : : மதுரை.

வருகிறது!

மானசம்ரக்ஷணம்

S.D.சுப்புலக்ஷ்மி : காளி N.ரத்னம்
C.T.ராஜகாந்தம் : T.R.ராமச்சந்திரன்
V.N.ஜானகி : G.பட்டு அய்யர்
ராவ்பகதூர் கிருஷ்ணராவ் போன்ஸ்லே
ராஜகோபாலய்யர்

டைரக்ஷன்

K.சுப்ரமணியம், B.A.B.L.
&
C.S.V.அய்யர்

பாட்டு, சங்கீதம்
பாபநாசம் சிவன்
ராஜகோபால அய்யர்

ஸ்டுடியோ
நியூடோன்

S.I.P. ரிலீஸ்

S.I. PUBLICITIES

G.H.RAO

TIMES HAVE CHANGED!
Time Keepers
THEN
& NOW
காலம் மாறிவிட்டது
கடிகாரங்கள்
அன்றும் இன்றும்!
காலத்தை அளக்கும் கருவிகளில் மிகப் பழமையானது சூரிய கடிகை என்று அறிகிறோம். கி. மு. 800-க்குச் சுமாராக அது வழக்கத்தில் இருந்தது. அப்போதிலிருந்து பல நூற்றுண்டுகளாக ஒன்றன்பின் மற்றொன்ருகப் பல கடிகாரங்கள் தோன்றி மறைந்தன. கடைசியாக இன்று, தொல் பெருங்காலம் முதல் வந்த ஞானமும் திறமையும் திரண்டு உருவாகி, "வெஸ்ட் எண்டு" கடிகாரங்களாகப் பூர்ணவடிவமெய்தி உன்னதமாக விளங்குகின்றன.
நியூ காலிபர் "E"
நிக்கல் ஸில்வர் கேஸ் - - ரு. 62
எவர்பிரைட் ஸ்டீல் - - ரு. 71
18-காரட் கட்டித் தங்கம் - ரு. 197
கேட் - லூப் ரெக்டாங்குலர்
18-காரட் கட்டித் தங்கம் - - ரு. 804
வெஸ்ட் எண்டு வாச் கோ., பம்பாய் & கல்கத்தா.
WEST END WATCH Co
Bombay · Calcutta
இறக்குமதி ஒழுங்கில்லாமையால் எல்லா மாதிரிகளையும் அனுப்ப இயலாமற் போகலாம். ஆனல் ஸ்டாக்குகள் உள்ளவரையில் சப்ளை செய்ய முயலுவோம்.

கலைமகள்

பொங்கல் மலர், 1944

	பக்கம்
இன்பம் பொங்குக !	1
சைவ வைஷ்ணவ பேதங்கள் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் ..	3
சித்தார்த்தன் துறவு தேசிகவினாயகம் பிள்ளை ..	9
விவேகானந்தரின் தேசபக்தி சி. சுப்பிரமணிய பாரதியார் ..	14
வனமாலா 'கொனஷ்டை' ..	15
கப்பலில் களியாட்டம் டாக்டர் தி. சே. சௌ. ராஜன் ..	21
சித்தி 'புதுமைப்பித்தன்' ..	28
இலக்கியமும் இலக்கணமும் மு. அருணாசலம் ..	37
உணவுப் பண்டங்களின் பாதுகாப்பு பெ. நா. அப்புஸ்வாமி ..	41
தளவாயின் சேவை எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் ..	45
சிற்ப சித்திரங்களின் உறுப்புகள் கி. சந்திரசேகரன் ..	50
திருநாள் செலவு 'சங்கரராம்' ..	55
செய்யாத யாத்திரை 'குமுதினி' ..	60
மௌலானாவின் பிரார்த்தனை புரசு பாலகிருஷ்ணன் ..	63
நதி உருவம் கொண்ட புகழ் கி. பாலசுப்பிரமணிய ஐயர் ..	67
முத்தொள்ளாயிரத்தின் காலம் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை ..	70
சிப்பியின் காதல் 'சுரபி' ..	73
உலகத்தின் கதை எஸ். வி. வி. ..	77
உலக அமைதி ப. சுப்பராயன் ..	81
மூன்று அநுபவங்கள் அ. ஸ்ரீநிவாஸராகவன் ..	83
தெய்வத்திற்கு மேல் கி. ஸரஸ்வதி அம்மாள் ..	87
எங்கள் பள்ளிக்கூடம் ஏ. கே. செட்டியார் ..	94

படங்கள்

அட்டைப் படம்: பொங்கல் பூஜை - 'ரவி'

முகப்புப் படம்: மகா காளி - ராஜம்

மூவர்ணப் படங்கள்: ஆஞ்சநேயர் ராமலக்ஷ்மணரைப் பார்த்தல் - க. ராமமோஹன் சாஸ்திரி

தளர்ந்த பிரயாணி - ராஜம்

இருவர்ணப் படங்கள்: பொங்கல் காட்சிகள் - 'ரவி'

1886-ஆம் ஸ்தாபிக்கப் பெற்றது



எங்கள் லேபிள்களைக் கவனித்து வாங்குங்கள்.

மதுரை L. K. B. SONS தயாரித்த உத்தரவாதமுள்ள கெட்டிச்சாய ஜுன்னடி சேலைகளே முதன்மை பெற்றவை.

எல். கே. பாலய்யர் ஸன்ஸ்

கெட்டிச்சாய ஜுன்னடி சேலைகள் தயாரிப்பவர்கள்

நெ. 2, மால் வடம்போக்கித் தெரு, மதுரை.

கலைமகள் வெளியீடுகள்

உள்ளும் புறமும் அழகும் சுவையும் ததும்பும் புஸ்தகங்கள்

			ரு.	அ.
புயலும் படகும்	-	வி. ஸ. காண்டேகர் ...	2	8
பெண் தெய்வம்	-	பி. எம். கண்ணன் ...	4	0
காருங் கதிரும்	-	ரவீந்திரநாத டாகுர் ...	2	0
ஒரு சாண் வயிறு	-	கி. வா. ஜகந்நாதன் ...	1	4
மக்கள் மலர்ச்சி	-	'குமுதினி' ...	1	0
காஞ்சனை	-	'புதுமைப்பித்தன்' ...	2	0

இனி வெளிவரும் நூல்கள்

காவியமும் ஓவியமும் - கி. வா. ஜகந்நாதன்
வீட்டு வைத்தியர் - டாக்டர் ராஜன்
சஞ்சீவினி - 'ஸோபான்'

மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை

மகா காளி

ஓவியர் : ராஜம்

கலைமகள்

பொங்கல் மலர்

உ இன்பம் பொங்குக!

பொங்கல் திருநாள் வாழ்த்தை அன்பர்களுக்குக் கூறுகிறோம். 'பொங்கல் பொங்குக! இன்பம் பொங்குக!' என்று வாழ்த்துகிறோம். இந்தப் பொங்கல் மலரை அவர்களுடைய பொங்கல் மகிழ்ச்சியை மிகுதியாக்க ஸமர்ப்பிக்கிறோம்.

இந்த மலர் உருவத்தில் மிகப் பெரிதென்று சொல்வதற்கு இல்லாவிட்டாலும் மணம் நிரம்பியதென்பதை அன்பர்கள் நன்கு உணர்ந்து ரஸிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்த மலரில் உள்ள சித்திரங்களும் கட்டுரை கதைகளும் சிறந்த பொங்கல் விருந்தாகப் பரிமளிக்கும். எந்தத் திசையிற் சென்றாலும் தடைகள் நிரம்பியுள்ள இந்த யுத்த காலத்தில் முயற்சிகள் முற்றும் முடிந்த பின்புதான் ஆறுதல் உண்டாகிறது. காகிதம், மைகள், ப்ளாக்குகள் எல்லாம் நினைத்தபடி கிடைக்கவில்லை. இந்த மலரில் இன்னும் சில படங்களைச் சேர்ப்பதாக ஏற்பாடு செய்திருந்தோம். அவை சமயத்துக்கு உதவவில்லை.

இந்த மலரில் ராஜாஜியின் 'சைவ வைஷ்ணவ பேதங்கள்' என்ற கட்டுரை முதல் ஸ்தானத்தை வகிக்கிறது. பெயர் என்னவோ 'பேதங்கள்' என்றிருந்தாலும் இரண்டு சமயங்களுக்கும் உள்ள அபேதத்தைத் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டுகிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சித்தார்த்தன் துறக்கும் தறுவாயில் அவனுடைய சிந்தனையில் மிதந்த எண்ண அலைகளைக் கவிதையாக்கித் தந்திருக்கிறார். உலக அமைதி இப்போது இல்லாததற்குக் காரணமும் இனிமேல் அந்தச் சரக்கைப் பெறுவதற்கு வழியும் டாக்டர் ப. சுப்பராயன் ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறார்.

தமிழ் நாட்டு ஹாஸ்ய எழுத்தாளர்களுள் சிறந்த எஸ். வி. வி. அவர்களும் தத்துவ விசாரணையில் இறங்கக் கூடுமென்பதை அவர் இந்த மலரில் எழுதியுள்ள 'உலகத்தின் கதை' நிரூபிக்கும். ஆனால் தத்துவ விசாரணையென்றாலே முகத்தைச் சிணுங்குபவர்கள் கூடத் தேனைப் போலத் தித்திக்கிறதென்று கட்டுரையைப் படித்து உணர்வார்கள்.

டாக்டர் ராஜன் கப்பல் பிரயாணத்தில் நடந்த விளையாட்டத்தை வருணிக்கிறார். சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் முத்தொள்ளாயிரத்தின் காலத்தை ஆராய்ச்சிக் கண்ணோடு பார்த்து எழுதியிருக்கிறார்.

தமிழர்களுடைய பாராட்டைப் பெற்ற சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளும், சிறந்த கவிதைகளும் இந்த மலரை அணிசெய்கின்றன. கலை விளக்கக் கட்டுரையும் ஆராய்ச்சிக் கட்டுரையும் சங்கீதத்தைப் பற்றிய

கட்டுரையும் இலக்கியக் கட்டுரையும் விஞ்ஞானக் கட்டுரையும் சரித்திரக் கதையும் கற்பனைக்கட்டுரையும் கலந்து பலவகை நிறமும் மணமும் உடையதாக இந்த வெளியீட்டை ஆக்கியிருக்கின்றன. இவற்றை எழுதியுதவிய எழுத்தாளர்கள் யாவருக்கும் எங்கள் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மலரிலுள்ள வர்ணப்படங்களில் இரண்டு கலைமகள் அன்பர்களின் பேரன்புக்குப் பாத்திரமாயுள்ள ஸ்ரீ ராஜம் எழுதியவை. ஒன்று முகப்புப்படம்; அது பழமை கனிந்து பாசி ஏறியும் தெய்வத்தன்மையும் கலையழகும் மங்காத மகா காளியின் படிமத்தை ஒரு மடமங்கை வழிபடும் கோலத்தைக் காட்டுகிறது. மற்றொன்று, காடுமேடுகளெல்லாம் சுற்றியலைந்து ஓய்ந்துபோய் உட்கார்ந்திருக்கும் ஒரு வழிப்போக்கனை மிகவும் அற்புதமாகச் சித்திரிக்கிறது. இந்திய ஓவியக் கலைத்திறமை பரிபூர்ணமாகப் பொங்கித் ததும்பும்படி இவ்விரண்டையும் அமைத்திருக்கிறார் ராஜம்.

ராமபிரானையும் லக்ஷ்மணனையும் முதல் முதலில் பிரமசாரி உருவத்தோடு ஆஞ்சநேயர் காணும் கட்டத்தைச் சித்திரிக்கும் முகப்புப்படம் ஸ்ரீ க. ராம மோகன் சாஸ்திரியின் சிருஷ்டி. இந்தப் படத்தின் வர்ணவிசித்திரம் மிகவும் பாராட்டுவதற்குரியது.

பொங்கல் பொங்கி மனைவி மக்களுடன் படைத்துச் சூரியனை வணங்கும் பொங்கல் விழா, தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்கிறது. இந்த நிகழ்ச்சியை வர்ணத்தில் அழகாகக் காட்டும் அட்டைப்படமும் உள்ளேயுள்ள பொங்கற் காட்சிகளும் வேறு சில படங்களும் ஸ்ரீ ரவியினுடைய படைப்பு. பொங்கல் மலரைப் பொங்கல் மணம் வீசப்பண்ணுபவை இவருடைய சித்திரங்கள்.

ஓவிய இளைஞர் ஸ்ரீ ஸாமியினுடைய சித்திரங்கள் பல இதிலுள்ளன. பல பல வகையில் உள்ள அவற்றிலிருந்து இவருடைய திறமையை அன்பர்கள் நன்கு உணர்ந்து பாராட்டுவார்களென்பதில் தடையில்லை.

இந்த ஓவியர்கள்பால் நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம்.

அவ்வப்போது எங்கள் அவசரத்தை அறிந்து 'ப்ளாக்' செய்து கொடுத்தவர்களுக்கும், விளம்பரங்கள் உதவியவர்களுக்கும், வேறு பல வகையில் உபகாரம் செய்தவர்களுக்கும் நன்றி கூறுவது எங்கள் கடமை.

தமிழன்பர்கள் இந்த மலரின் சிறப்பை உணர்ந்து பாராட்டுவார்கள் என்பது திண்ணம். இப்பொழுதுள்ள கால நிலை மாறி நல்ல காலம் பிறந்தால் நாங்கள் கனவு காணும் பெரிய லக்ஷ்யங்களை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதுவரையில் சிறிதும் தளர்வின்றி இலக்கிய சிருஷ்டி செய்துகொண்டிருப்பதே எங்கள் வேலை. எங்களுடைய சிரத்தையும், உழைப்பும் நிச்சயமாக அன்பர்களுடைய உள்ளத்துக்கு உவப்பான பயனை உண்டாக்கும் என்று நாங்கள் எதிர்பார்ப்பது நியாயந்தானே!

மறுபடியும் பொங்கல் வாழ்த்துக் கூறுகிறோம். 'பொங்கல் பொங்குக! இன்பம் பொங்குக!'

ஆசிரியர்

சைவ வைஷ்ணவ பேதங்கள்

— சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

அனைத்துக்கும் உயிராக நிற்பது ஒரு பரம்பொருள் என்கிற வேதாந்தத்தை ஒப்புக்கொண்டே எல்லா வைதிக சமயங்களும் பேசுகின்றன. இப்படியிருக்க, சைவ வைஷ்ணவப் பிரபந்தங்களில் சிவனைக் குறைத்து விஷ்ணுவை உயர்த்தியும், விஷ்ணுவைக் குறைத்துச் சிவனை உயர்த்தியும் எழுதியிருப்பதைக் கண்டு சமரச நோக்கத்தில் ஈடுபட்ட சிலர் வியப்பும் அருவருப்பும் கொள்ளலாம். ஆழ்வார் நாயன்மார்களின் கரை கடந்த பக்திக்கும் ஆழ்ந்த ஞானத்துக்கும் இந்த ஏற்றத் தாழ்வுப் பேச்சு மிகவும் பொருத்த மற்றதாகத் தோன்றும். கடவுளைப்பற்றியும் சமயத்தைப் பற்றியும் அசிரத்தையும் சந்தேகமும் நிறைந்த நாம் ஆழ்வார் நாயன்மார்களின் கருத்துக்களையும் மனப்பான்மையையும் சரியாக உணர்வது கடினம்.

சிவனுக்கு மேல் விஷ்ணு, அல்லது திருமாலுக்கு எஜமானன் பரமேசுவரன் என்று பக்தர்கள் பாடுவதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். "தேவ தேவன், மெய்ச் சேவகன், தென்பெருந்துறை நாயகன், மூவராலும் அறிவொணா முதலாய ஆனந்த மூர்த்தியான், மால் அயன் வானவர் கோனும் வந்து வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்" என்று மாணிக்கவாசகர் சிவபிரானை நினைந்து உருகுகிறார். "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை, இனியறிந்தேன், காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை, நாரணன் நீ நன்கறிந்தேன் நான்" என்று இன்னொரு பக்கத்தில் திருமாலை நோக்கி உருகுகிறார் திருமழிசை ஆழ்வார். சிவன் என்பதே பொய் அல்லது திருமால் என்பதே பொய்க் கதை என்று விஷ்ணு பக்தர்களாவது சைவ சமயிகளாவது சொல்வது முடியாது. சொன்னால் எல்லாம் அனர்த்தமாக முடியும். கிறிஸ்து மதத்தவரும் இஸ்லாம் மார்க்கத்தவரும் அவ்வாறு சொல்லக்கூடும். ஆனால் வைதிக சமயங்களைச் சேர்ந்த எவரும் அவ்வாறு தங்கள் பக்தர்களுக்கிடையில் சொல்லி அடிப்படையான விஷயங்களில் ஐயத்தைக் கிளப்பிவிட இயலாது.

சரி, இவ்வாறு வேண்டாம்; சிவன் விஷ்ணு இருவரும் சமம் என்று சொல்லிக்கொண்டு போகலாமே? ஒருவருக்கு மேல் மற்றொருவர் என்று ஏன் துவேஷப் பேச்சுப் பேச வேண்டும்?

ஒருவருக்கு மேல் மற்றொருவர் என்று வகுக்காமல் இருவரும் சமம் என்று சொன்னால், ஜகத்துக்கு ஒரே ஈசன் என்கிற தத்துவம் போய், இரண்டு அல்லது மூன்று சமானக் கடவுள்கள் உண்டு என்றல்லவோ ஏற்படும்? இது சுத்தத் தவறாகும். ஆதலால் ஒரே ஈசன், ஒரே ஜகத் காரணம் என்று கொண்ட எந்தச் சம்பிரதாயத்திலும் அந்தச் சம்பிரதாயத்தில் எந்த வடிவம் முக்கியமாகத் தியான சாதனமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அதற்குப் பிராதானியம்

கொடுப்பது வேதாந்த சமயாசாரங்களில் அவசியமாகிறது. வேறு வழி இல்லை.

இப்படி இல்லாவிடில் பரம சாதுக்களும் மகா ஞானிகளுமான ஆழ்வார்களும் நாயன்மார்களும் இவ்வாறு பாடியே இருக்க மாட்டார்கள். நாமும் பூரண பக்தர்களானால் தான் பக்தியின் இயற்கையிலிருந்தே உண்டான இந்தப் பாவனையை உணர முடியும். நிராகாரமான சுத்தப் பிரம்மத்தைத் தியானித்து விடலாமே என்று நாம் பேசலாம். பேசுவது வேறு, செய்து முடிப்பது வேறு. ஞானிகளுக்குங்கூட ஏதேனும் ஒரு மூர்த்தியை உள்ளத்தில் வைத்து உபாசித்தால் தான் முடியும் என்பது பெரியோர்கள் அநுபவ சித்தமாகப் பார்த்த உண்மை. எந்த வடிவத்தில் பக்தன் உபாசிக்க முயற்சி செய்கிறானோ அந்த வடிவத்தையே ஈசுவர ரூபமாக வைத்துக் கொண்டு உள்ளத்தை அதனில் செலுத்தவேண்டும். அனைத்தையும் அந்த மூர்த்திக்கு அடிமைப்படுத்த வேண்டும். எந்த உயர்ந்த புனிதப் பொருளையும் அதற்கு ஆட்படுத்தியே தியானிக்கவேண்டும். இதை உணர்ந்தால் ஆழ்வார் நாயன்மார்கள் பாடிய பாடல்களிலுள்ள சைவ வைஷ்ணவ ஏற்றத்தாழ்வின் பொருள் விளங்கும்.

நம்முடைய பக்தியும் ஞானமும் அநேகமாக உயிரற்ற வாசாகைங்கரியந்தான். வாசாகைங்கரியத்திற்குக் கஷ்டமும் தடையும் இல்லை. எதையேனும் செய்யலாம். அரசியலில் சர்வ கட்சி ஆட்சி முறையைப் போல் மிக்க தாராள சிந்தனையுடன் எல்லாச் சமய முறைகளும் சமம், எல்லாத் தெய்வங்களும் சமம் என்று சைவ வைஷ்ணவ சமத்துவம் அளித்து விடலாம். உள்ளம் அப்படியே உருகியொழுகும் பக்தி உபாசனைகளில் இவ்வாறு செய்ய முடியாது.

“திருவேங்கடத்திலுள்ள திருமாலின் மூர்த்தியே என் தெய்வம். எனக்குப் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும் வேண்டாம், வைகுண்டத்திலுள்ள பெருமானும் வேண்டாம், வேறு எந்தத் திவ்விய தேசமும் வேண்டாம்” என்று ஆழ்வார்கள் பாடியிருப்பதைக் காண்கிறோம். இதனால் திருமலையில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரமே பரம்பொருள் என்று அவர்கள் பிடிவாதம் செய்ததாக வைத்துக்கொள்ளலாமா? ஜகத்துக்கெல்லாம் ஒரே ஈசன், ஒரே பரம்பொருள், புலன்களுக்கும் கற்பனைக்கும் அடங்காத அந்தப் பரம்பொருளைத் தியானிக்க வேண்டினால் ஏதேனும் ஒரு கிலுப்தமான வடிவத்தில் உபாசிக்க வேண்டுமேயொழிய அதைப் புத்தி சாதுரியத்தைக் கொண்டு நிமிஷத்துக்கு ஒரு வடிவமாக மாற்றிக் கொண்டு தியானித்தால் வெறும் வேஷமாகவும் பயனற்ற முயற்சியாகவும் போய்விடும்.

மனத்தில் இவ்வாறு ஒரு வடிவத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்குப் பல சாதனங்கள் உண்டு. புராணமும் கதையும் ஸ்தோத்திரமும் மூர்த்திகளும் இதற்குச் சாதனங்கள். பாரத நாட்டில் ஒரே வேதாந்தத்தில் ஈடுபட்ட சமயங்களும் சம்பிரதாயங்களும் வெகு காலமாக நம்மில் பரவி வந்திருக்கிறபடியால் உபாசகர்களுக்கு ஏகாக்கிரமான தியானத்திற்கு இடைஞ்சல் உண்டாக்கும் வேறுபாடுகளும் பேதங்களும் குறைவதற்கு ஒரு வழியைப் பக்தர்கள் கண்டு கையாள்கிறார்கள். அதுதான், என் தெய்வமே பெரிது என்கிற உபாசனை முறை. ஒரு பரம் பொருள், ஒன்றே பரம்பொருள் என்று ஐயம் தீர்ந்து ஒப்புக்கொள்ளும் எந்தப் பக்தனுக்கும் இந்த முறையினால் துவேஷமாவது மற்ற மதத்தவர்கள் மேல் அருவருப்பாவது உண்டாகாது.

பொய்கையாழ்வார்

என்று கடல்கடைந்த
தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான் — அன்று
தடைத்துடைத்துக் கண்படுத்த
வாழி, இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த யார்.

புராணக்கதைகள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதைப்பற்றி என்ன கவலை? என் சிற்றறிவை நம்பிப் புத்தியைக் குழப்பிக்கொண்டு காரியத்தை ஆராய்ந்து காரணத்தை அனுமானித்து அறியலாம் என்று திரியவோ நான்? நீ இந்த உலகத்திற்கு அந்தர்யாமி என்பது எனக்குப் போதும் என்கிறார் ஆழ்வார்.

அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ஊர்தி
உரைநூல் மறையுறையும் கோயில்— வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று.

அரன் நாரணன் என்று நாமங்கள் இரண்டு; விருஷபமும் கருடனும் ஆக வாகனங்கள் இரண்டு. ஒருவனைப் பற்றிச் சிறப்பாகச் சொல்லுவது ஆகமம் (நூல்), மற்றொருவனைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வது வேதம் (மறை); வீற்றிருக்கும் இடங்கள் கைலாசமும் (வரை) கடலும் (நீர்); தொழில்கள் இரண்டு: அழிப்பதும் அளிப்பதும்; ஆயுதங்கள் முறையே வேலும் சக்கரமும்; மூர்த்திகளின் நிறம் முறையே நெருப்பு வர்ணமும் மேக வர்ணமும்; ஆனால் மேனியோ, இருவருக்கும் ஒன்றே! இருப்பிடம், தொழில், ஆயுதம், நிறம், பெயர் இவை வேறுபட்டாலும் ஒரே பரம்பொருள் இரண்டு உருவங்களாக நிற்கும். ஒருவன் சரீரி; ஒருவன் சரீரம். ஒன்று உடலாகும்போது மற்றொன்று உயிராகும்.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று— சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

தாம் தாம் அறிந்தவாறு ஏத்துவார்கள். பல மூர்த்தி வடிவங்களை எழுதியும் சிற்பம் செய்தும் தொழுவார்கள். ஆனால், எல்லா வழிபாடுகளும் போய்ச் சேருவது ஒருவனிடமே.

நகர மருள்புரிந்து நான்முகற்கு, பூமேல்
பகர மறைபயந்த பண்பன்—பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதி யுருவெண்ணும்
அந்தியா லாம்பயனங் கென்.

சர்வேசுவரனை நெஞ்சாலே தியானிக்காமல் வெறுமனே நாமங்களைச் சொல்லி ஜபமாலைக் கண்ணிகளை எண்ணுவதிலும் சந்தியாவந்தனம் முதலிய கிரியைகளிலும் என்ன பயன்?

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்— தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியா னாம்.

அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட வடிவமும் பெயரும் நிறமும் வைத்துக்கொள்ளட்டும். அவர்கள் நினைத்த படியாகவே தன்னை அமைத்துக்கொண்டு அருள் செய்வான் என்கிறார் ஆழ்வார்.

“பக்தர்கள் ஏதேனும் ஓர் அசேதன வஸ்துவை வைத்துக்கொண்டு இதை உனக்குத் திருமேனியாகக் கொள்ள வேணும் என்றால், அதை எம்பெருமான் திருமேனியாகக் கொள்ளும்” என்று பெரியவாச்சான் பிள்ளை இந்தப் பாசுரத்தை விளக்குகிறார். இதற்கு ஓர் அழகான நிகழ்ச்சி, எம்பெருமானார் ஜீவிய சரித்திரத்தில் நடந்ததைச் சொல்லுகிறார். ராமானுஜர் ஒரு நாள் ஸ்ரீரங்கத்தில் அட்சய பாத்திரம் எடுத்துத் தெருவில் போய்க் கொண்டிருந்தார். பிச்சையாகத் தந்ததைச் சமைத்து உண்பது ஒரு விரதம். வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சில சிறு குழந்தைகள் மண்ணில் காலாலே கீறி, “உம்முடைய எம்பெருமான் திருமேனி” என்று காட்ட, உடனே பாத்திரத்தைக் கீழே வைத்துத் தண்டனிட்டருளினாராம்! பின் அந்தக் குழந்தைகள் பெரிய திருமண்டபமும் பெருமாளும் நாச்சியாரும் மண்ணில் கோடு கிழித்துக் கற்பித்து, பெரிய கோயில் நிவேதன வழக்கத்தைப்போல் துணி பரப்பி, அதன்மேல்



அன்னத்தை ராசியாகக் குவித்து அமுது செய்விப்பதுபோல் விளையாட்டு நிவேதனம் பண்ணி, "எம்பெருமானாரே! பிரசாதப்படும்'' என்று தெரு மணலைக் கையாலே முகந்து எடுத்துக் கொடுக்க, உடையவர் அதைப் பாத்திரத்திலே ஏற்றார்! குழந்தைகள் காலாலே கீறிய மேனியே உடையவருக்குத் திருமாலாயிற்று. அவர்கள் எடுத்துக் கொடுத்த மணலே உகந்த பிரசாதமாயிற்று!

பொன்திகழு மேனிப் புரிசடையம்
புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும், ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்.

"பொன் திகழும் திருமேனிப் புரிசடையம் புண்ணிய''னான சிவனும் திருமாலும் முறையே அவனவன் வடிவத்தில் நின்று திருவிளையாடல்கள் செய்தாலும் ஒருவன் உடலில் மற்றொருவன் எப்போதும் உளன். பரஸ்பரம் சரீர சரீரியாவார்கள்.

பேயாழ்வார்

தாழ்சடையும் நீண்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும்
தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து.

சடை மழு அரவு - இவை கொண்ட ஹர ரூபமும், முடி சக்கரம் பொன் நாண் - இவை கொண்ட ஹரிரூபமும் இரண்டும் அமைந்து ஒரு படியாய்த் திருமலையில் பொருந்தியிருக்கின்றன.

திருமழிசையாழ்வார்

தேருங்கால் தேவன்
ஒருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே
யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

எல்லாச் சாதன அனுஷ்டானம் பண்ணினவர்களுக்கும் அவற்றிற்குப் பயன் சர்வேசுவரனிடமிருந்து நிச்சயமாக வரும்.

இடமாவ தென்னெஞ்சம்
இன்றெல்லாம், பண்டு
படநாக ணைநெடிய மாற்குத்—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு,
அயனை நான்
வையேனாட் செய்யேன் வலம்.

முன் பாம்பணைமேல் படுத்திருந்தவன் தன் படுக்கை விட்டு என் இருதயத்தை இருப்பிடமாகத் தேடி வந்திருக்கிறான். இது அவன் திருவுள்ளம். என் நெஞ்சமோ சின்னஞ் சிறிய இடம். ஒருவனுக்கு மேல் இடமில்லை. ஆகையால் பிறை சூடிய சிவனுக்கும் பிரம்மனுக்கும் இடம் கொடுக்க முடியாது. ஒரு மூர்த்தியைத் தியானிக்கும் முறையின் தத்துவத்தை இது நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

நம்மாழ்வார்

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

அவரவர்கள் தத்தம் அறிவுக்குத் தகுந்தபடி அந்த அந்தத் தேவதையை ஈசன் என்று தொழுவார்கள். அந்த அந்தத் தேவதையும் தன்னை ஆராதிப்பவர்கள் வேண்டின பலன்களைக் கொடுப்பதில் சக்தி குறையாது. சர்வேசுவரன் எல்லாத் தேவதைகளுக்கும் ஆத்மாவாக இருக்கிறான் அல்லவோ?

பிணக்கற வறுவகைச் சமயமும்
நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி
லாதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று
புறநெறி களைகட்டு
உணக்குமின் பசையற வவனுடை
யுணர்வுகொண் டுணர்ந்தே.

அறு சமயங்களையும் சந்தேகமும் கலவரமும் நீங்கித் தெளிவுபெறச் சமரசப்படுத்தி விளக்கிய கண்ணனைப் பக்தி பண்ணுங்கள் என்கிறார் ஆழ்வார்.

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துருவி
யந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினு மிறைநிலை
யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய
னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சு
மின் மனப்பட்ட தொன்றே.

உயிர்காள்! பொருள்களின் உண்மைப் பொருளை அறிந்துகொண்டாலுங்கூட, பரம்பொருளின் இலக்கணங்களை அறிய முடியாது. அரி, அயன், அரன் என்கிற இம் மூன்று மூர்த்திகளில் உங்கள் மனசில் ஈசுவரன் என்று தோன்றின ஒருவனைத் தியானித்துப் பஜியுங்கள்.

ஒன்றெனப் பலவென வறிவரும்
 வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முக
 னரனென் றிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும்
 மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை
 நம்முடை நாளே.

பரம்பொருளின் இலக்கணம் உணர்வுக்கு அடங்காது. ஒன்றா, பலவா என்று அறிய முடியாது. நாரணன் நான்முகன் அரன் என்று பல பெயர் கொண்ட இந்தப் பரம்பொருளை மனத்தில் ஒன்றாகப் படியும்படி தியானித்து விருப்பு, வெறுப்பு என்கிற இரு பசைகளையும் நீக்கிக்கொண்டு ஈசனிடத்தில் பக்தி பண்ணுங்கள்.

வலத்தனன் திரிபுர மெரித்தவ
 னிடம்பெறத் துந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல்
 லுலகமும் தானும்
புலப்படப் பின்னுந்தன் னுலகத்தி
 லகத்தனன் தானே
சொலப்புகில் இவைபின்னும் வயிற்றுள
 விவையவன் துயக்கே.

திரிபுரத்தை எரித்த சிவன் நாராயணனுடைய வலது பாகம். சதுர்முகப் பிரம்மாவும் அவன் படைத்த உலகங்களும் திருமாலின் நாபிக்கமலத்தில் அடங்கும். பின்னும் உலகத்தில் மக்களின் கண்ணுக்குப் புலப்படும்படி சர்வேசுவரன் அவதரிக்கவும் செய்கிறான். தவிர, இவ்வளவும் அவன் வயிற்றில் அடங்கிக் கிடக்கும். இவை பரமாத்மாவின் திருவிளையாடல்கள்.

ஒருவ ரிருவ ரோர்மூவ ரெனநின்று
உருவுகரந் துள்ளுந்தோறும் தித்திப்பான்
திருவமர் மார்வன் திருக்கடித் தானத்தை
மருவி யுறைகின்ற மாயப் பிரானே.

திருக்கடித்தானம் என்கிற திவ்விய ஸ்தலத்திலுள்ள கோயிலில் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்துக்கொண்டிருக்கும் பெருமான் ஒருவனாகவும் இருவராகவும் மூவராகவும் இருக்கிறான். தன் உருவத்தை மறைத்து ஜீவன்களின் உள்ளத்திலும் இருக்கிறான்.

யானும் தானா யொழிந்தானை
 யாதும் யவர்க்கும் முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனும்
 ஆகிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலு
 மமுது மாகித் தித்தித்தென்
ஊனி லுயிரி லுணர்வினில்
 நின்ற வொன்றை யுணர்ந்தேனே.

பரம்பொருளை இப்பாசுரத்தில் நம்மாழ்வார் வேதாந்த விஸ்தாரமாக விளக்குகிறார். அதுவே "யான்" ஆகிறது. யானும் தானும் ஒன்றாகி முடிகிறது. அதுவே சேதன அசேதனப் பொருள்கள் அனைத்துக்கும் முந்தி இருந்த பரம்பொருள். அதுவே சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும். அந்தப் பரம்பொருளை உணர்ந்தேன். அதுவே எல்லாவிதப் போகங்களும் ஆகிறது. என் சரீரம், பிராணன், உணர்ச்சி இவற்றில் அது உயிருக்கு உயிராகி நிற்கிறது.

இந்தப் பாட்டு அடங்கிய 78-ஆம் திருவாய்மொழியிலுள்ள பத்துப் பாசுரங்களில் வைஷ்ணவ சமயத்தின் முழுத் தத்துவங்களும் இருக்கின்றன.

தானே யாகி நிறைந்தெல்லா
 வுலகு முயிரும் தானேயாய்த்
தானே யானென் பானாகித்
 தன்னைத் தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே
 யமுதே திருமா லிருஞ்சோலைக்
கோனே யாகி நின்றொழிந்தா
 னென்னை முற்று முயிருண்டே.

இந்தப் பாட்டில் அர்ச்சாவதார உபாசனைக்கும் பரப்பிரம்ம உபாசனைக்கும் உள்ள பேதம் ஒழிந்தது.

அவனே யகல்ஞாலம் படைத்தி டந்தான்
அவனேயஃ துண்டுமிழ்ந் தான ளந்தான்
அவனே யவனு மவனு மவனும்
அவனேமற் றெல்லா முமறிந் தனமே.

நாம் கண்டுகொண்டோம். அவனே உலகத்தைப் படைத்தவனும் சம்ஹரித்தவனும். அவதார நிகழ்ச்சிகள் நடத்தியவனும் அவனே. அவனே திருமால், அவனே சிவன், அவனே பிரம்மா. அவனே ஜகத்து முழுவதும்.

உருவா கியஆறு சமயங்கட் கெல்லாம்
பொருவாகி நின்றா னவனெல்லாப்
பொருட்கும்
அருவாகிய வாதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்
டேனே.

கண்ணன் என்பது பரப்பிரம்மமே. வெவ்வேறாக நிருமாணிக்கப்பட்ட ஆறு சமயங்களிலும் நீ சமமாக நிற்கிறாய். எல்லாப் பொருள்களிலும் நீ அந்தராத்மாவாக இருக்கிறாய். நீ சிருஷ்டி கர்த்தா, எல்லாத் தேவர்களுக்கும் நீயே கருப்பொருள் என்கிற உண்மையை அறிந்தேன்.

"சமயங்கட்கெல்லாம் பொருவாகி" என்றால், எல்லாச் சமயங்களிலும் நீ சமமாக நிற்கிறாய் என்பது பொருள். "கோதில் வண்புகழ் கொண்டு சமயிகள், பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான் பரன்" என்று பாடியதும் இதுவே.

இலிங்கத் திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்றுநுந்
தெய்வமு மாகிநின்றான்
மலிந்து செந்நெல் கவரி வீசும்
திருக்குரு கூரதனுள்
பொலிந்து நின்ற பிரான்கண்டீ ரொன்றும்
பொய்யில்லை போற்றுமினே.

வேறு சமயத்தினரைப் பார்த்து, "உங்கள் தெய்வமும் என் குருகூரில் எழுந்தருளா நிற்கும் தெய்வமே. நான் சொல்வது பொய் அல்ல" என்கிறார்.

திருவாய்மொழி நூற்பயனைப் பாடிய பக்தரும்,

அவாவறச்சூ ழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சட
கோபன் சொன்ன
அவாவிலந் தாதிகளா லிவையாயிர
மும்முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந்தார்
பிறந்தா ருயர்ந்தே.

என்று கடைசி உபஸம்ஹாரப் பாசுரமாக அமைத்துத் திருவாய்மொழியை முடிக்கிறார்.

சித்தார்த்தன் துறவு

தேசிக விநாயகம் பிள்ளை



சித்தார்த்தன் துறவு

சிறிய பெரிய தேவர் தம்முள்
எல்லாம் வல்லார் எவரு முளரோ ?
இரக்க முள்ளார் இருக்கின் றனரோ ?
கண்ணால் அவரைக் கண்டவ ருண்டோ ?
வணங்கி நித்தம் வழிபடு வோர்க்கு அவர்
செய்திடும் நன்மை சிறிதும் உளதோ ?
எத்தனை எத்தனை எத்தனை மனிதர்
காலை மாலை கண்க ளிரண்டும்
மூடி யிருந்து முணுமுணு என்று
செபங்கள் நிதமும் செபித்திடு கின்றனர் ?
கோபுரம் சிகரம் கொடிமர மெல்லாம்
வானுற ஓங்கி வளரும் ஆலயம்
அழகுற காக அமைத்திடு கின்றனர் ?
மந்திர போனகம் வாடா விளக்கு இவை
நித்தம் நடைபெற நிலம்விடு கின்றனர் ?
துடிக்கத் துடிக்கத் துள்ளு மறிகளைப்
பகுத்தறி வின்றிப் பலியிடு கின்றனர் ?
அன்ன சாலையில் அந்தணர் நிதமும்
உண்டு களிக்க உணவிடு கின்றனர் ?
அன்னியர்க்கு அல்ல, அடியவர்க்கு
எனினும்
இவ்வுல கதனில் யாதும் ஒருநலம்
செய்தறி யாத தேவரை நோக்கிக்
கங்கா தரனே கண்ண பிரானே
காப்பாய் காப்பாய் காப்பா யென்ன
(அன்பின் மிகுதியோ அச்சமோ
அறியேம்)
தொழுது போற்றும் தோத்திரப் பாக்கள்
வானில் முழங்கும் வல்லிடி போல
என்றும் என்றும் எழுந்திடு கின்றன:
இவற்றால்,
வாழ்க்கையில் நித்தம் வளருந் துயரோ
ஆசைப் பொருளை அடையாத் துயரோ
இருந்த பொருளை இழந்த துயரோ
நோய்வாய்ப் பட்டு நொந்திடு துயரோ
நரைதிரை மூப்பால் நண்ணுந் துயரோ
மாருக் கொடிய மரணத் துயரோ
ஜனன மரணச் சக்கரம் சுழன்று
பின்னும் பின்னும் பிறந்தும் இறந்தும்
உயிர்கள் அடையும் ஓயாத் துயரோ
யாதும் ஒருதுயர் இம்மி யளவும்
நீங்கி எவரும் நித்தியா னந்த
வாழ்வடைந்து இங்கு வாழ்வதும்
உண்டோ ?

அருமை மங்கையர் அன்பு நிறைந்து
நோற்கும் பற்பல நோன்புக ளாலும்
பாடும் தோத்திரப் பாடல்க ளாலும்
எய்திய நன்மை யாதும் உண்டோ ?
அவர்,

தூர்த்து மெழுகித் துப்புர வாக்கித்
துளசி மாடம் தொழுவத னாலும்
பாலும் பழமும் பணிகா ரங்களும்
பத்தி யோடு படைப்பத னாலும்
பேறு காலம் பெறுநோக் காடு
கொஞ்ச மேனும் குறைந்த துண்டோ?
திருந்திய நல்ல தேவரும் உண்டு;
தீயரும் அவருள் சிற்சிலர் உண்டு;
உண்மை இதுவென் றுணர்வதும் அரிதாம்.
ஆயினும்,
யாவரும் செய்கையில் எளியவ ரேயாம்;
முன்னைப் பிறப்பும் முடிவும் அப்பால்
பின்னைப் பிறக்கும் பிறப்பின் விளைவும்
ஐய மின்றி அறிகுவ ரேனும்
இவர்,
ஜனன மரணச் சக்கர மதனில்
சிக்கிச் சுழன்று திகைப்புறு வோரே.
உலகில் வாழும் உயிரின் பிறப்பிடம்
அறிவிற் கெட்டா தாயினும் அவ்வுயிர்
படிப்படி யாயிப் படியின் மீது ஓர்
அணுவாய்க் கொசுவாய் அரிக்கும்
புழுவாய்
பாம்பாய் மீனாய்ப் பறவையாய் மிருகமாய்
மனிதனாய்ப் பூதமாய் வானுறை தேவராய்
தெய்வமாய்த் தோன்றித் திரும்பியும்
அவ்வழி
மண்ணாய் அணுவாய் மாறுதல் இயல்பாம்.
ஆதலின்,
புவிமீ துள்ள பொருள்க ளனைத்தும்
சுற்றம் போலத் தொடர்புடை யனவே.
அஞ்ஞா னத்தில் அழுந்தி அழுந்தி
நைந்து நொந்து நடுங்கி நிதமும்
உழலும் மனிதர் உய்யும் வழியினைக்
கண்டொரு மனிதன் காட்டிடின் அதனால்
இவ், வையகம் முழுவதும் வாழ்வது
திண்ணம்.

கல்லில் முன்னம் கரந்து கிடந்த
எரியினைத் தட்டி எழுப்பி ஒருவன்
காட்டிய நாள்வரை, கடுங்கால் மாரி
வாடையில் மக்கள் வருந்தி நைந்தனர்;
பருவ மறிந்து பயிர்செய் தொருவன்
தானிய மெடுத்துத் தருவதன் முன்னம்,
உழுவை போல ஊனை யுண்டு
மனிதனும் உலகில் வாழ்ந்து வந்தனன்;
பாரிற் பேசிப் பழகும் பாஷை
ஒருவன் நாவில் உருப்பெறும் முன்னம் -
ஏட்டில் எழுதும் எழுத்தின் வடிவை
ஆராய்ந் தாராய்ந் தமைப்பதன் முன்னம் -
மனிதர்,
ஊமைகள் போல உளறித் திரிந்தனர்;
கையால் சாடை காட்டி அலைந்தனர்.
ஆழ்ந்து கண்ட அறிவி னாலும்
ஓயா துழைக்கும் உழைப்பி னாலும்





தேர்ந்து செய்யும் தியாகத் தாலும்
அன்றிஓர் நன்மைஇவ் அகில மீது
மனிதர்க் கென்றும் வாய்த்ததும்
உண்டோ?

ஆதலின்,
உடலின் உறுதியும் ஊக்கமும்
உடையோன்
பொருளும் புகழும் புத்தியும் உடையோன்
காசினி யாளக் கருதுவ னேல்ஓர்
மன்னர் மன்னனாய் வாழுதற் குரியோன்
குலத்திற் பிறந்த குணந்திகழ் கோமகன்
வாழ்வில் ஒய்ந்து மனந்தள ராமல்
அதன், இன்பத் துறையில் இறங்கி
நிற்போன்
விஞ்சிய காதல் விருந்தை அருந்தி
அமையா தோங்கும் ஆசை யுடையோன்
நரையுந் திரையும் மூப்பும் நண்ணி
வெறுப்பு மிகுந்த விரக்தனா காது
நன்மைதீமைஎந் நாளும் ஒன்றாய்க்
கலந்து தங்குமிக் காசினி மீது
வாழ்வதில் மிக்க மகிழ்ச்சி யுடையோன்
புவியில் அழகிய பொருளைத் தெரிந்து
சொந்த மாக்கிடச் சுதந்தர முடையோன்
தனக்கென வாழாத் தரும சீலன்
என்றும் மக்கள் ஏத்துதற் குரிய
மனிதன் ஒருவன் மண்ணில் தோன்றி,
அருளால் அனைத்தும் அறவே யொழித்து,
இவ்
வையக மீது மானிட ரெல்லாம்
உய்யும் வழியை உணர்த்தும் மந்திரம்
பாதலம் அதனில் பதுங்கிக் கிடப்பினும்
இவ்வுல கத்தினில் யாரும் இதுவரை
அஞ்ஞா னத்தா லறியா திருப்பினும்
ஓய்வொழி வின்றி உழைத்திடு வானேல்,
எந்நா ளாயினும் எவ்விடத் தாயினும்
வெளியாய் நன்கு விளங்குதல் திண்ணம்.
தேடின கண்கள் தெரிசனம் செய்யும்;
நடந்த கால்கள் நன்னிலம் சேரும்;
பண்ணிய தியாகம் பழுதா காது;
இவனே
காலனை வென்ற காலனும் ஆவான்.
யான்இது செய்வேன்; யான்இது செய்
வேன்;
தியாகம் செய்திடத் தேசமொன் றுண்டு;
அறிந்த மக்களே யாயினு மாகுக
அறியா தவரே யாயினு மாகுக
செய்திடத் துணியும் இத் தியாக மதனால்
எண்ணிலா மக்கள் இன்பம் அடைவர்;
இந்நாட் டுள்ள யாவ ருளத்தும்
துடிக்கும் ஒவ்வொரு துடிப்பொடும்
என்றன்
உள்ளமும் ஓயாது ஒத்துத் துடிக்கும்;
அழைத்து நிற்கும் அரிய சுடர்களே!

வருகின் றேன் இதோ! வருகின் றேன்
இதோ.

அழுது புலம்பி அரற்றும் புவியே!
மகிழ்ந்து நீயும்உன் மக்களும் வாழ,
என்குடி என்கிளை என்வாழ்வு என்சுகம்
என் இளம் பருவம் என்சிங் காதனம்
யான்வாழ் அரண்மனை யாவும்
வெறுத்தேன்.

வெறுத்தற் கரிய விண்ணமு தே!என்
அன்பின் உருவே! அசோதையே!
உன்னையும்
மறந்து செல்ல மனந்துணி கின்றேன்.
ஆயினும்,
நீணிலம் உய்ந்திட நீயும் உய்குவை;
காரிகை யே!நம் காதலில் மலர்ந்த
மலரென உன் றன் வயிற்றில் வளரும்
மகவினைக் கண்டு வாழ்த்துதற் குரிய
காலம் வரும்வரைக் காத்துநிற் பேனேல்,
மனத்தில்,
கொண்ட உறுதி குலைந்து போய்விடும்.
உண்மை ஞானமிவ் வுலகெலாம் ஒளிர
மாறு விதியினை மன்பதை யுணரச்
செய்வதென் கடனும்; சிறிது காலம்
பிரிகின் றேன் இதிற் பிழையெதும் இல்லை.
வாய்த்த மனைவியே! வயிற்று மகவே!
தந்தையே! தமரே! தரணி பாந்தரே!
பொறுத்திட வேண்டும்; பொறுத்திட
வேண்டும்.

(பொறுத்துக் கொள்வது புண்ணிய
மாகும்)

உள்ளம் தேறினேன்; உறுதியும்
கொண்டேன்.

இனியொரு கணமும் இங்குத் தங்கிடேன்.
யாதுந் தடையிலை; இறங்கிச் செல்வேன்.
நீணில மீது நித்தியா னந்த
வாழ்வை யடையும் வழிஇது வென்று
தீவிர மான தியாகத் தாலும்
ஓய்வில் லாத உழைப்பி னாலும்
அறியலா மென்னில், அறிந்து வருவேன்.
வாடி வருந்தி மன்னுயி ரெல்லாம்
அடையுந் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்.
என்று கூறி இரவில் இறங்கினன்
நன்று நாடிய ஞானிசித் தார்த்தனே.

விவேகானந்தரின் தேசபக்தி

சி. சுப்பிரமணிய பாரதியார்

ஸர்வ ஸங்கியாஸியாகிய விவேகானந்தர் தமது நாட்டிலே மட்டும் ஒருவிதமான அதிகப் பற்று வைத்திருந்தமை அவரது பெருந் துறவுக்குப் பொருந்துமா என்று சிலர் ஐயுறலாம். இதே விஷயந்தான் அவருடைய சிஷ்யசிகாமணிகளில் ஒருவராகிய ஸ்ரீ நிவேதிதா தேவியின் மனத்திலும் பலவித ஆலோசனைகளுக்கு இடமுண்டாக்கி இருக்கிறது. ஸ்ரீ நிவேதிதா தேவி சென்ற சில மாதங்களாகப் "பிரபுத்த பாரதம்" என்ற பத்திரிகையிலே விவேகானந்தரைப் பற்றி வரிசையாக எழுதிக்கொண்டு வருகிறார். இம் மாதத்துப் பத்திரிகையிலே நிவேதிதா தேவி ஸ்வாமியின் தேசபக்திக்கும் ஸந்நியாஸத்திற்குமுள்ள விரோத இயற்கையைப் பற்றி விஸ்தாரமாகப் பேசுகிறார். இதையெல்லாம் இங்கே விவரமாக எழுத முடியாதபோதிலும் அதன் கருத்தைக் கீழே தருகிறோம். விவேகானந்தரின் இயற்கையிலே சுதேச பக்தி வேர் ஊன்றிப்போய் விட்டது. மஹாபலம் கொண்டவளாகிய பாரதமாதா தனது பலத்தைத் தானே அறியாதவளாகி அடிமை நிலைகொண்டு நிற்பதை அவரால் பார்த்துச் சகிக்க முடியவில்லை. ஆனால் அந்தச் சொற்ப பாசங்கூட மாயா சம்பந்தமானது என்பதை அவரே நன்றாக அறிந்திருந்தார். அவர் மட்டுமென்ன? அவருடைய பரம குருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸர்கூட அவரைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். "விவேகானந்தருடைய மனசை இலேசான ஒரு மாயைப் படலம் சூழ்ந்திருக்கிறது. அதை ஈசன் இவருடைய மனத்தில் ஒரு நன்மையைக் கருதி வைத்திருக்கிறார். ஆனால் அது மிகவும் இலேசான படலம். அதை எந்த நிமிஷத்திலும் விவேகானந்தர் கிழித்தெறிந்துவிடுவார்" என்று ராமகிருஷ்ணர் திருவாய் மலர்ந்தருளினர்.

ஆனால் நம்மவரின் அதிருஷ்டத்தாலும் ஈசனுடைய திருவருளாலும் மற்றெல்லா மாயைப் படலங்களையும் அறுத்தெறிந்துவிட்ட விவேகானந்தர் சுதேசப் பற்றை மட்டிலும் நெடுங்காலம் கொண்டிருந்தார். ஆனால் பரம ஸந்நியாஸியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பூமிப் பற்றில்லாத விஷயத்தில் பிணங்களுக்குச் சமானமாவார்களென்பதை இம் மஹரிஷி மிகவும் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்.

எனினும் கடைசிக் காலத்தில் அவர் மனத்தில் சுதேச விரோதிகளிடங்கூட "ஏகத்வம்" பாராட்டத் தொடங்கிவிட்டார். 1858-ஆம் வருஷத்துச் சிப்பாய்க் கலகத்தின் போது ஒரு ஸந்நியாசியை ஓர் ஆங்கிலேய ஸோல்ஜர் குத்திக்கொன்றுவிட்டான். அந்த ஸந்நியாசி 15 வருஷ காலமாக மௌன விரதம் பாராட்டி வந்தார். 15 வருஷ காலம் வாய் மூடியிருந்த மேற்படி ஸந்நியாசி இந்த ஆங்கிலேயன் குத்தியவுடனே, "நீகூட அவனே (பிரம்மமே)" என்று சொல்லிவிட்டுப் புன்னகையுடன் சரீரத் தியாகம் புரிந்து விட்டனர். இவரையே தமக்கு முன்மாதிரியாக ஸ்வாமிகள் கூறுவதுண்டு.

நமது

ஆடைகளை

அணியும் அன்பர்கள்

அனைவர்க்கும்

எமது

பொங்கல்

வாழ்த்துக்கள்

A.R.P. சாரதி, மதுரை

SARATHI
Handloom Textiles
MADURA.

M.S. MANI



எங்கள் புத்தகங்கள்
நன்றாக இருந்தால் உங்
கள் நண்பர்களிடம்
சொல்லுங்கள். இல்லை
யெனில் எங்களுக்கு
எழுதுங்கள்.
தமிழ்ப் பண்ணை
நிர்வாக ஆசிரியர்கள்:
நா. அண்ணாமலை.
எஸ். ஏ. ரஹீம்.
PREMIER
தியாகராயநகர் - சென்னை



ஆஞ்சநேயர் மாணவ வடிவமோடு ராம லக்ஷ்மணர்களை வரவேற்றல்.

ஓவியர்—க. ராமமோஹன் சாஸ்திரி.

கலைமகள்

பொங்கல் மலர்

உ இன்பம் பொங்குக!

பொங்கல் திருநாள் வாழ்த்தை அன்பர்களுக்குக் கூறுகிறோம். 'பொங்கல் பொங்குக! இன்பம் பொங்குக!' என்று வாழ்த்துகிறோம். இந்தப் பொங்கல் மலரை அவர்களுடைய பொங்கல் மகிழ்ச்சியை மிகுதியாக்க ஸமர்ப்பிக்கிறோம்.

இந்த மலர் உருவத்தில் மிகப் பெரிதென்று சொல்வதற்கு இல்லாவிட்டாலும் மணம் நிரம்பியதென்பதை அன்பர்கள் நன்கு உணர்ந்து ரஸிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்த மலரில் உள்ள சித்திரங்களும் கட்டுரை கதைகளும் சிறந்த பொங்கல் விருந்தாகப் பரிமளிக்கும். எந்தத் திசையிற் சென்றாலும் தடைகள் நிரம்பியுள்ள இந்த யுத்த காலத்தில் முயற்சிகள் முற்றும் முடிந்த பின்புதான் ஆறுதல் உண்டாகிறது. காகிதம், மைகள், ப்ளாக்குகள் எல்லாம் நினைத்தபடி கிடைக்கவில்லை. இந்த மலரில் இன்னும் சில படங்களைச் சேர்ப்பதாக ஏற்பாடு செய்திருந்தோம். அவை சமயத்துக்கு உதவவில்லை.

இந்த மலரில் ராஜாஜியின் 'சைவ வைஷ்ணவ பேதங்கள்' என்ற கட்டுரை முதல் ஸ்தானத்தை வகிக்கிறது. பெயர் என்னவோ 'பேதங்கள்' என்றிருந்தாலும் இரண்டு சமயங்களுக்கும் உள்ள அபேதத்தைத் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டுகிறார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சித்தார்த்தன் துறக்கும் தறுவாயில் அவனுடைய சிந்தனையில் மிதந்த எண்ண அலைகளைக் கவிதையாக்கித் தந்திருக்கிறார். உலக அமைதி இப்போது இல்லாததற்குக் காரணமும் இனிமேல் அந்தச் சரக்கைப் பெறுவதற்கு வழியும் டாக்டர் ப. சுப்பராயன் ஒரு கட்டுரையில் சொல்லியிருக்கிறார்.

தமிழ் நாட்டு ஹாஸ்ய எழுத்தாளர்களுள் சிறந்த எஸ். வி. வி. அவர்களும் தத்துவ விசாரணையில் இறங்கக் கூடுமென்பதை அவர் இந்த மலரில் எழுதியுள்ள 'உலகத்தின் கதை' நிரூபிக்கும். ஆனால் தத்துவ விசாரணையென்றாலே முகத்தைச் சிணுங்குபவர்கள் கூடத் தேனைப் போலத் தித்திக்கிறதென்று கட்டுரையைப் படித்து உணர்வார்கள்.

டாக்டர் ராஜன் கப்பல் பிரயாணத்தில் நடந்த களியாட்டத்தை வருணிக்கிறார். சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் முத்தொள்ளாயிரத்தின் காலத்தை ஆராய்ச்சிக் கண்ணோடு பார்த்து எழுதியிருக்கிறார்.

தமிழர்களுடைய பாராட்டைப் பெற்ற சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளும், சிறந்த கவிதைகளும் இந்த மலரை அணிசெய்கின்றன. கலை விளக்கக் கட்டுரையும் ஆராய்ச்சிக் கட்டுரையும் சங்கீதத்தைப் பற்றிய

கட்டுரையும் இலக்கியக் கட்டுரையும் விஞ்ஞானக் கட்டுரையும் சரித்திரக் கதையும் கற்பனைக்கட்டுரையும் கலந்து பலவகை நிறமும் மணமும் உடையதாக இந்த வெளியீட்டை ஆக்கியிருக்கின்றன. இவற்றை எழுதியுதவிய எழுத்தாளர்கள் யாவருக்கும் எங்கள் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மலரிலுள்ள வர்ணப்படங்களில் இரண்டு கலைமகள் அன்பர்களின் பேரன்புக்குப் பாத்திரமாயுள்ள ஸ்ரீ ராஜம் எழுதியவை. ஒன்று முகப்புப்படம்; அது பழமை கனிந்து பாசி ஏறியும் தெய்வத்தன்மையும் கலையழகும் மங்காத மகா காளியின் படிமத்தை ஒரு மடமங்கை வழிபடும் கோலத்தைக் காட்டுகிறது. மற்றொன்று, காடுமேடுகளெல்லாம் சுற்றியலைந்து ஓய்ந்துபோய் உட்கார்ந்திருக்கும் ஒரு வழிப்போக்கனை மிகவும் அற்புதமாகச் சித்திரிக்கிறது. இந்திய ஓவியக் கலைத்திறமை பரிபூர்ணமாகப் பொங்கித் ததும்பும்படி இவ்விரண்டையும் அமைத்திருக்கிறார் ராஜம்.

ராமபிரானையும் லக்ஷ்மணனையும் முதல் முதலில் பிரமசாரி உருவத்தோடு ஆஞ்சநேயர் காணும் கட்டத்தைச் சித்திரிக்கும் முகப்புப்படம் ஸ்ரீ க. ராமமோகன் சாஸ்திரியின் சிருஷ்டி. இந்தப் படத்தின் வர்ணவிசித்திரம் மிகவும் பாராட்டுவதற்குரியது.

பொங்கல் பொங்கி மனைவி மக்களுடன் படைத்துச் சூரியனை வணங்கும் பொங்கல் விழா, தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்கிறது. இந்த நிகழ்ச்சியை வர்ணத்தில் அழகாகக் காட்டும் அட்டைப்படமும் உள்ளேயுள்ள பொங்கற் காட்சிகளும் வேறு சில படங்களும் ஸ்ரீ ரவியினுடைய படைப்பு. பொங்கல் மலரைப் பொங்கல் மணம் வீசப்பண்ணுபவை இவருடைய சித்திரங்கள்.

ஓவிய இளைஞர் ஸ்ரீ ஸாமியினுடைய சித்திரங்கள் பல இதிலுள்ளன. பல பல வகையில் உள்ள அவற்றிலிருந்து இவருடைய திறமையை அன்பர்கள் நன்கு உணர்ந்து பாராட்டுவார்களென்பதில் தடையில்லை.

இந்த ஓவியர்கள்பால் நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம்.

அவ்வப்போது எங்கள் அவசரத்தை அறிந்து ‘ப்ளாக்’ செய்து கொடுத்தவர்களுக்கும், விளம்பரங்கள் உதவியவர்களுக்கும், வேறு பல வகையில் உபகாரம் செய்தவர்களுக்கும் நன்றி கூறுவது எங்கள் கடமை.

தமிழன்பர்கள் இந்த மலரின் சிறப்பை உணர்ந்து பாராட்டுவார்கள் என்பது திண்ணம். இப்பொழுதுள்ள கால நிலை மாறி நல்ல காலம் பிறந்தால் நாங்கள் கனவு காணும் பெரிய லக்ஷ்யங்களை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதுவரையில் சிறிதும் தளர்வின்றி இலக்கிய சிருஷ்டி செய்துகொண்டிருப்பதே எங்கள் வேலை. எங்களுடைய சிரத்தையும், உழைப்பும் நிச்சயமாக அன்பர்களுடைய உள்ளத்துக்கு உவப்பான பயனை உண்டாக்கும் என்று நாங்கள் எதிர்பார்ப்பது நியாயந்தானே!

மறுபடியும் பொங்கல் வாழ்த்துக் கூறுகிறோம். ‘பொங்கல் பொங்குக! இன்பம் பொங்குக!’

ஆசிரியர்

சைவ வைஷ்ணவ பேதங்கள்

சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்

அனைத்துக்கும் உயிராக நிற்பது ஒரு பரம்பொருள் என்கிற வேதாந்தத்தை ஒப்புக்கொண்டே எல்லா வைதிக சமயங்களும் பேசுகின்றன. இப்படியிருக்க, சைவ வைஷ்ணவப் பிரபந்தங்களில் சிவனைக் குறைத்து விஷ்ணுவை உயர்த்தியும், விஷ்ணுவைக் குறைத்துச் சிவனை உயர்த்தியும் எழுதியிருப்பதைக் கண்டு சமரச நோக்கத்தில் ஈடுபட்ட சிலர் வியப்பும் அருவருப்பும் கொள்ளலாம். ஆழ்வார் நாயன்மார்களின் கரை கடந்த பக்திக்கும் ஆழ்ந்த ஞானத்துக்கும் இந்த ஏற்றத் தாழ்வுப் பேச்சு மிகவும் பொருத்த மற்றதாகத் தோன்றும். கடவுளைப்பற்றியும் சமயத்தைப் பற்றியும் அசிரத்தையும் சந்தேகமும் நிறைந்த நாம் ஆழ்வார் நாயன்மார்களின் கருத்துக்களையும் மனப்பான்மையையும் சரியாக உணர்வது கடினம்.

சிவனுக்கு மேல் விஷ்ணு, அல்லது திருமாலுக்கு எஜமானன் பரமேசுவரன் என்று பக்தர்கள் பாடுவதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். "தேவ தேவன், மெய்ச் சேவகன், தென்பெருந்துறை நாயகன், மூவராலும் அறிவொணா முதலாய ஆனந்த மூர்த்தியான், மால் அயன் வானவர் கோனும் வந்து வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்" என்று மாணிக்கவாசகர் சிவபிரானை நினைந்து உருகுகிறார். "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை, இனியறிந்தேன், காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை, நாரணன் நீ நன்கறிந்தேன் நான்" என்று இன்னொரு பக்கத்தில் திருமாலை நோக்கி உருகுகிறார் திருமழிசை ஆழ்வார். சிவன் என்பதே பொய் அல்லது திருமால் என்பதே பொய்க் கதை என்று விஷ்ணு பக்தர்களாவது சைவ சமயிகளாவது சொல்வது முடியாது. சொன்னால் எல்லாம் அனர்த்தமாக முடியும். கிறிஸ்து மதத்தவரும் இஸ்லாம் மார்க்கத்தவரும் அவ்வாறு சொல்லக்கூடும். ஆனால் வைதிக சமயங்களைச் சேர்ந்த எவரும் அவ்வாறு தங்கள் பக்தர்களுக்கிடையில் சொல்லி அடிப்படையான விஷயங்களில் ஐயத்தைக் கிளப்பிவிட இயலாது.

சரி, இவ்வாறு வேண்டாம்; சிவன் விஷ்ணு இருவரும் சமம் என்று சொல்லிக்கொண்டு போகலாமே? ஒருவருக்கு மேல் மற்றொருவர் என்று ஏன் துவேஷப் பேச்சுப் பேச வேண்டும்?

ஒருவருக்கு மேல் மற்றொருவர் என்று வகுக்காமல் இருவரும் சமம் என்று சொன்னால், ஜகத்துக்கு ஒரே ஈசன் என்கிற தத்துவம் போய், இரண்டு அல்லது மூன்று சமானக் கடவுள்கள் உண்டு என்றல்லவோ ஏற்படும்? இது சுத்தத் தவறாகும். ஆதலால் ஒரே ஈசன், ஒரே ஜகத் காரணம் என்று கொண்ட எந்தச் சம்பிரதாயத்திலும் அந்தச் சம்பிரதாயத்தில் எந்த வடிவம் முக்கியமாகத் தியான சாதனமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அதற்குப் பிராதானியம்



கொடுப்பது வேதாந்த சமயாசாரங்களில் அவசியமாகிறது. வேறு வழி இல்லை.

இப்படி இல்லாவிடில் பரம சாதுக்களும் மகா ஞானிகளுமான ஆழ்வார்களும் நாயன்மார்களும் இவ்வாறு பாடியே இருக்க மாட்டார்கள். நாமும் பூரண பக்தர்களானால்தான் பக்தியின் இயற்கையிலிருந்தே உண்டான இந்தப் பாவனையை உணர முடியும். நிராகாரமான சுத்தப் பிரம்மத்தைத் தியானித்து விடலாமே என்று நாம் பேசலாம். பேசுவது வேறு,

செய்து முடிப்பது வேறு. ஞானிகளுக்குங்கூட ஏதேனும் ஒரு மூர்த்தியை உள்ளத்தில் வைத்து உபாசித்தால்தான் முடியும் என்பது பெரியோர்கள் அநுபவ சித்தமாகப் பார்த்த உண்மை. எந்த வடிவத்தில் பக்தன் உபாசிக்க முயற்சி செய்கிறானோ அந்த வடிவத்தையே ஈசுவர ரூபமாக வைத்துக் கொண்டு உள்ளத்தை அதனில் செலுத்தவேண்டும். அனைத்தையும் அந்த மூர்த்திக்கு அடிமைப்படுத்த வேண்டும். எந்த உயர்ந்த புனிதப் பொருளையும் அதற்கு ஆட்படுத்தியே தியானிக்கவேண்டும். இதை உணர்ந்தால் ஆழ்வார் நாயன்மார்கள் பாடிய பாடல்களிலுள்ள சைவ வைஷ்ணவ ஏற்றத்தாழ்வின் பொருள் விளங்கும்.

நம்முடைய பக்தியும் ஞானமும் அநேகமாக உயிரற்ற வாசாகைங்கரியந்தான். வாசாகைங்கரியத்திற்குக் கஷ்டமும் தடையும் இல்லை. எதையேனும் செய்யலாம். அரசியலில் சர்வ கட்சி ஆட்சி முறையைப் போல் மிக்க தாராள சிந்தனையுடன் எல்லாச் சமய முறைகளும் சமம், எல்லாத் தெய்வங்களும் சமம் என்று சைவ வைஷ்ணவ சமத்துவம் அளித்து விடலாம். உள்ளம் அப்படியே உருகியொழுகும் பக்தி உபாசனைகளில் இவ்வாறு செய்ய முடியாது.

“திருவேங்கடத்திலுள்ள திருமாலின் மூர்த்தியே என் தெய்வம். எனக்குப் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும் வேண்டாம், வைகுண்டத்திலுள்ள பெருமானும் வேண்டாம், வேறு எந்தத் திவ்விய தேசமும் வேண்டாம்” என்று ஆழ்வார்கள் பாடியிருப்பதைக் காண்கிறோம். இதனால் திருமலையில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரமே பரம்பொருள் என்று அவர்கள் பிடிவாதம் செய்ததாக வைத்துக்கொள்ளலாமா? ஜகத்துக்கெல்லாம் ஒரே ஈசன், ஒரே பரம்பொருள், புலன்களுக்கும் கற்பனைக்கும் அடங்காத அந்தப் பரம்பொருளைத் தியானிக்க வேண்டினால் ஏதேனும் ஒரு கிலுப்தமான வடிவத்தில் உபாசிக்க வேண்டுமேயொழிய அதைப் புத்தி சாதுரியத்தைக் கொண்டு நிமிஷத்துக்கு ஒரு வடிவமாக மாற்றிக் கொண்டு தியானித்தால் வெறும் வேஷமாகவும் பயனற்ற முயற்சியாகவும் போய்விடும்.

மனத்தில் இவ்வாறு ஒரு வடிவத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்குப் பல சாதனங்கள் உண்டு. புராணமும் கதையும் ஸ்தோத்திரமும் மூர்த்திகளும் இதற்குச் சாதனங்கள். பாரத நாட்டில் ஒரே வேதாந்தத்தில் ஈடுபட்ட சமயங்களும் சம்பிரதாயங்களும் வெகு காலமாக நம்மில் பரவி வந்திருக்கிறபடியால் உபாசகர்களுக்கு ஏகாக்கிரமான தியானத்திற்கு இடைஞ்சல் உண்டாக்கும் வேறுபாடுகளும் பேதங்களும் குறைவதற்கு ஒரு வழியைப் பக்தர்கள் கண்டு கையாள்கிறார்கள். அதுதான், என் தெய்வமே பெரிது என்கிற உபாசனை முறை. ஒரு பரம் பொருள், ஒன்றே பரம்பொருள் என்று ஐயம் தீர்ந்து ஒப்புக்கொள்ளும் எந்தப் பக்தனுக்கும் இந்த முறையினால் துவேஷமாவது மற்ற மதத்தவர்கள் மேல் அருவருப்பாவது உண்டாகாது.

பொய்கையாழ்வார்

என்று கடல்கடைந்த
தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான் — அன்று
தடைத்துடைத்துக் கண்படுத்த
வாழி, இதநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த யார்.

புராணக்கதைகள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதைப்பற்றி என்ன கவலை? என் சிற்றறிவை நம்பிப் புத்தியைக் குழப்பிக்கொண்டு காரியத்தை ஆராய்ந்து காரணத்தை அனுமானித்து அறியலாம் என்று திரியவோ நான்? நீ இந்த உலகத்திற்கு அந்தர்யாமி என்பது எனக்குப் போதும் என்கிறார் ஆழ்வார்.

அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் — வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று.

அரன் நாரணன் என்று நாமங்கள் இரண்டு; விருஷபமும் கருடனும் ஆக வாகனங்கள் இரண்டு. ஒருவனைப் பற்றிச் சிறப்பாகச் சொல்லுவது ஆகமம் (நூல்), மற்றொருவனைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வது வேதம் (மறை); வீற்றிருக்கும் இடங்கள் கைலாசமும் (வரை) கடலும் (நீர்); தொழில்கள் இரண்டு: அழிப்பதும் அளிப்பதும்; ஆயுதங்கள் முறையே வேலும் சக்கரமும்; மூர்த்திகளின் நிறம் முறையே நெருப்பு வர்ணமும் மேக வர்ணமும்; ஆனால் மேனியோ, இருவருக்கும் ஒன்றே! இருப்பிடம், தொழில், ஆயுதம், நிறம், பெயர் இவை வேறுபட்டாலும் ஒரே பரம்பொருள் இரண்டு உருவங்களாக நிற்கும். ஒருவன் சரீரி; ஒருவன் சரீரம். ஒன்று உடலாகும்போது மற்றொன்று உயிராகும்.

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று — சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

தாம் தாம் அறிந்தவாறு ஏத்துவார்கள். பல மூர்த்தி வடிவங்களை எழுதியும் சிற்பம் செய்தும் தொழுவார்கள். ஆனால், எல்லா வழிபாடுகளும் போய்ச் சேருவது ஒருவனிடமே.

நகர மருள்புரிந்து நான்முகற்கு, பூமேல்
பகர மறைபயந்த பண்பன் — பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதி யுருவெண்ணும்
அந்தியா லாம்பயனங் கென்.

சர்வேசுவரனை நெஞ்சாலே தியானிக்காமல் வெறுமனே நாமங்களைச் சொல்லி ஜபமாலைக் கண்ணிகளை எண்ணுவதிலும் சந்தியாவந்தனம் முதலிய கிரியைகளிலும் என்ன பயன்?

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர் — தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியா னாம்.

அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட வடிவமும் பெயரும் நிறமும் வைத்துக்கொள்ளட்டும். அவர்கள் நினைத்தபடியாகவே தன்னை அமைத்துக்கொண்டு அருள் செய்வான் என்கிறார் ஆழ்வார்.

“பக்தர்கள் ஏதேனும் ஓர் அசேதன வஸ்துவை வைத்துக்கொண்டு இதை உனக்குத் திருமேனியாகக் கொள்ள வேணும் என்றால், அதை எம்பெருமான் திருமேனியாகக் கொள்ளும்” என்று பெரியவாச்சான் பிள்ளை இந்தப் பாசுரத்தை விளக்குகிறார். இதற்கு ஓர் அழகான நிகழ்ச்சி, எம்பெருமானார் ஜீவிய சரித்திரத்தில் நடந்ததைச் சொல்லுகிறார். ராமானுஜர் ஒரு நாள் ஸ்ரீரங்கத்தில் அட்சய பாத்திரம் எடுத்துத் தெருவில் போய்க்கொண்டிருந்தார். பிச்சையாகத் தந்ததைச் சமைத்து உண்பது ஒரு விரதம். வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சில சிறு குழந்தைகள் மண்ணில் காலாலே கீறி, “உம்முடைய எம்பெருமான் திருமேனி” என்று காட்ட, உடனே பாத்திரத்தைக் கீழே வைத்துத் தண்டனிட்டருளினாராம்! பின் அந்தக் குழந்தைகள் பெரிய திருமண்டபமும் பெருமாளும் நாச்சியாரும் மண்ணில் கோடு கிழித்துக் கற்பித்து, பெரிய கோயில் நிவேதன வழக்கத்தைப்போல் துணி பரப்பி, அதன்மேல்

அன்னத்தை ராசியாகக் குவித்து அமுது செய்விப்பதுபோல் விளையாட்டு நிவேதனம் பண்ணி, "எம்பெருமானாரே! பிரசாதப்படும்" என்று தெரு மணலைக் கையாலே முகந்து எடுத்துக் கொடுக்க, உடையவர் அதைப் பாத்திரத்திலே ஏற்றார்! குழந்தைகள் காலாலே கிறிய மேனியே உடையவருக்குத் திருமாலாயிற்று. அவர்கள் எடுத்துக் கொடுத்த மணலே உகந்த பிரசாதமாயிற்று!

பொன்திகழு மேனிப் புரிசடையம்
புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும், ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்.

"பொன் திகழும் திருமேனிப் புரிசடையம் புண்ணிய"னான சிவனும் திருமாலும் முறையே அவனவன் வடிவத்தில் நின்று திருவிளையாடல்கள் செய்தாலும் ஒருவன் உடலில் மற்றொருவன் எப்போதும் உளன். பரஸ்பரம் சரீர சரீரியாவார்கள்.

பேயாழ்வார்

தாழ்சடையும் நீண்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும்
தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து.

சடை மழு அரவு - இவை கொண்ட ஹர ரூபமும், முடி சக்கரம் பொன்நாண் - இவை கொண்ட ஹரிரூபமும் இரண்டும் அமைந்து ஒரு படியாய்த் திருமலையில் பொருந்தியிருக்கின்றன.

திருமழிசையாழ்வார்

தேருங்கால் தேவன்
ஒருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன்பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே
யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

எல்லாச் சாதன அனுஷ்டானம் பண்ணினவர்களுக்கும் அவற்றிற்குப் பயன் சர்வேசுவரனிடமிருந்து நிச்சயமாக வரும்.

இடமாவ தென்னெஞ்சம்
இன்றெல்லாம், பண்டு
படாரவணை நெடிய மாற்குத்—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு,
அயனைநான்
வையேனாட் செய்யேன் வலம்.

முன் பாம்பணைமேல் படுத்திருந்தவன் தன் படுக்கை விட்டு என் இருதயத்தை இருப்பிடமாகத் தேடி வந்திருக்கிறான். இது அவன் திருவுள்ளம். என் நெஞ்சமோ சின்னஞ்சிறிய இடம். ஒருவனுக்கு மேல் இடமில்லை. ஆகையால் பிறை சூடிய சிவனுக்கும் பிரம்மனுக்கும் இடம் கொடுக்க முடியாது. ஒரு மூர்த்தியைத் தியானிக்கும் முறையின் தத்துவத்தை இது நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

நம்மாழ்வார்

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே.

அவரவர்கள் தத்தம் அறிவுக்குத் தகுந்தபடி அந்த அந்தத் தேவதையை ஈசன் என்று தொழுவார்கள். அந்த அந்தத் தேவதையும் தன்னை ஆராதிப்பவர்கள் வேண்டின பலன்களைக் கொடுப்பதில் சக்தி குறையாது. சர்வேசுவரன் எல்லாத் தேவதைகளுக்கும் ஆத்மாவாக இருக்கிறான் அல்லவோ?

பிணக்கற வறுவகைச் சமயமும்
நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி
லாதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று
புறநெறி களைகட்டு
உணக்குமின் பசையற வவனுடை
யுணர்வுகொண் டுணர்ந்தே.

அறு சமயங்களையும் சந்தேகமும் கலவரமும் நீங்கித் தெளிவுபெறச் சமரசப்படுத்தி விளக்கிய கண்ணனைப் பக்தி பண்ணுங்கள் என்கிறார் ஆழ்வார்.

உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துருவி
யந்தவிந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினு மிறைநிலை
யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய
னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சு
மின் மனப்பட்ட தொன்றே.

உயிர்காள்! பொருள்களின் உண்மைப் பொருளை அறிந்துகொண்டாலுங்கூட, பரம்பொருளின் இலக்கணங்களை அறிய முடியாது. அரி, அயன், அரன் என்கிற இம் மூன்று மூர்த்திகளில் உங்கள் மனசில் ஈசுவரன் என்று தோன்றின ஒருவனைத் தியானித்துப் பஜியுங்கள்.

ஒன்றெனப் பலவென வறிவரும்
வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முக
னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும்
மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை
நம்முடை நாளே.

பரம்பொருளின் இலக்கணம் உணர்வுக்கு அடங்காது. ஒன்றா, பலவா என்று அறிய முடியாது. நாரணன் நான்முகன் அரன் என்று பல பெயர் கொண்ட இந்தப் பரம்பொருளை மனத்தில் ஒன்றாகப் படியும்படி தியானித்து விருப்பு, வெறுப்பு என்கிற இரு பசைகளையும் நீக்கிக்கொண்டு ஈசனிடத்தில் பக்தி பண்ணுங்கள்.

வலத்தனன் திரிபுர மெரித்தவ
னிடம்பெறத் துந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல்
லுலகமும் தானும்
புலப்படப் பின்னுந்தன் னுலகத்தி
லகத்தனன் தானே
சொலப்புகில் இவைபின்னும் வயிற்றுள
விவையவன் துயக்கே.

திரிபுரத்தை எரித்த சிவன் நாராயணனுடைய வலது பாகம். சதுர்முகப் பிரம்மாவும் அவன் படைத்த உலகங்களும் திருமாலின் நாபிக்கமலத்தில் அடங்கும். பின்னும் உலகத்தில் மக்களின் கண்ணுக்குப் புலப்படும்படி சர்வேசுவரன் அவதரிக்கவும் செய்கிறான். தவிர, இவ்வளவும் அவன் வயிற்றில் அடங்கிக் கிடக்கும். இவை பரமாத்மாவின் திருவிளையாடல்கள்.

ஒருவ ரிருவ ரோர்மூவ ரெனநின்று
உருவுகரந் துள்ளுந்தோறும் தித்திப்பான்
திருவமர் மார்வன் திருக்கடித் தானத்தை
மருவி யுறைகின்ற மாயப் பிரானே.

திருக்கடித்தானம் என்கிற திவ்விய ஸ்தலத்திலுள்ள கோயிலில் பக்தர்களுக்குத் தரிசனம்கொடுத்துக்கொண்டிருக்கும் பெருமான் ஒருவனாகவும் இருவராகவும் மூவராகவும் இருக்கிறான். தன் உருவத்தை மறைத்து ஜீவன்களின் உள்ளத்திலும் இருக்கிறான்.

யானும் தானா யொழிந்தானை
யாதும் யவர்க்கும் முன்னோனைத்
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலு
மமுது மாகித் தித்தித்தென்
ஊனி லுயிரி லுணர்வினில்
நின்ற வொன்றை யுணர்ந்தேனே.

பரம்பொருளை இப்பாசுரத்தில் நம்மாழ்வார் வேதாந்த விஸ்தாரமாக விளக்குகிறார். அதுவே "யான்" ஆகிறது. யானும் தானும் ஒன்றாகி முடிகிறது. அதுவே சேதன அசேதனப் பொருள்கள் அனைத்துக்கும் முந்தி இருந்த பரம்பொருள். அதுவே சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும். அந்தப் பரம்பொருளை உணர்ந்தேன். அதுவே எல்லாவிதப் போகங்களும் ஆகிறது. என் சரீரம், பிராணன், உணர்ச்சி இவற்றில் அது உயிருக்கு உயிராகி நிற்கிறது.

இந்தப் பாட்டு அடங்கிய 78-ஆம் திருவாய்மொழியிலுள்ள பத்துப் பாசுரங்களில் வைஷ்ணவ சமயத்தின் முழுத் தத்துவங்களும் இருக்கின்றன.

தானே யாகி நிறைந்தெல்லா
வுலகு முயிரும் தானேயாய்த்
தானே யானென் பானாகித்
தன்னைத் தானே துதித்தெனக்குத்
தேனே பாலே கன்னலே
யமுதே திருமா லிருஞ்சோலைக்
கோனே யாகி நின்றொழிந்தா
னென்னை முற்று முயிருண்டே.

இந்தப் பாட்டில் அர்ச்சாவதார உபாசனைக்கும் பரப்பிரம்ம உபாசனைக்கும் உள்ள பேதம் ஒழிந்தது.

அவனே யகல்ஞாலம் படைத்தி டந்தான்
அவனேயஃ துண்டுமிழ்ந் தான ளந்தான்
அவனே யவனு மவனு மவனும்
அவனேமற் றெல்லா முமறிந் தனமே.

நாம் கண்டுகொண்டோம். அவனே உலகத்தைப் படைத்தவனும் சம்ஹரித்தவனும். அவதார நிகழ்ச்சிகள் நடத்தியவனும் அவனே. அவனே திருமால், அவனே சிவன், அவனே பிரம்மா. அவனே ஜகத்து முழுவதும்.

உருவா கியஆறு சமயங்கட் கெல்லாம்
பொருவாகி நின்ற னவனெல்லாப்
பொருட்கும்
அருவாகிய வாதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்
டேனே.

கண்ணன் என்பது பரப்பிரம்மமே. வெவ்வேருக நிருமாணிக்கப்பட்ட ஆறு சமயங்களிலும் நீ சமமாக நிற்கிருய். எல்லாப் பொருள்களிலும் நீ அந்தராத்மாவாக இருக்கிருய். நீ சிருஷ்டி கர்த்தா, எல்லாத் தேவர்களுக்கும் நீயே கருப்பொருள் என்கிற உண்மையை அறிந்தேன்.

“சமயங்கட்கெல்லாம் பொருவாகி” என்ருல், எல்லாச் சமயங்களிலும் நீ சமமாக நிற்கிருய் என்பது பொருள். “கோதில் வண்புகழ் கொண்டு சமயிகள், பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான் பரன்” என்று பாடியதும் இதுவே.

இலிங்கத் திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்றுநந்
தெய்வமு மாகிநின்ருன்
மலிந்து செந்நெல் கவரி வீசும்
திருக்குருகூர் தனுள்
பொலிந்து நின்ற பிரான்கண்டீரொன்றும்
பொய்யில்லை போற்றுமினே.

வேறு சமயத்தினரைப் பார்த்து, “உங்கள் தெய்வமும் என் குருகூரில் எழுந்தருளா நிற்கும் தெய்வமே. நான் சொல்வது பொய் அல்ல” என்கிருர்.

திருவாய் மொழி நூற்பயனைப் பாடிய பக்தரும்,

அவாவறச்சு ழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சட
கோபன் சொன்ன
அவாவிலந் தாதிகளா லிவையாயிர
மும்முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந்தார்
பிறந்தா ருயர்ந்தே.

என்று கடைசி உபஸம்ஹாரப் பாசுரமாக அமைத்துத் திருவாய்மொழியை முடிக்கிருர்.

பொங்கல் காட்சிகள்
1. படைத்துப் பொங்கலை வரவேற்றல்
2. வீட்டை விளக்க வெள்ளை யடித்தல்

3. பொங்கல் பொங்குதல்
4. பொங்கலைப்
படைத்து
மங்கை
மகிழ்தல்



5. பசுவைப் புனைந்து பூசித்தல்



6. கோதனத்தின் கொம்மாளம்

7. கனுப் பொங்கல்

8. எங்கும் கரும்புமயம் !

de Luxe Footwear
de Luxe Footwear
de Luxe Footwear

வெப்பம், ஆரோக்கியம்,
உலாவும் இன்பம்
இவற்றைப்பாதுகாக்க

டிலக்ஸ் செருப்புகள்
தரத்திலும் உழைப்பிலும்
சிறந்தவை

de Luxe Product

டிலக்ஸ் டிரேடிங் கம்பெனி
திருச்சிறாப்பள்ளி
கிளை ஆபீஸ் : 11, பிராட்வே,
சென்னை

de Luxe Footwear
de Luxe Footwear
de Luxe Footwear

உயர்தரமான

* அரைக்கீரை
விதைத்தைலம்
* சந்தனாதித்தைலம்
* வாசனைப் பாக்கு
* சந்தனப் பௌடர்
* தசாங்கம்
* ஊதுவத்திகள்
* ஜவ்வாது
* அரகஜா
* புனுகு
* பன்னீர்
* ஜெர்ஸைட்
(கொசு நிவாரணி)

தயாரிப்பவர்கள் :

கல்யாண் & கோ.,
வாசனாதிரவிய வியாபாரிகள்
கும்பகோணம்

எல்லா இடங்களிலும்
ஏஜெண்டுகள் தேவை.

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள் :

சாயிராம் & கம்பெனி
திருவல்லிக்கேணி : : மதராஸ்

இந்த டிரேட் மார்க் இருக்கிறதா
என்று கவனித்து அஜாக்ஸ்
பண்டங்களை வாங்குங்கள்

தரம் பெறுமானம்

இரண்டிற்கும் அஜாக்ஸ்

பிளின்ட் (ஸான்ட்), எமெரி, அஜாக்ஸைட், கார்னெட் பேபர். க்ளாத்; டிஸ்க்ஸ்; பெல்ட்ஸ், டேப்ஸ் முதலியவை.

மரவேலைக்கும், உலோக இழைப்பு மெருகு வேலைகளுக்கும் எடுத்தவை.

வழவழவென விரைவில் வெட்டும். விருவிருவென வேலை நடக்கும். ஆன வேலைக்குத் தனி அழகைத் தரும். நீண்ட காலம் உழைக்கும். உழைப்பும் ஒளியுடன் துலங்கும்.



பென்ட பாடி இரும்பு பெட்டி



செக்யூரிட்டி காபினெட்

பாதுகாப்பிற்கு ஸ்டீல் பண்டங்கள்

எங்கு நோக்கினும் யுத்தமேகம் உலவும் இந்தக்காலத்தில் உங்கள் சொந்தப் பாதுகாப்பிற்கு ஏ. ஆர். பி. இருக்கிறார்கள். உங்கள் செல்வத்தைப் பாதுகாக்க அஜாக்ஸ் பண்டங்கள் இருக்கின்றன. பீமனை ஒத்த உறுதி கொண்டவை. பலபல தலைமுறைகள் நின்று உழைப்பவை. தீயும் திருடனும் தீண்ட முடியாதவை.

அஜாக்ஸ் ஸ்டீல் காபினெட்டுகள் சிறு சிறு இரும்புக் கோட்டைகளாகும். உறுதியே உருவாய் அமைந்த அஜாக்ஸ் இரும்புப் பெட்டிகளோ அக்கினி பகவானுக்கும் அகாத திருடர்களுக்கும் பரமசத்துருக்கள்.

அஜாக்ஸ் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

106, அரமனைக்காரத் தெரு, மதருஸ்.

14/290, ராஜ வீதி, கோயமுத்தூர்.

மானேஜிங் ஏஜண்டுகள் : முருகப்பா & சன்ஸ்.

உணவுகள் வரிசை வரிசையாக வந்து கொண்டிருந்தன. உணவைக்காட்டிலும், மதுபானங்கள் அதிகம். சாப்பாடு முடியும் வரையில் பலவித வாத்தியங்களின் பாடல்கள். சாப்பாடு முடிந்து பதினைந்து நிமிஷத்திற்குப் பிறகு களியாட்டம் (Dance). ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் அணைத்துக்கொண்டு, வாத்தியங்களின் இசைக்குத் தகுந்தவாறு, குதித்தோ, நடந்தோ, சுற்றிச் சுற்றி வந்தார்கள். சற்று நேரம் இளைப்பாறுவது; தாக சாந்தி செய்துகொள்வது; பிறகு ஜோடி மாற்றிக்கொள்வது; மறுபடியும் குதிப்பதும், தாண்டுவதும்; இம் மாதிரி சுமார் இரவு ஒருமணி வரையில் நடந்தது. பிரயாணிகள் அநுபவித்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மதுபானத்தின் உற்சாகம், ஆடிக் குதிப்பதில் உண்டாகும் குதூகலம், ஆணும் பெண்ணும் அணைந்து, புன்முறுவல் செய்து, காதோடு காது நெருங்கிப் பேசும் இன்ப ரகசியம் - எல்லாம் ஓயாது ஓடும் கப்பல் பிரயாணத்தில் உண்டாகும் வெறுப்பைக் குறைத்தன.

கொளும்பை விட்டுப் புறப்பட்ட ஐந்தாம் நாள் காலையில் கிழக்கு ஆப்பிரிக்காக் கரையில் ஆங்கிலத் துறைமுகமாகிய ஏடனுக்கு எதிர்கரையிலுள்ள ஜிபூதி என்னும் துறைமுகத்தில் கப்பல் அரை நாள் தங்கியது. கப்பலை விட்டு இறங்கியவுடன் தோன்றிய உணர்ச்சியை எழுதுவது கடினம். வெகு நாட்களாகச் சிறையில் இருந்த கைதி திடீரென விடுதலை பெற்று வெளிவரும் பொழுது உண்டாகும் உணர்ச்சி எனக்கு இருந்தது. ஜிபூதி ஒரு சிறிய ஊர். மிகவும் ஏழையான ஊர்போலத் தோற்றியது. பிரெஞ்சு அரசாங்க நிலயங்கள், சிறியனவாக இருந்தாலும், புதியனவாகக் கட்டப்பட்டு மிகவும் ஒழுங்காக இருந்தன. அந்த ஓர் இடத்தைத் தவிர மற்ற இடங்கள் எல்லாம் மிகவும் கேவலமாக இருந்தன. நமது தென்னிந்தியா ரெயில்வேயைவிடச் சிறிய ரெயில் வண்டிகள், ஓடிக்கொண்டு, நிற்கும் ஸ்டேஷனைப்பார்த்தேன். அந்நாட்டுக் கறுப்பு மனிதர்களும் தனிப்பட்ட முறையில் அழுக்கடைந்த வண்டிகளில் அடைபட்டுக் கிடந்ததையும் பார்த்தேன். என்னுடன் ருஷிய யவூதி நண்பரும் வந்தார். இருவருமாக மூன்று மணிநேரம் சுற்றித் திரிந்தோம். அவ்வூர்ச் சுதேசிகளான கறுப்பு நீக்ரோவர்கள், பலவிதமான பாசிமணிகள், பலவித வர்ணமுள்ள கற்கள் முதலியவைகளை எங்களிடம் விற்பதற்காக வந்தார்கள். நம் நாட்டில் கிராமத்துச் சந்தைகளில், கோணிச் சாக்குப் பந்தல்களின் அடியில், பச்சைமணிகள், போலிப் பவழங்கள், கருமணிகள், வளையல்கள், சவரி மயிர்கள், கறுப்புக் கம்பளங்களில் விரிக்கப்பட்டிருப்பது என் ஞாபகத்திற்கு வந்தது. எனக்கு அங்கு வாங்கக்கூடிய பொருள் ஒன்றும் இல்லை. ஆனால் என்கூட வந்த யவூதி சுமார் ஒருமணி நேரம் வியாபாரம் செய்து கடைசியில் சில மணிகளையும், பலவிதக் கற்களையும் ஓர் அட்டைப் பெட்டி நிறைய வாங்கிக்கொண்டார். இருவரும் கப்பலிற்குத் திரும்பினோம்.

பிற்பகல் கப்பல் செங்கடலில் பிரயாணமாயிற்று. அன்று காலையில் ஜிபூதியில் வாங்கின மணி, பச்சைக் கல் முதலியவைகளைப் பார்வையிட்டுப் பரிசீலனை செய்துகொண்டிருந்தார் யவூதி நண்பர். நானும் பக்கத்தில் அமர்ந்தவாறு அவர் செய்யும் பரீக்ஷைகளைக் கவனித்தேன். சற்றுநேரம் சென்றபிறகு, புன்னகையுடன், "இன்று காலை வேலை வீண் போகவில்லை. கல்கத்தாவிலிருந்து கெய்ரோ நகரம் வரையில் உள்ள எல்லாச் செலவுகளையும் (கப்பல், ரெயில், சாப்பாடு முதலியவை) இன்று இதில் சம்பாதித்துவிட்டேன்" என்றார். என் அறியாமையைக் கண்டு என்னைக் கேலி செய்வதற்காக அப்படிச் சொன்னாரோ என்று நானும் புன்சிரிப்புடன் அவர் முகத்தைப் பார்த்தேன். அதில் கேலிக் குறிகள் ஒன்றும் காணவில்லை. அவர் சொல்வது உண்மை என்பது நன்கு புலப்பட்டது. இந்த வியாபாரத்தின் ரகசியம் என்ன என்று கேட்டேன்.

"நான் இன்று காலையில் சுமார் மூன்று படி அளவு கொண்ட பலவித மணிகள், வர்ணக்கற்கள் முதலியன வாங்கினேன். அதற்கு நான் கொடுத்த விலை மிகவும் சொற்பம். விற்றவர்களுக்கு அதில் நல்ல குணவிசேஷமுள்ள சில கற்கள் கலந்திருந்தது தெரியாது. தொழிற் பழக்கத்தினால்

இந்தக் கும்பலில் சில அருமையான விலையுயர்ந்த கற்கள் இருப்பதைத் தெரிந்துகொண்டு எல்லாவற்றையும் வாங்கிவிட்டேன். அதில் உயர்ந்தவற்றை இதோ பொறுக்கி வைத்திருக்கிறேன். இவைகளை லண்டன், பாரிஸ் முதலிய இடங்களுக்குக் கொண்டு போய் விற்றால் சுமார் ஆயிரம் ரூபாய் வரையில் எனக்குக் கிடைக்கும்" என்றார்.

'ஆகா! பணம் அடிக்கும் வகை இந்த யவூதிகளிடம் அல்லவா கற்றுக் கொள்ள வேண்டும்?' என வியந்து கொண்டே அவர் தொழில் முறையைப் பற்றி மேல்மேலும் அவரிடம் கேட்டேன். தமது வியாபாரம் அருமையான வேலைப்பாடுள்ள சாமான்களை இந்தியா, சீனா முதலிய புராதன நாகரிகம் வாய்ந்த தேசங்களில் வாங்கி, ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் நல்ல லாபத்திற்கு விற்பதுதான் என்றார். உடனே என்னைத் தமது அறைக்குக் கூட்டிக் கொண்டு போய், தமது பெட்டியில் வியாபாரத்திற்காகக் கல்கத்தாவில் வாங்கின ஒரு விக்கிரகத்தை எடுத்துக் காண்பித்தார். அது ஆனந்த தாண்டவம் புரியும் நடனசபாபதியின் உருவம். சிற்பியின் கைத்திறம். தாண்டவமாடும் நிலையில், நடராஜாவை உருப்படுத்தியிருந்தது. அந்த உருவம் ஒரு முழம் உயரம். பஞ்சலோகங்களினால் வார்க்கப்பட்டது. உயிரற்ற செம்பு, வெண்கலம், வெள்ளி முதலியவற்றைக் கொண்டு, வடிவு அழகு கொண்டு, உல்லாசம் முகத்தினிடையே ததும்ப, ஆனந்தக் கூத்தாடும் நிலையில் அந்தச் சிலைக்கு எப்படி உயிரை உண்டாக்கியிருந்தான் அந்தக் கலைஞன்! செய்தவன் யாரெனத் தெரியாது. எப்பொழுது செய்யப்பட்டது எனவும் அறிய முடியவில்லை. கல்கத்தா வியாபாரி ஒருவன் கையில் அகப்பட்டு நடராஜா கப்பலேறி, மேல் நாடுகளில் எவனாகிலும் ஒரு பெரிய பணக்காரன் வீட்டை அலங்கரிக்கப் போய்க் கொண்டிருக்கிறார்.

"என்ன விலை கொடுத்தீர்கள்?" என்றேன். "அதிகம் இல்லை. எட்டு நூறு ரூபாய்களே" என்றார். "இதை என்ன விலைக்கு விற்கப் போகிறீர்கள்?" என்று கேட்டதும், "ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரையில் சமயத்திற்கேற்றபடி விற்கக்கூடும்" என்றார். உடனே பெட்டியை மூடிவிட்டு மறுபடியும் கப்பலின் மேல்தட்டில் போய் உட்கார்ந்து கொண்டோம். யவூதி நண்பர் ஒரு கதைப் புத்தகத்தை வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டார்.

என் மனம் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கிவிட்டது. அடிமைநாட்டின் துயரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக உருவெடுத்து என் மனக்கண் முன் கிளம்பின. நடராஜ மூர்த்தியின் தத்துவம், ஆனந்த தாண்டவத்தின் கருத்து, இவைகளைச் சிலை மூலமாக உருவெடுக்க வைத்த சிற்பியின் கற்பனையின் லக்ஷ்யம் - இவைகளை நினைத்தேன். காணமுடியாத ஒரு சக்தியை உருவத்திலல்லவா சிறைப்படுத்தியிருக்கிறான் கலைஞன்? லக்ஷக்கணக்காகச் செலவு செய்து, கோயிலில் வைத்துக் கொண்டாடும் மகிமை ஒருவாறு புலப்பட்டது. வறுமையால் இந்தக் கலை விநோதங்களை நாம் விற்றுவிடுகிறோமே? அருமை தெரிந்தவர்கள் எந்தக் கொடிய வறுமை வந்தாலும், இவற்றை விற்க முன்வருவார்களா? நாடு நமது ஆதிக்கத்தில் இருந்து நம் செல்வங்களைக் காப்பாற்றும் திறன் நமக்கு இருந்தால் இவைகள் நம் நாட்டை விட்டு வெளியேற விட்டிருப்போமா? அடிமைத்தனத்தின் எல்லை எங்கேதான் போய் நிற்குமோ? நாடு இழந்தோம்; பலவிதச் செல்வங்களை இழந்தோம். உலகத்திலே விலைமதிக்க முடியாத "கோஹினூர்" என்னும் வைரம் நாட்டை விட்டு அகன்றது. சிற்பிகள் பிரமிக்கும் மயிலாசனம் போய்விட்டது. கலைக் களஞ்சியங்களான ஏட்டுச் சுவடிகள், ஏடுகள், பழைய புத்தகங்கள் எல்லாம் கட்டுக் கட்டாக வகையறியாத நம் நாட்டு மக்கள் கையினின்று நீங்கி இங்கிலாந்து, ஜர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்றுவிட்டன. இவைகளையெல்லாம் நினைந்து நினைந்து மனம் உருகி வாடினேன். செங்கடலில் மூன்று நாட்கள் பிரயாணம் செய்த பிறகு சூயஸ் கால்வாய்க்குள் நான்காவது நாள் காலையில் புகுந்தோம்.

இந்த வாய்க்கால் உண்டான கதை வெகு விசித்திரமானது. ஜஸ்ஸப் என்னும் பிரெஞ்சுக்காரன் மூளையில்

பிறந்த ஓர் அதிசயம். பத்தாயிரம் மைல் கப்பல் பிரயாணத்தைப் பத்து மணி நேரத்திற்குள் செய்து முடிக்கும் விநோதம். மத்தியதரைக் கடலுக்கும் செங்கடலுக்கும் நடுவில் ஒரு பூமிப்பிணைப்பு. மணற் பாங்கான பாலைவனம். எண்பத்துநான்கு மைல் அகலம் உள்ளது. இரண்டு கடல்களையும் ஒரு வாய்க்காலினால் சேர்த்துவிட்டு, கப்பல்கள் ஓடும்படி செய்துவிடக்கூடும் என்கிற ஞானம் உதயமானது ஐஸ்ஸெப் மனத்தில். வெகுகஷ்டங்களுக்கு இடையே தன் யுக்தியை உருவாக்கினான். "இது கடைசியில் ஆபத்தில்தான் கொண்டுபோய் விடப் போகிறது. ஒரு கடல் மற்றொன்றுக்குள்போய்ப் பாய்ந்துவிடப்போகிறது. கடைசியில் மிஞ்சப்போவது அகண்டமான பாலைவனந்தான்" என்று பல நிபுணர்கள் சோதிடம் கூறினார்கள். ஆனால் அம்மாதிரியான விபத்து ஒன்றும் ஏற்படவில்லை.

கால்வாய் வெட்டி முடிந்தது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் பிரயாணம் செய்யும் காலம் இரண்டு மாதங்களிலிருந்து இரண்டு வாரங்களாகக் குறுகியது. கப்பலின் அடிப்பாகத்திற்கு ஒட்டிய குறுகிய கால்வாய். அதற்குள் பதினையாயிரம் டன் எடையுள்ள கப்பல் எப்படிச் செல்லும் என்று தோன்றிற்று. மணிக்கு நான்கு மைல் வீதம் கப்பல் நகர்ந்துகொண்டுதான் போயிற்று. அதிக வேகம் போனால் அலை மோதி, வாய்க்கால் மண்ணால் தூர்ந்துவிடும். ஒரே கப்பல் போவதற்கு மட்டிலும் இடம் உண்டு. ஐந்து அல்லது பத்து மைல் தூரத்திற்கு அப்பால் கால்வாய் அகன்று எதிரே வரும் கப்பல்களுக்கு இடம் கொடுக்கும்.

சென்னையில் சிந்தாதிரிப்பேட்டைக் கடைத்தெருவில் டிராம் வண்டிகள் ஓடுவதுபோல, ஒதுங்கும் இடங்கள், அதற்கான முறை, ஒழுங்கு, இவைகளுக்கான அமைப்புகள், கைகாட்டிகள், இரவில் பச்சை சிவப்பு விளக்குகள் ஆகியவைகளும் காணப்பட்டன. கப்பல் போகும் பொழுது இருபுறமும் ஒரே மணற் பரப்பு. பெரிய ஊர் ஒன்றுமே இல்லை. தென்கரை யோரமாகச் சுயஸ் நகரத்திற்கும், போர்ட் சையத் நகரத்திற்கும் ஓடிக்கொண்டிருக்கும் ரெயில் பாதை. கப்பல் மேல்தட்டினின்று பார்க்கும்பொழுது கப்பல் மணலில் ஓடுவதுபோலத்தான் இருந்தது. இந்தக் கால்வாய்க்குச் சுங்கவரி ஏராளமாகக் கொடுக்கவேண்டும். ஐயாயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரையில் கப்பலின் எடைக்குத் தகுந்தவாறு கொடுக்க வேண்டியிருக்கும் என்று தலைமைக் கப்பலோட்டி தெரிவித்தார். ஒருநாள் முழுதும் தரையில் பிரயாணம் செய்வது போலவே தோன்றிற்று. ஒரு தனி மனிதனின் செயலால் எவ்வளவு ஆண்டுகளாக மனிதவர்க்கம் நன்மை பெற்றுச் சுகமடைந்துவருகிறது! இம்மாதிரி மனிதர்கள் தெய்வப்பிறப்பு என்றால் அது உண்மையல்லவா?

சித்தி

புதுமைப்பித்தன்

1

செண்பகராமன் பிள்ளைக்கு வைராக்கியம் திடீரென்று ஏற்பட்டது. உலக வியவகாரங்களில் நொடித்துப்போய், மனசு கைத்து அவர் காஷாயத்தை மேற்கொள்ளவில்லை. தொட்ட தெல்லாம் பொன்னான கைதான் அது. ஊரிலே செல்வாக்கு, உள்ளத்திலே நிறைவு ஏற்படவேண்டியதற்குப் போதுமான சௌகரியம் எல்லாம் இருக்கத்தான் செய்தது. அவர் சிரித்துக்கொண்டேதான் காவி அணிந்து, கால் விட்ட திசையில் நடந்தார். துணை காரணமாகத் துன்பமோ, தீட்சையோ அவரை உந்தித் தள்ளவில்லை. பிள்ளையவர்கள் புறப்பட்ட தினம் வெள்ளிக்கிழமை. மூன்று நாட்கள் வீட்டில் யாரும் அவர் வரவில்லையே என்று கவலைப்படவில்லை. காரணம், அடிக்கடி அவர் அவ்வாறு 'சோலியாக' அசலூருக்குப் புறப்பட்டுவிடுவது வீடறிந்த பழக்கம். மூன்றாம் நாள் வந்த கார்டுதான் 'அவர் இப்பொழுது செண்பகராமன் பிள்ளை அல்ல; முப்பது கோட்டை விதைப்பாடும், மூன்று லக்ஷம் பாங்கி டிபாசிட்டும் உள்ள பண்ணையார் அல்ல; மண்டபத்துக்கு மண்டபம் கொடுங்கை வைத்துப் படுத்துத் தூங்கிக் கால்கொண்ட திசையில் செல்லும் ஆண்டி' என்பதை அறிவித்தது.

பிள்ளையவர்கள் செயல் கேட்டு ஊரே கலகலத்துவிட்டது. திடீரென்று வைராக்கியம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பது தெரியாத பலருக்கு, மனங் கண்டது எல்லாம் காரணமாகத் தெரிந்தது. யார் யாரெல்லாமோ என்ன என்ன எல்லாமோ சொன்னார்கள். அவ்வளவு காரணமும் தப்பு என்பது தெரிந்த ஒருவர் உண்டு. அவரே மீனாட்சியம்மாள் என்ற ஸ்ரீமதி செண்பகராமன் பிள்ளை. சம்சார பந்தத்தில் மனிதன் எப்படி நடந்துகொள்கிறான் என்பதைப் பூர்ணமாகத் தெரிந்துகொள்வதற்கு ஒருவருக்குத்தான் முடியும். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, ஊறிய ஒரே தலையணையில் தலை சாய்க்கச் சம்மதித்துக்கொண்ட ஜீவனுக்குத்தான், அன்று தொடங்கிய ஒழுங்கு எந்தக் கதியில், எந்த நியதியில் செல்லுகிறது என்பதைப் பூரணமாகத் தெரிந்துகொள்ளச் சௌகரியம் உண்டு. விவேகிகள் தெரிந்துகொள்ளுவார்கள்; அந்த வசதி பெறாதவர்கள், தலையைத் தாங்கிய தலையணையைப்போல, பாரத்தைத் தாங்கியதால் விழுந்த குழியைத்தான் மனவுலகில் பெற்றிருக்க முடியும். மீனாட்சியம்மைக்கு, தன் கணவர், தன்னுடன் அந்த இளமையிலே, நிதானம் இழந்த தெப்பம்போல உணர்ச்சிச் சுழிப்பில் மிதந்த காலத்திலும், பிறகு குடும்பம், குடித்தனம் என்ற வேட்கையில் வேரூன்ற நினைத்து, ஆவேசத்துடன் சம்பாத்தியத்தில் தம்மை மறந்து இறங்கிய காலத்திலும், ஊரின் நன்மை தின்மைகளிலும் வல்லடி வழக்குகளிலும் தர்மாவேசம் உந்தத் தம்மை மறந்து வேலை செய்த காலத்திலும், தாமரை யிலையில் உருண்டு உருண்டு விளையாடும் தண்ணீர் போல இருந்து வருகிறார் என்பதைப் பூரணமாக அறிந்திருந்தாள். அவரது செயல் அவளுக்கு அதிசயமாகத் தெரியவில்லை.

செண்பகராமன் பிள்ளையின் தங்கை சித்திரை அம்மாள் அண்ணனுக்கு யாரோ 'செய்வினை' செய்துவிட்டார்கள் என்றுதான் எண்ணினாள். கண்கண்ட ராசாவாக ஊரை ஆண்ட அண்ணன், ஒரே நாளில் ஆண்டியாகி ஓடுவதற்கு வேறு காரணம் இருக்கமுடியாதென்று தீர்மானமாக நம்பினாள்; அவளுடைய புருஷரோ, சற்றுச் சந்தேகச் சுபாவி. "அத்தானுக்குப் பித்தந்தான்" என்று தீர்மானித்துவிட்டார். தலைக்குனிவாக இருந்தது. பிள்ளையவர்களை மீண்டும் கைப்பிடியாகப் பிடித்து வந்து வைத்தியம் செய்து குணப்படுத்திக் குடும்பத்தில் மறுபடியும் கட்டிப்போட வேண்டும் என்று ஆசைப்பட்டார். சேதி கேட்டுவந்த இவ்விருவருக்கும், "அவுக திரும்பமாட்டாக; நீங்க போனா அலச்சல்தான் மிச்சம்; நல்ல வளியிலே நாம போய் நல்ல பாம்பெ போடலாமா?" என்று நிதானம் குறையாமல் பேசிய மீனாட்சியம்மையின் வார்த்தைகள்தாம் புரியவில்லை. ஒருவேளை... ஒருவேளை, அவரை விரட்டிவிட்டுச் சொத்தையும் பொருளையும் தாய் வீட்டுக்குச் சுருட்டிக்கொண்டு போக மீனாட்சியம்மை வெட்டிய குழியோ என்று சந்தேகித்தார்கள்.

பிள்ளைகளுக்குத் தாமே மைனர் கார்டியன் என்றும், செண்பகராமன் பிள்ளையவர்களின் குடும்ப நிர்வாகம் முழுவதும் தம் அதிகாரத்தின்கீழ் ஒப்படைக்கப்பட

வேண்டும் என்றும் அவர் முதல்காரியமாகக் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்தார். மீனாட்சியம்மையின் பந்துக்கள் இதைப் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அவளுக்கு ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் உண்டு. அவர்தாம், கிராமத்தில் இருந்துகொண்டு, செண்பகராமன் பிள்ளையின் நிலபுலன் வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். நிர்வாகம் தம் வசமேதான் கொடுக்கப்படுவது நியாயம் என்பதற்கு அனுசரணையாக, செண்பகராமன் பிள்ளையின் ஒரு மகன் சார்பாக ஸிவில் வழக்குப் புலியான ஒரு வக்கீலுடன் சேர்ந்து எதிர் வழக்குத் தாக்கல் செய்தார். மஞ்சட் கயிறு அகலாது போனாலும் மீனாட்சியம்மையின் கதி வெள்ளைப் புடைவை வியவகாரமாயிற்று.

தங்கையம்மாள், ஊர் ஊராக ஆள்விட்டுத் தேட ஏற்பாடு செய்தாள். ஸிவில் வழக்கு ஆவேசத்திலிருந்த அவளுடைய கணவருக்கு அது பிடிக்கவில்லை. வீணைக் காலத்தைப் போக்கி, சொத்துச் சீரழிந்த பிறகு அத்தான் வந்தென்ன, அப்படியே ஆண்டியாகப் போயென்ன என்று நினைத்தார். ஆள்விட்டுத் தேடுவதை அப்புறம் பார்த்துக்கொள்வோம் என்பது அவரது கட்சி. ஊரிலே அவருக்குச் செல்வாக்கு உண்டு; செயலுண்டு செண்பகராமன் பிள்ளையுடைய வாண்டுப் பயலுக்கு முறைப்பெண் என்ற பாத்தியதைக்கு வாண்டுப்பெண் ஒருத்தி அவருக்கு உண்டு. அவ்விருவருக்கும் செல்வக் கல்யாணம் செய்து வைத்துச் செண்பகராமன் பிள்ளை விளையாடியதனால் பிடி பலமாகத்தான் இருந்தது. அது இன்னும் கொஞ்சம் பலமாகுமென்ற நைப்பாசையும் உண்டு. அவருக்குப் பிடிமட்டும் பலம். உரிமையோ பாத்தியதையோ இல்லை. எதிர் பாத்தியதைக்காரனுக்கு ஒரு வகையில் உரிமை இருந்தாலும் ஊர் தன் பக்கந்தான் சேரும் என்ற பலத்த நம்பிக்கை அவருக்கு உண்டு.

2

செண்பகராமன் பிள்ளை காவி போட்டுக்கொண்டு பக்கத்துச் சத்திரம் வரையில் நடந்தார். அங்கே சாப்பிடவில்லை. உடம்பிலே ஒரு தெம்பு, மனசிலே ஒரு கலகலப்பு. காரணம் அற்ற சந்தோஷம் என்றுதான் சொல்லவேண்டும்: சிட்டுக்குருவி மாதிரி, அவருக்கு இந்தத் தீர்க்கமான காரியம் இவ்வளவு சுளுவில் கைகூடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதே இல்லை. கண்ணீரும் அழுகையும் வழி மறிக்கக்கூடும், ஊரார் வந்து நின்று எழுப்பும் கௌரவம் என்ற மதில்களைத் தாண்ட முடியாது போய்விடக்கூடும் என்ற அச்சம் அவருக்கு இருந்து வந்ததுண்டு. ஆனால் ஒன்று: யாரோ ஒருவர் கணீர் என்ற குரலில், "அப்பா, செண்பகராமா!" என்று கூப்பிடுவது போன்ற தோற்றம் அவரைப் பல முறை ஏமாற்றியதுண்டு. சில சமயம் காலமாகிவிட்ட அவருடைய தகப்பனாரின் குரல் போலக் கேட்கும்.

முன்பு எப்பொழுதோ ஒரு முறை, நடுநிசிப்போது, வாலிபம் குன்றாத காலம், மனைவியுடன் சல்லாபமாகப் பேசிக் கட்டித் தழுவும் சமயத்தில், யாரோ ஜன்னலுக்கு வெளியே வந்து நின்று, "அப்பா, சண்பகராமா!" என்று கூப்பிட்டதுபோலக் கேட்டது. "அப்பாவா? இதோ வருகிறேன்" என்று தழுவிய கையை வழுவவிட்டு, எழுந்து வெளியே கதவைத் திறந்துகொண்டு வந்தார். வந்து வெளியே வெறிச்சோடிக் கிடந்த பட்டகசாலையில் நின்ற பொழுதுதான், 'இதென்ன முட்டாள்தனம்!' என்ற பிரக்ஞை எழுந்தது குரலும் தகப்பனாருடையதுபோல இருந்தது என்ற புத்தித் தெளிவுபோன்ற ஒரு சந்தேகமும் ஏற்பட்டது. இவர் குரல் கொடுத்துக்கொண்டு எழுந்து சென்ற நிலையில் உடலும் மனமும் கூம்பிப்போன மீனாட்சியம்மாள், "அப்பா செத்து அஞ்சு வருசமாச்சே. இதென்ன தெய்வக் குத்தமோ, சோதனையோ" என்று நடுங்கிக்கொண்டு கேட்டாள். அவளைத் தேற்ற, வேறு எங்கோ கேட்ட சத்தம் என்று சொல்லிச் சமாளித்துக்கொள்வதற்குள் அவர் பாடு பெரும்பாடாகிவிட்டது.

இதே மாதிரிதான் நடுப்பகல்: கடையில் உட்கார்ந்து பெரிய கணக்கப்பிள்ளை எடுத்துக்கொடுத்த பேரேடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, இதே மாதிரி யாரோ கூப்பிட்டார்கள். பதில் குரல் கொடுக்க வாயெடுத்தவர் மின்னலதிர்ச்சியுடன் எதிர்மோதி வந்த சூழ்நிலை உணர்ச்சி வேதனை கொடுத்தபடி வாயடைத்தது. கடையிலே உட்கார்ந்திருந்தபடி சமாளிப்பதற்கு மிகவும் சங்கடப்பட்டார்.

சாலையிலே, கருக்கிருட்டிலே முன் என்ன இருக்கிறது என்ற கவலை சற்றும் இல்லாமல், முதுகில் போட்ட சாடு புரண்டு விழாமல், 'கிணிங், கிணிங்' என்ற மணிச் சத்தத்துடன் நடந்து போகும் காளைகளைப் போல மனசை அசைபோடவிட்டு நடந்தார்.

சமயாசமயங்களில் ஊரில் எப்படி இந்தக் காரியம் சுழித்துக்கொண்டு எதிர் ஒலிக்கும் என்பதை அவர் மனசு கற்பனை செய்ய முயலும். அவ்வளவையும் தப்பித்து வந்து விட்டதில் ஓர் எக்களிப்பு; அதாவது, தாய் கிணற்றடியில் தண்ணீர் எடுக்கச் சென்ற போது மெதுவாக அடுக்குச் சட்டியைக் கவிழ்த்து அதன்மேல் ஏறி நின்று, உறியில் உள்ள நெய்விளங்காயைத் திருடித் தின்று விட்டு, உதட்டோரத்தில் ஒரு பொடி இல்லாமல் துடைத்துக்கொண்டதாக மனப் பால் குடித்துக்கொண்டு, "எளா, எனக்குப் பண்டமில்லையா?" என்று பாசாங்கு செய்யும் தன்னுடைய சுப்பையாவின் காரியம் போல, பிறர் கண்களில் படாதபடி வியவகாரத்தை நடத்திக்கொண்டதில் ஓர் எக்களிப்பு.

"என்னவே திருட்டு மூதி! உன் ஒதட்டிலேதான், உறிப்பானேலெ இருந்த நெய் விளங்காய் உக்காந்திருக்கே" என்று அவனுடைய தாய் அவன் குண்டுணித் தனத்தைச் செல்லமாக வெளிப்படுத்துவது போல், காலம் என்ற அன்னையும் தம்முடைய திருட்டுத்தனத்தை வெளிப்படுத்திவிடும் என்பதை அவர் புரிந்துகொள்ளாமலில்லை. அப்போது நாம் அங்கு இருக்கமாட்டோம் என்பதில்தான் அவருக்கு கெமேனியாக எக்களிப்புத் தலைசுற்றி ஆடியது.

ஆனால் ஒரு காரியம். "நாம் என் இந்தக் காவியைப் போட்டுக் கொள்ள வேண்டும்?" என்ற கேள்வி மட்டும், செய்கிற காரியத்தை எதிர்த்துக் கேள்வி போட்டு மடக்கிக்கொண்டே இருந்தது.

மாடு இழுக்க வண்டி உருண்டது. மனசு இழுக்க அவரும் நடந்தார். நடந்தார், நடந்தார்... நடந்துகொண்டே இருந்தார். கறுப்பாகச் செறிந்து கிடந்த மரங்கள், கருப்பச்சை கண்டு, கடும்பச்சையாகிப் பளபளவென்று மின்னின. நக்ஷத்திரங்கள் எப்பொழுது மறைந்தன என்ற விவரம் அவருக்குத் தெரியாது. ஊருக்கு வெகு தொலைவில், இரட்டை மாட்டு வண்டிக்குப் பின்னால் எங்கோ நடந்துகொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது.

தூங்கிக்கொண்டிருந்த வண்டிக்காரன் எழுந்து, அவிழ்ந்து கிடந்த முண்டாசை எடுத்துக் கட்டிக்கொண்டு, "தை, தை" என்று காளைகளை நிமிண்டினான். சக்கரங்கள் சடபடவென்று உருண்டன.

வண்டியும் தூசிப்படலத்தை எழுப்பிக் கொண்டு, அந்தத் திரைமறைவில் ஓடி மறைந்தது.

எதிரியை மடக்குவதற்குத்தான் சாக்கூடம் போடுவார்கள்; பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தால்தான் புகைப்படலத்தின் மறைவில் வருகை தெரியாமல் வந்து எதிரியின் வல்லுயிரை வாங்கும். ஓடுகிற மாட்டு வண்டிக்கு, இந்த ராசாங்கமெல்லாம் என்னத்திற்கு? - இப்படியாக நினைத்துக் கொண்டு சிரித்தார் பிள்ளை. படித்தபடிப்பு எல்லாம் மனசில் திசைமாறித் தாவி, தம்முடைய பயனற்ற தன்மையைக் காட்டிக்



கொள்வதாக நினைத்தார். இனிமேல் படித்துப் பாழாய்ப்போன கதையை எல்லாம், தலையில் விஷம் ஏறுவதுபோல் ஏறித் தம்மைக் கிறங்க வைப்பதற்குச் சற்றும் இடம் கொடுக்கக்கூடாது என்று நினைத்தார். படித்த படிப்பென்ன! அறிந்த ஞானம் என்ன! எல்லாம் எதற்கு? யார் கூப்பிடுகிறார்கள் என்ற விடுகதையை விடுவிக்க வகையில்லாமல் திண்டாடுகிறதே!

சாலை இந்த இடத்தில் திடுதிப்பென்று வளைந்து திரும்புகிறது. பிள்ளையவர்களும் திரும்பினர். திருப்பத்துக்கு அப்பால், ஆலமரமும், ஒரு சின்ன மண்டபமும், கிணறும் இருந்தன. வண்டிக்காரன் காளைகளை நுகத்தடியில் கட்டிவிட்டு, அடுப்பு மூட்டி, ஆலம் விழுதுகொண்டு பல் துலக்கிக்கொண்டிருந்தான். மண்டபத்து முகப்புத் தூணில் முதுகைச் சாய்த்து, அருகே ஆண்டிப் பொட்டணம் துணை இருக்க, கிழட்டுச் சாமி ஒன்று மனசைச் சோம்பலிலே மிதக்கவிட்டு நிர்விசாரமாக உட்கார்ந்துகொண்டிருந்தது. வண்டிக்காரனிடம் பட்டையை வாங்கி, பல் துலக்கி ஸ்நானம் செய்து இரண்டு மிடறு தண்ணீர் பருகிவிட்டு மண்டபத்தில் கால் உளைச்சலைப் போக்கிக்கொண்டு நிதானமாக நடந்தால் என்ன என்று செண்பகராமன் பிள்ளை கருதினர்.

வழக்கம்போல, "ஏலே, அந்தப் பட்டையை இப்படிப் போடு" என்று அதிகாரம் செய்யத்தான் அவருக்குத் தெரிந்திருந்தது.

ஆண்டியாகிப் பன்னிரண்டு மணி நேரம் கடந்தும் அதிகார வாசனை போகவில்லை.

"என்ன சாமி, ஏலே, ஓலே இங்கிய? ஓலே பட்டெல இருக்கும்" என்று எடுப்பாகப் பதில் சொன்னான் வண்டிக்காரன்.

குத்துக் கல்லில் சாய்ந்திருந்த கிழட்டுச் சாமி சிரித்தது. முத்து முத்தான பல்லும், தாடியும் பார்ப்பதற்கு மோகனமாகத்தான் இருந்தன. பிள்ளையவர்களுக்கு, வேட்டியின் காவிக்கு அடுத்த சொல் அதுவல்ல என மௌனத்தைக் கடைப்பிடித்து நிழலில் உட்கார்ந்தார். குதிரைச் சதையை வருடிக்கொண்டார். தடவிக் கொடுத்துக்கொள்வது சுகமாக இருந்தது.

அவருக்குச் சற்றுத் தூரத்தில் மாடுகள் படுத்து அசை போட்டுக்கொண்டிருந்தன. கறுத்த காளை போன ஜன்மத்தில் வழிமறிச்சான் உத்தியோகம் போலும்! ரஸ்தாவில் பாதி தனக்கென்று படுத்துக்கொண்டிருந்தது.

இவர்கள் நடந்துவந்த திசையிலே, திருப்பத்துக்கு அப்பால், பூம் பூம் என்ற ஹார்ன் சப்தத்துடன், ஒரு வாடகை மோட்டார், கொள்ளுமட்டும் ஜனங்களை ஏற்றிக்கொண்டு பேரிரைச்சலுடன் ஐக்கிய ஜன நாயக நாடுகளின் 'ஏகோபித்த' அணி வகுப்பினர்களைக் கூட்டிக்கொண்டு திரும்பியது. வழிமறிச்சான் காளை உதறியடித்துக்கொண்டு எழுந்திருந்தது. பஸ் டிரைவர் 'ஸ்டியரிங்' சக்கரத்தை ஒடித்துத் திருப்பினான். பஸ் எதிரிலிருந்த புளிய மாத்தில் ஏற முயன்றது; கவிழ்ந்தது. உள்ளே குமைந்த ஜனக் குமைச்சல், பிரலாபிக்கும் ரத்தக் களரியாயிற்று.

அதிலிருந்து ஜனங்களும் மூட்டை முடிச்சுகளும் வெளியே பிய்த்து எறியப்பட்டன. உள்ளே பலர் அகப்பட்டு நசுங்கினர். ஸ்டியரிங் சக்கரத்தின் மீது டிரைவரின் பிரேதம் கவிழ்ந்து படுத்திருந்தது. ஒடிந்த கண்ணாடித்துண்டு அவன் மூக்கைச் செதுக்கி எங்கோ எறிந்துவிட்டது.

பதறி அடித்துக்கொண்டு எழுந்திருந்தார் பிள்ளை. மோட்டாரின் அடியில் சிக்கிக் கிடப்பவர்களை விடுவிப்பது எப்படி என்று தெரியாமல், அர்த்தமற்ற கூப்பாடு போட்டுக்கொண்டு வண்டியைச் சுற்றிச் சுற்றி ஓடிவந்தார். விபத்துப் பலமாகிவிட்டதனால், தனக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று உலைப் பானையைச் சற்றும் கவனிக்காமல், கட்டை வண்டிக்காரன் வண்டியைப் பூட்டிக்கொண்டு குறுக்குப் பாதையாக ஓடி ஆட்களை அழைத்துவருவதாகச் சொல்லிச் சிட்டாகப் பறந்துவிட்டான். விழுந்த காக்கையைச் சுற்றி ஓலமிடும் காக்கைமாதிரிதான் செண்பகராமன் பிள்ளை கத்தினார். அவருக்கு எப்படி உதவி செய்வது என்று புரியவில்லை. இதற்குள் மோட்டார் வண்டியில் பின்னே இருந்தவர்கள் அதிர்ச்சியின் வேகம் அடங்கியதும் இறங்கினார்கள். உள்ளே இருந்த மற்றவர்களை இழுத்து வெளியே எடுத்தார்கள். செண்பகராமன் பிள்ளைக்கு மூட்டைகளை எடுத்து வரிசையாக அடுக்கத்தான் முடிந்தது. எதிரே கண்ட ஆபத்து அவரைக் கதி கலங்க வைத்துவிட்டது.

எதிரே வந்த போக்கு வண்டிகள் இரண்டொன்று நின்றன. அடிபட்டவர்களை அடுத்த ஊர்வரையில் ஏற்றிச் செல்லச் சம்மதித்தன.

கோடை இடிமாதிரி நிகழ்ந்த இந்த ரௌத்திர சம்பவத்தின் ஆரவாரம் ஒடுங்கி அந்த இடம் மறுபடியும் நிம்மதியாக இரண்டு மணி சாவகாசம் பிடித்தது.

தம்மை அழைக்கும் குரலின் மாயக் கூத்துப்போலத் தென்பட்டது பிள்ளைக்கு; ஆனால் ஒடிந்து வளைந்த இரும்பாக நின்ற வாடகை மோட்டார்தான் அச்சம்பவத்தை நினைப்பூட்டும் தழும்பாக, கண்களை உறுத்தியது.

செயல் ஒடுங்கி நின்ற பிள்ளை, நிதானம் பெற்றுக் கட்டை வண்டிக்காரன் போட்டுவிட்டு ஓடின பட்டையை எடுத்துக்கொண்டு கிணற்றருகில் சென்றார்; பல் துலக்கினார்; குளித்தார்; ஈரவேட்டியை ஆலம்விழுதுகளில் தொங்கவிட்டார்; மண்டபத்தில் வந்து உட்கார்ந்தார்.

அடுப்பு, புகைந்துகொண்டிருந்தது. அதையே கவனித்துக்கொண்டிருந்தார்.

"இன்னும் நெருப்பு அணையவில்லை" என்றது கிழட்டுச் சாமி.

இத்தனை கோரத்தையும் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்த இடத்தை விட்டு அசையாமல் கிழட்டுச்சாமி பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது என்ற உணர்ச்சி செண்பகராமன் பிள்ளையின் மனசில் ஈட்டி கொண்டு செருகியது. துறவித் தன்மையை வெறுத்தார். மறுகணம் 'அவ்வளவு கல் நெஞ்சோ!' என்று பதைத்தார். அதே மண்டபத்தில் உட்காரக்கூடப் பயந்தவர் மாதிரி, சற்று நகர்ந்து தள்ளி உட்கார்ந்தார். பதில் சொல்லத் தெரியவில்லை.

"மோட்டார் வண்டியைச் சுற்றிச் சுற்றி ஓடி வந்ததனால், யாருக்கு என்ன லாபம்?" என்று கேட்டது கிழட்டுச் சாமி.

சும்மா இருந்தது போதாதென்று தம்மையும் வேறு கேலி செய்கிறான் இந்தக் கிழட்டு ஆண்டி என்று கோபப்பட்டார் செண்பகராமன் பிள்ளை. எழுந்தார். பதில் பேசவில்லை.

"அடுப்பு இன்னும் புகைகிறது. அணையவில்லை" என்று சிரித்தது கிழட்டுச்சாமி.

"அதை அணைத்துவிடட்டுமா?" என்றார் பிள்ளை. அவருக்குப் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்க விருப்பம் இல்லை. ஒரு பட்டை தண்ணீர் மொண்டு, அடுப்பில் ஊற்றி அணைத்துவிட்டு, வேட்டி உலர்ந்துவிட்டதா என்று வேட்டியைத் தொட்டுப் பார்த்தார்.

"கிழட்டுப் பட்டையானாலும், ஒரு பட்டை தண்ணீருக்கு எவ்வளவு சக்தி இருக்கு பாத்தியா?" என்றது கிழட்டுச் சாமி.

உலர்ந்த வேட்டியைக் கொசுவி, உதறிக் கட்டிக்கொண்டார் பிள்ளை.

மறுபடியும் மண்டபத்தில் வந்து உட்கார்ந்தார்.

"சாமி எங்கே போறதோ?" என்று கேட்டார்.

"எல்லாரும் போற எடத்துக்குத்தான்; வேற எங்கே போக்கடி; இந்தா இந்த அவலைத் தின்னுகிறாயா?" என்று மூட்டையை அவிழ்த்துக் கையில் ஒரு குத்து அவலைக் கொடுத்தது கிழட்டுச்சாமி.

பிள்ளை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக்கொண்டார். வாயில் கொஞ்சம் இட்டுக் குதப்பிக்கொண்டே, "அது என்ன புஸ்தகம்?" என்று புருவத்தை நிமிர்த்திச் சுட்டிக் காட்டினார். கிழட்டுச்சாமி அதை

Vummidi Ramiah Chetty Guruswami Chetty & Co.

அழகிய ஆபரணங்கள்

அழகிய செய்கைத் திறன்படைத்த தொழிலாளிகளை ஏராளமாக நியமித்து நடத்தும் பெரிய தொழிற்சாலை. எங்கள் பொன் நகைகளும் கல்லிழைத்த ஆபரணங்களும் வெள்ளிச் சாமான்களும் எமது தொழிற்சாலையில் அழகு பொலியச் செய்யப்பட்டு வருகின்றன.

போன் நெ.
2802.

உம்மிடியார்

தந்தி
VUMMIDIAR

பொன் வெள்ளி நகை வியாபாரிகள், 23-25, சைனா பஜார், மதராஸ்.

தொழிற்சாலை:—62, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, G. T. சென்னை.

உயர்தர ஜவுளிகளை நெய்ய

• சீதா விஜயம்
• சுலோசனு
• கிருஷ்ண விஜயம்

ஆகிய டிரேட் மார்க் உள்ள

எமது உத்தரவாதமுள்ள கெட்டிச் சாயக்

கலர் பாவு நூல்களையே

கைத்தறி நெசவாளர்கள் உபயோகித்து வருகின்றனர்.

தென் இந்தியா பூராவிலும் செலவாகி வருகிறது.

★

M. K. Duraiswamier & Son,
Fast Colour Yarn Merchants,
20, Manjanakara Street,
MADURA.
Telegrams: "KAMADHENU"
Telephone: No. 112

Branches:—
2/64, Mint Street,
P. T. MADRAS.
7/422, Main Road,
VIZIANAGARAM CITY

மு. கு. துரைசாமி ஐயர் & ஸன்,
கெட்டிச் சாய கலர் நூல் வியாபாரம்,
20, மஞ்சனக்காரத் தெரு,
மதுரை
தந்தி: 'காமதேனு'
டெலிபோன்: நெ. 112

பிராஞ்சுகள்:—
2/64, தங்கசாலைத் தெரு.
P. T. மதராஸ்.
7/422, மெயின் ரோட்,
விஜயநகரம் ஸிடி.

எடுத்துக் கையில் கொடுத்தது. பிழைகள் மலிந்த திருவாசகப் பதிப்பு அது. அநாதியான சிவபிரான் மாதிரி முன்னும் பின்னும் அற்றிருந்தது.

பிள்ளையவர்களுக்கு மனப் பாடமான கிரந்தம்; ருசியோடு படித்த புஸ்தகம்.

"அதை வாசியும்" என்றது கிழட்டுச் சாமி.

பிள்ளையவர்கள், அவலை மடியில் கட்டி வைத்துவிட்டு ராகத்துடன் வாசிக்க ஆரம்பித்தார். சாமி கேட்டுக்கொண்டே இருந்தது.

"வெளியிலே குப்பையிலே கிடந்தது; ஆருக்காவது உதவுமே என்று எடுத்து வந்தேன்; எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது" என்றது கிழட்டுச்சாமி.

படிக்காதவன் தூக்கின சுமையா என்று அதிசயப்பட்டார் பிள்ளை. எழுத்தறிவற்ற மூடமோ, வயிற்றுப் பிழைப்புக்குக் காவியோ என்று சந்தேகித்தார் பிள்ளை.

கிழடு சிரித்துக்கொண்டிருந்தது.

"நான் கைலாசத்துக்குப் போகிறேன்" என்றது கிழட்டுச்சாமி.

'கிண்டல் ரொம்பப் பலமாக இருக்கிறதே' என்று நினைத்தார் பிள்ளை. உதறியடித்துக்கொண்டு சாடிப்பேச அவருக்குத் தைரியம் இல்லை.

"கூண்டோடே கைலாசம் இல்லை; கைலாச பர்வதத்துக்குத்தான் போகிறேன்; நீரும் வருகிறீரா?" என்று அவரைப் பார்த்துச் சிரித்தது அந்தக் கிழட்டுச்சாமி.

"எங்கே போனால் என்ன? வருகிறேன்" என்று எழுந்தார் பிள்ளை.

"சரி, இருக்கட்டும். உம்ம பேரு என்ன?" என்றது கிழட்டுச்சாமி.

"சாந்தலிங்கம் என்று சொல்லணும்" என்றார் பிள்ளை.

"இதுவரை சொல்லிக்கொண்டுவந்தது?" என்றது கிழட்டுச்சாமி.

"செண்பகராமன் பிள்ளை என்று சொல்லுவார்கள்" என்றார்.

3

செண்பகராமன் பிள்ளையின் வாண்டுப் பயல் வடிவேலுவுக்கு மாமனான ஆனையப்ப பிள்ளைக்கு எதிராக வழக்குத்தொடுத்த மனைவிவழி மைத்துனர் நல்லசிவம் பிள்ளை, அவருடைய இரண்டாவது மகன் முத்துசாமியின் சார்பாகச் சொத்தைத் தம் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கவேண்டும், அல்லது, கோர்ட்டார் மேற்பார்வையில் வைத்திருக்கவேண்டும் என்று கட்சி ஆடினார். அவருடைய வக்கீல் கெட்டிக்கார வக்கீல். ஆனையப்ப பிள்ளைக்கு ஊரில் செல்வாக்கு உண்டு. நல்லசிவம் பிள்ளையின் வக்கீல், வருகிற அறுவடைவரை வழக்கை ஒத்திவைத்து, பூநெல்லை அகற்றிக் கிஸ்திப் பணத்தையும் மீனாட்சியம்மை சார்பாகத் தாமே கட்டிவிட்டால், குடுமி தம் கைக்குள் சிக்கிவிடும் என்று திட்டம் போட்டார்.

வடிவேலுவின் நலத்தை முன்னிட்டு வழக்காடப் புகுந்த ஆனையப்ப பிள்ளையின் யோசனை வேறு. அறுவடையின்போது களத்து நெல்லை மடக்கிவிடவேண்டும், அப்பொழுது நல்லசிவம் பிள்ளையின் கொட்டம் அடங்கும் என்று மனப்பால் குடித்தார் ஆனையப்ப பிள்ளை. கோர்ட்டில் இன்ஜங்ஷன் வாங்கி அப்படியே நெல்லை மடக்கிக்கொண்டு போய்விடவேண்டும் என்று அவர் யோசனை பண்ணியிருப்பது வாண்டு வடிவேலு மூலம் மீனாட்சியம்மையின் காதுக்கு எட்ட, நல்லசிவம் பிள்ளை உஷாரானதில் அதிசயம் இல்லை. ஆனையப்ப பிள்ளை மருமகனைத் தன் வீட்டோடு கூட்டிப்போய் வைத்துக்கொண்டு, அவன் படிப்பை மேற் பார்வை செய்யாவிட்டால் அவன் கெட்டுக் குட்டிச்சுவராகப் போவான் என்பதைத் தம் மனைவி மூலம் மீனாட்சியம்மைக்குச் சொல்லிவிட்டார். பையன்மீது உள்ள பாசத்தினால் அது சரி எனவே அவளுக்குப் பட்டது. "ஒங்க வீட்டு மருமகன்தானே? அவனை ஒப்படியாகப் பண்ணுவது இனி உங்க பொறுப்புத்தானே?" என்று பதில் சொல்லித் திருப்தி அடைந்தாள்.

கிராமத்திலிருந்து வந்த நல்லசிவம் பிள்ளை அக்கா என்று உறவுகொண்டாடிக் கொண்டுவந்து, "பிள்ளையை வேறு வீட்டில் விட்டுவைப்பது நமக்குக் குறைச்சல்; மேலும் ஆனையப்ப பிள்ளைக்கு இப்பொழுது கடன் தொல்லை அதிகம்; சிறுசை வைத்துக் கொண்டு தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறான்" என்று ஓதினார்.

"செண்பகராமன் பிள்ளையின் சம்பாத்தியம் மண்ணாங்கட்டியாகப் போகும்; முதலில் வடிவேலை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வா" என்று யோசனை சொன்னார்.

மீனாட்சியம்மாளுக்கு அவர் சொல்லுவதும் சரியாகத்தான் பட்டது. அவனுடைய நன்மையை எண்ணி முத்துசாமியை உருப்படாமல் ஒட்டாண்டி ஆக்கிவிடுவதா என்று மனசு பொங்கியது. பகல் மூன்று மணிக்குத் தன்னுடைய நாத்தனார்

வீட்டுக்குப் போனாள். பள்ளிக்கூடம் போகாமல், வீட்டிலே கொட்டமடித்துக் கொண்டிருந்த வடிவேலைத் தாதாவென்று இழுத்துக்கொண்டு வந்தாள். "நான் மாமா வீட்டில்தான் இருப்பேன்" என்று வடிவேலு கத்தினான். அவளுடைய கைகளைப் பிருண்டினான். ஆனால் அவளுக்குப் பின்னால், 'ஓ ராமா' என்று படைப்பயம் போட்டுக் கொண்டுதான் தெரு வழியாக இழுபட வேண்டி இருந்தது.

நயினார் குளத்தங்கரையில் மாலை மயங்கும் சமயத்தில் ஆனையப்ப பிள்ளையும், நல்லசிவம் பிள்ளையும் சந்தித்துக்கொண்டார்கள். வார்த்தை தடித்தது; நல்ல காலம், உடல் தடிக்கவில்லை.

"உன் கொட்டத்தை அடக்குகிறேன்" என்றார் ஆனையப்ப பிள்ளை.

"செண்பகராமன் பிள்ளை ஊரிலே கண்ட மழுமாறிகளுக்குச் சொத்துச் சம்பாதித்து வைத்துவிட்டுப் போகவில்லை" என்று உறுமினார் நல்லசிவம் பிள்ளை.

"யாரடா மழுமாறி? செண்பகராமன் பிள்ளை சொத்து என்ன கொள்ளியற்றுப் போச்சு என்று நினைத்துக்கொண்டாயா?" என்று பதிலுக்கு உறுமினார் ஆனையப்ப பிள்ளை.

கிராமத்தில் பயிர் அரிவாளை எதிர்பார்த்துத் தலைசாய்த்து நின்றது.

"அண்ணாச்சி, நாளைக்கு நாம் நினைக்கிற காரியம் கைகூடத் திருச்செந்தூருக்குப் போய் ஓர் அர்ச்சனை நடத்திவிட்டு வருவோம்" என்று சொல்லிக்கொண்டே ஆனையப்ப பிள்ளையின் வீட்டுக்குள் ஒரு புல்லுருவி நுழைந்தது. பரமசிவம் பிள்ளை நல்லசிவம் பிள்ளை சார்பில் கிருஷ்ண பரமாத்மாவாக எதிர்க் கோட்டைக்குள்ளே சென்று விளையாடினார். முருகனுக்கு வெள்ளியன்று அர்ச்சனை நடத்தி, பிறகு கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் அர்ச்சனை நடத்தினால் காரியம் நிச்சயமாக ஜயம் என்று இரவோடு இரவாகத் திருச்செந்தூருக்குப் பிரயாணமானார்கள், ஆனையப்ப பிள்ளையும் புல்லுருவி பரமசிவமும். பணத்தைப் பணம் என்று பாராமல் நல்லசிவம் பிள்ளை அறுவடையை அசுர கதியில் நடத்த ஆரம்பித்தார்.

வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களில் நெல்லை எத்தனை கோட்டையானாலும் ஒதுக்க முடியாதவன் ஒரு வேளாளனா என்பது நல்லசிவம் பிள்ளையின் கட்சி.

அர்ச்சனை பாலபிஷேகம் செய்துவிட்டு, நெஞ்சில் சந்தோஷத்தோடு கோவில் வசந்த மண்டபத்தில் உட்கார்ந்து, மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கும்போது அவருடைய மறவன் ஓட்ட ஓட்டமாக ஓடி வந்து, காரியம் மிஞ்சிப் போனதாகச் சொன்னான். பக்கத்தில் பரமசிவம் பிள்ளை இல்லை. அவர் கோவிலிலிருந்தே நழுவி விட்டார். "அண்ணாச்சி, இங்கே ஒரு எடத்துக்குப் போயிட்டு வருகிறேன்" என்று அவர் சொல்லும்போது, அவர் வார்த்தையைக் கபட நாடகம் என்று ஆனையப்ப பிள்ளை நினைக்கவில்லை.

இன்ஜங்ஷன் யோசனையைக் கைவிட வேண்டியதாயிற்று.

இப்படியாக, செண்பகராமன் பிள்ளையின் குடும்ப நிர்வாகத்தை யார் கவனிப்பது என்பதற்காக, இரண்டு நபர்கள், அவருடைய சொத்தை வாரி இறைத்துக் கொண்டு கோர்ட்டு வாசலில் காத்துக்கிடந்தார்கள்.

4

சாந்தலிங்கச்சாமி மறுபடியும் தென்திசை நாடும்பொழுது வருஷம் பத்து ஓடி விட்டன. எங்கெங்கோ கிழட்டுச் சாமியுடன் சுற்றினார். கைலாச பர்வதத்தில், கிழட்டுச்சாமி ஒடுக்கமானபோது, அருகில் இருந்தவர் சாந்தலிங்கச்சாமிதான்.

அவர் கொடுத்த திருவாசகப் புஸ்தகம், அவர் வைத்துவிட்டுப் போன மூட்டை இரண்டோடும், நிம்மதி இன்மை என்ற நிஜச் சொத்துடன் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்தார். கடைசியாக, திருச்செந்தூருக்கு வந்து உட்கார்ந்தார். மனசு மட்டும் இருப்புக்கொள்ளவில்லை. யாரோ தம்மைத் தேடி அழைப்பதுபோன்ற ஒரு மனநிலை; வாசியை வசப்படுத்தும் பழக்கம் பெற்றும் அடங்கவில்லை. கூப்பிட்டவர் யார்? ஏன் கூப்பிடவேண்டும்? பத்து வருஷங்களாக வாட்டும் கேள்வி.

கடைசியில் ஆனையப்ப பிள்ளையின் பாலபிஷேகத்துக்கு ஏமாறுத முருகன் காலடியில்தான் அவர் வந்து விழுந்தார். ஓயாத கடலும் ஓயாத மனசும் அவரை அலட்டின. காவித் துணியை அணிந்து கொண்டபோது இருந்த மன உல்லாசம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. புறப்பட்ட இடத்தையே அலகைபோல, தாம் சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டார். தமக்குச் சாந்தலிங்கம் என்று பெயர் இட்டுக்

கொண்டதைக் கண்டு கிழட்டுச்சாமி சிரித்ததில் அர்த்த புஷ்டி இருந்ததாகவே இப்பொழுது அவருக்குப் பட்டது.

நல்ல வெள்ளிக்கிழமையும் நாளுமாக வௌவால் மாதிரி இருட்டில் அல்லாடக் கூடாது என்று நினைத்துக் கோவிலுக்குச் சென்றார்.

சந்நிதியில் தம்மை மறந்த நிஷ்டை சற்றுக் கைகூடியது. லயத்தில் இருப்ப வரை, "அத்தான்!" என்று யாரோ ஓடிவந்து கட்டிப் பிடித்துக்கொண்டார்.

ஆனையப்பபிள்ளைதான். வழக்கம்போல வெள்ளிக்கிழமை வழிபாட்டுக்காகத் திருச்செந்தூருக்கு வந்திருந்தார்.

மங்கிய விளக்கொளியும் பத்து வருஷங்களும் போட்ட திரை அவருடைய பார்வையை மழுங்கவைக்கவில்லை. முருகனிடம் மாறாத நம்பிக்கை வைத்ததன் பலன் என்று அவர் கருதினார்.

சாந்தலிங்கச்சாமி அதிர்ச்சியிலிருந்து தெளிந்து நிதானப்பட்டபிறகு தம்முடைய சகோதரி புருஷன் என்பதை உணர்ந்தார். செண்பகராமன் பிள்ளையாக நடந்துகொள்ள மனம் ஒப்பவில்லை.

ஆனையப்ப பிள்ளைக்கு எப்படித் தம் காரியத்தைச் செண்பகராமன் பிள்ளையிடம் சாதித்துக்கொள்வது என்ற யோசனை. எதிர்க்கக்கூடாது; போக்கில் விட்டுத் திருப்பவேண்டும்: அவ்வளவுதான்.

இரவு இரண்டு மணிவரையில் இரண்டு பேரும் வசந்த மண்டபத்தில் உட்கார்ந்து பேசினார்கள்.

"நீங்கள் நல்ல வழியில் இருப்பதை நான் கெடுக்க விரும்பவில்லை; சிறு பையன்கள் என்ன பாவம் பண்ணினார்கள்? சொத்தை ஊர்க்காரன் தின்னாமல் ஒரு ஒழுங்குபடுத்திவிட்டு மறுபடியும் காஷாயம் போட்டுக்கொள்ளுங்கள்" என்றார் ஆனையப்ப பிள்ளை.

மறுபடியும் வெள்ளை உடுத்துக் கோர்ட்டு ஏறிக் குடும்பத்தைச் சீர்தூக்கி வைக்க வேண்டும். ஆமாம். வடிவேலுவும், முத்துசாமியும் என்ன பாவம் பண்ணினார்கள்? அவர்களுக்காக இந்தக் கட்டை உழைப்பதில் குற்றம் இல்லை என்றது சாந்தலிங்கச் சாமியின் மனசு. 'ஊர்ப் பயல்கள் கொட்டத்தை அடக்காமல் ஓடியா போவது?' என்றது செண்பகராமன் பிள்ளையின் மனசு.

"சரி, வருகிறேன். எழுந்திருங்கள். மீனாச்சி எப்படி இருக்கா?" என்றார் செண்பகராமன் பிள்ளை.

"அவளை உங்களுக்குத் தெரியாதா? கேப்பார் பேச்சைக் கேட்டுக் கேட்டுத்தான் குடும்பம் குட்டிச்சுவராய்ப் போச்சு. காலையில் நான் சொல்லுவதற்குச் சரியென்று தலையாட்டுவாள். மாலையில் அவன் சொல்லுவதற்குச் சரி என்று தலையாட்டுவாள். கடைசியில் வீண் சிரமமும் பண விரயமுந்தான் மிச்சம்" என்றார் ஆனையப்ப பிள்ளை.

இரண்டுபேரும் மூன்றுமணி சுமாருக்குத் திருநெல்வேலிக்குப் போகும் பஸ்ஸில் ஏறினார்கள். சாந்தலிங்கச்சாமியின் மனசு என்னவோ செய்யத்தகாத காரியத்தில் ஈடுபடுவதாகவே அல்லாடியது.

"நான் இந்த வேஷத்தில் வீட்டு நடைப் படியை மிதிக்கலாமா?" என்றது செண்பகராமன் பிள்ளையின் மனசு.

பலபலவென்று விடியும்போது பஸ் ஸ்ரீவைகுண்டத்துக்கு வந்துவிட்டது. இன்னும் ஒரு மணிநேரம் கழித்தால் சாந்தலிங்கச்சாமிக்கு, ஒடுக்கம்; அதாவது அப்புறம் செண்பகராமன் பிள்ளைதான்.

"ஆனையப்ப பிள்ளையவாள், நீங்க சொல்லுவது ரொம்பச் சரியாத்தான் படுகிறது; எனக்குக் குடும்பம் ஏது, குட்டி ஏது? நான் ஆண்டி" என்றார் சாந்தலிங்கச்சாமி.

"அத்தான், வண்டியை விட்டு இறங்குங்க, நாம் காப்பியைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் பேசிக்கொள்ளுவோம்" என்றார் ஆனையப்ப பிள்ளை.

இருவரும் இறங்கி எதிரில் இருந்த ஹோட்டலுக்குள் போனார்கள். அங்கே இரைச்சல் காதை அடைத்தது. இருவரும் குழாயடியில் முகத்தைத் தேய்த்துக் கழுவிப் பல் துலக்கினார்கள்.

குனிந்து வாயை உரசிக் கொப்பளித்துக் கொண்டிருக்கும் சாந்தலிங்கச்சாமிக்கு, "அப்பா செம்பகராமா!" என்று யாரோ உரத்த குரலில் கூப்பிட்டது கேட்டது.

"அத்தான், அதாரது என்னை அடையாளம் கண்டு கூப்பிட்டார்கள்?" என்று தலையை நிமிர்ந்து கேட்டார் செண்பகராமன் பிள்ளை.

பக்கத்தில் இருந்த சிறுவன், "சாமி, ஒங்களை யாரும் கூப்பிடலியே? நான் தானே பக்கத்தில் நிக்கேன்?" என்றான்.

'இந்தச் சென்மத்திலே நான் சாந்தலிங்கமாகமாட்டேன் போலும்!' என்று தனக்குள்ளே சிரித்துக் கொண்டது ஜீவாத்மா.

காவி தரித்த செண்பகராமன் பிள்ளைதான் அங்கு நின்றார். சாந்தலிங்கம் மன

சுக்குள்ளாகவே ஆழ்ந்து முழுகிவிட்டது. மனசு ஆழம் காணுத கிணறு அல்லவா?

"அத்தான், நேரத்தைக் கழிக்காதிய" என்று ஆனையப்ப பிள்ளை குரல் கொடுத்தார்.

செண்பகராமன் பிள்ளைக்குப் பத்து வருஷங்களுக்குப் பிறகு காபி உடலிலே வேறு ஒரு விதமாகப் புழுக்கத்தையும் புளகாங்கிதத்தையும் கிளப்பியது.

இருவரும் மீண்டும் பஸ்ஸில் ஏறினார்கள். பஸ் புறப்பட்டது.

எப்போதோ ஒரு காலத்தில் கிழட்டுச் சாமி, கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்ததும், இப்போது தம்முடைய சதை ஆடுவதும் பக்கத்தில் பக்கத்தில் நினைவுக்கு வந்தன. கைலயங்கிரியில் ஒடுக்கமான கிழட்டுச்சாமி எதிரே உட்கார்ந்துகொண்டு கேலி செய்வது மாதிரி இருந்தது.

"சாமி, ஒங்களே செலம்பரத்திலே பாத்தமாதிரி தோணுதே" என்றான் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கிழவன்.

"நீ யாரைச் சொல்லுகிறாய்?" என்று கேட்டார் செண்பகராமன் பிள்ளை.

"ஒங்களை எனக்குத் தெரியாதா? நீங்க சாந்தலிங்கசாமி இல்லே? பொத்தாமரை பக்கத்திலியே உக்காந்திருப்பியளே?" என்றான் அந்தக் கிழவன்.

"சாந்தலிங்கச் சாமி ஒடுக்கமாயிட்டுது. எனக்கும் அவரைத் தெரியும்" என்றார் செண்பகராமன் பிள்ளை.

"எப்பம்?" என்றான் கிழவன்.

"அவங்க ஒடுக்கத்தில் ஆகி சுமார் நாலு மணி நேரமாச்சு" என்றார் செண்பகராமன் பிள்ளை, நிதானமாக.

இலக்கியமும் இலக்கணமும்

மு. அருணாசலம்

தமிழ் நாட்டிலே முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த பெரும்புலவர்களுள், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர் ஒருவர். புராணங்களும் தோத்திரங்களும் பிரபந்தங்களுமாக ஐயாயிரம் பாடல் பாடியவர். இவரைக் குறித்து மிக்க நயமான கதை ஒன்று உண்டு.

இளமையிலே இவர் தம் தந்தையாரிடத்தும் பிறரிடத்தும் கற்கவேண்டியன அனைத்தும் கற்றார். சிறு பிரபந்தங்கள், பெரிய இலக்கியங்கள், தேவாரத் திருமுறைகள், சமய சாத்திரங்கள் ஆகிய யாவும் நன்றாய்ப் பயின்று அவற்றிலே திறமையடைந்தார். இடையிலே பல நூல்களைத் தாமேயும் பாடினார். இவ்வாறு சில காலம் கழிந்தபின், இலக்கணம் கற்கவேண்டும் என்ற ஆவல் இவருக்கு உண்டாயிற்று.

அந்தக் காலத்திலே, தருமபுர ஆதீனத்தில் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்றொரு பெரியவர் இருந்தார். கல்வி கேள்விகளிலே ஒப்பற்ற புலமை வாய்ந்தவரென்பதாக அவருடைய புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. இலக்கியக் கடலைக் கரை கண்டவரான சிவப்பிரகாசர், இந்தத் தம்பிரானையடுத்து இலக்கணம் கற்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். பின் பல நாள் பிரயாணம் செய்து, தம்பிரான் இருப்பிடமடைந்தார்.

ஆனால், பெரியவரான தம்பிரானுடைய பேட்டி எளிதில் கிடைப்பதாக இல்லை. பல நாள் காத்திருந்து, ஒரு நாள் அவரைக் கண்டார். கண்டதும், "நீர் யார்?" என்று தம்பிரான் சிவப்பிரகாசரைக் கேட்டார்.

"அடியேன் சிவப்பிரகாசன் என்று சொல்வார்கள்."

"உமக்கு எந்த ஊர்?"

"துறைமங்கலம்."

"எங்கு வந்தீர்?"

"தங்களிடத்திலே......"

"என்ன காரியம்?"

"இலக்கணம் பயிலவேண்டுமென்று எனக்கு ஆவல். தங்களிடம் பயிலலாம் என்று வந்திருக்கிறேன்" என்றார் சிவப்பிரகாசர்.

தம்பிரான் இதைக் கேட்டவுடனே குபீரென்று சிரித்துவிட்டார். "இலக்கணமா பயில விரும்புகிறீர்? நல்லது, உமக்கு இலக்கியம் வருமோ? இலக்கியம் முழுதும் பயின்றாயிற்றோ?" என்று ஏளனமாய்க் கேட்டார்.

"ஏதோ கொஞ்சம் பயின்றிருக்கிறேன்" என்று பணிவுடன் மறுமொழி கூறினார் சிவப்பிரகாசர்.

"என்ன என்ன படித்திருக்கிறீர், சொல்லும்."

"தேவார திருவாசகம், பிற திருமுறைகள், கம்பராமாயணம், சித்தாந்த சாத்திரங்கள் முதலியன கொஞ்சம் படித்திருக்கிறேன்."

"அப்படியானால், உமக்குக் கவி பாட வருமோ?"

"ஏதோ கொஞ்சம் தெரியும்."

"சரி. கு என்று தொடங்கி, கு என்று முடியும்படியாக விரைவிலே ஒரு வெண்பாப் பாடும் பார்க்கலாம்; அதில் 'ஊருடையான்' என்ற தொடரை அமையும்" என்றார் தம்பிரான்.

தயக்கமில்லாமல் சிவப்பிரகாசர் உடனே பின்வரும் வெண்பாவைப் பாடினார்:

குடக்கோடு வான்எயிறு
 கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னம்
 அணிவார்க்கு - வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத்
 தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

(மேற்கு நோக்கி ஓடுபவனாகிய சூரியனுடைய பல்லைத் தகர்த்தவரும், பன்றியின் வளைந்த கொம்பை முன்னே அணிபவரும், வடக்கு நோக்கி ஓடும் தென்ற

லாகிய தேரையுடைய மன்மதன் பகைவருமான சிவபெருமானுக்கு, ஊர் இல்லை, ஆடை தோல், எருது வாகனம் என்று உலகத்தார் சொல்வார்கள் என்பது இதன் பொருள்.)

இதைக் கேட்ட தம்பிரான் மகிழ்ச்சி அடைந்தார். "சரி, உமக்கு இலக்கியப் பயிற்சி நிறைய உண்டென்பது இந்தப் பாடலால் நன்கு விளங்குகிறது. இனி நீர் இலக்கணம் பயிலலாம். நான் சொல்லித் தருகிறேன்" என்று கூறிவிட்டு, சிவப்பிரகாசருக்குப் பின்னர் இலக்கணம் சொல்லித் தந்தார்.

இந்த வரலாறு முந்நூறு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வழங்கிவருகிறது. சிவப்பிரகாசர் பாடல்களைப் படித்த வித்துவான்கள், பண்டிதர்கள் அனைவருக்கும் இந்தக் கதை மிக்க சாதாரணமாய்த் தெரியும்.

கதை தெரிந்து என்ன பயன்? கதை சுட்டிக்காட்டுகிற உண்மை, படித்தவர்கள் பலருக்கு விளங்கினதாகத் தெரியவில்லை.

சிவப்பிரகாச சுவாமிகள் இலக்கியமெல்லாம் படித்துக் கரைகண்டவர். ஆனால், கரைகாணும் வரையில் இலக்கணத்தைப் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. ஒருவகையாக இலக்கியக் கடலை நிலைகண்டு உணர்ந்த பின்னர்த்தான், இலக்கணமொன்று இருக்கிறது, அதையும் பயின்று கொள்ள வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு உண்டாயிற்று.

தம்பிரானுடைய எண்ணமும் இப்படித்தான் இருந்திருக்கிறது. இலக்கணம் பயிலத் தொடங்கும் முன்னமே, இலக்கியம் முற்றும் மாணவன் பயின்றிருக்க வேண்டும் என்று அவர் கருதினார். இது மாத்திரமா? இலக்கணம் பயிலத் தொடங்கு முன்னமேயே, நினைத்தபடி எல்லாம் எளிதாகவும் விரைவாகவும் பாடுகின்ற திறமை, தம்மிடம் இலக்கண பாடம் படிக்கவந்த மாணவனிடம் வாய்த்திருக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்த்தார்.

இதிலிருந்து வெளிப்படும் உண்மை என்ன? படிக்க எண்ணுபவர் இலக்கியங்களையெல்லாம் முறையாகப் படிக்கவேண்டும். படித்துச் சுவையோடு அனுபவிக்கும் பழக்கம் வரவேண்டும். கவிமரபு முதலியனவெல்லாம் அறியவேண்டும். சுருங்கச் சொன்னால், இலக்கிய உணர்ச்சி பெறவேண்டும். இலக்கணம் தெரியாவிட்டாலும் குற்றமில்லை; இலக்கியத்தைப் பயிலும்போது, ஆங்காங்கே தற்செயலாக அமைந்துள்ள இலக்கண உண்மைகளை அவ்வப்போது தெரிந்துகொண்டால் போதுமானது; பின்னாலே, தேவையானபோது இலக்கணத்தை முறையாகப் பயின்று கொள்ளலாம். இதுவே முன்னோர் கருத்தென்று தெரிகிறது.

இந்தக் கருத்தை ஆசிரியர்கள் தெளிவாயும் சொல்லியிருக்கிறார்கள்.

> இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
> எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
> எள்ளினின் றெண்ணெய் எடுப்பது
> போல,
> இலக்கி யத்தினின் றெடுபடும்
> இலக்கணம்

என்பது ஒரு வேடிக்கையான சூத்திரம். நல்ல எள்ளை எடுத்துச் சுத்தம் பண்ணி உலர்த்திச் செக்கிலிட்டு ஆட்டினால், அதிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. இதேபோல, சிறந்த இலக்கியத்தையெல்லாம் ஒருவன் நன்கு ஆராய்ந்து, தன் அறிவின் துணைகொண்டு, அவை அனைத்துக்கும் சாரமாயுள்ள பொதுத்தன்மையைக் கூறுவானானால், அந்தப் பொதுத்தன்மையே இலக்கணம் என்பது. இலக்கண அறிவு எல்லோருக்கும் எளிதில் ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது; அதை அவ்வளவாக எல்லோரும் தேடிப்போக வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், நூல்களை அனுபவிப்பதற்கு வேண்டிய இலக்கிய உணர்ச்சி இருப்பது அவசியம்.

இலக்கியம் இலக்கணம் என்பவற்றின் வடமொழி வடிவத்தைச் சிறிது கவனித்தால் இவ்வுண்மை நன்கு புலனாகும். முதலாவது, லக்ஷ்ய ஞானம்; மற்றது, லக்ஷண ஞானம். இலக்கணம் என்பது தான் லக்ஷணம். இன்ன பொருள் இப்படி இருக்கும், இன்ன நீளம் அகலம் உயரம் உடையது, இன்ன கனம் இருக்கும், இன்ன நிறம், இன்ன மணம் உடையது என்று சொல்வதுபோல, லக்ஷ்யப் பொருளான இலக்கியத்துக்கு என்ன என்ன லக்ஷணங்கள் இருக்கவேண்டுமென்று இலக்கணம் சொல்கிறது. ஆகவே, லக்ஷ்ய ஞானத்தைப் பூரணமாகப் பெற்றிருந்தால்தான் ஒருவர் லக்ஷணம் என்பதன் கருத்தை உணர முடியும். லக்ஷ்ய ஞானம் முற்றும் கைவரப்பெற்ற சிவப்பிரகாசர் ஒருவரே லக்ஷண ஞானத்தைத் தேடிச் செல்லத் தகுதி பெற்றவர்.

நல்ல அறுசுவை உண்டியைச் சாப்பிடுகிறோம். அருமையாக ஒவ்வொரு சுவையையும் ஒவ்வொரு கறி வகையையும் அனுபவித்து உண்கிறோம். ஆனால் நமக்குச் சமைக்கத் தெரியுமா? தெரியவே தெரியாது. ஒருவேளை, சமைத்ததிலே, உப்புக் கூடுதல் அல்லது உறைப்புக் குறைவு என்ற முறையிலே அபிப்பிராயம் சொல்லத் தெரிந்தாலே பெரிய காரியம்.

சமையற்காரர்கள் இப்படியல்ல. சமையல் செய்வதிலே அவர்கள் மிக வல்லவர்கள். ஆனால் ஒன்று மட்டும் அவர்களுக்குத் தெரியாது: சுவையுடையதை நன்றாக அனுபவித்துச் சுவைத்து உண்ண அவர்களுக்குத் தெரியாது. நம் வீட்டிலே ஒரு விருந்து வைத்து, அருமையான சமையலுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, சமையற்காரர்களாகப் பத்துப் பேரை அழைப்போம். ஒருவன், பச்சடி கொஞ்சம் புளிக்கிறது என்பான். மற்றவன், பாயசம் நிறம் போதாது என்பான். இன்னொருவன் இன்னொரு விதக் குற்றம் சொல்வான். இப்படியாக, இவர்களுக்குக் குற்றங்கள் ஒவ்வொன்றாய்த் தெரிந்து கொண்டே வருமேயொழிய, ஒருவனுக்காவது சமையல் ருசி தெரியாது. சாப்பிட்டுவிட்டுப் போகும் போது, இன்றையச் சாப்பாட்டிலே இன்ன இன்ன அம்சங்கள் அருமையாய் அமைந்திருந்தன என்று ஒருவனுக்காவது சொல்லத் தெரியாது, சொல்லவும் மாட்டான். காரணம், இவர்களெல்லோருக்கும் சமையல்வேலை தெரியும் என்பதுதான்.

இலக்கிய இலக்கண விஷயங்களிலும் இப்படித்தான். இலக்கியத்தினுடைய லட்சணந்தான் இலக்கணம் என்ற கருத்து மறந்துபோய், வெறும் இலக்கணத்தையே பயின்றதனால் பல பேருக்கு இலக்கிய உணர்ச்சியே குன்றிப்போய் விட்டது. இலக்கியத்திலே எவ்வளவு அருமையான விஷயத்தைப் பார்த்தபோதிலும், அதை எப்படியெல்லாமோ கோணல் மாணலாக வெல்லாம் திரித்து, ஏதாவது ஓர் இலக்கணம் என்ற பலமான சட்டத்துக்குள்ளே திணித்து வைக்க முயல்வதே வழக்கமாகி விட்டது; அந்த விஷயத்தின் அழகோ பொருளோ முற்றும் சிதைந்து போனாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. "ஆபரேஷன் வெற்றிகரமாய் நிறைவேறிற்று. நோயாளி இறந்து போன போதிலும் பாதகமில்லை" என்று சொன்ன டாக்டரைப் போலத்தான் இந்த இலக்கணத் தொண்டர்களும்.

இப்படி அலைத்துச் சிதைத்து வந்த இலக்கணத் தொண்டர்கள் இன்று நேற்று மட்டும் ஏற்பட்டவர்களல்ல. எவ்வளவோ பழைய காலம் முதலே இவர்களுடைய சேஷ்டைகள் நடைபெற்று வருகின்றன. டி. கே. சி. யவர்களைக் கேட்டால், இவற்றையெல்லாம் விவரமாய் விளக்கிச் சொல்வார்கள். அவர்கள் சொல்லியவற்றுள் ஒன்றை மட்டும் இங்கே உதாரணமாகக் குறிப்பிடுகிறேன்.

இளம் பெண் ஒருத்தியும் அவளுடைய தோழியுமாக இருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். பெண்ணுக்குக் காதலனொருவன் இருக்கிறான். அவன் அயலூர்க்காரன். ஒரு சமயம் அவளை விட்டுப் பிரிந்து சென்றவன், நாட்கள் பல ஆகியும் திரும்பி வரவில்லை. பிரிந்து சென்றபோது, "விரைவிலே திரும்பி வந்து உன்னை முறைப்படி மணம் செய்துகொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான். ஆகவே, அவன் வராததைக் கண்ட பெண்ணுக்கு ஏக்கமும் வருத்தமும் மிகுதியாகின்றன. ஒருவேளை அவன் வராமலே போய்விடுவானோ என்ற அச்சம் பிறக்கிறது. அவன் சொன்ன காதல் மொழியெல்லாம் பொய்தானோ, அவன் அன்பும் பொய்தானோ என்ற ஐயமும் எழுகிறது. இந்த நிலையிலே, தோழி அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறிச் சமாதானம் செய்துகொண்டிருக்கிறாள். இருந்தாலும், இப்பெண்ணுக்கு ஆறுதல் பிறக்கவில்லை. காதலன் பொய்தான் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான் என்று எண்ணிய அவள் உள்ளத்திலே, அவனை ஒட்டியவை எல்லாம் பொய்யாகவே தோற்றுகின்றன. அப்போது தன் தோழிக்குச் சொல்லுகிறாள்:

"நீ என்னவோ சொல்லுகிறாய்: அவர் உண்மையே பேசினார், விரைவிலே திரும்பி வந்து மணம் செய்துகொள்வார் என்று. எனக்கு இதையெல்லாம் நம்பத் தோன்றவில்லை. அவர் ஊரே எல்லாம் பொய் மயமாமே! அவரை மட்டும் மெய்யர் என்று எப்படி நினைப்பது?"

"ஆமாம், ஊரே பொய், ஊரார் பொய்யர் என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ என்ன அப்படிக் கண்டுவிட்டாய்?" என்று தோழி இடைமறிக்கிறாள்.

"நான் கேள்விப்பட்டது ஒன்றை மட்டும் சொல்லுகிறேன், கேள்" என்று கூறுகிறாள், மனம் நொந்த காதலி: "அவர்கள் ஊரிலே சுனையொன்று இருக்கிறதாம். அதிலே என்ன விசேஷம் தெரி

யுமா? நம் ஊர்ச் சுனையென்றால், மிக்க ஆழமுடையது, நல்ல தண்ணீருடையது என்று நாம் சொல்வோம். ஆனால் அவர்கள் இப்படிச் சொல்வதில்லையாம். அவர்கள் ஊர்ச்சுனையில் சுரையைப் போட்டால் அமிழ்ந்துவிடுமாம்; ஆனால், கருங்கல்லில் செய்த அம்மி அதில் மிதக்குமாம்! இது மட்டுமா? அந்தச் சுனையின் ஆழத்தை எப்படிச் சொல்வார்கள், கேட்டிருக்கிறாயா? மலை போலிருக்கிற யானைக்குக் கூட நிலைக்காதாம்; ஆனால், ஒரு சாண் உயரங்கூட இல்லாத அற்ப முயல் இருக்கிறதே, இதற்குத்தான் நிலைக்குமாம்! எப்படி இருக்கிறது, கதை? இப்படியெல்லாம் சொல்லுகின்றவர்களாயிற்றே அவ்வூர்க்காரர்! அவரை மட்டும் நாம் எப்படி நம்பலாம்?" என்று கூறி ஏங்குகிறாள்.

இதைச் சொல்கிறது பின் வரும் பாட்டு:

சுரைஆழ, அம்மி மிதப்ப, வரையனைய
யானைக்கு நீத்து, முயற்கு நிலைஎன்ப:
கானக நாடன் சுனை.

பாட்டினுடைய பாவத்துக்குள்ளே புகுந்து நின்று டி. கே. சி. யவர்கள் இப்படி அழகாக இதை விளக்கலாம். ஆனால் வெறும் இலக்கணத் தொண்டர்கள் இதை ஒப்புக்கொள்வார்களென்று தோன்றவில்லை.

இலக்கண உரையாசிரியர்கள் எத்தனையோ பேர் அந்தக் காலந்தொட்டு இந்தக் காலம் வரையில் மேற்சொன்ன பாடலை மேற்கோளாக எடுத்து ஆண்டிருக்கிறார்கள். ஒருவராவது பாட்டுக்குள்ள இந்தப் பொருளைக் கவனித்ததாகத் தெரியவில்லை. பொருள்கோள் வகையுள் ஒன்றான 'மொழிமாற்று' என்பதற்கு உதாரணமாகவே எல்லோரும் இதைக் காட்டுகிறார்கள். எழுவாயையும் பயனிலையையும் எப்படி மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும் என்பதை ஓர் உரைகாரர் பின் வருமாறு சொல்கிறார்:

"ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மி என்னும் மொழியினை மிதப்ப என்னும் பயனிலைக்கும், மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரை என்னும் மொழியினை ஆழ என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறும்; நீத்து என்னும் பயனிலைக்கு இயைந்த முயல் என்னும் மொழியினை நிலை என்னும் பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு இயைந்த யானை என்னும் மொழியினை நீத்து என்னும் பயனிலைக்குமாக மாற்றிக்கூறியவாறும் காண்க."

இப்படியெல்லாம் மொழிகளை இயைந்தபடி மாற்றி இவர் சொல்லுகின்ற பொருள் என்னவென்றால், கானகநாடன் சுனையிலே அம்மி அமிழ்ந்து போகும், சுரை மிதக்கும்; யானை நிலைகொள்ளும், முயல் நிலைகொள்ளாமல் நீந்த வேண்டிவரும் என்பார்கள் - என்பதாகும். அருமையான பொருளல்லவா? (இவன் சுனை மட்டும் அன்று, உலகத்திலுள்ள எல்லாச் சுனைகளுமே இப்படித்தான் இருக்கும். இதைத் தனியே பாட்டில் குறிப்பிட வேண்டிய அவசியம் என்ன?)

பாவத்தையே கவனிக்காமல் இவர் சொல்கிறபடி பாட்டைப் பிடித்து நினைத்தபடியெல்லாம் பிய்த்து வைத்துக்கொண்டால், பிறகு அர்த்தம் அனர்த்தந்தான். டி. கே. சி. யவர்கள் கூறுகின்ற பாவம் நிறைந்த பொருள் தோற்றுவதற்கு இடமே இல்லை; அதை ஒப்புக்கொள்ளவும் மனம் வராது.

ஆனால், பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான பழமொழி நானூறு பாடின முன்றுறையரையனார் என்ற புலவர் டி. கே. சி. யவர்களுக்குத் துணை வருகிறார். சுரை ஆழ்வதும் அம்மி மிதப்பதுமாகிய சுனையையுடையது, தன் காதலன் ஊர் என்ற சொற்கள் பொய்யாகும் என்னும் கருத்துப்படக் காதலி பேசினாள். இதேபோல, அதாவது சுரை ஆழ்வதும் அம்மி மிதப்பதும் எப்படி உண்மை நிகழ்ச்சியாகாமல் பொய்யாகின்றனவோ அப்படியே, புகழமைந்த பெரியவர்கள் ஒடுங்கித் தாழ்வடைதலும், தூய்மையில்லாத கீழோர் புகழ் பெற்று வளர்தலும், முடிவாகப் பார்த்தால், நடைபெறாத செய்திகள் என்கிறார் இவ்வாசிரியர்:

உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய,
நிரையுள ரல்லார் நிமிர்ந்து பெருகல்,
வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரைஆழ அம்மி மிதப்பு. (125)

என்பது அவர் பாடிய பாட்டு. இதிலே டி. கே. சி. யவர்கள் கருத்தை இவர் ஏற்றுக் கொள்ளக் காண்கிறோம்.

ஆனால், உண்மையை, சிவப்பிரகாச சுவாமிகளுடைய சரித்திரம் தெரிவித்தாலும் சரி, டி. கே. சி. யவர்கள் தெரிவித்தாலும் சரி, பழமொழி நானூற்றாசிரியரே ஒப்புக்கொண்டபோதிலும் சரி, - வெறும் இலக்கணத் தொண்டர்கள் ஒப்புக்கொள்வார்களா? ஒப்புக்கொள்வதற்குச் சிறிதேனும் இலக்கிய உணர்ச்சி வேண்டாமா?

புது வருஷப் பரிசு

டைஸால்

வயிறு, குடல் சம்பந்தமான கோளாறுகளுக்கு அற்புதமான மருந்து.

காலண்டர்—1944

குறைந்தது ரூ. 25-க்கு ஆர்டர் கொடுப்போருக்கு மேஜைக் காலண்டர் (366-பக்கங்கள்) கிடைக்கும்.

மாதிரி வேண்டுவோர் த. பெ. 12210, கல்கத்தா என்ற விலாசத்துக்கு இரண்டணா ஸ்டாம்புடன் கூபன் அனுப்புக.

கூபன்

கூபன்

மருந்துகளும் காலண்டரும் தபாற் கூலியின்றிக் கிடைக்க லிவரைட்ஸ் கோ., தணுக்கு (மேற்குக் கோதாவரி ஜில்லா) என்ற விலாசத்துக்கு எழுதுக.

ரேமன் மருந்துகள்

(ஐம்பது வருஷங்களாகப் பிரசித்தி பெற்றவை)

அசோகா-வீட்	பெண்களின் நோய்களுக்கு	ரூ. 1/8
டைஸால்	வயிறு-குடல் நோய்க்கு	ரூ. 1/2
எம்ப்ரொகேஷன்	ஆனைக்காலுக்கு	ரூ. 1/-
கோனோகோல்டு டாப்.	வெள்ளைக்கு	ரூ. 2/4
மலோலினா	மலேரியாவுக்கு	ரூ. 1/-
நியூ-வெரால்	நரம்பு டானிக்	ரூ. 3/12

ரேமன் லெபாரடரீஸ்

தபாற் பெட்டி 12210 : : கல்கத்தா

RAYMANN LABORATORIES

P. O. BOX 12210, CALCUTTA

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

(இந்தியாவில் 1933ல் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: மதுரை

தீ விபத்து சம்பந்தமான சகலவித
இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 15,00,000
இன்ஷ்யூரன்ஸ் நிதிகள்	ரூ. 23,94,606
	ரூ. 38,94,606

கிளை ஆபீஸ்கள்

பம்பாய்:
லாயிட்ஸ் பாங்க் பில்டிங்,
ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

அகமதாபாத்:
1761, காந்தி ரோடு,
அகமதாபாத்.

பிரதம ஏஜண்டுகள்

ஏ. & ஏப். ஹார்வி
மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்
மதுரை, திண்டிவனம், மதராஸ், நகரி, பெஜவாடா.
காகினடா, விஜயநகரம்

விபரங்களுக்கு மேலே கண்ட எந்த ஆபீசுக்கும் எழுதலாம்

உணவுப் பண்டங்களின் பாதுகாப்பு

பெ. நா. அப்புஸ்வாமி

'எங்களுக்கு இனிமேல் பிறப்பே வேண்டாம்' என்று பல முனிவர்கள் வேண்டிக்கொண்டார்கள் என்று படித்திருக்கிறோம்; 'நாங்கள் ஒருநாளும் சாகவே கூடாது' என்று சில வீரர்கள் தவம் செய்தார்கள் என்றும் படிக்கிறோம்; ஆனால், இதுவரையில் ஒருவராவது 'பசி என்பது எனக்கு இருக்கலாகாது' என்று வேண்டிக்கொண்டதாகக் கதைகளைக் கூடக் காணோம்.

உண்மையில் பசியானது உலகம் முழுவதையுமே ஆட்டிவைக்கிறது. பசி வந்துவிட்டால் மானம் முதலியவை எல்லாம் பறந்துபோம் என்றும், பசியைத் தீர்ப்பதற்காகவே நாம் எத்தனையோ வகையான காரியங்களைச் செய்து வருகிறோம் என்றும் ஔவை முதலிய கவிகள் பாடியிருக்கிறார்கள்.

மிகப் பழங்காலத்திலே மனிதர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்துவந்தார்கள். அப்போது அவர்களுக்குப் பயிர் செய்யத் தெரியாது. ஆகையால் தங்களுக்கு அகப்பட்டவைகளைக் கொண்டு ஒருவாறு வயிறு வளர்த்து வந்தார்கள். பறக்கும் பக்ஷிகள், அவற்றின் முட்டைகள், நடக்கும் மிருகங்கள், ஊரும் பிராணிகள், நீந்தும் மீன்கள், செடி கொடி மரங்கள், அவற்றின் விளைபொருள்கள் - இவையெல்லாம் மனிதருக்கு உணவாக இருந்தன. தாவரங்களின் வேர், தண்டு, இலை, பூ, காய், பழம், விதை - ஆகிய எல்லாவற்றையும் கூடிய அளவில் தின்றுவந்தார்கள். இவற்றையெல்லாம் முதல் முதலில் பச்சையாகவே உண்டுவந்தார்கள்; நாளடைவில் சுட்டும், வேகவைத்தும், பொரித்தும் தின்னக் கற்றுக்கொண்டார்கள்.

ஆனால் பச்சைக் கறிகாய்கள் அதிக நாள் கெடாமல் இருப்பதில்லை. அவை சீக்கிரம் அழுகிக் கெட்டுப் போகுமல்லவா? அதனால் கிடைத்தபோது கிடைத்ததை உண்டு, உயிர் வாழ்ந்துவந்தார்கள். மாமிசம், மீன் முதலிய உணவுகளையும் அவர்கள் இவ்வாறுதான் உண்டுவந்தார்கள்.

பிறகு நாகரிகமும் அறிவும் முதிர முதிர, மனிதர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுகளைப் பயிர் செய்யக் கற்றுக்கொண்டார்கள். நெல், கோதுமை முதலிய தானியங்களைப் பயிரிட்டார்கள்; தென்னை, மா, பலா, வாழை முதலிய மரங்களை நட்டுத் தோப்பு வைத்தார்கள்; பலவகைக் காய்கறிகளைப் பயிரிட்டுத் தோட்டம் போட்டார்கள். பசுக்களையும், ஆடுகளையும், கோழிகளையும் வளர்த்தார்கள். பால், முட்டை, மாமிசம் முதலியவற்றை அதிகக் கஷ்டமின்றி அவற்றிலிருந்து பெற்றுவந்தார்கள். சாப்பாட்டுத் திண்டாட்டம் பெரும்பாலும் குறைந்துவிட்டது; ஆனால் கஷ்டம் முற்றும் தீரவில்லை.

வருஷம் இருமுறைதான் தானியங்கள் முதிர்ந்து பயன் அளித்தன. வருஷம் ஒரே முறைதான் பழமரங்கள் கனிகளைக் கொடுத்தன. காய்கறிச் செடிகளும் அவ்வாறே. கறந்த பாலை வைத்திருந்தால் ஒரு நாளில் புளித்துப் போகும். கறிகாய்கள் வாடி உலர்ந்துபோகும். பழங்கள் அழுகிப் போகும். ஆகையால் இவற்றையெல்லாம் கிடைக்கும்போது பெற்றுக்கொண்டு, வேண்டியவற்றை உண்ட பிறகு, மிகுந்தவற்றைக் கெட்டுப் போகாமல் காப்பாற்றி வைக்கவேண்டிய வழிகளைத் தேடினார்கள். வருஷத்தில் சிற்சில பருவங்களில் மட்டும் விளையும் உணவுப்பொருள்களை மற்றக் காலங்களுக்கும் பயன்படும்படி எப்படிக் காப்பாற்றலாம் என்று பலவகையாய் முயன்றார்கள். அதிக அளவில் வலையில் அகப்படும் மீன்களையும், கூட்டமாக வேட்டையாடும்போது மிகுதியாகக் கொல்லப்படும் மிருகங்களின் மாமிசத்தையும் பலநாள் வரையில் கெடாமல் பாதுகாக்க முயன்றார்கள். இம்முறைகள் முதலில் சீராக இல்லை; இக்காலத்தில் மிகச் சிறந்த முறைகள் கையாளப்படுகின்றன.

உலர்த்துவது ஒரு முறை. கறிகாய்கள் முதலியவற்றில் உள்ள ஈரமே அவை பெரும்பாலும் அழுகிப் போவதற்குத் துணை

செய்கிறது. இந்த ஈரம் இல்லாமல் அவற்றை உலர்த்திவிட்டால், அவை அவ்வளவு சீக்கிரம் கெடுவதில்லை. மிளகாய், கத்திரிக்காய், வெண்டைக்காய், மாங்காய், மணத்தக்காளிக்காய், சுண்டைக்காய், முருக்கங்காய் முதலியவற்றை உலர்த்தி வற்றலிட்டு வைத்துக்கொண்டு, வேண்டியபோது நம்முடைய வீடுகளில் உபயோகித்து வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சிற்சில பழங்களையும் இவ்வாறு வற்றலாக்கி உபயோகிக்கிறோம். உதாரணமாகப் பறங்கிப் பழத்தையும், இலந்தைப் பழத்தையும், தெலுங்கு தேசத்தில் கத்திரிப் பழத்தையும் உலர்த்தி வற்றலிடுகிறார்கள். சிலர் பலவகை மீன்களையும் உலர்த்தி வெகுநாள் வரை காப்பாற்றிவருகிறார்கள். பலவகைத் தானியங்களையும் பருப்புக்களையும் உலர்த்தியே பத்திரப் படுத்தி வருகிறோம். இது கர்நாடக முறை.

நவீன விஞ்ஞான சாஸ்திரிகள் செய்த ஆராய்ச்சிகளின் பயனாக இந்த முறையானது இக்காலத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெயிலில் உலர்த்திக் காயவைப்பதற்குப் பதிலாக இப்போது உஷ்ணக் காற்றினால் காய்கறிகளை வறண்டு ஈரமற்றுப் போகச் செய்கிறார்கள். எல்லாக் காலத்திலும் வெயிலை நம்ப முடியாது; வெயிலில் உலர்த்தினால் தூசி முதலியவற்றாலும் காக்கை முதலிய பறவைகளாலும் அசுத்தம் எற்படும். இவர்களுடைய நவீன முறை பரிசுத்தமானது; துரிதமாய் நடைபெறுவது. காய்கறிகளை மட்டுமன்றி, முட்டைக்கோஸ் முதலிய கீரைகளையும் இம்முறையினால் பக்குவப்படுத்தி, வெகு நாளுக்கு அப்புறங்கூடச் சமையலுக்கு உபயோகிக்கலாம். பச்சைக் கறிகாய்களைவிட இவை எடையில் குறைவு; அளவிலும் குறைவு. ஆகையால் இவற்றை எற்றுமதி செய்வதும் எளிது. ருசியும் குணமும் அதிகம் மாறுவதில்லை.



உப்பிட்டுக் காப்பாற்றுவது வெகு காலமாகக் கையாளப்பட்டு வரும் மற்றொரு முறை. மாவடு, மாங்காய், எலுமிச்சை, நாரத்தை முதலிய காய்கள் ஆகியவற்றை அநேகமாக ஒவ்வொரு வீட்டிலும் இவ்வாறு உப்பிட்டு வைத்து ஊறுகாய்களாக உபயோகித்து வருகிறோம். ஈரம் செறிந்த பச்சைக் கறிகாய்களாக இருந்தபோதிலும் இவை வெகுநாள் வரை கெட்டுப் போவதில்லை. இவற்றைக் கெடச் செய்யும் கிருமிகள் அணுகவொட்டாமல் தடுப்பது உப்புக்கு உள்ள சிறந்த குணம். ஊறுகாய் போடும்போது, கைகளைச் சுத்தமாகக் கழுவிவிட்டு, அவற்றை இட்டுவைக்கும் பாத்திரங்களையும் சுத்தமாகக் கழுவி, தூசியும் அழுக்கும் படியாத இடத்தில் பத்திரப்படுத்தி வைத்திருந்தால் இந்தக் கறிகாய்கள் வெகுகாலம் வரை கெடாமல் இருக்கும். கொசு, ஈ முதலிய பூச்சிகளும் இவற்றைக் கெடுத்துவிடாதபடி மூடிவைப்பது அவசியம். மீன் வகைகளையும் இவ்வாறு உப்பிட்டு உலர்த்தி வைக்கிறார்கள்.

வினிகர் எனப்படும் காடியில் ஊறவைத்துக் காப்பாற்றுவது மற்றும் ஒரு முறை. தமிழ் நாட்டில் உப்பிட்டு ஊறுகாய் போடுவது போல், ஐரோப்பிய நாடுகளில் கறிகாய் முதலியவற்றைக் காடியில் ஊறவைத்து உபயோகிக்கிறார்கள். இஞ்சி, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, சிற்சில ஐரோப்பிய நாட்டுக் காய்கறி வகைகள் இவ்வாறு ஊறுகாய்களாக இடப்பட்டு வருகின்றன.

பதார்த்தங்கள் கெட்டுப் போகாமல் காப்பாற்றும் குணம் எண்ணெய்க்கும் உண்டு. ஆகையால் மீன் முதலியவற்றைத் தைலத்தில் இட்டுக் காப்பாற்றி வருகிறார்கள்.

பொருள்களைக் கெடாமல் காப்பாற்றும் குணம் சர்க்கரைக்கும் உண்டு. சர்க்கரையைப் பாகாகக் காய்ச்சி, பலவகைப் பழங்களை அதில் ஊறவைத்துக் காப்பாற்றி வருவதும் வழக்கமாக இருந்துவருகிறது. இவ்வகைப் பொருள்களுக்கு முரப்பா என்று பெயர். இஞ்சி, நெல்லிக்காய் முதலிய முரப்பாக்களை உங்களில் பலர் ருசி பார்த்திருக்கலாம். கொய்யா, மா, அப்பிள், ஆரஞ்சு, பேரி, டொமாட்டோ முதலிய பழங்களைத் துண்டு துண்டாக நறுக்கி வேகவைத்துச் சர்க்கரைப் பாகோடு கலந்து 'ஜாம்' செய்து வைத்துக்

கொண்டால், அவை வெகுநாள் வரை கெடாமல் இருக்கும். பலாப்பழம், வாழைப் பழம் முதலியவற்றையும் இவ்வாறு ஜாமாகச் செய்ய முடியும். ஜெல்லி, மார்மலேட் என்பவையும் இப்பழ வகைகளைச் சர்க்கரையின் துணையைக்கொண்டு காப்பாற்றி வைப்பதற்காகச் செய்யப்படும் வேறு சில பதார்த்தங்கள்.

புகைச்சல் பிடிப்பதும் உணவுப் பொருள்களை நீண்ட காலம் பாதுகாப்பதற்கு ஏற்ற ஒரு வழி. மீனையும், இறைச்சியையும் இவ்வாறு காப்பாற்றி வைக்கிறார்கள். இவற்றோடு உப்பைக் கலந்து, பின்பு இவற்றுக்குப் புகைச்சல் பிடிக்கிறார்கள். இதனால் இவை ஈரமற்று உலர்ந்து போகின்றன. இவற்றின் மேல்புறத்திலே புகையிலுள்ள சில இரசாயனப் பொருள்கள், எண்ணெய், கரி முதலியவற்றால் இறைச்சியானது சீக்கிரம் கெட்டுப் போகாமல் காப்பாற்றப்படுகிறது. ஆனால் இம்முறையில் புகை உள்ளூற இறங்குவதில்லையாகையால், மேற் பக்கம் கெடாமலிருந்த போதிலும், இறைச்சியின் உள் பக்கம் கெட்டுவிடக் கூடும்.

வெகு காலமாகக் கையாளப்பட்டு வந்துள்ள மேலே சொல்லிய முறைகளைக் கையாண்டால் கறிகாய்கள், பழங்கள், மீன் முதலிய உணவுப் பொருள்கள் பல நாள் வரை கெடாமலிருக்கின்றன என்பது ஜனங்களுக்குத் தெரியும். ஆனால் ஏன் அவை கெடுவதில்லை என்பது தெரியாமலிருந்தது. பிறகு, பாஸ்ட்டியர் முதலிய விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சிகளால் கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா எனப்படும் சிறிய கிருமிகள்தாம் இவை கெட்டுப் போவதற்குக் காரணம் என்றும், இம்மாதிரியான கிருமிகள் அணுகாதபடி இவற்றைப் பாதுகாத்தால் இவை கெடுவதில்லை என்பதும் தெரியவந்தன. இதன் பிறகு உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்திப் பாதுகாக்கும் புதிய முறைகள் கையாளப்படத் தொடங்கின. டப்பிப் பழமும் புட்டிப் பாலும் இதன் பிறகுதான் செழிப்பாகச் செய்யப்பட்டு, ஏராளமாக விற்பனைக்கு வரத் தொடங்கின.

நுண்ணிய பாக்டீரியாக்களால் உணவுப் பொருள்கள் கெடுகின்றன என்பது தெரிந்ததும், சிற்சில இரசாயனப் பொருள்களால் அவற்றைக் கொன்று விடலாம் என்பதும், அவற்றை மேன்மேலும் தளரவொட்டாமல் தடுக்கலாம் என்பதும் தெரியவந்தன. ஸாலிஸிலிக் ஆசிட், போரிக் ஆசிட், ஸல்பியூரஸ் ஆசிட், பென்ஸோயிக் ஆசிட், வெண்காரம், பார்மால்டிஹைட் (Formaldehyde), ஸோடா, ஹைட்ரஜன் பெராக்ஸைட், ஆர்ஸெனிக், ஸோடியம் - ஸல்பைட்டு முதலிய இரசாயனப் பொருள்களை உபயோகித்தால் உணவுப்பொருள்கள் அழுகிக் கெட்டுப் போகாமல் இருக்கும் என்று தெரிந்துகொண்டு, இவற்றை உபயோகித்துவந்தார்கள். ஆனால் இவற்றை உபயோகித்தால் உணவுப் பொருள்களின் ருசியும் குணமும் சிறிது மாறுபடுகின்றன. ஆகையால் இந்த முறையை இப்பொழுது அதிகம் கையாளுவதில்லை.

இக்காலத்தில் அதிகம் உபயோகப்பட்டு வருவது உஷ்ணத்தால் உணவுப்பொருள்களைக் காப்பாற்றும் முறையே. உணவுப் பொருள்களைக் கொதிக்கும் சூட்டில் வேக வைத்தால், அவற்றிலுள்ள பாக்டீரியாக்கள் எல்லாம் அநேகமாகச் செத்துப் போகும். பிறகு மற்ற பாக்டீரியாக்கள் அவற்றை அணுகாதபடி தடுத்துவிட்டால் உணவு கெடவே கெடாது. இதை டப்பி முறை என்று சொல்லலாம்.

இது இக்காலத்தில் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்துவிட்டது. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள்தாம் இத்தொழிலில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கின்றன. உலகத்திலுள்ள மற்றெல்லா நாடுகளிலும் இயற்றப்படுவதைக்காட்டிலும் அதிகமான அளவில் ஐக்கிய நாடுகளில் டப்பி உணவு தயார் செய்யப்படுகிறது.

உணவுப் பொருள்களைப் பச்சையாக டப்பியில் அடைத்துக் காப்பாற்றுவதற்கு ஏற்ற முறைகளை இன்னும் கண்டுபிடித்தாகவில்லை. வேகவைத்த உணவுகளையே டப்பியில் அடைத்து வைக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அதிகமான உஷ்ணம் உறைத்தால் உணவுப் பொருள்களைக் கெடுக்கும் பாக்டீரியாக்கள் எல்லாம் செத்துப் போகும் என்பதே.

இக்காலத்தில், வெள்ளீயம் எனப்படும் தகரம் பூசிய மெல்லிய இரும்புத் தகடுகளால்தான் உணவு டப்பிகள் தயார் செய்யப்படுகின்றன. இவ்வகையான தகடுகளை இயந்திரங்களில் கொடுத்தால், அந்த இயந்திரங்கள் அவற்றை டப்பிகளாகச் செய்துவிடுகின்றன. டப்பியின் பொருத்துக்களுக்கு ஈயப் பற்று வைப்பதில்லை. ஈயமானது உணவுப் பொருள்களைக் கெடுத்துவிடுகிறது என்பதையும், சிற்சில விஷப்பொருள்கள் அதன் சேர்க்கையால் உண்டாகின்றன என்றும் தெரிந்துகொண்டார்கள். ஆகையால் இப்போது உணவைக் கெடுக்காத ஒருவகை மரப்பிசினை உபயோகிக்கிறார்கள். டப்பியின் உட்புறத்தைத் திராவகத்தால் நன்றாகச் சுத்தம் செய்கிறார்கள். பிறகு வேண்டிய உணவுப்பொருளை டப்பிகளில் போட்டு, அநேகம் டப்பிகளைப் பெரிய இயந்திரத்தில் வைத்து, நல்ல சூட்டில் வேகவைக்கிறார்கள். நல்ல சூடும் ஆவியுமாக இருக்கும்போதே அந்த டப்பிகளுக்குள் காற்றுப் போகாமல் மூடி அவற்றைப் பற்றவைத்து விடுகிறார்கள்.

உணவிலும் டப்பியிலும் இருந்த பாக்டீரியாக்கள் எல்லாம் சூட்டினால் அழிந்து போகின்றன. காற்றுப் புகாமல் டப்பியை மூடிவிடுவதால் வெளியிலுள்ள பாக்டீரியாக்கள் உணவை அணுகிக் கெடுப்பதற்கு வழி கிடையாது. ஆதலால் டப்பி உணவு வெகு நாள் வரை கெடாமல் நல்ல நிலையிலேயே இருக்கிறது.

பலவகைப் பழவகைகள், அநேகம் வகையான காய்கறிகள் முதலியவையெல்லாம் இப்போது டப்பி உணவாகக் கிடைக்கின்றன. பூமியில் ஒரு பிரதேசத்தில் கிடைக்கும் உணவுப் பொருள்களைப் பூமியில் மற்றப் பிரதேசங்களில் உள்ளவர்கள் அனைவரும் எளிதில் பெற முடிகிறது. கோடைக்கால விளைபொருள்களை மற்றெல்லாக் காலங்களிலும் உண்ணலாம். உணவைப் பற்றிய கவலையின்றி எந்த வனாந்தரத்திலும், பனிப்பிரதேசத்திலும், மலையுச்சியிலும், நடுக்கடலிலும் சஞ்சரிக்கலாம். இப்போது நடக்கும் போரில் ஒவ்வொரு யுத்தமுனையிலும் லக்ஷக்கணக்கான உணவு டப்பிகள் உபயோகமாகி வருகின்றன.

மேலே சொல்லிய உணவுகளைத் தவிரப் பாலையும் வேண்டியபோது வேண்டிய இடத்தில் நாம் உபயோகிக்கும்படியாகப் பால் டப்பிகள் தயார் செய்யப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். நீர் அற்றுப் போகும்படி பாலை வற்றச் செய்து, சர்க்கரையோடு கலந்து, பால்பொடியை டப்பியில் அடைத்து விற்பனை செய்கிறார்கள். இந்த டப்பிகள் காமதேனுவைப் போல் நமக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கின்றன. இது நவீன விஞ்ஞானம் நமக்குச் செய்த உபகாரங்களில் ஒன்று.

டப்பி உணவுகளை உபயோகித்தால் வியாதி உண்டாகும் என்று சிலர் பயப்படுகிறார்கள். டப்பிகளைப் பற்றவைப்பதற்கு ஈயத்தை உபயோகித்து வந்த காலத்தில் சிற்சில உணவுகளில் ஈய விஷம் கலந்து நோய் உண்டு பண்ணி வந்தது. இப்பொழுது ஈயத்தை உபயோகப்படுத்துவதில்லை; ஆகையால் இக்காலத்தில் இந்தப் பயம் அவசியமே இல்லை. மிகவும் ஜாக்கிரதையாக, கைபடாமல், பாக்டீரியாக்கள் அணுகாமல் இருக்கும் சுகாதார முறைகளையே இப்பொழுது கையாளுகிறார்கள். ஆயினும் சிற்சில வேளைகளில், தப்பித் தவறி, அசுத்தம் எற்பட்டு, டப்பி உணவு கெட்டுவிடுவதுண்டு. திறந்து பார்த்தவுடனேயே அது தெரிந்துவிடும். கெட்டுப் போன உணவை உபயோகிக்காமலிருந்தால் நோய் வர இடமில்லை.

உஷ்ணத்தால் சில வைட்டமின்கள் மட்டுமே கெட்டுப் போகின்றன; எல்லா வைட்டமின்களும் அவ்வாறு கெடுவதில்லை. ஆதலால் டப்பி உணவும் ஆரோக்கியமான உணவுதான் என்பதில் சந்தேகம் இல்லை.

அதிகமான உஷ்ணத்தில் பாக்டீரியா வாழ முடியாமல் இருப்பது போலவே, அதிகமான குளிரிலும் அவை வாழ முடிவதில்லை. ஆதலால் பச்சை இறைச்சி, பழங்கள், கறிகாய்கள் முதலியவற்றை இப்போது குளிர்ச்சி மிகுதியாயுள்ள அறைகள், அலமாரிகள் முதலியவற்றில் வைத்து வெகுநாள்வரை காப்பாற்றி உபயோகித்து வருகிறார்கள்.

இவ்வாறு புளிக்கும் காடியும், கரிக்கும் உப்பும், தித்திக்கும் சர்க்கரையும், வழவழப்பான எண்ணெயும், பலவகை இரசாயனப் பொருள்களும் உணவைப் பத்திரப்படுத்தும் காரியத்தில் நமக்குத் துணை புரிகின்றன. சூரிய வெப்பமும், நெருப்பின் சூடும், புகையும், நீராவியும், பனிக்கட்டியின் குளிரும் இவ்வாறே நமக்கு உதவுகின்றன. இவற்றின் துணையால் நாம் ஒருநாள் உணவைப் பல நாளுக்கு உபயோகிப்பதற்கேற்ற வழிகளைக் கண்டுபிடித்துவிட்டோம்.

உங்கள் மனதிற்குகந்த நறுமணம்
தொண்டைக்குக் கெடுதல் செய்யாது

டிலக்ஸ் டெனார் சிகரெட்டின் உண்மை மணத்தை நீங்கள் விரும்புவீர்கள். உயர்ந்ததும் அவசியமானதுமான பண்டங்கள் கிராக்கியாய் விற்கும் இந்நாளில் கூட இந்தச் சுகம் நிறைந்த சிகரெட்டுகள் நம்மில் பலர் வாங்கக்கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன. உத்தரவாதமுள்ள 100 % வர்ஜீனியா புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்டது டெனார் சிகரெட்டுகள்.

tenor

டி லக்ஸ் டெனார் சிகரெட்ஸ்
ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD., LONDON. EASTERN LICENCEES. POST BOX NO. 9029, CALCUTTA

Godrej கோத்ரெஜ் ஸ்நான சோப்புகள்-ஆரோக்கியத்திற்கும், சுகாதாரத்திற்கும்

உங்கள் ஒவ்வொருவர் விருப்பத்திற்கும் உகந்த, ஒரு கோத்ரெஜ் ஸ்நான சோப் இருக்கிறது. நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் புகழ்பெற்ற, இந்த உயர்தர, தூய, ஸ்நான சோப்புகளிலொன்றை, முறையே உபயோகித்து, சரீரத்தை சுத்தமாயும் ஆரோக்யமாயும் வைத்துக்கொள்ளுங்கள். தாவர எண்ணைகளால் செய்யப்பட்ட இந்த சோப்புகளின் நுரையும், வசீகர வாசனையும் உங்கள் உடலுக்கு மென்மையையும் நறு மணத்தையும் அளிக்கும். இவைகளில் உங்களுக்கு எது உகந்ததோ.

நம்பர் 1 & நம்பர் 2



அழகை வளர்க்கவும் கிருமிகளை அழிக்கவும் வல்லன.

பாமெலி டர்க்கிஷ் பாத்

குடும்பச் சிக்கனத்திற்கானவை.

‘வத்னி’

ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்.

ஸான்டல்

லிம்டா

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்,

பம்பாய் — கல்கத்தா — பாட்னு — மதராஸ் — கோயம்புத்தூர் — ஹைதராபாத் (டெக்கான்)

HINDUSTHAN

LATEST FILM SONGS

புதிய டாக்கி பாட்டுகள்

Price Rs. 3/8 விலை ரூ. 3/8

“தான்ஸென்” டாக்கி பாட்டுகள்

Produced by
RANJIT MOVITONE & CO.,
K. L. ஸைகால் பாடியவை

H 1052 } தியா ஜலா, தியா ஜலா / ஸபத் ஸுர் தீன் தால்

H 1053 } பிஜ பங்க் பண்ட்சி ஹுங் மை / காஹே குமான் கரே கோரி.

H 1054 } பாக் லகா துன் ஸஜனி / ரும் ஜும் ரும் ஜும்

“வாபஸ்” டாக்கி பாட்டுகள்

Produced by
NEW THEATRES LTD.
அஷித்பரன் பாடியவை

H 1071 } ஹம் கோச்வான் பியாரே / ஆஜ்கிபாத்தே பூல் ந ஜானு

H 1072 } ஜீவன் ஹைபேகார் பினு துமாரே / தும்னே முஜ்ஸே பிரேம் ஜதாகர்

Recorded & released by Hindusthan Musical Products Ltd. Calcutta.

ஹிந்துஸ்தான் மியூசிகல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், கல்கத்தா

Sole Distributors : For MADRAS Presy & STATES.

மகமது இப்ராஹிம் & கோ. 26, 27 ரத்தன் பஜார், மதராஸ்.

தளவாயின் சேவை

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

பதினாறாம் நூற்றாண்டின் மத்தியிலே தமிழகத்தில் நாயக்க மன்னவரின் ஆட்சி முளைக்கிறது; பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் நடக்கிறது; அப்பால் சாய்ந்தழிந்து மறைகிறது. அவ்வேந்தரின் காலத்தில்தான் திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் ஆலயங்கள் அழகு பெறுகின்றன; ஆயிரக்கால் மண்டபங்கள் கிளம்புகின்றன; அக்கிரகாரங்கள் பெருகுகின்றன; கோட்டை கொத்தளங்களும் சமைகின்றன. மதுரைமாநகரிலே சர்வ கலாசாலை ஒன்று சிறப்பெய்துகிறது. பல்வேறிடங்களினின்றும் பதினாயிரம் மாணவர்கள் வந்து, நானாவிதமான கலைப்பயிற்சி அடைகின்றனர்.

அந்த நாயக்க மன்னவர்களில் ஒருவன் சொக்கநாதன். 1662-ஆம் ஆண்டு முதல் 1682-ஆம் ஆண்டு வரையில் அரியணையில் இருக்கிறான். மேவார் மாதரசியான பத்மினியின் பேரழகைக் கண்டு அல்லாவுதீன் கில்ஜி என்பான் சொக்கிப்போனான் அல்லவா? அங்ஙனமே தஞ்சை ராஜகுல மங்கையை மணக்க அந்தச் சொக்கநாதன் ஆசைப்படுகிறான். தஞ்சை வேந்தன் சம்மதிக்கவில்லை. கடும் போர் மூள்கிறது. தஞ்சை ராஜவம்சம் அதன் பயனாக மறைகிறது. ஆயிரம் மாதர் - தஞ்சை ராஜகுமாரிகள் - தீக்கடவுளைச் சரணடைகின்றனர். தஞ்சை அரண்மனையைச் சுற்றிவந்தால், அந்த அக்கினி குண்டம் கொழுந்துவிட்ட இடத்தை இன்றும் சுட்டிக் காட்டுவர். மாளிகையின் அந்தப் பக்கம் இன்றும் பாழாய்க் கிடப்பதைக் காணலாம்.

அந்தச் சம்பவத்திற்குப்பின், நாயக்கரின் சமஸ்தானத்திலே சீரழிவு தோன்றுகிறது; மந்திரிமார் பிணங்கிக் கிடக்கின்றனர்; பாளையக்காரரும் பேதுற்றுப் போகின்றனர். சொக்கநாதன் பக்திப் பித்தில் ஆழ்கிறான். அரசைக் கவனிப்பதே இல்லை. சதா ராமாயண, பாகவத படனந்தான். அரசனது அவலங் கண்டு, தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகிறான். அனைவரும் அகப்பட்டதைச் சுருட்டுகின்றனர். தளவாய் கோவிந்தப்ப ஐயன் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறான் சொக்கநாதனுக்கு. எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிறது. என் செய்வான் அந்தத் தளவாய்?

சொக்கநாதனுக்கு ஒரு சிறிது பித்தம் தெளிகிறது. அரசியலின் சீர்கேட்டை உணர்கிறான். தம்பி முத்து அளகாத்திரியை அழைத்து அரசை ஒப்படைக்கிறான். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது என்பர். அளகாத்திரியோ கீழ்மக்களுடன் நட்புக் கொள்ளுகிறான்; காமக்களியாட்டத்தில் காலங்கழிக்கிறான்; ஒழிந்த நேரங்களில் சொக்கட்டான் ஆட்டத்தில் திளைகிறான்; மதுபானத்திலும் மனம் செலுத்துகிறான். செலவுக்குப் பணம் பற்றவில்லை; பொக்கிஷம் வறண்டுவிட்டது. காசு இன்றேல் களியாட்டம் எது? பெருமக்களையும் பாளையக்காரரையும் வருத்திப் பணம் பறிக்கிறான்.

அரசில் அல்லோல கல்லோலம் எற்படுகிறது. பொது மக்கள் பரிதபிக்கின்றனர்; பெருமக்கள் முகம் சுளிக்கின்றனர். பாளையக்காரரில் பலரும் தனிக்காட்டு ராஜாக்கள் ஆகின்றனர். குழப்பமும் கொந்தளிப்பும் தாண்டவம் ஆடுகின்றன. அவற்றை எல்லாம் சமாளிக்கவேண்டும். அளகாத்திரிக்கு அவகாசம் எது? அவகாசம் இருந்தாலும் ஆர்வம் இல்லை; ஆண்மையும் இல்லை. களியாட்டத்திற்குக் குந்தகம் நேரலாமா? அன்பன் ருஸ்தம்கானை அழைத்து, அரசியலை நடத்தச் சொல்லுகிறான். நாய்க்குத் தேங்காய் மூடி கிடைத்தால் எப்படி!

முன்னம் சொல்லிய வண்ணம், ருஸ்தம்கான் பரம தரித்திரனாக இருந்தவன். திரிசிராப்பள்ளியின் வீதிகளிலே பிச்சை புகுந்தும் வயிறு வளர்த்தவன். நல்ல காலம் கிட்டியது. அரமனையிலே காவல் வேலை வாய்த்தது. பயபக்தி விசுவாசத்

துடன் சேவகம் செய்துவந்தான். சொக்கநாதனுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. உடனே அரமனைக் கார்வாரி ஆனான் ருஸ்தம்கான். அரமனையில் அரைக்காசு சம்பளம் கிடைத்தாற் போதும் என்பார்கள். அரமனைக் கார்வாரி வேலை கிட்டிவிட்டால், கேட்கவேண்டுமோ? குட்டி அரசன்போல் குலவத் தலைப்பட்டுவிட்டான்.

தெருவிலே திரிந்துழன்ற ருஸ்தம்கானுக்கு மாடமாளிகை உண்டாகிறது. யானை, குதிரை, ஒட்டை, எவலாள் முதலிய பரிவாரங்களும் எற்படுகின்றன. பட்டமும் பிருதுகளும் வாய்க்கின்றன. அவன் வீடு, சின்ன அரண்மனை, சின்ன அரண்மனை என்று சிறப்புப் பெறுகிறது. இந்த நிலையில்தான், அவனிடம் ராஜ்ய பாரத்தை ஒப்படைக்கிறான் முத்து அளகாத்திரி.

பிறர் போக்கறிந்து நடப்பதில் ருஸ்தம்கான் அதிசமர்த்தன். சொக்கநாதனது பக்தி வெறி கண்டு, தானும் பரம பக்தனாக நடிக்கிறான்; பக்தர்களிடம் பரம பிரேமை காட்டுகிறான். அளகாத்திரி அரசியலை எற்றுக்கொண்டதும், அந்தரங்க நண்பனாகத் துலங்குகிறான். அழகிற் சிறந்த அரிவையரைத் தேடிக் கொணர்கிறான்; தன் இனத்திலிருந்தும் கட்டழகியரைத் திருவி, அளகாத்திரியின் அந்தப்புரத்தை அலங்கரிக்கிறான். ஆடல் பாடல்களில் தேர்ந்த பலரையும் அந்தப்புரத்தில் புகுத்துகிறான். முத்து அளகாத்திரிக்கு வேறு என்ன வேண்டும்? ருஸ்தம்கான் இட்டதே சட்டம்! சொன்னதே தீர்ப்பு!

ராஜ்யபாரம் கைக்கு வந்ததுதான் தாமதம். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுகிறான் ருஸ்தம்கான். நவாப் ஆக நாட்டில் துலங்க ஆவல் உதிக்கிறது. சுபேதாராகச் சிறக்கச் சித்தம் பிறக்கிறது. பெயரளவில் ராஜபதவி இல்லை; என்றாலும் செயலளவில் அந்தப் பதவி காலடியில் கிடக்கிறது. பெயரளவிலும் அந்தப் பதவி வேண்டுமே? சிந்தனை செய்து பார்க்கிறான் அந்தச் சிறு மகன். அரமனைச் சேவகத்தில் தன் இனத்தாரையே நியமிக்கிறான். கோட்டைக் காவலுக்கும் முகம்மதியரையே அமர்த்துகிறான். கொத்தளத் தலைமைக்கும் இஸ்லாமியரையே எற்படுத்துகிறான். எல்லாம் இஸ்லாமியமயமாகிவிடுகிறது.

பின்னர், ருஸ்தம்கான் தைரியம் அடைகிறான். மன்னவன் சொக்கநாதனோ மாளிகையை விட்டு வெளியே கிளம்புவதில்லை. வெளியே நடப்பது ஒன்றும் தெரிய வராது. புராண படனம் உண்டு, தான் உண்டு; அவ்வளவுதான். செவிக்கு உணவில்லாதபோது, சிறிது வயிற்றுக்கு! பார்த்தான் ருஸ்தம். கட்டளையொன்று பிறப்பித்தான். குறித்த நேரத்தில்தான், புராணிகர் மாளிகைக்குள் வரலாம்; குறித்த நேரத்தில் வெளியே போய்விட வேண்டும். மாளிகைக்குள் வரும்போதும், மாளிகையைவிட்டுப் போகும்போதும் வெறுங்கையுடன் இருக்கவேண்டும். எதும் எடுத்துச் செல்லக்கூடாது. யாருடனும் பேசக்கூடாது. இனி மன்னவனும் சரி, மனைவி மக்களுடனும் பரிசாரகருடனுமே பேசலாம். ருஸ்தம்கானது உத்தரவின்றி, எவரும் மாளிகையை நெருங்கக்கூடாது. இங்ஙனம் சொக்கநாதனை அவன் சிறை செய்துவிடுகிறான்.

அளகாத்திரியின் நிலை என்ன? அவனுக்கும் அவ்விதமே உத்தரவு. மங்கையருடன் மகிழலாம். ஆடவர் எவருடனும் அவன் பேசவே கூடாது. காம வெறியில் கிடந்தவனுக்குச் சற்றே கண் திறக்கிறது. சிறையில்லாச் சிறையில் அண்ணன் கிடப்பதைக் கூர்ந்து அறிகிறான். தனக்கும் அக்கதியா என்று தவிக்கிறான். காமக் கிழத்தி ஒருத்தி யோசனை சொல்லுகிறாள். அதன்படி அளகாத்திரியும் அவளும் நள்ளிரவில் மாறு வேஷத்துடன் புறப்படுகின்றனர்; கால் நடையாகக் கடுகி விரைகின்றனர்; நாகை நகர் சென்று மறைந்து வாழ்கின்றனர்.

மன்னவன் பரப்பிரம்மமாக இருக்கிறான். அவன் தம்பியோ எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டான். ருஸ்தம்கானை ஏன் என்று கேட்பார் யார்? திருச்சி வேந்தனாகத் திகழ்கிறான் ருஸ்தம்கான். ஆணையும் ஆக்கினையும் எல்லாம் ருஸ்தமின் பெயரால். இனி அரமனைக் காவலுக்குத்தான் அவன் இனத்தார் என்றால், உத்தியோகங்களிலும் அந்த இனத்தாரே நிரம்பிவிட்டனர். நாயக்க அரசை முகம்மதிய அரசாக மாற்றிவிட ஆயத்தங்களெல்லாம் நடக்கின்றன. பொதுமக்கள் திக்பிரமை கொள்கின்றனர். பெரு மக்களோ கையைப் பிசைகின்றனர். பாளையக்காரரில் பலரும் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்று இருக்கின்றனர். இந்நிலையில் நாயக்க அரசுக்குத் தலை கொடுப்பார் யார்? மக்களின் அவதியைப் போக்க மார் தட்டி நிற்பாரும் யார்?

தளவாய் கோவிந்தப்ப ஐயனோ திகைப் பூண்டை மிதித்தவன் போல் நிற்கிறான். பெயரளவில்தான் அவன் தளவாய். சேனையின் நிர்வாகம் ருஸ்தமின் கையில். எனினும் கோவிந்தப்ப ஐயனை அவன் ஒன்றும் செய்ய இயலவில்லை. சிறகிழந்த பறவை என்ன செய்யும் என்பதே ருஸ்தமின் துணிவு.

தளவாய் கோவிந்தப்ப ஐயன் ஒரு நாள் அன்னபானம் செய்யவில்லை. அமளியில் படுத்தவண்ணம் சிந்தனையில் ஆழ்ந்துகிடக்கிறான். மனைவி வந்து, அகல நின்று, சமயம் பார்த்து, "ஒரு சிறிது பாலேனும் அருந்துக" என்று வேண்டுகிறாள். ஐயன் வாய் திறக்கவில்லை. விம்முகிறான், விடைக்கிறான், வெய்துயிர்க்கிறான். மதிமந்திரி போன்ற மனையாள், "கலக்கமேன்? தோளிரண்டுமே துணை. மூளை வலியும் உளது. கவலை விடுக" என்று கூறுகிறாள். உடனே கோவிந்தப்ப ஐயன் எழுந்து உட்காருகிறான். "ருஸ்தமைத் தொலைப்பது எப்படி? சொக்கநாதனை மீட்பது எங்ஙனம்? தமிழகத்தைக் காப்பது எவ்வாறு?" என்று வினவுகிறான்.

மனைவி சொல்லுகிறாள்: "நாயக்க அரசை நிலைநாட்டியவர் அரியநாயக முதலியார். அப்பால் தளவாய்களே காத்துவந்தனர். அவர்களில் பலரும் நம்மவரே. தளவாய் வேங்கடப்ப ஐயன், தளவாய் ராமப்ப ஐயன், தளவாய் சிவராம சாஸ்திரி இவர்களெல்லாம் எப்படிக் காத்தனர்? அந்த அனைவரும் நம் குலத்தினர் அன்றோ? அன்னாரின் வழியில் வந்த நீங்கள் தயங்குவதேன்? தங்கள் காலத்தில் நாயக்க அரசு மறைந்தது, முகம்மதிய அரசு முளைத்தது என்ற அவச்சொல் பிறக்கவேண்டாம். திருச்சி தாயுமானாரும் மதுரை மீனாட்சிசுந்தரனாருமே துணை. எண்ணிப் பாருங்கள். இனிய யோசனை உதிக்கும். வகைதுறையும் தென்படும்."

அன்றிரவு முழுதும் கோவிந்தப்ப ஐயன் கண்ணுறக்கம் கொள்ளவில்லை. அவன் மனையாளும் சயன அறையை விட்டு அகலவில்லை. ஏதேதோ இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாம் அரசைப் பற்றித்தான். தளவாய்ப் பதவிக்கு மாசு நேராமல் இருக்கத்தான். சொக்கநாதனை யாதொரு சந்தடியுமின்றி மாளிகையிலேயே சிறைசெய்துள்ளான் ருஸ்தம்கான். அங்ஙனமே கச்சேரி வாசலில் ருஸ்தம்கானை அற்புதமாகச் சிறை செய்யவேண்டும் என்று தம்பதிகள் முடிவு கட்டுகின்றனர். "துணை புரிவார் யார்?" என்று கேட்கிறான் கணவன். "கிழவன் சேதுபதி இருக்கிறானே?" என்கிறாள் மனைவி.

"கிழவன் சேதுபதியை அவமதித்தானே அந்தச் சொக்கநாதன்? அவனா துணை புரிவான்? மறவர் குலதிலகம் பழி முடிக்கவே பார்க்கும். இரக்கம் காட்டாதே?" என்றான் கோவிந்தப்ப ஐயன்.

"ஆம். அது மெய்தான். அக்குலதிலகம் கறுவியே நிற்கிறது. ஆயினும் நாயக்க அரசு கைமாற, சேதுபதி சிறிதும் சகியான். அரசு கைமாறின், சேதுபதிக்கே தீம்பாய் முடியும். இதை அந்தக் கிழச் சிங்கம் நன்கு உணரும். உணராவிடின் உணர்த்துவது தங்கள் கடமை" என்றாள் மனையாள் மதுராம்பிகை.

பொழுது புலர்ந்தது. கோவிந்தப்ப ஐயன் எழுந்து நித்தியக் கடன்களை முடித்தான். தாயுமானார் ஆலயம் சென்று, அண்டவனைத் தரிசித்தான். தேவி மட்டுவார் குழலாம்பாளையும் துதித்தான். வீடுவந்து சேர்ந்ததும், மீனாட்சிசுந்தரேசுவரர்களையும்

மனமார எத்தித் தொழுதான். உடனே கன்னிவாடி பாளையக்காரன் சின்னக்கதிர் நாய்க்கனுக்கு ஆள் விடுத்தான். ஆள் போனதுதான் தாமதம். கன்னிவாடியான் கடுகி வந்தான் திருச்சிக்கு. தளவாய், தளவாயின் மனைவி, சின்னக்கதிர் மூவரும் சேர்ந்து நெடுநேரம் ஆலோசனை செய்தனர். அதன் பலனாகக் கிழவன் சேதுபதிக்குத் தூது விடுக்க முடிவாயிற்று.

யாரைத் தூதாக விடுப்பது? தகுதி உடையோர் கிடைக்கவில்லை. சேதுபதியின் சீற்றத்தைத் தணித்துச் சமரஸம் உண்டு பண்ணத்தக்க நபர் வேண்டுமே? ஆடவர் இருவரும் ஆள் இல்லையே என்று ஏங்கினர். மதுராம்பிகையே புறப்படுகிறாள் ஆடவர் கோலத்தில்! ராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதியுடன் பேசுகிறாள். "சொக்கநாதன்மீது சீற்றங்கொள்ளுதல் சரியே. அதுபற்றி நம் தமிழகத்தை மாற்றானிடம் விட்டுவிடுதல் அழகன்று. நேற்று வந்த ருஸ்தம்கான் - பிழைக்கவந்த ருஸ்தம்கான் - வஞ்சனை வழியில் இறங்கி, வேந்தனைச் சிறையிட்டது கிடக்கட்டும். நாட்டையே கட்டிக்கொள்ள முனைந்துவிட்டான். முதலில் அவனை ஒழிப்போம். அப்பால் சொக்கநாதனையும் ஒருகை பார்க்கலாம்" என்று தூதுவன் கூறியது கேட்டு, சேதுபதி சுமுகம் கொள்கிறான்.

பின்னரே தூதுவன் விடை பெறுகிறான். அப்போது, 'அவன் ஆண்தானோ? பெண் அல்லவா?' என்று சேதுபதிக்கு ஐயம் பிறக்கிறது. தூதுவன் தன் சுய வடிவை வெளிப்படுத்தவில்லை. தூதுவன் அகன்றபின்னர் மதுராம்பிகையே வந்து போனதெனப் புலப்படுகிறது. கிழவன் சேதுபதி உடனே பயணமாகிறான் திரிசிராப்பள்ளிக்கு. தளவாய் கோவிந்தப்பையன், கன்னிவாடி பாளையக்காரன், மதுராம்பிகை, கிழவன் சேதுபதி ஆகிய நால்வரும் இரவெல்லாம் மந்திராலோசனையில் கழிக்கின்றனர். அடிவானம் வெளுக்கிறது. கோழி கூவுகிறது. அருணோதயமும் ஆகிறது.

மறுதினம் நண்பகல். திருச்சியிலே ஆஸ்தான மண்டபத்தில் தளவாயுடன் அளவளாவுகிறான் ருஸ்தம்கான். அவ்வேளை, கன்னிவாடி ஜமீன்தாரும் சேதுபதியும் தத்தம் பரிவாரங்களுடன் அரண்மனை சேர்கின்றனர். காலாளரின் காலடிச்சத்தமும், பரிவீரரின் கனைப்பொலியும் கேட்டு, "என்ன இது?" என்கிறான் ருஸ்தம். "பாளையக்காரர் காணிக்கை செலுத்த வருகின்றனர்" என்று தளவாய் மறுமொழி பகர்கிறான். 'இத்தனை பரிவாரங்கள் ஏனோ?' என்று ருஸ்தம்கானுக்குத் திகில் பிறக்கிறது. "காணிக்கை செலுத்த வருகையில், அங்ஙனம் வருதலே வழக்கம்" என்கிறான் தளவாய். அது கேட்டு ருஸ்தமுக்குச் சிறிதே நிம்மதி பிறக்கிறது.

ஆயினும் அச்சப் பேய் ருஸ்தமை விட்டபாடில்லை. "பரிவாரங்கள் வெளியேதானே நிற்கும்?" என்று ருஸ்தம் வினவுகிறான். "ஆம்" என்கிறான் கோவிந்தப்பன். இதற்குள் சேதுபதியும் கன்னிவாடியானும் மெய்காவலருடன் சபாமண்டபம் சேர்கின்றனர். குற்றமுள்ள நெஞ்சு அல்லவா? ஆந்தைபோல் விழிக்கிறான் ருஸ்தம்கான். வந்த பாளையக்காரரை வாவென்று அழைக்கவில்லை; ஆசனமும் தரவில்லை. தளவாய் மட்டும், "வருக சேதுபதி, வருக கன்னிவாடி" என்கிறார். இருவரும் ஆங்கிருந்த ஆசனங்களில் அமர்கின்றனர். அமரும் தோற்றங் கண்டு ருஸ்தமுக்குத் தொடை நடுக்கம் எடுக்கிறது.

அவ்வளவில், ஆடவர் கோலத்தில் வெளியே நின்ற மதுராம்பிகை சைகை செய்கிறாள். உடனே, உள்ளிருந்த மெய்காவலர் ருஸ்தமின்மீது பாய்கின்றனர். வெளியே நின்ற வீரரும் மண்டபத்தில் புகுகின்றனர். "அந்தோ!" என்று அலறுகிறான் ருஸ்தம்கான். அவனைப் பின்கட்டு முறையாகக் கட்டிப் போடுகின்றனர் சேதுபதியின் வீரர். "உயிர்ப்பிச்சை தரவேண்டும்" என்று தளவாயைக் கெஞ்சுகிறான் ருஸ்தம்.

"அன்னமிட்ட கையைக் கடித்தவனுக்கா உயிர்ப்பிச்சை?" என்று உறுமுகிறாள் மதுராம்பிகை.

இதற்குள் ருஸ்தமின் இனத்தாரான அரமனைச் சேவகர் திரண்டெழுந்து வருகின்றனர். சபா மண்டபத்துக்கு வெளியே பெரும்போர் மூளுகிறது. தலைகள் உருளுகின்றன; இரத்தம் பெருக்கெடுக்கிறது. கவந்தங்கள் எழுந்து கூத்தாடுகின்றன. இதற்கிடையில் ருஸ்தம்கானது சிரத்தை வேல் கம்பின் நுனியில் செருகி, வெளியே காட்டினர் மெய்காவலர். அவ்வளவில் தமிழ் வீரர் அனைவரும் ஆர்ப்பரித்தனர். ஆனந்தம் மேலிட்டு, ருஸ்தமின் வீரர் அது கண்டு ஓட்டம் பிடிக்கின்றனர். "உண்ட வீட்டினுக்கு இரண்டகம் நினைத்த வீரரை உயிர் வாங்க வேண்டும் என்று சேதுபதியின் வீரர் சீறுகின்றனர். "அஞ்சி ஓடுவோரை ஆவி வாங்க வேண்டாம்; நகரை

விட்டு அப்பால் வெளியே விரட்டி வாருங்கள்'' என்று ஆணையிடுகிறாள் மதுராம்பிகை. அவ்விதமே காரியம் நடக்கிறது.

திண்டுக்கல் பாளையக்காரன் விரைந்து சென்று, மாளிகையினுள் புகுந்து, மன்னவன் சொக்கநாதனிடம் ருஸ்தம் வெட்டுண்டு வீழ்ந்தான் என்று விளம்புகிறான். சொக்கநாதன் அதை நம்பவில்லை. "ருஸ்தமின் தலையைக் கண்டாலன்றி வெளியே புறப்படேன்'' என்கிறான். சேதுபதியின் வீரர் மாளிகைக்கு வெளியே இருந்தவண்ணம் ருஸ்தமின் தலையை வேல்கம்பின் முனையில் குத்திக் காட்டுகின்றனர். பின்பே சொக்கநாதன் அச்சம் தீர்ந்து வெளிப்படுகிறான். வந்து பார்க்கிறான். மண்டபவாசலில் ஒரே பிணக்காடு கண்ணில் படுகிறது.

தளவாய் கோவிந்தப்ப ஐயன் எதிரே தோன்ற, "அரசே! வந்தனம்'' என்கிறான். "இதோ நம் சேதுபதி'' என்றும் கூறுகிறான். "பழம் பகையை விடுத்து நேசங் காட்டிய கிழச் சேதுபதியே! உன்னை என்றும் மறவேன்'' என்று சொல்லிக் கட்டியணைத்துக்கொள்கிறான் சொக்கநாதன். எட்ட நிற்கும் பெண் உருவம் சொக்கநாதன் கண்ணுக்குத் தென்படுகிறது. "படுகளத்தே நிற்கும் இந்த வீரமாது யார்?'' என்று வினவுகிறான் சொக்கநாதன்.

"உன் மானத்தையும் தமிழகத்தின் கௌரவத்தையும் காத்த தெய்வமாது, நம் தளவாயின் தர்மபத்தினி, பெண் குலத்தின் விளக்கு'' என்று பேசுகிறான் சேதுபதி.

உடனே மன்னவன் தன் மகிஷியருடன் வந்து, மதுராம்பிகையின் பாதந் தொட்டு வணங்குகிறான். "பக்திக்கும் ஓர் எல்லை உண்டு. பரமனிடம் பக்தி கொள்வதினும் பரமனது மக்களான உமது பிரஜைகளிடம் பக்தி கொள்ளுதலே மேல். பிரஜைகளிடம் பக்தி விசுவாசம் காட்டின், பரமன் பரம பிரீதி அடைவான். ஸ்ரீ ராமனும் கிருஷ்ணபிரானும் தம் பிரஜைகளை மறந்துவிடவில்லை. பிரஜைகளையும் அரசையும் மறந்த பலனே மாளிகையில் சிறைவாசம். வெளியே இப்பிணக்காடு. விரித்துரைக்க இது நேரமன்று. நம் சேதுபதியை அணைத்துக்கொள்ளின் அரசினுக்கு நலம் பல பிறக்கும்'' என்று கூறுகிறாள் மதுராம்பிகை.

"புத்தி'' என்கிறான் பார்த்திபன்.

சிற்பசித்திரங்களின் உறுப்புகள்

கி. சந்திரசேகரன்

"சிவன் பெயரைச் சொல்லடா, சந்நிதியில் நில்லடா என்பான், சொல்லியும் தொலைக்க வேணும்" என்று சேரியிலுள்ளவர்கள் தங்களுக்கு முற்றும் பழக்கமிலலாத தெய்வ வழிபாட்டை வற்புறுத்திய நந்தனைப்பற்றிப் புகார் செய்ததாகக் கதையில் கேட்டிருக்கிறோம். வீரனையும், இருளனையும், காட்டேரியையும் குல தெய்வங்களாகப் பாவித்துப் பூசை போட்டவர்களுக்கு, அந்தரத்திலும் மனித அந்தரங்கத்திலும் ஒரு காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமொன்று ஒளிர்வதை அறிய இயலாததில் ஆச்சரியம் இல்லை. முண்டாசு கட்டிவரும் வீரப்பப் பிரபுவைத் தொழுதவர்களுக்கு அண்டங்கள் பதினான்கிற்கு அப்பாலும் இப்பாலும் நின்றார்க்கு முண்டாசு நிலையாது என்ற ரகசியத்தை உணர எவ்வாறு முடியும்? எல்லாம் தொன்றுதொட்டு வந்த பழக்கம் செய்யும் வித்தியாசந்தான்.

அவ்விதமேதான் கலை நுகர்ச்சியிலும் மன வேறுபாடுகளைக் காண்கிறோம். பளிச்சென்று காணும் வர்ணப்பதிப்புமயமான 'காலெண்டர்'களைக் கணக்கில்லாமல் பார்த்த கண்களுக்கு, வேறு எதையும் சித்திரமாக நினைக்க இடம் ஏற்படுவதில்லை. விளம்பரப் பகட்டுடன் அவ்வர்ண மேல்பூச்சுகளும் உள்ளன என்பதை அறியாதவர்களே பலரும். அப்படிப்பட்டவர்களிடம் "சித்திரக் கலை என்பது இதல்ல; உயர்ந்த லக்ஷ்யங்கள் கொண்டவைதாம் கலை என்ற பொருளுக்கு இலக்கியமாகும்" என்றெல்லாம் உரைப்பது வீண் முயற்சி. இந்தியச் சித்திரமும் சிற்பமும் தனி நோக்கங்களைப் பெற்றுள்ளன; அவைகளில் சதா ஊடுருவிப் பார்த்துப் பரமானந்தமடையவே கருத்துக்களை வைக்கின்றார்கள்; "வாருங்கள், பார்த்து அநுபவியுங்கள்!" என்று பாமர ஜனங்களை அழைத்துக் காட்டுவது அவர்களுக்கு விளங்காத விஷயங்களைப் புகட்ட முயலுவதாகும். ஒருகால் இரண்டொருவர் அநுபவிப்பதாக எண்ணினாலும், காலப்போக்கை ஒட்டி 'பாஷன்' என்ற முறையில்தான் அவைகளை அநுபவித்துத் தொலைப்பார்கள். சேரிப்புலையர்கள் சிவன் பெயரைச் சொன்ன கணக்குத்தான் அதுவும்.

இந்தியச் சித்திரமும் சிற்பமும் ஆகாயத்திலிருந்து குதித்தவைகளா, அல்லது அவைகளின் குணவிசேஷங்கள் சாமான்ய மனிதர்களுக்கு எட்டாதவிதந்தான் இருக்கின்றனவா என்று கேட்பவர்களுக்குப் பயமின்றி 'இரண்டும் இல்லை' என்று விடைகூறிவிடலாம். இந்தியக் கலைகளை அறிவதற்கு உதவியாக எப்பொழுதும் உரையாசிரியரையும் கூடவே அழைத்துச் செல்லவேண்டி இருப்பது பின் எதனால் என்று மேற்கேள்வியும் பிறப்பது சகஜம். ஆம், நம்முடைய துரதிருஷ்ட காலமே இவ்வளவுக்கும் முக்கிய காரணம். தேசத்தில் வெகுநாட்களாய் ஏற்பட்டுள்ள பெரிய மாறுதல்களே புராதனக் கலைகளை வேருடன் வெட்டிச் சாய்த்துவிட்டன. கலைகளைப் போற்றும் அறிவாளிகளின் மரபும் வரவரக் குறைந்துவிட்டது. ஒரு சிலர் மட்டும் இவைகளில் ஆசையையும் அறிவையும் வளர்க்கின்றார்கள். அவர்களால் செய்யக்கூடியதோ கொஞ்சந்தான். கலைகளுக்கு வேண்டிய தொடர்பு நாட்டில் குன்றிவிட்டால், எல்லாம் அர்த்தமில்லாமல் தோனறுவதை எதிர்பார்க்க வேண்டியதே.

இந்நாட்டுச் சித்திரமும் சிற்பமும் பார்த்தவுடனே மனத்தை அள்ளும் வகையில் இயற்கையை ஒட்டிய வனப்புடன் இல்லை; அத்தன்மையும் சேர்ந்தே அவைகளின் உண்மை விசேஷத்தைப் புறக்கணிக்கச் செய்கின்றது. மேலும் புகைப்படங்களைச் சதா பார்த்துப் பார்த்துப் பழகிய கண்களுக்கு, அங்க அளவுகளில் மாறுபாடும், உடற்கூற்றிலுள்ள வித்தியாசங்களும் வெறுப்பையே அளிக்கின்றன. இன்னும், சம்பிரதாயக் கட்டுப்பாடுகள் வேறு இந்தியக் கலைகளில் ஒன்றைப் பார்த்தால் மற்றொன்றைப் பார்க்க அவசியம் இல்லாமலும் செய்வதாகத் தோற்றும். உண்மையில் இவ்வித எண்ணங்களுக்கு ஆதாரம் இருக்கிறதா என விசாரிக்கும் தைரியசாலிகளும் சற்றுக் குறைவுதான். போதாததற்கு

இந்தியக் கலை அதிசயங்களில் பலவற்றை இதர நாட்டைச் சேர்ந்த பேராசைக்காரர்கள் தங்கள் பொருட்காட்சி நிலயங்களில் வைத்து விநோதமெனக் கொண்டாடவும் தொடங்கிவிட்டார்கள். அவைகள் போகப் பாக்கி இவகே தங்கியுள்ள கலைக் குவியல்களிலும் எத்தனையோ உயர்தர இனத்தைச் சேர்ந்தவையாக இருந்தும், அவைகளைப் பார்த்து அநுபவிக்கத் தகுந்த கலைஞர்கள் குறைந்த எண்ணிக்கையில்தான் உள்ளார்கள்.

சம்பிரதாயத்தை முன்னிட்டு உருவாக்கப்படும் கலைச் சிருஷ்டிகளில் புதிதுபுதிதாக எதையும் எதிர்பார்க்க முடியாதென நம்புவதற்கு இடம் உண்டு. ஆயினும் கற்பனை என்றதும் கட்டுப்பாடுகளின்றி எழுவதை மற்ற நாட்டினர்களும் ஒப்பமாட்டார்கள். மேலை நாடுகளிலுங்கூட, சிற்சில அம்சங்களை மனத்தில் வைத்துத்தான் சிலை, சித்திரம் முதலியவைகளை நிருமாணம் செய்கிறார்கள். அவர்களைவிடவும் கலைத் தத்துவங்களை ஆழ்ந்தே பார்த்திருக்கிறார்கள் நம் நாட்டுப் புராதனக் கலைஞர்கள். கலைநேர்மைக்கென சில வரம்புகளையும் கற்பனை உலகில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் தாம் இன்று பலருக்குப் புரிவதில்லை.

ஓவியர்மணி அவனீந்திரநாத டாகுர் உயர்தரக் கட்டுரையொன்றில் சித்திரக்கலையின் அவயவங்கள எவை என்பதைக் குறித்துள்ளார்.* அவர் விளக்கிய தத்துவங்கள் யாவும் ஒரே சுலோகத்தில் அடங்கியுள்ளன. வாத்ஸ்யாயன காமஸூத்திரத்தின் 'ஜயமங்களா' என்னும் உரையொன்றில் அச்சுலோகம் பின் வருமாறு காணப்படுகிறது.

रूपभेदाः प्रमाणानि भावलावण्ययोजनम् ।
सादृश्यं वर्णिकाभङ्ग इति चित्रं षडङ्गकम् ॥

[உருவ வித்தியாசங்கள், பிரமாணங்கள் அல்லது அளவுகள், பாவம், லாவண்யப் பொருத்தம், ஸாதிருச்யம், வர்ணக் கருவி செய்யும் வேற்றுமை; இவை ஆறும் சித்திரக்கலையின் அவயவங்கள்.]

வர்ணங்களை விட்டுவிட்டால் சிற்பக் கலைக்கும் மேலே குறித்த மற்ற ஐந்து அவயவங்கள் இன்றியமையாதவையே.

ரூபம் அல்லது உருவம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆனால் ரூபபேதம் எ[illegible] அறிய வேண்டிய கருத்து, அழகும் உயி[illegible] கொண்ட வடிவத்திற்கும், அவை இரண்டும் இல்லாத உருவத்திற்கும் உள்ள வித்தியாசந்தான். இவ்விதப் பகுத்தறிவு ஐம்புலன்களின் உதவியினால் ஏற்படுவதல்ல. அவைகளையும் தாண்டி உள்ளே நோக்கும் சக்தியைப் பெற்றுள்ள அகக் கண்ணை மட்டுமே பொறுத்தது. இவ்விதம் சொன்னால் போதாது; உதாரணமொன்றைக் காட்டினால் தெளிவு ஏற்படும்.

பெண் ஒருத்தியின் வடிவம் நம் எதிரில் நிற்பதாக வைத்துக்கொள்வோம். அவளுடைய பெண்தன்மை எல்லோருடைய பார்வையிலும் ஒரே விதமாகத்தான் தெரியும். அவளைச் சித்திரத்திலோ அல்லது சிலையிலோ அமைப்பதாகக் கற்பனை செய்து கொள்வோம். அப்பொழுது ஓவியன் தன் பாவத்தையும் அச்சித்திரத்தில் வைத்து அமைப்பான். மூன்று விதங்களில் அவன் வடிவங்களைத் தயார் செய்கிறான் என்று கொள்வோம். ஒரு படத்தில் விலைமாது ஒருத்தியையும், மற்றொன்றில் இளம் காதலி ஒருத்தியையும், மூன்றாவதில் குடும்ப ஸ்திரீ ஒருத்தியையும் சிருஷ்டிக்கிறான். படங்களைப் பார்க்கிறவர்களுக்கு ஓரளவுக்குமேல் அம்மூன்று உருவங்களில் தோன்றும் பாவங்களை ஒன்றுக்கொன்று வித்தியாசமாக அறிய முடிவதில்லை. வேசியை அங்க எழிலுடன், அதற்குத் தகுந்த செயற்கை அழகையும் வைத்து அமைத்துக் காட்டலாம். அவள் கூந்தலை வாரி ஜடையாகப் பின்னி அலங்கரிக்கும் விதத்திலும், காதுகளில் அணியும் தொங்கட்டங்களின் விசித்திரத்திலும், அவளுடைய ஒய்யாரத்திலுங்கூட அவளைத் தனிப்பட்டவளாக வரையலாம். அதே மாதிரி மற்ற இரு படங்களிலுள்ள பெண்மணிகளுக்கும் அவரவர் இனத்தைக் குறிக்கும் ஆடை அலங்காரங்களையெல்லாம் செய்துவிடலாம். ஆனால், வெளி வேஷங்களால் மட்டும் அவர்களை நிர்ணயிப்பதென்பது சாத்தியமா?

தற்காலத்தில் எத்தனையோ உயர் குடும்பப் பெண்மணிகள் வெளியில் செல்லுகையில் நாடகக்காரிகளின் மேல் பூச்சையும், அலங்காரங்களையும் செய்து கொள்கிறார்கள். அதனால் அவர்களையும் தாசிகளுடன் சேர்ப்பது எவ்வளவு தவறாக மதிக்கப்படுமோ, அவ்வளவு பிசகான காரியம், மேலே குறித்த மூன்று சித்திரங்களிலுள்ளவர்களும் ஆடை அலங்

---

* "சித்திரக்கலையின் ஷடங்கம்" என்ற அவனீந்திரரின் கட்டுரை விச்வபாரதி பத்திரிகையில் 1942-மே மாதம் வந்துள்ளது.

கா[illegible]களால் [illegible]ட்டும் மாறிய தோற்றத்தைப் பெ[illegible]தாக [illegible] செய்வது. வெளி வேஷங்களால் மதிப்பிடும் உலகம் ஏமாற்றம் அடைவதேபோல், சித்திரத்திலும் உட்கருத்தை வைக்காத உருவம் மாறான அபிப்பிராயத்தைக் கிளப்பக்கூடும். இதை உணர்ந்தே இந்தியச் சிற்பிகளும் ஓவிய ரத்தினங்களும் தங்கள் மனக்கண்முன் நிர்த்தாரணம் செய்த வடிவத்தின் பிரதியையே படத்தில் காட்டுகிறார்கள். மேலெழுந்த வாரியாய்ப் படத்தைப் பார்த்தால், எல்லாம் ஒன்று போலவே தோற்றினும், உட்கருத்தை வெளிப்படுத்தும் விதம் வடிவ அமைப்பிலேயே ஒரு தனி வித்தியாசம் காணப்படும். அதற்குத் தியானமும், பல முகமாய் மனம் செல்லாமல் அடக்கி ஆளும் திறனும் ஓவியனிடம் இருப்பது அவசியம். ஆழ்ந்த தியானம் ஒன்றே நேருக்கு நேர் பார்ப்பதைக் காட்டிலும் தெளிவாய் உருவத்தை அவன் மனக் கண் முன் நிறுத்திக்காட்டும்.

तथा नान्येन मार्गेण प्रत्यक्षेणापि वा खलु ।

[வேறு எவ்வித வழியிலும் இல்லை; திருஷ்டியில் நேருக்குநேர் பார்ப்பதிலுங் கூட இல்லை. —சுக்கிர நீதிசாரம்.]

உருவம் சிறப்பாகத் தோன்றுவதற்குப் பரிமாணங்களும் அவசியமல்லவா? இதை உத்தேசித்தே அளவுகளை ஓவியனும் சிற்பியும் நன்கு கற்கின்றார்கள். பார்த்தால் எல்லாம் ஒரு பெருத்த ஆச்சரியத்தை உண்டாக்குவதாகவே தோன்றும். அகண்டாகாரமான கடலையும், உயர்ந்தோங்கிய மலையையும் சில அங்குலங்கள் அகலமுள்ள காகிதத்தண்டின்மேல் வரைவதைப் பார்த்துப் பெருங்கடலையும் ஆகாயத்தை அளாவும் கிரியையும் நம் மனம் அப்படியே காண்பதாகச் சந்தோஷிக்கிறது. மேலும், அலைகளின் சலனத்தையும் மேகங்களின் ஓட்டத்தையுங்கூடப் படத்தில் காட்ட முடிகிறது. எல்ராம் சித்திரகாரனுடைய பரிமாண சக்தியின் பயன் என நிச்சயமாய் அறியலாம். இந்த அளவு காட்டும் அறிவு ஒழுங்குபடுவது முதிர்ந்த பயிற்சியையும் பொறுத்தது.

இயற்கையிலேயே ஜீவராசிகளிடமெல்லாம் அளவு உணர்ச்சி ஒன்று இருப்பதைப் பார்க்கிறோம். சாதாரணமாய், குழந்தையொன்று சங்கீதம் கற்பதாக வைத்துக் கொள்வோம். முதலில் அதன் குரல் அளவு தெரியாமல் மேலும் கீழும் பாய்வதையும், பிற்பாடு வரவர அளவு ஞானம் ஏற்படவும் அதன் சாரீரம் சரியானபடி வெளிவருவதையும் அறிய முடிகிறது.

நாய், பூனை, பக்ஷிகளிடமும் இந்த அளவு உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அணிலொன்று மரக்கிளையில் பழத்தைத் தன் முன் கால்களில் இடுக்கிக்கொண்டு தின்கிறது. ஆனால் கீழே உட்கார்ந்து, இமை கொட்டாமல் பூனையொன்று அதையே உற்றுப் பார்க்கிறது. பூனைக்குத் தெரியும், எவ்வளவு சமீபம் அணில் இருந்தால் தன்னால் தாவி அதைக் கவ்வ இயலும் என்று. அணிலும் அறியும், தான் தப்பித்துக்கொள்ள எவ்வளவு இடைவெளி தனக்கும் பூனைக்கும் இருக்கவேண்டும் என்பதை.

ஆனால் கலை என்றதும், இதே அளவு முக்கியமான அம்சங்களில் ஒன்றாகப் பரிணமிக்கிறது அல்லவா? இல்லாவிட்டால், சிற்ப அதிசயங்களில் ஒன்றான தஞ்சை பிருகதீசுவர சுவாமி ஆலயத்தின் கோபுரம் சிற்பியினால் இவ்வளவு அழகாகக் கட்டப்பட்டிருக்குமா? சிறிது அதன் அளவில் குறைத்துப் பார்த்தாலும் முழு காம்பீர்யமும் குலைந்துவிடும், எனவே சந்தேகம் உதிக்கிறது கலைஞர்களின் உள்ளங்களில்.

பரிமாண சக்தி சாமான்யமானதல்ல. அதை விருத்தி செய்யும் பழக்கம் கலைஞர்களிடம் சுபாவமாகவே எழுகிறது. ஏனென்றால் அவர்கள் ஒரு வஸ்துவைப் பார்க்கையிலேயே அதுவாகத் தாங்களும் ஆகிவிடுகிறார்கள். கேவலம் அடியினாலும், அங்குலத்தினாலும் அளக்கப்படுவது வெளித் தோற்றமே. அதைவிடச் சூக்ஷ்மமான தொன்றை அளப்பதற்கும் ஒரு சக்தி பிறக்கிறது அவர்களிடம். உள்ளும் புறமும் நன்கு பரிமாண சக்தியில் வசப்படவுந்தான், சரியான கலைச் சிருஷ்டிக்கு அங்குரார்ப்பணம் ஏற்படுவதாக நினைக்க வேண்டும்.

ஆனால் எவ்வளவு ரூபபேதமும், பரிமாணமும் சிருஷ்டியை மேன்மைப் படுத்துவனவாயினும், பாவம் இல்லாவிட்டால் கலைவடிவம் வாடிவிடும். பாவம் இருப்பது ஒன்றே படத்தை மனத்தில் பதியவைக்கிறது. பாவம் என்பது மனத்தடத்தே எழும் சலனங்களுக்கெல்லாம் பொதுவான பெயர். பாவம் இல்லாத மனம் காற்றினால் அசைக்கப்படாத ஜலராசியைப்போன்றது. பாவம் ஒன்றே மனத்தினுள் தோன்றுவதை வெளிக்காட்டவல்லது. வசந்த கால வரவை இளம் தளிர்களும், மழைக் கால ஆரம்பத்தை மேகங்களும் குறிப்பதே

மேனி அழகு!

"ரோஜாவைப் போன்ற அழகுடையது என்று வர்ணிக்கும் நாரீமணிகளின் மெல்லியல் மேனியைப் புதுமையும் சௌக்கியமுமுள்ள நிலையில் வைத்திருக்க வேண்டுமானால் **மைசூர் சந்தன ஸோப்பைத்** தினந்தோறும் உபயோகிக்க வேண்டும்."

★

மைசூர் சந்தன ஸோப்

கவர்ன்மெண்ட் ஸோப் பாக்டரி, பெங்களூர்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

பல் முளைக்கும் சிசுக்களுக்கு அமுதம்

யாவருக்கும் நமது மனமார்ந்த

"பொங்கல் வாழ்த்துக்கள்"

பொழுது விடியுமுன் துயில் நீங்கி, மங்கள நீராடி, புத்தாடை புனைந்து, கதிரவனை வணங்கி, இன்புற்று விருந்துண்ணும் சமயம்

எங்களுடைய "காமதேனு மார்க்" அசல் நெய்யில்

தயார் செய்யப்பட்ட பலகார பக்ஷணவகைகள் குடும்ப சந்தோஷத்தை அதிகரிக்கச்செய்வதுடன் சாப்பாட்டின் ருசியை மேன்மைப்படுத்தும்.

எங்கள் நெய் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

"காய்ச்சும் பதம்" சிரத்தையுடன் கவனித்துப் புதிய வெண்ணெயில் தினமும் காய்ச்சி அனுப்புகிறோம்.

KAMADENU BRAND
TRADE MARK
PURE GHEE

மணம், ருசி, குருணை வாட்டு நெடு நாட்கள் மாறாமலிருக்க, தகுந்த முறையில் தயார் செய்யப்படுகிறது.

இன்றே பரீக்ஷியுங்கள்:

காளி அண்டு கோ., கோயமுத்தூர்.

போல், உள்ளே தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்துவன பாவங்கள்தாம். அவைகளுக்கென ஒரு தனி லயமும் இயற்கையிலேயே இருக்கிறது. இலைகளின் பசுமை நிறத்திலும், காற்றினால் தணிய வைக்கப்பட்ட மரங்களின் ஆட்டத்திலும், சமுத்திர அலைகளின் கொந்தளிப்பிலும், நீர்வீழ்ச்சியின் கும்மாளத்திலும், அங்கங்களின் சாய்ப்பிலும், புருவங்களின் விலாஸங்களிலும், உதட்டின் துடிப்பிலும், கண்ணிலிருந்து முத்துப்போல் கிளம்பும் நீர்த்துளியிலும, முகத்தைச் சட்டென மறைக்கும் முன்றானையிலும் எவ்வளவோ விதமான பாவங்களின் வெளியீடு தெரிகிறது.

பாவங்களிலும் விசேஷமான அமைப்பு வியஞ்சனை வியாபாரத்தினால்தான் எற்படும். மறை பொருளாகக் காட்டுவதன் உபயோகம் கலை உள்ளங்களுக்குத் தெவிட்டாத தேனின் ருசியை ஒத்ததெனலாம். சாதாரணமாய் ஒரே இயற்கைக் காட்சியை இரண்டு உள்ளங்கள் வெவ்வேறாக அநுபவிப்பதையும், அல்லது ஒரே மனசு வெவ்வேறு சந்தர்ப்பஙகளில் தன் நிலைமையை ஒட்டி வெவ்வேறாக ஒரே காட்சியைக் கருதுவதையும் பார்க்கிறோம். இவைகளைக் குறிப்பதும் கஷ்டமல்ல. துயரக் கடலில் அழுந்திய மனம் மழை பெய்யும் காட்சியை உலகமே துக்கமயமாய்த் தோன்றுவதாக எண்ணத் தலைப்படும். அதே மனம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும்பொழுது, மழைத் தாரையைச் சுவர்க்கத்தில் ஸ்திரீபுமான்களின் சம்போக விளையாட்டினால் கழுத்திலிருந்து அறுந்து நழுவிய முத்து ஆரங்களாக உத்பிரேக்ஷை செய்வதையும் பார்க்கிறோம். உயர்ந்த சித்திரகாரன் படத்தில் வியங்கியமாகவே கருத்தைக் காட்ட முயல்வான்.

ஓவியர்மணி அவநீந்திரர் வியங்கிய பாவம் படத்திற்கு அளிக்கும் சிறப்பை ஓர் உதாரணத்தினால் எடுத்துரைப்பார். அதாவது, பிச்சை ஓடு ஒன்றைச் சித்திரத்தில் காட்ட வேண்டும் என்பதாக வைத்துக் கொள்வோம். பிச்சைப் பாத்திரத்தைச் சித்திரத்தில் போட்டுவிடுவதுதான் சகஜமாயிற்றே; அதில் என்ன அதிசயம்! வறுமைப் பிணியை நன்கு காட்ட வியங்கிய பாவத்தைத்தான் கையாள வேண்டும் என்பது அவர் துணிவு. பிச்சைக்காரனைப் பாத்திரத்தைக் கையில் ஏந்துவதாகப் போடுவதுபோதாது. ஏனெனில் பணக்காரனும் பிச்சைக்கார வேஷம் போடலாம் அல்லவா? அல்லது பிச்சைக் கலயத்தில் இரண்டு காசுகளைப் போடுவதோ அல்லது பக்கத்தில் கந்தைத் துணியைக் காட்டுவதோ சுமார்தான். ஆனால் பிச்சை ஓட்டைப் போட்ட ஓவியர் அதன் அருகில் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட மாளிகையின் வாசற்படிகளை வரைவதால் எவ்வளவோ அருமையாக வறுமையின் கொடுமையை மனத்தில் உணர்த்திவிடுவார் அல்லவா?

உட்கருத்தைக் காட்டுவதிலும் அழகுத் தேவதை நடனம் புரியவேண்டும். பெண்மைக்கு அங்கங்களின் நேர்மையும், மூக்கு, கண் இவைகளின் லக்ஷணமும் மட்டும் போதா. எல்லாவற்றையும் தோற்கடிக்கும் லாவண்யமென்று சொல்லக்கூடிய தொன்று கூடவே சோபிக்க வேண்டும். அதேபோல் சித்திரம் சிற்பங்களிலும் லாவண்யமும் சேருவது அவசியம். தாய் குழந்தையைத் தன் வசம் அன்பு ஒன்றினால் அடிமையாக வைப்பதுபோல், மற்ற அவயவங்களையும் அணைத்துக்கொண்டு உதவி புரிவது லாவண்யம் ஒன்றுதான்.

அழகு இருந்தால் போதாது; கண் எதிரே பார்த்தவைகளை நினைப்பு மூட்டும் ஒற்றுமையும் சித்திரவடிவங்களில் இருப்பது அவசியமல்லவா என்பார்கள் ஸஹிருதயர்கள். ஆம், வாஸ்தவமே. ஆனால், கவிஞனும், குழந்தையும் தனிக் கற்பனை உலகில் உலாவி வருவதை இலக்கியமெனக் கொண்டாடுகிறோம். குழந்தை மரப்பாச்சியின் கல்யாண விளையாட்டில் வேறு உலகிற்கே சென்றுவிடுகிறது. கவிஞனும் மற்றவர்களுக்குத் தெரியாத கற்பனைக் காட்சிகளில் தன்னை மறக்கிறான். சித்திரத்திலும் சிற்பத்திலும் இதற்கு மாறான விதியை வைப்பானேன்? கவிஞன் வதனத்தைப் பூர்ண சந்திரனுக்கு ஒப்பிடலாம்போல் இருக்கிறது. சித்திரகாரன் மட்டும் பாத பத்மத்தை வரைவது பிசகாகுமா? முகம் பூர்ண சந்திரனைப்போல் தட்டையாக இருப்பதாக அல்ல அவ்விடத்தில் பாவம்; சந்திரன் ஒளி மேல் பட்டதும் பூரிக்கும் உள்ளம், முகத்தைக் கண்டதும் அதே அளவில் சந்தோஷிப்பது ஒன்று மட்டுந்தான் இவ்வித உவமையின் வாயிலாக வெளியாகிறது. சித்திரத்தில் பாத கமலங்களைக் காட்டுவது எப்படி என்று கேள்வி பிறப்பது நியாயம். பாதங்களையும் அவைகளின் அருகில் மலர்ந்த தாமரைகளையும் வரைவதனால் அவைகளை ஒன்றாகப் பாவிக்கும் இதயங்களுக்கு ஒற்றுமை

தோன்றும்; ஆனால் பாதங்களைத் தாமரை இதழ்களாகக் காட்டினால் முற்றும் இயற்கைக்கு முரணாகவே தோன்றும்.

கோடுகளால் சித்திரம் எழுதிவிடலாம். அதில் ஓரளவு அழகு நிறைந்திருக்கும். ஆனால் வர்ணங்களையும் அவைகளில் அமைப்பது நம்மை எங்கோ புதிய உலகிற்குக் கொண்டு செல்லும். பதம் பட்ட கையே வர்ணக்கருவியினால் வேற்றுமைகளைச் சரியான அளவில் படத்தில் அமைக்க வல்லது. வெள்ளைக் காகிதத்தில் படம் வரைவதற்கு முன்பே ஓவியருக்குக் காகிதத்தின்மேல் தாம் பார்க்கும் சித்திரம் உருவாகி இருப்பது கண்ணுக்குத் தெரியும். கற்பாறையைக் காண்பதிலும் எல்லோரும் சிற்பியாகமாட்டார்கள். சிலருக்கே அவைகளில் செதுக்கி எடுக்கவேண்டிய வடிவங்கள் கண்களுக்குப் புலனாகும். அதனால்தான் வெகு ஜாக்கிரதையாய் ஓவியன் தன் வர்ணக்கருவியை உபயோகிப்பான். அதற்காகக் கைநடுக்கம்கொள்ளலாகாது. சிறந்த ஓவியனுடைய கரம் வர்ணக்கருவியைப் பிடிப்பதிலிருந்தே அவன் எவ்வளவு நிச்சய புத்தி பெற்றவன் என்பதையும் உணரலாம்.

வர்ண வித்தியாசம் என்றதும் ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளை அறிவது மட்டுமல்ல; வர்ணம் தீட்டுவதிலும் பெரிய கலைஞானம் இருப்பதை உணரவேண்டும். எப்படித் தீட்டினால் சித்திரகாரனுடைய கருத்தை வர்ணச் சேர்க்கை தனி முறையில் வெளியாக்கும் என்பது முக்கியக் கருத்து. உதாரணமாக, தசரத ராஜன் மரணத் தறுவாயில் இருக்கும் ஒரு படம் எழுதப்படுவதாக நினைத்துக்கொள்வோம். படத்தில் தசரதருடைய மெலிந்த உடலையும், முகத்தின் களைகுன்றிய தோற்றத்தைக் காட்டுவதும், அவைகளுக்கு உகந்த வர்ணங்களை இடுவதும் பெரிதல்ல. எல்லோரும் அமைத்துவிடுவார்கள் அவ்விதச் சித்திரத்தை. ஆனால் படத்தில் காணும் எல்லா வஸ்துக்களிலும் ஒளி இழந்த தோற்றம் தெரிவது ஒன்றே படத்தை மனத்தை விட்டகலாதபடி செய்யக்கூடும். படத்தில் காணும் விளக்கின் மங்கிய ஒளியும், நிழல்போன்ற வர்ண வேற்றுமையொன்று படம் முழுவதும் வியாபித்திருப்பதுமே துயரமயமாய் அந்தச் சித்திரத்தைப் பிறர் மனக்கண்ணில் பதிய வைக்கும். இவ்வித அற்புதங்களே அவநீந்திரரின் சித்திரங்களை விலைமதிக்க முடியாமல் செய்துள்ளன.

மேலும் சித்திரத்திலும் சிற்பத்திலும் அதிகமாக ஒரே இடத்தில் ஜீவராசிகளின் சேர்க்கையை வைத்துக் காட்டுவதும் இந்தியக் கலைகளின் தனிமரபு எனலாம். மனிதனும், தெய்வமும், ஜந்துவும், மற்றப் புற்பூண்டு முதலியவைகளும் சேர்ந்து வாழ்வது ஒன்றே இவ்வுலகின்கண் வேற்றுமையை ஒழிப்பதாகும். மேலைநாடுகளில் சித்திரங்களில் வேண்டிய அளவு இடைவெளிகளை வைப்பதும், இந்நாட்டில் பெரிய மலைச் சரிவுகளிலும் சிறு இடங்களிலுங்கூடப் பலவித வடிவங்களை இடைவெளியின்றிக் கலைசிருஷ்டி செய்பவர்கள் நிருமித்துப் புகுத்துவதும் அவரவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைத் தத்துவங்களையே புகட்டுகின்றன. இதர நாடுகளில் மனிதன் மற்ற ஜீவராசிகளை அடக்கி ஆள்கிறான். உயிருள்ள எல்லோரும் ஓர் இனம் ஒரு குடி என்னும் கருத்தைத் தொன்றுதொட்டு மதக்கொள்கையாக இங்கேதான் வைத்துள்ளோம். மனித வர்க்கம் மட்டுமில்லாமல் மற்றப் புற்பூண்டு மிருகராசிகளும் ஒன்றாய் வாழும் நிலையை லக்ஷ்யமாக வைத்து, பெருங் கூட்டங்களான பதுமைகளைக் கோபுரங்களில் எற்றிக் காட்டுகின்றன கலைச்சிருஷ்டிகள். தேவதைகளும், மனித வர்க்கமும், இதர ஜீவன்களும் கோபுரத்தின் உச்சியிலுள்ள கற்பாறையைத் தாங்கும் கோலத்தை, அற்புதச் சிற்ப வடிவமாகப் பாவித்துவருகிறோம். அவை எல்லாம் ஒன்றாய்ச் சமைந்த பரம்பொருளை வழிபடும் பாவத்தையே நினைப்பு மூட்டுகின்றன.

நேர்மையை நாடும் மனம் கலையிலும் காவியத்திலும் சிலவற்றையே உயர்த்திப் பேசும். எல்லாம் கற்பனையாகாது. புள்ளினங்கள் எதற்காக இடைவிடாமல் பாடுகின்றன என்றும், தாமரை சூரிய கிரணம் ஸ்பரிசித்ததும் தன் இதழ்களை விரிப்பதேன் என்றும் கேள்விகளைக் கேட்கும் உள்ளங்கள் எதைப் பெரிதாகத் தேடுகின்றன என்பதை ஐம்புலன்களும் நமக்கு அறிவிப்பதில்லை. ஆனால் காது, கண் சொல்லாதவைகளை ஏதோ ஒன்று உள்ளே இருந்துகொண்டு சதா ஞாபகப்படுத்துவதையும் அறிகிறோம் அல்லவா? ஆம், அந்த ஞான ஒளியேதான் சித்திரத்தையும் சிற்பத்தையும் வெறும் காகிதமாகவும் கல்லாகவும் நினையாதபடி நித்தியமான பொருளாகச் செய்கிறது.

திருநாள் செலவு

'சங்கராராம்'

ஐயன் பாளையத்துக்கெல்லாம் 'பெரிய தோட்டமே' பெயர் போனது. அதன் சொந்தக்காரர், கண்ணாயிரம் பிள்ளைக்கு அதனாலேயே பாதி கௌரவம். மற்ற மிராசுதார்களைப் போல அவருக்கும் ஏராளமான நன்செய் நிலங்கள் இருந்தன. ஆனால் பெரிய தோட்டத்தின் பெருமையே அலாதியானது. சுமார் நாற்பது ஏகர் விஸ்தீர்ணம் இருக்கும். அதில் அநேகமாய்த் தென்னை, மாமரங்களே இருந்தபோதிலும், ஒவ்வொருவித பலவிருக்ஷத்தையும் அங்கே காணலாம். அந்தத் தோட்டத்து நெல்லிக்காய் பிரசித்தி பெற்றது. வருஷத்துக்கு ஒரு முறை நடக்கும் வனபோஜனத்துக்கு ஜனங்கள் ஆயிரக்கணக்கில் அங்கே கூடுவார்கள். எந்த மடாதிபதிகள் வந்தாலும், அவர்கள் தங்கள் பரிவாரங்களுடன் அங்கேதான் தங்குவார்கள். இவைகளையெல்லாம் உத்தேசித்து, பிள்ளையின் முன்னோர்கள் தோட்டத்தின் நடுவில் ஒரு கட்டிடத்தையும் கட்டிவைத்திருந்தார்கள். இக் கட்டிடத்துக்கு அருகில், தோட்டத்தின் மேற்பார்வைக்காக, மாரிமுத்து ஒரு குடிசையில் வசித்துவந்தான்.

மாரிமுத்துக்கு முப்பது பிராயம் இருக்கும். பிள்ளைக்கு மிகவும் நம்பிக்கையானவன். பண்ணையைச் சேர்ந்த பிறகே அவனுக்குக் கல்யாணம் ஆயிற்று. இப்பொழுது அவன் மகன் குப்பனுக்கும் ஏழு வயசு நிரம்பிவிட்டது. பார்த்தால் நேற்றைப் போல இருந்தது. ஆனால் அவன் பண்ணைக்கு வந்து பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. இதற்குள் எவ்வளவோ ஆட்கள் பண்ணையை விட்டு அகன்றார்கள்; பலர் புதிதாகவும் வந்து அமர்ந்தார்கள். ஆனால் மாரி மத்துவின் நீடித்த உழைப்பும் விசுவாசமும் பிள்ளைக்குத் தெரியாமற் போகவில்லை.

பிள்ளைக்கு மாம்பழம் என்றால் வெகு ஆசை. தோட்டத்தில் இருக்கும் மரங்கள் போதா என்று, பல ஊர்களிலிருந்து ஒட்டு மாஞ்செடிகளைத் தருவித்து விருத்தி செய்தார். சில வருஷங்களுக்கு முன் அவருக்குச் சேலம், 'குண்டு', 'நடுசாலை' வகைகளின் மீது 'மோஸ்' இருந்தது. அப்பொழுது, அச்செடிகளை வாங்கி, தோட்டத்தின் ஒரு கோடியில் காலியாய் இருந்த இடத்தை எல்லாம் வளமாக்கிவிட்டார். இப்பொழுது, அம்மரங்கள் காய்த்துக் குலுங்குவதைக்கூட அவர் சட்டைசெய்யவில்லை. யாரோ ஒருவர் தூண்டுதலால், அவருடைய ஊக்கம் முழுதும் இப்பொழுது வடதேசத்து ரகங்களைப் பயிரிடுவதில் ஈடுபட்டிருந்தது. ஒட்டுச் செடி ஒன்றுக்குப் பத்து, பதினைந்து என்று கொடுத்து, மாரிமுத்துவின் குடிசைக்குச் சமீபத்தில் 'கொஞ்சநஞ்சம்' வெட்ட வெளியாய் இருந்த இடத்தை எல்லாம் அவர் காடாக்கப் பிரயத்தனித்துவிட்டார். அச்செடிகளுக்கு 'ஜஹாங்கீர்', 'நூர்ஜஹான்', 'ஷாஜஹான்' என்று முகலாய வம்சத்தவர்களின் பெயர்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன.

பிள்ளைக்குப் பல ஜோலிகள் உண்டு. தினம் பார்வை இடவேண்டிய இடங்களும் அநேகம் உண்டு. இவைகளோடு, வாரத்துக்கு இரண்டு தடவையாவது வந்து, அச்செடிகளின் வளர்ச்சியைக் கவனிக்காமல் இருக்கமாட்டார். ஏதாவது ஒன்று வாடி வதங்கி இருந்தால் மாரிமுத்துவின் பாடு கஷ்டந்தான். ஆனால், சதா ஒட்டுச் செடிகளோடு அக்கப்போர் செய்துகொண்டிருந்ததால், அவருக்கு மனம் நோவாமல் அவனால் நடந்துகொள்ள முடிந்தது.

இரண்டு மூன்று மாதங்களுக்குள், செடிகள் புதுத்தளிர் விட்டு, செழிக்கத் தொடங்கின. மாரிமுத்துவுக்கும் ஒருவிதமாக நிம்மதி ஏற்பட்டது. ஆனால் இவ்வுலகில் களங்கமற்ற சாந்தி யாருக்குத்தான் உண்டு? ஊரில் காளியம்மன் திருநாளுக்காகக் காப்புக் கட்டியாகிவிட்டது. அவ்வூர்த் திருநாள் அவ்வட்டாரத்துக்கெல்லாம் மேன்மையானது. தன் தங்கை, புருஷனுடன் வந்தாலும் வரலாம். குழந்தை குப்பனோ திருநாள் செலவுக்காக அப்பொழுதே முறையிட ஆரம்பித்துவிட்டான். கையிலோ கால்துட்டு இல்லை.

இரவு சாப்பாடு முடிந்துவிட்டது. மாரிமுத்து குடிசைக்கு முன் குந்திக்கொண்டு பாக்கைக் கடித்தவாறு உலர்ந்த வெற்றிலையின் மீது காய்ந்துபோன சுண்ணாம்பைப் பொடி செய்து தூவிக்கொண்டிருந்தான். அவன் முன் அவனுடைய மனைவி வீராயி உட்கார்ந்திருந்தாள். குப்பன், திருநாள் செலவுக்காக அவனை ஓயாமல் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தான்.

“பண்ணைக்காரர் பேரப்பிள்ளை எம்பிட்டுத் துட்டு வச்சிருக்கான் தெரியுமா? நான் உன்னைக் கால் ரூவாய்தானே கேக்கறேன்?” என்று குப்பன் அழாத குறையாய்ச் சொன்னான்.

இதைக் காதில் போட்டுக்கொள்ளாதவன் போல், "அது எப்போ வந்திச்சு?" என்று வீராயி கேட்டாள்.

"அதவும் அவுங்க அம்மாவும் வந்து நாலு நாளாச்சே. இன்னும் கூட யாரோ ஒரு இளவனொரு வந்திருக்காரு—பண்ணைக்காரர் திருநாளுக்கு மகளை அழைக்காமெ இருப்பாரா?" என்றான் மாரிமுத்து.

"அவரு பேரப்பிள்ளை ரொம்ப நல்லவன், அப்பா. நேத்து எனக்கு ஒரு மாம்பளம் அப்படியே முளுசா கொடுத்திட்டான். தேங்காய் மிட்டாயி வாங்கி, அதுலேயும் பாதி கொடுத்தான். துட்டுக்கூடத் தாரேன் இங்குறான் - வாங்கிக்கிட்டுமோ?"

"ஐயோ, வாணுமுடா, அப்பா. பண்ணைக்காரர் காதுலே விளுந்தால் கோவிச்சுப்பாரு" என்று மாரிமுத்து கண்டித்தான்.

"அப்போ நீ கொடு."

"அட, நான்தான் தாரேன் இங்கிறேனே. இன்னும் நாலுநாள் இருக்குது. அதுக்குள்ளே துட்டைக் கொடுத்தால் எங்கேயாச்சும் கீழே போட்டுடுவே."

"நெசம்மாலும் கொடுக்கணும். ஏச்சிடக் கூடாது" என்று குப்பன் சற்று அவநம்பிக்கையோடு சொன்னான்.

வீராயி சிரித்தாள். "அப்பா எப்போ ஏச்சும் வச்சிருக்குதா? நீ பயப்படாதே. நான் வாங்கித் தாரேன். நேரமாச்சு, ராசா. படுத்துத் தூங்கு" என்று அவள் நல்ல வார்த்தை சொன்னாள். குப்பனும் சமாதானப்பட்டுப் படுத்து உறங்கினான்.

ஆனால் புருஷனுக்கும் மனைவிக்கும் வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை. பசித்தவன் பழைய கணக்குப் பார்ப்பது போல நடந்து போன விஷயங்களை எல்லாம் குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இந்தக் காலத்துலே நாயமின்னு ஒண்ணு இருக்குதா? சாமி, பூதமின்னு அளுறவங்க வாயிலேதான், சாமியும் நல்லா மண்ணைப் போடுது. குளந்தவேலுவைப் பாரு. பண்ணையிலே இருந்த மட்டும் நல்லாத் தின்னான். ஒரு காணி அறுப்புண்ணு, எப்படியோ ஒரு கலம் நெல்லு அவன் ஊட்டுக்குப் போயிடும். தேங்காய் பறிக்கறுங்கண்ணு, குறைஞ்சது அம்பது காயாவது இறக்கை கட்டிக்கிட்டுப் பறந்திடும். பாளை வெட்டினாலும் அப்படித்தான். கரும்பு ஆலை அடிச்சால் கேக்கவே வேண்டியதில்லை."

"அவனுக்குத் தகுந்தாப்போலே ஒரு அக்காக்காரி ஆம்புட்டாள்" என்றாள் வீராயி.

"அடெ, அக்கா இல்லாட்டி, வேறே யாராவது பிடிச்சிருப்பான். எப்படியோ நூறு இரணூறு சேத்துக்கிட்டு, பண்ணையை விட்டான். ஒரு ஏர் மாட்டை வாங்கிக்கிட்டு, முதல்லே நாமக்கார ஐயிரு நிலத்தைக் குத்தகைக்கு உளுதான். இப்போ, கவுண்டாயி குட்டுலே வாளை போடப் போறானும். இதுக்கு என்னங்கறே?"

"கொடுக்கிற தெய்வம் கூரையெப் பிடுங்கிக்கிட்டு கொடுக்கும்" என்றாள் வீராயி.

"ஆமாம், காத்துலே கிச்சிலிமரம் விளுந்து, கூரை பொத்துக்கிச்சே, அப்போ என்ன கிடைச்சுது?" என்னும் போதே இருவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"உனக்கு வர வர, புத்தி மாறுட்டம் எடுத்திட்டுது" என்றாள் வீராயி.

"எல்லாம் உம் பேச்சைக் கேட்டுதான். இல்லாட்டி, நானும் எல்லாரைப்போல இருக்கமாட்டேன்?"

"உனக்கு இப்போ என்ன குறவு?"

"இன்னும் என்ன வேணும்? நான் பொளைச்ச பொளப்புக்கு குளந்தைக்கு திருநாளுக்குக் கொடுக்கக் காத்துட்டுகூட இல்லே."

"இதுதானா?"

"இதைப் பேரலதான் ஒவ்வொண்ணும். இதோ பாரு, இனுமே உம் பேச்சை நான் கேக்கவே மாட்டேன்."

"சரி, கேக்கவேணும். இருட்டோடே கந்தன் பாளையம் போய் பண்ணைக்காரர் ஊட்டுக்கு எரும்மாட்டைப் பிடிச்சாரணும் சொன்னியே. ஒரு தூக்கம் போட்டா தானே, உடம்பு தெம்பாயிருக்கும். இந்தப் பேச்சைக் கூடவா கேக்கக்கூடாது?" என்று நகைத்துக்கொண்டே வீராயி உள்ளே புகுந்தாள்.

"எல்லாம் உனக்கு விளையாட்டாத்தான் இருக்குது" என்று முணுமுணுத்துக் கொண்டே மாரிமுத்துவும் தன் படுக்கையைச் சரிப்படுத்திக் கொண்டான். ஆனால், குழந்தைக்கு எப்படியாவது திருநாள் செலவைச் சம்பாதித்துக் கொடுத்துவிடவேண்டும் என்ற எண்ணமே அவன் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தது.

இரண்டு தினங்களுக்குப் பிறகு, காலை சுமார் ஒன்பது மணி நேரம் இருக்கும். மாரிமுத்து ஒட்டுச் செடிகளுக்குச் சாணியைக் கரைத்து ஊற்றிக்கொண்டிருந்தான். குப்பனும் ஆடி ஓடி, தகப்பனுக்கு உதவி செய்வது போலத் திரிந்து கொண்டிருந்

உயர்ந்த ரகத்தின்
உண்மையான அடையாளம்



உழைப்பிற்கும்
சாயத்திற்கும்
உறுதியானது
சிறந்த மாதிரிகள்
நிறைந்தது.

எங்கள்
சங்கு
மார்க்க
கயிலி, ஷர்ட்டிங்
கைக்குட்டைகள்

மதராஸ் பளயகாட் கம்பெனி லிமிடெட்
"சங்கு நிலையம்"
31. அரண்மனைக்காரத் தெரு, சென்னை.
2/8. கீழ மாரட் வீதி, மதுரை.

சிலோன் பிராஞ்சுகள்:- கொழும்பு, கண்டி.

பாசம்

சிறந்த இனிய சிறு கதைத் தொகுதி

'சங்கரராம்'

எழுதியது

விலை ரூ. 2-8-0

15-2-'44க்கு முன் ஆர்டர் செய்பவர்களுக்குத் தபாற் கூலி இனாம்

ஏஜெண்டுகள் தேவை

ஏ. என். பூர்ணா அண்டு கம்பெனி,

6, முதல் தெரு, அபிராமபுரம், தேனாம்பேட்டை போஸ்ட், சென்னை.

அறிவிப்பு

ஹிந்துக்களுக்கேற்ற வாயில் பிரிண்ட் சேலைகள், சித்தாடைகள், மேலாக்குகள், முஸ்லீம்களுக்கேற்ற வாயில் பிரிண்ட் சேலைகள், தாவணிகள், சித்துகள், கைலிகள், சூரத் சாட்டின் சேலைகள், தாவணிகள், சித்தாடைகள், கைலிகள், குப்பாய சிட்டிகள், இன்னும் பலமாதிரி பிரிண்ட் தினுசுகள் தயாரித்துச் சில்லறையிலும், வியாபாரிகளுக்கும் சப்ளை செய்து வருகிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

S. V. ராமலிங்கய்யர், நன்னுசாமய்யர்,

பந்தடி 3-வது தெரு, மதுரை.

"உலக முழுதும் சுற்றுவதற்கு எண்ணி நடந்தான்; ஓய்ந்துவிட்டான்."—ஓவியர்: சாஜம்.

தான். அப்பொழுது, பிள்ளையவர்கள் விருந்தாளியாய் வந்திருந்த கிழவனாருடனும் பேரனுடனும் அங்கே வந்து சேர்ந்தார். பண்ணைக்காரர் பேரனைக் கண்டதும், குப்பன் களைக்கொட்டைக் கீழே போட்டுவிட்டு, அவனிடம் ஓடினான். பிரகு சிறுவர்கள் இருவரும் 'கட்டுக்' கொய்யாமரங்கள் இடத்துக்குச் சென்று, பழங்களைப் பறித்துக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளை ஒவ்வொரு ஜாதியின் குணாதிசயங்களைப் பற்றியும் சொல்லத் தொடங்கினார். வந்த கிழவனார் முன்பின் அத்தோட்டத்தைப் பார்த்ததே இல்லை. அவர் வித விதமான பழவிருக்ஷங்களைப் பார்த்து வியந்தார்.

"தோட்டம் இதோடே முடியில்லையிங்க. மேற்கே ரொப்ப தூரம் போகுது. அதோ தெரியுது பாருங்கோ, ஒரு இளம் மாந்தோப்பு, அதுவரையிலும் இருக்குது. சுத்திப் பாக்கறதுக்கு மணி நேரத்துக்கு மேலே ஆவும். நடக்கறது உங்களுக்குக் கஷ்டமாயிருக்கும்னு பார்க்கிறேன். இல்லாட்டி, இழுத்து அடிச்சிடுவேன்" என்றார் பிள்ளை புன்முறுவலுடன்.

"நல்லாச் சொன்னீங்க! எனக்கு என்ன கஷ்டம்? இந்த அருமையான இடத்துலே சுத்தினால் இருந்த களைப்பும் போயிடுமே. இங்கேயே இருந்திடணும்னு அல்ல எனக்குத் தோணுது?" என்றார் கிழவனார்.

"அப்படியானால், வாங்க. ஒரு 'ரௌண்டு' அடிச்சிடலாம். - ஏ, மாரிமுத்து, அதைப் போட்டிட்டு, அரிவாளை எடுத்துக்கிட்டு வாடா. ஐயாவுக்கு ரெண்டு செவ்விளநீர் பிடுங்கிப் போடுவே. அப்படியே ஒரு கோணியையும் எடுத்துக்கோடா. வீட்டுலே நெத்துக் காயா வேணும்னு அடிச்சிக்கிருங்க. இருந்தால் எடுத்துக்கிட்டுப் போவலாம்" என்று அவர் வாயை மூடுவதற்குள் அவருடைய பேரன், "எனக்கும் எளநீர் வேணும், தாத்தா" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தான்.

"அட, உனக்கு இல்லாதெயா? எல்லாருக்குந்தான்."

"குப்பனுக்கும் கொடுக்கணும்" என்றான் பையன்.

"சரி, கொடுக்கறேன். அடே, மாரிமுத்து, உன் மகன் கெட்டிக்காரப் பயல்டா. இவனை நல்லா சிநேகிதம் பண்ணிக்கிட்டான். இவனுக்கு வீட்டுலே எந்நோமும் குப்பன் பேச்சுதான்."

மாரிமுத்துக்குக் களிப்புத் தாங்கமாட்டாமல் அவன் பற்களெல்லாம் வெளிப்பட்டன.

"குளந்தைங்கள் அப்படித்தான் இருக்கும்" என்றார் கிழவனார்.

பிள்ளையும் கிழவனாரும் தோட்டத்தை மெள்ளப் பார்வையிட்டுக்கொண்டே சென்றனர். அவர்கள் பின் மாரிமுத்து மெதுவாய் நடந்துவந்தான். சிறுவர்கள் இருவரும் எல்லோருக்கும் முந்தி அலைந்துகொண்டிருந்தார்கள். செவ்விள நீர்த் தோட்டத்துக்கு வந்ததும், மாரிமுத்து நல்ல காய்களாகப் பொறுக்கிப் பறித்து, சீவி, அனைவருக்கும் கொடுத்தான். இனிப் பார்க்கவேண்டியது, சேலம் ஒட்டுமா மரங்களின் தோப்பு ஒன்றுதான் பாக்கி.

அங்கே சென்றதும், கிழவனார் திகைத்துப் போனார். அவ்விள மரங்களில், காய்கள், இலை தெரியாமல் கொத்துக் கொத்தாய்க் குலுங்கின. பூஸாரத்தின் மகிமை என்று கிழவர் நினைத்தார். முதல்தரமான எருவுக்காகப் பிள்ளை எவ்வளவு செலவழித்தார் என்பது அவருக்குத் தெரியாது. காய்கள் முற்றியிருந்தன. பறிக்கவேண்டிய சமயந்தான். செங்காய்களும் சில இருந்ததனால், அணிற்பிள்ளைகளுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. குப்பன், அணில் கடித்த காய் ஏதாவது விழுந்து இருக்காதா என்று தேட ஆரம்பித்தான். ஒன்று இரண்டு அவனுக்குக் கிடைக்காமற் போகவில்லை. உதிர்ந்து காய்ந்த இலைகள் கும்பல் கும்பலாய்க் கிடந்தன. அவைகளைத் துழாவிக்கொண்டிருக்கும்பொழுது, அவன் காலுக்கு ஏதோ புதையலைப்போல அகப்பட்டது. பறக்கப் பறக்க இலைகளை வாரித் தள்ளினான். "ஏ அப்பா! எம்பிட்டு மாங்காயோ!" என்று கைகளைத் தட்டிக்கொண்டு கூவினான். பிள்ளையின் பேரன் ஓடி வந்து, "இவ்-வ்-வளவு மாங்கா, தாத்தா!" என்று தன் கைகள் எட்டிய வரையில் விரித்துக் குதித்தான். மாரிமுத்தவுக்கு உள்ளூற நடுக்கம் எடுத்துக்கொண்டது. "என்னது?" என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்துக்கு ஓடினான். பிள்ளையும் கிழவனாரும் வேகமாய்ப் பின்தொடர்ந்தார்கள்.

"ஐயையோ! ரெண்டு நாளாய் அங்கேயே உரம் போடற சோலியாய் இருந்திட்டேன். யாரோ அறுத்திட்டாங்களே!" என்று மாரிமுத்து பதறினான். அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள்

தெறித்தன. பிள்ளைக்கா கோபம் வாராமல் இருக்கும்?

"மடையா! மடையா!! பொல்லாத ஜோலியைப் பாத்துட்டே. ஒரு நாளைக்கு ஒரு தரமாவது தோட்டத்தைச் சுத்திப் பார்த்தால்ல, வர்றவன் போறவனுக்குக் கொஞ்சம் பயம் இருக்கும்? எத்தினியோ மாட்டுக்காரப் பயங்க. —அதோ தெரியுது பாருங்க, இலுப்பைத் தோப்பு, அதுதான் சந்தை. கால், அரைக் காலுக்கு வித்துக்கறானுங்க. அவனுக்கு என்ன, கொண்டது போச்சா, கொடுத்தது போச்சா? இந்த மூளை கெட்டவனுக்குக் காணி வேறே, தோட்டம் வேறே" என்று அவர் கடுகடுத்தார்.



"மூர்த்தாநாளு ஐயரைக் கூப்பிட்டு ஏதோ பத்திரம் எளுதிக்கிட்டு இருந்தீங்களே— இவனுக்குத்தானா?" என்று கிழவர் கேட்டார்.

"ஆமாங்க, இந்தக் கூறு கெட்டவனுக்குத்தான். இவனுக்கு அண்ணன் இன்னும் ஒருத்தன் இருக்கான், சடையன்னிட்டு. மன்னன்க, ஒருத்தனுக்கு ஒருத்தன் மூளையிலே பின் வாங்க மாட்டானுங்க. இவங்க ரெண்டுபேரும் ரொம்ப நாளாய் நம்ம கிட்ட இருக்கானுங்க. இவங்களுக்கு எதாவது செய்யணுமின்னு எங்க ஊட்டுக்காரியும் சொல்லிக்கிட்டு இருந்தாள். அதுக்கு எத்தாப்போல, எங்க அம்மன் கோயில் நிலத்தாண்டை ஒரு சின்ன வாய்க்கால் விளுந்துது இப்போ. நம்ம நிலத்துக்கு ஒட்டி, வால் வீச்சாட்டம், ஒருநாலு காணி பொறம்போக்கு இருந்தது. இப்போ, அது தர்க்காஸ்து வச்சு, நமக்குச் சேந்துபோச்சு. சப்பாத்தி அடைஞ்ச மேட்டாங் காடுதான். இருந்தாலும், சப்பாத்தியை அளிச்சிட்டு, எத்தம் போட்டு எறைச்சால், காணிக்கு இருபது கலம் நெல்லு விளையுங்க. அதைத்தான் இவனுக்கும் அவனுக்கும் எளுதி வச்சேன்— இந்தப் பொளைக்கமாட்டாத கபோதி என்னா பண்ணப்போறான்? பாடுபட்டு, அறுப்புக்கு வர்றபோது, எவனாவது அறுத்துக்கிட்டுப் போகவேண்டியதுதான்" என்று அவர் வெறுப்புடன் சொன்னார்.

மாரிமுத்துவால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. "இத்தினி நாளா ஒண்ணும் இல்லாமே — இண்ணிக்கீங்க —" மேலே பேச முடியாமல், கைகளால் முகத்தை மூடிக்கொண்டு, அவன் அழ ஆரம்பித்து

விட்டான். குப்பனுக்கும் ஒன்றும் புரியவில்லை. அவனை அறியாமல் அழுகை மட்டும் வந்துவிட்டது.

"ஆனால், அவன் மகன் கெட்டிக்காரப் பயல்" என்றார் கிழவனார்.

"இந்த மக்கு இனிமேல் அவனாலே தான் பொளைக்கணும். அட சீ! என்னமோ அழுதுக்கிட்டு நிக்கறான்! கோணியிலே



போட்டு, காயைக் கொண்டுபோய் வீட்டுலே போட்டு, குப்பனுக்காக, பத்துப் பதினஞ்சு காய் எடுத்து வச்சிடு. பாக்கப் போனால், கண்டுபிடிச்சவன் அவனுக்குத்தான் எல்லாத்தையும் கொடுக்கணும். என்னாங்க நீங்க?" என்று கிழவனாரைக் கேட்டார். அப்பொழுது பேரன், தாத்தாவின் கையைப் பிடித்து இழுத்து, "அவுங்க ஐயா, ஒண்ணும் வாங்கிக்கக்கூடாதீண்ணு சொல்லி இருக்குதாம். திருநாளுக்கு இம்பிட்டுத் தட்டு எங்கிட்டே சேந்திருக்குது, உனக்குக் கொஞ்சம் தாரேண்டாண்ணு, ஐயா திட்டுவாரு இங்கறான். தாத்தா, நீ வாங்கிக்கோண்ணு சொல்லு" என்று சிபார்சு செய்யச் சொன்னான்.

"நான் சொல்றேன், அப்பா. நானும் அவனுக்குத் திருநாளுக்குத் தட்டுத் தாரேன். சரிதானா? அவுங்க ஐயாவுக்கு அவனைத் திட்டத்தான் தெரியும். வேறே என்ன தெரியும்? — அட! எண்டா இன்னும் பொம்பளையாட்டம் கண்ணைத் தொடச்சிக்கிட்டு நிக்கறே? சட்டுப்புட்டுனு போயேன். நாங்க இப்படியே, குறுக்குப் பாதை வளியாய் வூட்டுக்குப் போறோம்." பிறகு மெதுவாக, "பேச்சுப் பொறுக்க மாட்டானுங்க. காசு ஆசையும் கிடையாது" என்று கிழவனாரிடம் சொன்னார்.

"எனக்குப் புத்தி வரச் சாமியே இப்படி செஞ்சுது. கொளந்தை திருநாள், திருநாளிண்ணு அழுவுதேண்ணு, திருடினேன். அதன் கையாலேயே என் திருட்டைப் பிடிச்சுக் கொடுத்திட்டுது!" என்று அழுதவாறே, தன் மனைவியிடம் கூறி மாரிமுத்து விம்மினான்.

"நான் வாணா மிண்ணேனே. என் பேச்சைக் கேட்டையா? போனது போச்சு, போ" என்று அவள் ஆதரித்தாள்.

"இதோ, சாமி மேலே ஆணை வச்சுச் சொல்லுறேன். இனிமே உன் பேச்சைத் தட்டவே மாட்டேன்" என்று அவன் வாக்குத்தத்தம் செய்தான்.

செய்யாத யாத்திரைகள்

'குமுதினி'

எனக்கு அப்பொழுது சுமார் பத்து வயசு இருக்கும். என்ன காரணத்தினாலோ என்னைச் சீமையில் ஒரு பெண் பாடசாலையில் படிக்க அனுப்ப வேண்டும் என்று என் தகப்பனாருக்குத் தோன்றிற்று. அந்தப் பாடசாலை இங்கிலாந்தில் "ஸஸெக்ஸ்" என்ற ஜில்லாவில் ஒரு சமுத்திரக்கரைக் கிராமத்தில் இருந்தது. முன் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் தபால் மூலமாக என் தகப்பனார் செய்திருந்தார். இங்கிலாந்து போகும் ஒரு குடும்பத்துடன் என்னைச் சேர்த்து அனுப்பினார். போகும் வழியில் அவர்கள் பாரிஸ் நகரத்தில் சில நாட்கள் தங்கியிருக்க விரும்பினபடியால் என்னை இங்கிலாந்து போகும் ரெயிலில் ஏற்றிவிட்டு, "நீயாகப் போவாய் அல்லவா?" என்று கேட்டார்கள். என்ன செய்வது? கோழையாக இருந்தாலும் அதை வெளியில் காண்பிக்கக்கூடாது அல்லவா? "உம்" என்று தலையை ஆட்டினேன்.

மாலை சுமார் எட்டு மணிக்கு நான் ஏறியிருந்த ரெயில் வண்டி அந்தக் கிராமத்தை அடைந்தது. வழியில் ரொட்டி தவிர நான் எதுவும் சாப்பிடவில்லை. அவர்கள் கொடுக்கும் ஆகாரங்களில் எங்கே மாமிசம் கலந்திருப்பார்களோ என்ற பயத்தினால் நான் அவர்களுடைய ஆகாரம் எதையும் தொடவே இல்லை. எனக்கோ பசி; இடம் புதிது, மனிதர்கள் புதிது, பாஷை புதிது. அவர்களுடைய உச்சரிப்பே அடியோடு வேறு விதமாக இருந்தபடியால் பேசுவதில் பாதிதான் புரிந்தது. ஆகையால் ரெயிலை விட்டு இறங்குப்போது என்னவோ ஏக்கமாக இருந்தது. அழக்கூடாதென்று பல்லைக் கடித்துக் கொண்டு, ஒரு போர்ட்டரிடம் அந்தப் பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறதென்று விசாரித்தேன். எட்டு மணி ஆகியும் அந்த நாட்டில் இன்னும் இருட்டவில்லை. பள்ளிக்கூடம் அருகிலேயே இருப்பதாகப் போர்ட்டர் சொன்னான். அவனே என்னுடைய பெட்டியை எடுத்துக்கொண்டு முன்னால் போகச் செய்து நான் பின் சென்றேன்.

நுழைந்ததும் ஒரு பெரிய ஹால். அதுதான் உபாத்தியாயினிகள் உட்கார்ந்துகொள்ளும் பொது அறை என்று பிற்பாடு அறிந்தேன். அந்த அறையின் ஒரு மூலையில் ஒரு கணப்பு எரிந்துகொண்டிருந்ததால் அறை சூடாக இருந்தது. மாலையில் குளிர் அதிகம் இல்லாவிட்டாலும் நடந்து வந்ததால் எனக்குக் கைவிரல்கள் விறைத்துப்போயிருந்தன. ஆகையால் சூடாக இருந்த அந்த ஹால் அதிகத் திருப்தியையளித்தது. வாசலில் இருந்த காவற்காரன் அந்த ஹாலில் என்னை விட்டுவிட்டு, "நான் போய் மேட்ரனிடம் சொல்கிறேன்" என்று சென்றான். போர்ட்டர் எனது பெட்டியைக் கீழே வைத்தான். அவனுக்கு எவ்வளவு கொடுப்பதென்று எனக்குச் சந்தேகம். இங்கிலாந்தில் இருப்பவர்களின் யோக்கியதையைப்பற்றி என்னுடைய தகப்பனார் நிறையச் சொல்லியிருக்கிறாராகையால் நான் அவனையே, "நான் உனக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்?" என்று கேட்டேன். நான் எதிர்பார்த்ததை விட அவன் குறைவாகவே கேட்டான். அவன் கேட்டதைக் கொடுத்தேன். அவன் சென்றான்.

மேட்ரன் பார்வைக்கு வெகு விகாரமாக இருந்தாள். ஆனால் அவளுடைய கண்களில் அன்பும் சாந்தமும் விளங்கின. புதிதாக வந்தவளான நான் குளிரினாலும் பசியினாலும் களைத்திருக்கிறேனென்று அறிந்துகொண்டு நான் உடனேயே சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போகும்படி ஏற்பாடுகள் செய்தாள். எனக்கென்று காட்டப்பட்ட அறையில் வேறு ஐந்து படுக்


குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
நான் களைப்படையாமல் இருக்கிறேன்!
வினோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.
உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!
"VINOLIA" WHITE ROSE SOAP
வினோலியா
ஒயிட் ரோஸ் ஸோப்பு
VWR. 16-50 TM
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND



எந்த மணி பிரகாரமும்...

ஸாரிடோன்

எல்லா வித வலிகளையும் பத்தே
நிமிஷத்தில் நிறுத்தக்கூடியது

தந்தி: "SPINNING" டெலிபோன்: 43.

இராஜா மில்ஸ்

மதுரை

நமது மில்லில் உயர்தரப் பஞ்சால், கைதேர்ந்த பஞ்சாலை நிபுணர்களைக் கொண்டு, கைத்தறி, மெஷின் தறிகளுக்கேற்ப, 20 நெ. முதல் 60 நெ. வரை, சிறந்த ஒற்றை, இரட்டை, பாவு நூல்கள் தயாராகின்றன.

தேவைகளுக்கும், விலை விபரங்களுக்கும் எழுதவும்.

புரொப்ரைட்டர்:

மா. வெ. ப. கனகவேல்.

கைகள் இருந்தன. ஆனால் அவை களில் படுக்கும் பெண்கள் வருவதற்கு முன்பே நான் அயர்ந்து தூங்கி விட்டேன்.

இங்கிலாந்தில் அந்தப் பள்ளிக் கூடத்தில் நான் சுமார் ஒரு வருஷ காலம் படித்தேன். அந்த ஒரு வருஷத் திற்குள் எனக்கு எத்தனையோ சம் பவங்கள் நடந்தன. அவைகள் சில சமயம் ஒரு விதமாக இருக்கும், சில சமயம் மற்றொரு விதமாக இருக்கும். சில நாட்கள் அந்தப் பள்ளிக்கூடத் திலேயே எல்லாருக்கும் மிகப் பிடித்த பெண்ணாக நான் இருப்பேன் சில சமயம் இங்கிலாந்தே பிடிக்காத, பள்ளிக்கூடமே பிடிக்காத, படிப்பே பிடிக்காத, ஏக்கமுற்ற பெண்ணாய் நான் அந்தக் கூட்டத்தின் நடுவில் ஒரு தனி ஆத்மாவாகக் காலம் கழிப் பேன். சில சமயம் என்னுடைய தகப் பனார் எனக்குக் கணக்கில்லாமல் பணம் அனுப்புவார். நான் ஒரு ராஜ குமாரி போலவும் காலம் கழிப்பேன். இந்தியாவிலிருந்து வரும் என்னுடைய அழகான ஆடைகளைப் பார்த்து அந்தப் பாடசாலைப் பெண்கள் பொறு மைபபடுவார்கள். சில சமயம் என் தகப்பனார் கேவலம் பள்ளிக்கூடத் திற்கும் போஜன சாலைக்கும் மாத் திரமே பணம் அனுப்புவார். கைச் செலவிற்கு நான் ஒரு பைசாக்கூட இல்லாமல் கஷ்டப்படுவேன். இருந் தும் சமாளித்துக்கொள்வேன். என் மூளையை உபயோகித்துப் புதுப் புது வழியில் என்னுடைய செலவிற்கும், எனக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொள்வதற்கும் பணம் சம்பாதித்துக் கொள்வேன். இவ்விதம் தந்திரமாகப் பணம் சம்பாதித்தே எனக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொண்டேன். அதன் விவரமே ஒரு கதை; ஏன்? பல கதையாகும். (விவரம் நாளுக்கு நாள் மாறும் அல்லவா?)

ஒரு வருஷத்திற்குப் பின் எனக்கு இங்கிலாந்தும் அதன் பள்ளிக்கூடங் களும் அலுத்துவிட்டன. நான் சிறு வர் கதைகளைப் படிப்பதையும் நிறுத்தி விட்டேன்.

"வீண் காலம் கழிக்காதே. பிரஞ்சு கற்றுக்கொள்" என்றார் என்னுடைய தகப்பனார். பிரஞ்சு பாஷை சுமாராகப் புரிய ஆரம்பித்ததும் நான் பிரான் ஸிற்குப் புறப்பட்டுவிட்டேன். ஆனால் இந்த முறை நான் மாத்திரம் தனி யாகப் போகவில்லை. என்னுடன் வேறு இரண்டு தம்பதிகள் இருந்தனர். எங்களுக்குள் சதா பேச்சும், ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்வதுமாக இருந் தோம். முன்பின் அறியாத அந்த நாட்டில் நாங்கள் பட்ட சிரமம் அதிகந்தான். இருந்தாலும் எங் களுக்கு ஏற்பட்ட லாபமும் அதிகமாக இருந்தது. அந்த யாத்திரையில்தான் நான் மனிதர்களுடன் பழகுவதற்குக் கற்றுக்கொண்டேன். அந்த யாத் திரையில் நாங்கள் ஒருவருக்கு ஒரு வர் எவ்வளவோ அந்நியோந்நிய மாக நடந்துகொண்டோம். பசியிலும் களைப்பிலும் பொறுமையுடன் பிறர் குற்றங்களைச் சிரித்த முகத்துடன் சகிக்கக் கற்றோம். யாத்திரையின் ஆரம்பத்தில் சாதாரண நண்பர் களாக இருந்த நாங்கள், யாத்திரை யின்போது ஒவ்வொருவரும் காட்டின பெருந்தன்மை, அடக்கம், மரியாதை, உதாரத்துவம் ஆகியவற்றினால் கட்டுப் பட்டு யாத்திரையின் இறுதியில் மிக அந்நியோந்நிய நண்பர்களாகி விட்டோம்.

பிரான்ஸில் நான் சாதாரணமாய் யாத்திரிகர்கள் பார்க்கும் இடங்களை எல்லாம் பார்த்தேன். மாண்டி கிறிஸ்டோ வசித்த தெருவையும் (Champs Elisee) பார்த்தேன். ஆனால் நல்ல வேளையாக வேறொரு யாத்திரி கரைப்போல் மாண்டிகிறிஸ்டோ வசித்த வீடு எங்கே என்று அந்த ஊர் மனிதர்களைக் கேட்கவில்லை. அந்த யாத்திரிகர் (உண்மையிலேயே பிரான்ஸ் சென்றவர்), "நான் மர் செயில்ஸ்க்குப் போனேன், ஸார். சமுத்திரக்கரையிலிருந்து Chateu D'If என்ற சிறை இருக்கும் தீவைக் காண் பித்தார்கள். ஆனால் Edmund Dante வசித்த தெரு எங்கே இருக்கிறது என்று கேட்டேன். தெரியாது என்று சொல்லிவிட்டார்கள்" என்று குறைப் பட்டார்.

நான் யாத்திரை செய்தது டுமாஸின் பிரான்ஸும், பால்சாக்கின் பிரான் ஸும் மாத்திரமல்ல, லெனார்ட் மெரிக் (Leonard Merrick)கின் பிரான்ஸையும் பார்த்தேன். தற் கால அமெரிக்க நாவலாசிரியர்கள்

வர்ணிக்கும் பிரான்ஸையும் பாரிஸ் நகரையும் பார்த்தேன். மகாராஜாக்களும் கோடீசுவரர்களும் நகைகள் வாங்கும் Rue de Rivoli யில் நானும் சில சாமான்கள் வாங்கினேன். Rue de la ays-இல் இருக்கும் ஷாப்புகள் எனக்குச் சகஜமாயின. இருந்தும் இவைகளெல்லாம் என்ன, அற்ப சுகங்கள்! எனக்கு வெகு சீக்கிரம் அலுத்துவிட்டன. சிறிது காலம் தெற்குப் பிரான்ஸில் சமுத்திரக் கரையோரமாக மோட்டாரில் யாத்திரை செய்துவிட்டு ஊர் திரும்பினோம். மாண்டி கார்லோவின் பந்தயங்களிலோ சூதாட்டங்களிலோ நாங்கள் சேர்ந்து கொள்ளவில்லை. காரணம் எனக்கு இப்பொழுது ஞாபகம் வரவில்லை. ஒருகால் பதினெட்டு வயசிற்கு மேற்பட்டவர்களே அந்தச் சூதாட்ட அறைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்ற விதி இருந்ததால், பதினாறு வயசான நான் உள்ளே போக இயலவில்லையோ என்னவோ! ஞாபகம் இல்லை.

அமெரிக்காவிற்கு நான் தனியாகத்தான் சென்றேன். அமெரிக்கர்களுடன் என்னால் சகஜமாய்ப் பழக முடியவில்லை. அவர்களில் மனிதர் ஆறு அடி உயரம் இருப்பதும் இருநூறு பவுண்டுக்குமேல் எடை இருப்பதும் சர்வசாதாரணமாக இருந்தன. ஐந்தடி உயரமும் நூறு பவுண்டு எடையும் இருக்கும் எனக்கு அவர்களைப் பார்ப்பதற்கே கூச்சமும் ஏக்கமுமாக இருந்தது. அவர்களுடைய நாட்டின் செழிப்பும் வளமையும் எனக்குப் பொறாமையையே உண்டாக்கின. ஆகையால், "சட், இங்கே நமக்கு என்ன வேலை?" என்று சீக்கிரம் திரும்பி வந்துவிட்டேன். தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) இருந்தும் சில 'லெக்சர்கள்' செய்து இந்தியாவின் புகழை அவர்களுக்கு உரைத்து, அவர்களுடைய நாட்டைப் பரிகசித்துவிட்டு, ஒரு மூட்டை பணத்துடனே தான் திரும்பினேன்.

ஆஸ்திரேலியாவிற்கும் ஜப்பானிற்கும் போகவேண்டும் என்று எனக்கு அதிக விருப்பம் இருந்த போதிலும் ஜப்பானுக்கு மாத்திரமே போக முடிந்தது. நான் சென்றது இக்காலத்திய ஜப்பான் அல்ல. இருபத்தைந்து வருஷத்திற்கு முன்பு இருந்த, புஷ்பம் நிறைந்த, இயற்கை வனப்பினால் மனத்தைக் கவரும் ஜப்பான். விருந்தோம்பலும், அன்பும், மரியாதையும் கொண்ட மக்களுடைய ஜப்பான். சற்றுச் சற்று (ஆனால் மிகவும் சிறிய அம்சம்) கில்பர்ட் என்பவரின் மிக்காடோ (Mikado) என்ற நாடகத்திற்கு இடம் கொடுத்த ஜப்பான். அங்கே இரண்டு மாத காலம் சந்தோஷமாகச் சஞ்சரித்தேன்.

நார்வே தேசத்திற்கு, ஆறு மாதம் பகலும் ஆறு மாதம் இரவுமாக இருக்கும் நார்வே தேசத்திற்குப் போக உத்தேசித்துக்கொண்டிருந்தேன். அச்சமயம் மகாத்மா காந்தியடிகளின் சிஷ்யையாகிய மீரா அம்மையைச் சந்திக்க நேர்ந்தது. அவர் தாம் ஹிமாலயப் பிராந்தியத்தில் நிர்மானுஷ்யமான இடத்தில் ஒரு வருஷ காலம் தவம் செய்ததைக் கூறினார்.

"என் நண்பர் ஒருவர் அந்த இடத்தில் எனக்கு ஒரு குடிசை அமைத்துக் கொடுத்தார். வாரத்திற்கு ஒரு முறை ஒருவன் எனக்குச் சாப்பாட்டுச் சாமான் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போவான். நான் அந்தக் காட்டில், வாரக் கணக்கில் எவரையும் சந்திக்காமல் வசித்து வந்தேன்" என்று அந்த அம்மாள் சொன்னார். இப்பொழுது அந்த நிர்மானுஷ்ய ஹிமாலயச் சார்பை நாடிப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் இளம் வயசின் சக்தியும், உற்சாகமும், கனவு காணும் திறமையும் இப்பொழுது எங்கிருந்து கிடைக்கும்? ஹிமாலயப் பிராந்தியம் செல்ல வேண்டுமென்று நினைத்தால் நினைத்தவுடன் அங்கே செல்லும் சக்தி பால்ய வயசில் இருந்தது. அக்கம்பக்கத்தில் இருப்பவையெல்லாம் மறந்து தனி உலகில், கற்பனை உலகில் பிரயாணம் செய்யும் சக்தியை வாழ்க்கை என்னும் சத்துரு அபகரித்துவிட்டது. இப்பொழுது இருப்பது கேவலம் ஆசையே. ஹிமாலயத்தை நினைத்தால், 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்ஸில் கூட்டம் அதிகமாயிற்றே, இடம் கிடைக்குமா?' என்ற எண்ணம் தோன்றுகிறது.

மௌலானாவின் பிரார்த்தனை

— புரசு பாலகிருஷ்ணன் —

இன்று பக்ரீத் பண்டிகை. அருணோதயம் ஆகிவிட்டது. கிழவர் காயிஸின் அஸான் (தொழுகை அழைப்பு) மணியோசைபோலக் கேட்டது. வயசு எழுபதுக்கு மேல் ஆகிவிட்ட போதிலும், அவர் குரலில் சிறிதும் நடுக்கம் இல்லை. பழைய நாட்களில், மசூதியில் மோஸ்ஸன் (ஆசாரி) ஆக இருந்து, எங்களைத் தொழுவிற்கு அழைத்தபொழுது எவ்வளவு கம்பீரமாய் அவர் குரல் ஒலித்ததோ, அநேகமாய் அதுபோலவே இன்றும் ஒலித்தது. அவருடைய ஆன்ம சுத்தி அவர் உடம்பைத் திடமாய் வைத்திருந்ததுடன், அதில் அவருடைய கனிவையும் எடுத்துக் காட்டியது.

அவர் பலவிதங்களில் விசித்திரமான குணம் படைத்தவர். 'கடவுள் நரபலிக்குப் பதிலாக ஆட்டுப்பலியை ஏற்றுக்கொண்டார்' என்று நாம் ஆட்டைக் குர்பானி (பலி) இட்டுக் கொண்டாடும் பக்ரீத் பண்டிகையன்றும் அவர் மாமிசத்தைத் தொடமாட்டார். அவர் வீட்டில் அவர் மனைவி உட்பட அனைவரும் மாமிசம் சாப்பிட்டு வந்தார்கள். அவர்களை அவர்களுடைய வழிக்கு அவர் விட்டுவிட்டார். தாம் சென்றது தனி மார்க்கமாய் இருந்தபோதிலும், அவர் அதை ஒரு தனித் திருப்தியுடன், வெகு உறுதியாகத் தொடர்ந்தார்.

நானும் என் மனைவியும் அவருடன் சில நாட்கள் கழிப்பதற்காக அவர் வீட்டில் தங்கியிருந்தோம். பண்டிகையை அவர் வீட்டிலேயே கொண்டாடினோம். அவருடைய அழைப்பைக் கேட்டவுடன், வீட்டிலுள்ளோர் - அவர் மனைவி, மகன், மகள், மாப்பிள்ளை, பேரக் குழந்தைகள், நான், என் மனைவி - அனைவரும் ஒன்று கூடினோம்.

நமாஸ் முடிந்த பிறகு நான் அவரைக் கேட்டேன்: "தாத்தா, நீங்கள் முன்பு மசூதியில் போஸ்ஸனாய் இருந்து, எங்கள் எல்லாரையும் தொழுகைக்கு அழைத்தீர்களே. இப்போது நீங்களே பண்டிகையன்றுகூட மசூதிக்குப் போகாமல், வீட்டிலேயே இருக்கிறீர்களே!"

காயிஸ் பதிலளிக்காமல், என்னைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தார்.

"அது அந்தக் காலத்தில், அப்பா!" என்று எதையோ நினைத்துப் பார்ப்பவர்போல் தலையை அசைத்தார்.

"அந்தக் காலம் எப்படிப்பட்டது?' என்று அவர் மகன் ஒரு கேள்வியைப் போட்டான்.

"காலத்தில் ஒரு வித்தியாசமும் இல்லை. மனத்தில்தான்" என்றார் காயிஸ்.

"ஆமாம். உடம்பும் தளர்ந்துவிட்டதோ இல்லையோ! பாவம், கிழவர்! அந்தக் காலத்தில் அப்படி இருந்தார். இந்த வயசில் இப்போது முடிகிறபடி தானே செய்யலாம்?" என்று கிலுகிலுப்பையின் ஒலிபோன்ற சிரிப்புடன், சமீபத்தில்தான் கல்யாணமாகி இருந்த அவருடைய பேத்தி கூறினாள்.

கிழவர் மெதுவாய்ச் சிரித்தார். பிறகு, "சிறிசுகள் நீங்கள் எல்லாம் மசூதிக்குப் போகத்தான் வேணும். மனத்தில் அன்பு சுரந்துவிட்டால், பிறகு போகவேண்டாம். ஜகத்தையே அன்புடன் பார்க்கும் மனோவிலாசம் ஏற்பட்டுவிட்டால், அந்த அன்பே கடவுள் ஏற்றுக்கொள்ளும் உத்தமமான பிரார்த்தனையாகும்" என்றார்.

"உங்களுக்கு அத்தகைய அன்பு சுரந்துவிட்டதா?" என்று சற்று விநயமின்றிக் கேட்டான் அவர் மகன்.

கிழவர் தம் நிதானத்தை இழக்கவில்லை. "நான் சொல்வதற்கு ஒன்

றும் இல்லை, அப்பா. எனக்கு அன்பு பிறந்தால், அந்த அன்பும் என்னுடையதாகாது. அது அல்லாவுடையதுதான் ஆகும். ஏனெனில், அன்பு உட்பட அனைத்தையும் தருபவர் அவர்தாமே! அந்த அன்பின் தியானத்தில் என் மனத்தைப் பழக்கிக் கொண்டே இருக்கிறேன்" என்றார்.

நாங்கள் எல்லோரும் ஓர் அற்புதத்தைக் கண்டவர்கள் போல் பிரமித்து வாயடைத்துப் போய்விட்டோம். ஓரிரண்டு நிமிஷங்கள் கழித்து, கிழவர் என்னை நோக்கித் திரும்பினார். "ஸஜ்ஜார், நீ என் மன மாறுதலுக்குக் காரணம் விசாரித்தாய். அதைச் சொல்லுகிறேன். அனைத்தையும் தழுவும் ஓர் அன்பைப்பகவான் என் மனத்தில் சுரக்க ஒரு முறை அருளினார். அது நான் என் நாற்பதாம் வயசில், நஜத் பாலைவனத்தைக் கடந்து சென்ற போது ஏற்பட்டது' என்றார்.

நாங்கள், 'சுவாரசியமான கதை வரப் போகிறது' என்று மிகுந்த கவனத்துடன் கேட்க ஆரம்பித்தோம். கிழவர் மேலும் மொழிந்தார் :

"ஆறு நாட்கள் ஓயாமல் நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். போகப் போக, முடிவில்லாமல் எங்கள் முன் மணற்காடு விரிந்துகொண்டிருந்தது. நினைக்கவே கூசுகிறது! பூமி மணலாய்த் தோன்றவில்லை. ஒரே தழற் பரப்பாய் இருந்தது. ஆகாசம் ஓர் அனற் பிழம்பாய்த் தகித்தது. எதிரே கண் கூசும் ஒரு பிரகாசக் குழம்பு! வானும் வெண் மணலும் சூரிய ஜோதியை எங்கும் நிறையுப்படிச் செய்தன. அப்பப்ப! காற்று அடிக்காமல் இருந்தாற் போதுப்போல் தோன்றிற்று. எதிரே பசுநிலம் ஏதாவது ஒன்று தென்படுமா என்று நாங்கள் எவ்வளவு ஆவலாய்க் கண்போக, உற்று ஊடுருவி நோக்கினோம்! வறண்ட நாக்கில் ஒரு சொட்டு ஜலம் எப்படி அமிருதமாய் இருந்திருக்கும்!

"என்னைக் கூப்பிட்டார் எங்கள் தலைவர். 'உம்மிடந்தான் எங்கள் எல்லாருக்கும் நன்மதிப்பு இருக்கிறது. நீர் நமக்காகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யும். அந்த நியமத்திற்கு நீர்தாம் தகுந்தவர்' என்றார்.

"நான் குரானை ஓதினேன். பிறகு, எங்கள் இச்சையையே ஒரு பிரார்த்தனையாய்க் கூவினேன். அனைவரும் என்னுடன், 'அல்லாவே, நாங்கள் தாகத்தால் வாடுகிறோம். பசுநிலத்திற்கு நீதான் எங்களுக்கு வழி காட்டவேண்டும். உன் கருணை இல்லையேல், நாங்கள் இறப்பது நிச்சயம். எங்களைக் காப்பாற்றுவாயோ?' என்று முறையிட்டனர். நாள் முழுவதும், எங்கள் முறையீட்டிற்குப் பலன் எதிர்பார்த்தவாறு, பிரயாணம் செய்தோம். ஆனால் எங்கள் பிரார்த்தனைக்கு அல்லா செவி சாய்க்கவில்லை.

"மறுநாள் நான் மறுபடியும் தொழுதேன் : 'அன்பு மிகுந்த அல்லாவே! நாங்கள் தாகத்தால் தவிப்பதை நீ அறியாயோ? உன்னை நம்பியே நாங்கள் இப் பாலைவனத்தில் புகுந்தோம். உன்னையன்றி எங்களுக்குக் கதி வேறில்லை. இன்று பிறந்த குழந்தையின் உயிர் அதன் தாய் வசமே அன்றோ இருக்கிறது?'

"இரண்டாம் நாளும் மெல்ல மெல்லத் தேய்ந்தது. ஒரு பச்சைப் பொட்டு கூடத் தென்படவில்லை.

"மூன்றாம் தினம் நாங்கள் அனைவரும் ஒரு முகமாய்ப் பிரார்த்தனை செய்தோம் : 'நாங்கள் கூவிக் கூவி இளைக்கிறோம், பிரபுவே! உன் அடியார்கள் வாடுவது நன்றோ? நீ எங்களைக் காப்பாற்றாவிடில், நாங்கள் இச் சுடு மணலிலேயே இறப்போம். எங்களை ஆட்கொள்வது உன் கடமை!'

"ஏமாற்றத்தை மீறும் ஆசையுடன் நாங்கள் மேலே சென்றோம். கண்ணுக்கு எட்டியவரை மணற் காடுதான், அலையில்லாக் கடல் போல், எங்கள் எதிரே நீண்டது.

"நான்காம் நாள் விடிந்தது. நாங்கள் அநேகமாய் நம்பிக்கை இழந்துவிட்டோம். ஆனால் உயிரின் ஆசை விடவில்லை. தொண்டையில் பிரார்த்தனையை உச்சரிப்பதற்கு ஈரம் உள்ளவரையில் அல்லாவிடம் விண்ணப்பம் செய்துகொள்வோம் என்று நாங்கள் ஒரு முகமாய் அன்றும் முறையிட்டோம் : 'முகம்மதை எங்களுக்கு அளித்த அல்லாவே! நாங்கள் முகம்மது நாமத்தை வாழ்த்துகிறோம்! எங்கள் பிழைகளைப் பொறுத்தருளி, எங்களை இந்தப் பாலைவனத்தின் தவிப்பிலிருந்து காப்பாற்றுவாய்!'

"அன்று முழுவதும் அல்லாவின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு சென்றோம். உடல் தாளாத எல்லையை அடைந்துவிட்டோம். ஆனால் வெயிலின் எல்லையை அடையவில்லை.

"ஐந்தாம் நாளும் விடிந்தது. வெயில் ஏற ஏற, எஞ்சியிருந்த சிறு நம்பிக்கையும் வறண்டுவிட்டது. அழிவு எங்களை உற்று நோக்கியது. விதியின் நிழல் ஒளிவானுக்கும் வெண் மணலுக்கும் இடையே எங்கள்மீது விழுந்தது.

"'அல்லா, நீ எங்களது பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் இப்பாலையில் இறக்கவேண்டும் என்று விதித்திருக்கிறாயோ? இந்தக் கோர மரணத்திற்கே நாங்கள் உகந்தவர்கள் போலும்! கடையவர்கள் நாங்கள் என்ன செய்வோம்? உனது திருவுள்ளத்திற்கே எங்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்!' என்றோம். அதற்குமேல் எங்கள் உயிருக்காகப் பிரார்த்தனை செய்யவில்லை. ஒரு சிறு கூட்டத்தார் தழல்விட்டுத் தகிக்கும் பாலைவழியே, நா வறண்டு, மெய் சோர்ந்து, பல நாட்களாய் ஜலம் இல்லாமல், மரணத்தறுவாயில் இருப்பதை சர்வக்ஞனான அல்லா அறியானோ? நாங்கள் ஏன் முறையிட வேண்டும்? ஆகவே நாங்கள் மௌனமாய், பசு நிலத்தை அடைவோம் என்று எதிர்பார்க்காமலேயே, மெள்ள மெள்ள ஊர்ந்தோம்.

"எங்களை விழுங்கவந்த விதியின் நிழல் எங்கள் எதிரே அசைந்தது. எங்களுக்காகக் காத்திருக்கும் முடிவை அது சுட்டிக் காண்பிப்பதுபோல், மணற்பரப்பிலே ஆங்காங்கு எலும்புகள் தென்படலாயின. நாங்கள் மேலே நகர நகர, எலும்புத் தொகை அதிகரித்தது. சிறிது தூரம் சென்றதும், வெப்பத்தில் பொசுக்கப்பட்ட எலும்புக் குவியல்கள் பாலைவனத்தின் வெண்மைப் பிரகாசத்தில் சுண்ணாம்பு பூசப்பட்டவைபோல் பளபளத்தன. பேய்க்குப் பயந்துகொண்டு இருட்டில் செல்பவனுக்கு, அதன் கேலிக் கூக்குரல் அதன் ஆண்மையை உணர்த்தித் திகில் உண்டாக்குவதுபோல் இருந்தது அந்தக் காட்சி. எங்களைப் போல் அந்த வறட்சிப் பாதையில் அகப்பட்டு, இறந்தவர்களின் எலும்புகளா அவை? எங்களை விழுங்கிவிடுவதற்கு நிச்சயம் செய்திருந்த ஒரு பிரம்மாண்டமான பேய்போல், மணற்பரப்பு அனல் மூச்செறிந்தது.

"எலும்புகளைக் கவனித்துப் பார்த்தேன். அவை மனித உடலுக்கு மிகப் பெரியனவாக இருந்தன. ஆம், அவை மனித எலும்புகள் அல்ல, ஒட்டக எலும்புகள் என்று நான் உணர்ந்தேன். இந்த நரக நெருப்பில் எரிக்கப்பட்டு இறந்து, மேலும் எரிக்கப்பட்ட ஒட்டகங்களின் எலும்புகள். ஆச்சரியம்! எவ்வளவு எலும்புக் குவியல்கள் பாதை முழுவதும் சிதறிக் கிடந்தன! நாங்கள் மேலே சென்றோம். ஆச்சரியம், ஆச்சரியம்! என்ன கோரமான காட்சி! ஓர் ஒட்டகத்தின் எலும்புக்கூடு, அநேகமாய் ஜீவ அமைப்பிலேயே, மிருகவடிவை மணலில் வரைந்து காட்டுவதுபோல், கிடந்தது.

"அந்த ஒட்டகம் அந்த மரணப் பாதையில்தான் வந்தது. அது, தன்னால் வறட்சியின் கொடுமையைத் தாங்க முடிந்த வரையில் தள்ளாடி வந்தது. பிறகு அந்த மணலிலே - அந்தச் சுடுதழலிலே - விழுந்து, அதில் பொரிந்து இறந்திருக்கிறது. தோல், தசை, நரம்பு, கொழுப்பு, எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பொசுங்கி, ஆவியாகி, இயற்கைப் பூதங்களுடன் கலந்து - பிறகு இந்த எலும்புக்கூடு, ஒளிமுலாம் பூசப்பட்டு எங்களுக்குக் காட்சி அளிக்கிறது!

"அல்லாஹு அக்பர்! நாங்களும் இந்தக் கோர முடிவையா அடையப் போகிறோம்? - அந்த எண்ணத்திலே எவ்வளவு பீதி இருந்தது! கண்காணா மணற்காட்டில், சூரியனின் கீழ் நிர்மாணமாகி, சுட்டுப் பொசுக்கப்பட்டு, எலும்புகள் மாத்திரம் மிஞ்ச - அவைகளும் வெப்பத்தில் மேலும் மேலும் தசை கழிந்து மெருகிடப்பட - மனிதனுக்கு என்ன ஈன முடிவு இது!

"மரணத்தின் அண்மையை நாங்கள் உணர்ந்து, அச்சத்துடன் எங்களைச் சுற்றியிருந்த ஒட்டகங்களின் எலும்புகளை நோக்கினோம்.

"நாங்கள் அறியா இயற்கைப் போக்கு எங்கள் கண்களை, அந்த எலும்புகளிலிருந்து எங்களைச் சுமந்து வந்த ஒட்டகங்களின்பால் திருப்

பியது. இவைகளின் இனமாகிய ஜந்துக்களே கணக்கில்லா எலும்புக் குவியல்களாய்க் கீழே கிடந்தன! இந்த ஒட்டகங்களும் அதே நிச்சய மரணத்திற்குத்தான் தள்ளாடித் தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தன! நாங்களும் அதே நிச்சய மரணத்திற்குத்தான் அவைகளுடன் போய்க்கொண்டிருந்தோம்! என்ன ஆச்சரியம்! இவ்வொட்டகங்களும் எங்களுடன் மரணத்திற்குச் சென்றுகொண்டிருந்தன! இதுகாறும் இவைகளைப் பற்றிய எண்ணம் எங்களுக்கு எழவே இல்லையே! எளிய ஊமை ஜந்துக்கள்! அவைகள், தங்கள் கால்களை மெள்ளச் சுழற்றிச் சுழற்றி, எங்களைத் தாங்கிக்கொண்டு சென்றபொழுது, எவ்வளவு ஸாத்துவிகமாய்த் தோன்றின! அவைகளின் திமில்கள் சிறுகி, கண்கள் சோர்வுக் குழிகளில் மிரள, ஜலம் எங்கே இருக்கும் என்று தங்கள் நாசிகளால் மோப்பம் பார்த்துக்கொண்டு, அவைகள் மௌனமாய் அசைந்து அசைந்து சென்றுகொண்டிருந்தன - எங்களைப் போல் மரணத்திற்கு!

"அப்பொழுதுதான் சட்டென்று எங்களுக்கு, அவைகள் மரணப் பாதையில் எங்கள் தோழர்களாய்த் தோன்றின. மரணத்தின் சமீபத்தில், மரண நிழல் எங்கள் வாழ்க்கைப் பாதையின் குறுக்கே விழுந்தபொழுது, நாங்கள் அவைகளுடன் எங்களைப் பிணைத்த ஒற்றுமையைக் கண்டுகொண்டோம். அதுவரை அது எங்களுக்குத் தென்படவில்லை. மரண உணர்ச்சி சரேலென்று எங்கள் கண்களைத் திறந்தது. அந்த எளிய மிருகங்கள் கொதிக்கும் அந்த மணற் பரப்பில் கிடந்த எலும்புகளின் தொகையை அதிகரிப்பதற்குச் சென்றுகொண்டிருந்தன. நாங்கள் எங்கள் தலைமேல் உலாவிக்கொண்டிருந்த மரணத்தின் நிழலைக் கண்டவுடனேயே சோர்வடைந்து, அதிலிருந்து தப்புவதற்குப் பிரார்த்தனை செய்து, அல்லாவைக் கூவிக் கூவி அழைத்துச் சிந்தனை அலைகளில் தத்தளித்தோம். அவைகளோ ஊமைகளாய், இயற்கையின் அம்சங்களாய், இயற்கைப் போக்கைக் கதியற்றுப் பின்பற்றிக்கொண்டிருந்தன. அவைகளின் மீது எனக்குத் திடீரென்று அபரிமிதமான கருணையும் ஆதரவும் பிறந்தன. அவைகளும் எங்களைப் போலவே இறக்கப்போகின்றன. இதுகாறும் எங்களுக்காகப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தோமேயொழிய, அவைகளைப் பற்றி ஒரு நிமிஷங்கூட நாங்கள் எண்ணவில்லையே! பாவம்! எவ்வளவு சாந்தமான, அன்பு நிறைந்த ஜந்துக்கள் - ஸ்திரீகளைப் போல்! அவைகளின் பொருட்டும் பிரார்த்தனை செய்ய வேண்டாமா?

"கடைசி முறையாய், நான் தீனக் குரலை எழுப்பினேன்: 'அல்லாவே, உனது திருவுள்ளத்திற்கே எங்களைச் சமர்ப்பித்துக்கொண்டு விட்டோம்! எங்களது நலத்தை நீ அறிவாய்! கடையவர்கள் மருளினால் இழைத்த பிழைகளைப் பொறுப்பாய்! அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே! கரையா எங்களது மனக்கல்லும் கரைந்தது! எங்கள் முடிவு வரும்முன், இவ்வெளிய ஊமைப் பிராணிகளுக்கும் நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம்! அதனை அங்கீகரிப்பாய்!' மற்றவர்களும் பிரார்த்தனை செய்தனர்.

"சூரியன் வானத்தின் உச்சியை அடைந்துகொண்டிருந்தது. 'அச்சமில்லை, நண்பர்களே! அதோ அங்கே தெரிகிறது ஜீவபூமி! வாருங்கள்! அல்லா நம் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்துவிட்டார்!' என்று கூவினார் எங்கள் தலைவர். பாலைவனக் காற்றின் வெப்பத்தைச் சிறிது குறைத்த ஜலத்தின் ஸ்பர்சத்தை நாங்கள் உணர்ந்தோம்" என்று முடித்தார் கிழவர்.

நதி உருவம் கொண்ட புகழ்

கி. பாலசுப்பிரமணிய ஐயர்

பஞ்சம் கடவுளின் செய்கை என்று நமது அமெரிதுரை அபிப்பிராயப்பட்டார். ஆனால், இது உண்மையல்லவென்று, அமெரி அவர்கள் பேசினதைக் கேட்ட பர்மிங்ஹாம் பட்டணத்தவர்களே மறுத்தார்கள். பஞ்சம் மனிதர்களின் செய்கையே தவிர, வேறு இல்லை. கருணைவடிவமான கடவுளின் பேரில் இக்கொடுமைச் செய்கையைச் சுமத்துவது நியாயம் அல்ல. மேலும், நீர்வளம், நிலவளம் நன்கு அமைந்திருக்கும் நாடுகளில் பஞ்சத்தினால் மாந்தர்கள் வருந்த நேர்ந்தால் அது மனிதச் செய்கையே ஒழியக் கடவுளின் செய்கையாகாது. ஆனால் மனிதர்கள் அல்லது அரசர்களின் செய்கை காரணமாக நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் கடவுளைக் காட்டித் தப்பித்துக்கொள்வதும் வெகு காலமான பழக்கம். பெரும்பாலும் வேளாண்மையே பிழைப்பாகக் கொண்ட நம் பாரத நாட்டில், ஒழுங்கான அரசாட்சியும் பொருளாதார உண்மைகளை அறிந்த நன்னடக்கைகளும், அன்னதானமும், அன்பும் எத்தருணங்களில் சீர் குலைந்திருக்கின்றனவோ அப்பொழுது பஞ்சத்தின் கொடுமைகள் உண்டாகின்றன. தொன்றுதொட்டுள்ள நம் தேசத்துப் புராண நூல்களிலும், சரித்திரங்களிலும் சில காலங்களில் பஞ்சத்தினால் சில ஊர்கள் அடிபட்டதாகச் சொல்வதுண்டு. அந்தப் பஞ்சங்களுக்குக் காரணம் மனிதன் செய்கை என்று நேராகச் சொல்லாமல், மாந்தர்களின் பாபச் செயல்களால் கடவுளுக்குக் கோபம் வந்து, சில நாடுகளில் மழையில்லாமல் பஞ்சம் ஏற்பட்டு விட்டது என்று எழுதுவது வழக்கம். இம்மாதிரியான பஞ்சங்கள் பரந்த பாரத பூமியில் சில சில பிரதேசங்களில் உண்டாவது ஆச்சரியப்படத்தக்கதல்ல. அதன் கொடுமையைத் தீர்த்துப் பஞ்சத்தை ஒழிப்பதற்கு முயன்று உழைப்பதுதான் மக்கள், அரசாங்கத்தார் ஆகியவர்களுடைய கடமையாகும்.

காளிதாஸ மகாகவி தம்முடைய "மேகஸந்தேசம்" என்ற காவியத்தில் உயிர்த்துணையான தன் மனைவியினிடமிருந்து சாபத்தால் பிரிக்கப்பட்டு மிகுந்த காதலால் வருந்துகிற ஒருவன் ஆடிமாதத்தில் முகிலைப் பார்த்து அதைத் தன் மனைவிக்குத் தூது அனுப்புவதாகச் சொல்லித் தன் ஆற்றலை வெளியிடுகிறதாகவும், தென்தேசத்திலிருந்து வடக்கே தன் காதலி வசிக்கும் அளகாபுரிக்குப் போவதற்கு அந்த மேகத்திற்கு வழியையும் காட்டுகிறதாகவும் வர்ணிக்கிறார். மத்திய தேசத்தில் "சர்மண்வதீ" என்ற பெயருள்ள நதியைக் கடந்து செல்லவேணும் என்று தெரிவிக்கிற சந்தர்ப்பத்தில், ரந்திதேவன் என்கிற ஓர் அரசனுடைய புகழ்தான் இந்த நதி ரூபமாகப் பூமியில் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அழகான முறையில் அந்த மகாகவி நமக்கு அறிவிக்கிறார். சாதாரணமாக ஒரு நல்லாருடைய புகழ்கூட அவர் காலத்திலேயே மறைந்துவிடும். சிலருடைய புகழ் அவர்களுக்குப் பின்பு வெகு காலம் இருந்து அதன்பிறகு மறையலாம். ஆனால் ஒருவனுடைய புகழ் நதி ரூபமாக எக்காலத்திலும் பெருகிக் கொண்டே இருக்கவேணுமென்றால் அது அரிதே. இத்தகைய விண்சுமந்த கீர்த்தி இந்த அரசனுக்கு எப்படி வாய்த்தது? அவன் செய்த பெரும் புண்ணியச் செய்கையே காரணமாக

இருக்கவேண்டுமல்லவா? அது இன்னதென்று, மாமுனிவரான சுகர் ஸ்ரீபத் பாகவதத்தில் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறார். “இன்றைக்குங்கூட இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் ரந்திதேவனுடைய புகழ் போற்றப் படுகிறது” என்று மகிழ்ந்து கூறுகிறார்.

முன்னொரு காலம் பாரத பூமியின் மத்திய தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டது. அச்சமயம் ரந்திதேவர் என்ற நல்லரசர் இருந்தார். இந்தப் பஞ்சத்தினால் உண்டான வறுமையையும் கொடுமையையும் பார்த்து அடங்காத துயரத்தில் ஆழ்ந்தவராய், அவர் உடனே ஒரு கடும் விரதம் பூண்டார். அதாவது தம் அரண்மனையிலும் தமக்குச் சொந்தமான நிலங்களிலும், தம் முன்னோர்களும் தாமும் சேகரித்து வைத்திருந்த தானியக் குவியல்களையெல்லாம், இத்தருணத்தில் பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்குச் சோறளிப்பதற்கே உபயோகப் படுத்தவேணும் என்று கருதி, நாடு முழுவதும் பசியால் வருந்துகிறவர்களுக்கு அன்னமளிக்க ஆரம்பித்தார். இத்தகைய பஞ்சம் ஏன் ஏற்படவேணுமென்று அவர் யோசிக்கலானார். மக்களின் ஈர இரக்கமில்லாப் பாபச் செயல்களே இதற்குக் காரணமென்று அவருக்குத் தோன்றியது. தாமும் அரசரானபடியால் பஞ்சத்திற்கு அடிப்படையான காரணமென்றே தம்மை இகழ்ந்துகொண்டார். அதற்காக நாற்பத்தெட்டு நாள் தண்ணீர்கூடப் பருகாமல் சிறிதேனும் ஆகாரமின்றிக் கடும் பட்டினியாகக் கிடக்கவேணுமென்றும், அப்போதே அந்த நாற்பத்தெட்டு நாளும் பசியினால் வருந்தி அரண்மனை வாயிலில் அலறும் மக்களுக்கு அன்னமளிக்கும் காட்சியைத் தாம் பார்த்துக்கொண்டே காலம் கழிக்கவேணுமென்றும் தீர்மானித்து அப்படியே செய்யத் தொடங்கினார். எல்லோருக்கும் பல இடங்களில் சாப்பாடு போட விடுதிகள் அமைத்தார். திரள் திரளாக மனிதர்கள் வந்து பசியாறி மகிழ்ச்சி அடைந்து அரசரை வாழ்த்திச் சென்றார்கள்.

இப்படியே நாற்பத்தெட்டு நாளும் அமளியாகவே கடந்தன. இதற்குள்ளேயே அடிக்கடி மந்திரிகளும் நண்பர்களும் இவர் உயிருக்கு அபாயம் வந்துவிடுமோ என்கிற பயத்தால் அந்தக் கடும் பட்டினியை நிறுத்தவேணுமென்று உபதேசித்தார்கள். ‘மாந்தர்களுக்கு அன்னம் அளிக்கிற நன்மை போதாதா? எதற்காக இக் கடும்பட்டினி? இப்பஞ்சம் ஈசன் செயலல்லவா? நாம் என்ன செய்கிறது?’ என்றெல்லாம் சொல்லி அவரிடம் வாதாடினார்கள். அவர் இதற்கெல்லாம் அசையவில்லை. அவர் உடல் இளைத்தது. மனம் இளைக்கவில்லை. மனசு திடத்தாலும் சாந்தியாலும் ஆத்ம சக்தியாலும் கடவுளின் கருணையினாலும் அவர் நாற்பத்தெட்டு நாளும் பட்டினி கிடந்தும் பிழைத்தார். நாற்பத்தொன்பதாவது நாள் உலர்ந்து போன நாக்கை நனைத்துக் கொஞ்சம் தண்ணீர் உட்கொண்டு, இனி இப்பட்டினியை நிவர்த்தித்துக் கொள்ள வேணும் என்று அவர் மனைவி மக்கள் அமைச்சர்கள் எல்லாரும் வருந்திக் கேட்டு அவரைச் சுற்றி நின்றார்கள்.

அச்சமயம் அரண்மனை வாயிலில் ஒரு புலையன், “தாகத்தினால் நாக்கு ஒட்டிக்கொள்ளுகிறது; தண்ணீர் இல்லையா?” என்று கூக்குரலிட்டான். இம்முறையீடு அரசர் செவியில் நுழைந்தவுடனே அவர் தாம் தண்ணீர் குடிப்பதை நிறுத்தி அவனுக்கே அதைக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். அப்பொழுது அங்கிருந்த எல்லோரும், “நீங்கள் செய்வது நியாயமல்ல. நாற்பத்தெட்டு நாள் பட்டினிக்குப் பிறகு உயிர் நிறுத்துவதற்காகக் கொஞ்சம் தண்ணீர் குடிப்பதை இதற்காக நிறுத்துவது பிசகு” என்றெல்லாம் சொல்லி அவரை வற்புறுத்தினார்கள்.

அப்பொழுது அவர், “நான் இருந்தால் என்ன, இறந்தால் என்ன? எனக்குப் பொன்னுலகம் வேண்டாம். அஷ்டைசுவரியமும் வேண்டாம். பிறப்பு இறப்பற்ற மோக்ஷமும் வேண்டாம். மக்களுடைய துயரத்தைத் தீர்ப்பதற்காகவும், அவர்களுடன் கூடி வாழ்ந்து அதை நானும் அநுபவித்துத் தணிப்பதற்காகவும் என் வாழ்க்கையை நடத்தவேணுமே தவிர, மற்றதெல்லாம் பயன்படாது’ என்ற மயிர்க் கூச்சலுண்டாக்கும் நன்மொழிகளைச்

தணிக்கையாள் சொல்லுகிறார் . . .

“அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கைத் தானாகவே போக்கி விடுவதால் சுயமாக வெளுக்கும் சக்தி வாய்ந்ததென்று இதை சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதில் வெளுக்கும் ‘சக்தி’ அதிகமாக உள்ளதென்றும் சொல்லுகிறார்கள். ஸன்லைட் சோப்பின் நுரையை ஆடைகளுக்கு இட்டால் அது வெளுக்கும் வேலையை நமக்கு சிரமம் கொடுக்காமல் செய்து விடுகிறது. என்னுடைய சம்சாரமும், தாயாரும் எனக்கு இதை அநேக தடவை சொல்லி இருக்கிறார்கள்.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

இப்பொழுது மெழுகுத் தாளினால் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 63-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு



ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைட்டி லிமிடெட்.

ஸ்தாபிதம் 1907. **1942** *தலைமைக் காரியாலயம் :* அஜ்மேர்

மிகப் பெரிய முன்னேற்ற வருஷம்

இப்போது புரளும் வியாபாரம்	*ரூ. 4,50,00,000க்கு மேல்*
ஒதுக்கி வைக்கப்பட்ட மூலதனம்	*ரூ. 1,20,00,000 „ „*
செலுத்தப்பட்ட தொகை	*ரூ. 90,00,000 „ „*
செலவு விகிதம் பின்னும்	*25o/o குறைகிறது.*

இன்ஷ்யூர் செய்துகொள்ளவும் பிரதிநிதித்துவம் வகிக்கவும்
மிகச் சிறந்த ஸ்தாபனம்.

சேர்மன் :
பி. என். ஜாலன்
ஸீனியர் பார்ட்னர்,
மெஸர்ஸ். ஸூரஜ்மல் நாகர்மல்
கல்கத்தா.

ஜெனரல் மானேஜர் :
பிரம்ம தத்த, B.SC., LL.B., F.S.S. (LOND.)

பிராஞ்சு மானேஜர் :
111, காந்தி நகர்
பங்களூர் ஸிடி.

பிராஞ்சு மானேஜர் :
33, வடக்கு சித்திரை வீதி
மதுரை.

P. R. S. ஐயர்,
சீப் ஏஜெண்ட்,
பிரொமனெட் ரோடு
திருச்சி கண்டோன்மெண்டு.

சொல்லி இளைப்பாகப் படுத்திருந்தவர் எழுந்து, தாமே தண்ணீரை எடுத்துக்கொண்டுபோய் அப்புலையனிடம் கொடுத்து, அவன் தாகம் தீர்ந்து மகிழ்ச்சி அடைந்ததைப் பார்த்துச் சந்தோஷமாகத் திருப்பி வந்தார். அதன் பிறகுதான் தண்ணீர் உட்கொண்டார்.

இந்தச் செய்தியைக் கண்டறிந்து திகைத்துப்போன அந்நாட்டு மக்களெல்லோரும் ஒன்றுகூடி, மனமார்ந்த அன்புடன், "இவரும் இவர் புகழும் நீடூழி வாழவேண்டும்" என்று வாழ்த்தினார்கள். இத்தகைய அரசர்களும், மேன்மக்களும் நம் பாரத நாட்டில் பழைய காலத்தில் தோன்றினதனால் அல்லவா பஞ்சத்தினால் மனிதர்கள் இறந்தார்களென்ற பேச்சு அக்காலத்தில் கேட்டதே யில்லை? நாடெங்கும் பயிர்கள் செழிப்பாகத் தழைத்தோங்கித் தான்யம் நிறைந்து பஞ்சம் ஒழிவது நதியினால் அல்லவா? இம்மாதிரி பஞ்சத்தில் சோறு அளித்தவர் புகழ் நதியுருவம் கொண்டது என்று சொல்வது மிகவும் பொருத்தமாகும்.

திருஞானசம்பந்தரும் திருமுல்லைவாயிலில் இருக்கும் மேன்மக்களைப் பற்றி இவ்வாறு கூறினார் :

"மஞ்சாரு மாடமனைதோறும்
ஐயம் உளது என்று வைகிவரினும்
செஞ்சாலி நெல்லின் வளர்சோ
றளிக்கொள் திருமுல்லைவாயில் இதுவே"

பாரதியாரும்

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.
ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே,
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையி லேயுயர் நாடு"

என்று பாடினார்.

நாடெங்கும் தான்யம் நிறைந்து மக்களுக்கு உணவும் ஆடையும் எளிதில் நிரம்பக் கிடைத்து மனைதோறும் சீர் பொங்கவேணுமென்று பொங்கல் நன்னாளில் நான் கடவுளை வணங்குகிறேன்.

முத்தொள்ளாயிரத்தின் காலம்

ராவ்ஸாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை

கவிச்சுவை நிரம்பிய தமிழ் நூல்களுள் முத்தொள்ளாயிரமும் ஒன்றாகும். இது புறத்திரட்டு ஆசிரியர் உபகரித்த தமிழ்ச் செல்வம். நூல் முழுவதும் கிடைக்கவில்லை. அழகுடைய செய்யுட்கள் எனப் புறத்திரட்டின் ஆசிரியர் கருதிய 109 - செய்யுட்களே இப்போது நமக்கு அகப்படுவன. பழைய இலக்கண உரைகளில் ஒரு சில செய்யுட்கள் முத்தொள்ளாயிரத்தைச் சார்ந்தன என்று கருத இடமுண்டு.

இந்த நூல் தோன்றிய காலத்தைக் குறித்துப் பலரும் பல வேறு கருத்துடையராயுள்ளார்கள். இதன் அருமை பெருமைகளை உணர்ந்து முதல் முதலில் அச்சிற் பதிப்பித்து வெளியிட்ட திரு. ரா. ராகவையங்கார் அவர்கள் 'ஓர் அரிய பெரிய பண்டைத் தமிழ்நூல்' என்று மட்டும் குறிப்பிட்டார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பெற்ற புறத்திரட்டில் சங்ககாலத்திற்குப் பிற்பட்டு வாழ்ந்த சான்றோர் ஒருவரால் இயற்றப் பெற்ற நூல் என்று இது குறிக்கப்பட்டது. பின்னர்த் தமிழுணர்ச்சியும் கவிநயமும் நம் நாட்டில் மிகப் பெருகும்படிச் சொற்பொழிவுகள் ஆற்றி உழைத்து வருகிற என் நண்பர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தாம் பதிப்பித்த முத்தொள்ளாயிரம் - உரை நூலிலே, 'ஏதோ இரண்டாயிர வருஷங்களுக்குமுன் ஒரு கவிஞர்' இயற்றியது இந்த நூல் என்று எழுதினார்கள். இவர்கள் பதிப்பில் சங்ககாலத்துக் கவிஞர் இயற்றியது என்ற கொள்கை வெளிப்படுகிறது. ஆனால் 'ஏதோ' என்று இலேசாக நெகிழ்ந்து கூறுவதிலிருந்து இவர்கள் இந்த நூல் பிறந்த காலத்தைக் குறித்து உறுதியான கொள்கையுடையவர்கள் அல்லர் என்று தோன்றுகிறது. இந்த நூலின் காலத்தை அறுதியிடுதற்கு ஒரு சில சான்றுகள் உள்ளன.

முதலாவது இந்த நூலைக் குறித்துப் பழைய உரைகாரர்கள் கூறுவனவற்றை நோக்குவோம். பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியலுரையில் (சூ. 239) முத்தொள்ளாயிரத்தை உதாரணம் காட்டினர். இவ்வுரைகாரரது காலம் சுமார் 14-ஆம் நூற்றாண்டாகும். ஆகவே முத்தொள்ளாயிரம் இந்தக் காலத்திற்கு முற்பட்டது என்பது புலப்படும். உரையாசிரியராகிய இளம்பூரணர் தொல்காப்பியப் புறத்திணையியல் உரையில் (சூ. 5)

ஏற்றூர்தி யானு மிகல்வெம்போர் வானவனும்
ஆற்றலு மாள்வினையு மொத்தொன்றி னொவ்வாரே
கூற்றக் கணிச்சியான் கண்மூன் றிரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்

என முத்தொள்ளாயிரத்து வந்தவாறு காண்க' என்று எழுதிச் செல்லுகின்றார். இவரது காலம் சுமார் 11-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். எனவே இந்தக் காலத்திற்கும் முற்பட்டதாகும் முத்தொள்ளாயிரம். மேற்குறித்த பேராசிரியர் தம் உரைப்பகுதியில், 'முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினர் செய்த அந்தாதிச் செய்யுளும்......கலம்பகம் முதலாயினவும் புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவர இயற்றப்படும் விருந்து என்பதற்கு உதாரணமாம்' என விளக்கினர். இதனால் அந்தாதிச் செய்யுட்கள், கலம்பகம் முதலிய பிரபந்தங்கள் தோன்றிய 7-ஆம் 8-ஆம் நூற்றாண்டுகளை அடுத்து முத்தொள்ளாயிரமும் புதுவதாக இயற்றப்பட்டதாகும் என்பது வெளியாகின்றது.

அன்றியும், பேராசிரியர் 'பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியின் ஏறாமல் செய்யுள் செய்தார் பிற்சான்றோரும்' (தொல். செய். 158) எனக் கூறினர். பிற்சான்றோர் என்பதனால் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது இந்த நூல் என்பது தெளியலாகும். எனவே கி. பி. 400 - க்கு மேல் 800 - க்குள்ளாக இந்த நூல் இயற்றப்பட்டதாதல் வேண்டும் என முன் எல்லையையும்,

பின் எல்லையையும் ஒருவாறு வரையறுக்கலாம்.

இனி நூலினகத்தே காணப்படும் சான்றுகளை நோக்குவோம். சோழ அரசரது தலைநகராகத் தஞ்சை நகர் சுமார் கி. பி. 850 - இல் தோன்றியது. இவ்வரசர்களைக் குறித்து இப்போது அகப்பட்ட முத்தொள்ளாயிரப் பகுதியில் பல செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றிலேனும் தஞ்சை நகர் கூறப்படவே இல்லை. உறையூர் என்பதுதான் தலைநகராகக் குறிக்கப்பட்டுள்ளது எனவே கி. பி. 850-க்கு முன்பு இந்த நூல் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்பது இந்தச் சரித்திரச் சான்றாலும் உறுதியடைகின்றது. நூலில் காணப்படாத ஒன்றினைக் கொண்டு இந்தத் துணிபு கொள்ளப்பட்டது. இதனைக்காட்டிலும் நூலிற் காணப்படும் சான்றுகளே வலியுடையன.

சோழ பாண்டியர்களுக்குரிய குதிரைகளின் பெயர்கள் முதல் முதல் திவாகரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. சூத்திரங்கள் வருமாறு:

அவற்றுள்

கனவட்டம் என்பது
வழுதி ஊர்மா. III, 11
பாடலம் என்பது
சேரன் ஊர்மா. III, 12
கோரம் என்பது
சோழன் ஊர்மா. III, 13

இதற்கு முன்னுள்ள நூல்களில் இந்தப் பெயர்கள் வழங்கியனவாகத் தெரியவில்லை. இந்தப் பெயர்களுள் கனவட்டம் என்பதும் (புறத்திரட்டு 1515) பாடலம் என்பதும் (புறத்திரட்டு 1513) முத்தொள்ளாயிரத்திற் காணப்படுகின்றன. ஆதலால் திவாகரத்தின் காலத்தை அடுத்து இந்த நூல் தோன்றியிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. திவாகரத்தின் காலம் சுமார் 8-ஆம் நூற்றாண்டாகும்.

பிற்காலத்து வழக்கிற் புகுந்த சொற்கள் இந் நூலகத்துக் காணப்படுகின்றன. 'நாணோடு உடன்பிறந்த நான்' (புறத். 1563), 'காணேன் நான்' (புறத். 1535) என்று ஈரிடங்களில் நான் என்ற பிற்பட்ட வழக்கு வந்துள்ளது. இங்ஙனமே 'போது' என்பது 'பொழுது' என்ற பொருளில் வந்துள்ளது. 'நெடு வீதி நேர்பட்ட போது' (புறத். 1525) என்று முடியும் புறத்திரட்டுச் செய்யுளைக் காண்க. 'பேர்' என்பது 'என்னையுரையல் என் பேர் உரையல்' (புறத். 1540) என்ற செய்யுளில் காணலாம். இதனையும் 'போது' என்பதனையும் நேமிநாதம் (வெண்பா, 35) பிற்பட்டெழுந்த வழூவமைதிகளாகக் கூறுகின்றது. 'வீணில்' என்பது 'கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணில்' (புறத். 1541) என ஒரு செய்யுளில் வந்துள்ளது. இதுவும் பிற்காலத்துச் சொல்லென்பது கூறவேண்டா.

இந்தச் சொற்களே அன்றிப் பிற்காலத்து எழுந்த விகுதிகளும் இந்த நூற்செய்யுட்களகத்து மிகுதியாகக் காணப்படுகின்றன. எல் என்பது அவ்வாறு வருவனவற்றுள் ஒன்று. இது எனின், எனில், எல் என்ற சொற்கள் வரிசையில் இறுதியில் திரிந்து வந்த வடிவம்.

தானேல் தனிக்குடைக் காவலனால்
காப்பதுவும்
வானேற்ற வையகம் எல்லாமால் -
யானோ
எளியேனோர் பெண்பாலேன்
ஈர்ந்தண் தார் மாறன்
அளியானேல் அன்றென்பார் ஆர்
(புறத். 1523)

என ஈரிடங்களில் வருகின்றது. 'ஆர்' என்பதும் பிற்பட்ட வழக்காகும் (நேமிநாதம், 35). அல்லால் (புறத். 1528), ஆனக்கால் (புறத். 1526) முதலிய பிற்பட்ட வடிவங்களும் இந்நூற் செய்யுட்களில் வந்துள்ளமை காணலாம். எதிர்காலத்து வரும் தன்மை ஒருமை விகுதி 'அல்' என்பது. இது பிற்பட்ட காலத்து 'அன்' எனத் திரிந்து பிற்பட்ட நூல்களில் வழங்கப்பட்டது. இவ் 'அன்' ஈறு முத்தொள்ளாயிரச் செய்யுளில் காணப்படுகின்றது. 'புலவி புறக்கொடுப்பன் புல்லிடின் நாண் நிற்பன்' (புறத். 1533) என்பது செய்யுள். இவ் 'அன்' ஈற்றைக் குறித்து இளம்பூரணர் (தொல். வினை. 6, உரை) 'உண்பல், தின்பல் எதிர்காலம் பற்றிவரும். இப்பொழுது அதனை உண்பன், தின்பன் என அன் ஈறாக வழங்குப' என்று சொல்லுகிறார். எனவே இவ்வீறு மிகப் பிற்பட்ட காலத்தது என்பது எளிதின் உணரலாம். இளம்பூரணர் காலத்திற்கு 2, 3 - நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து இவ்வழக்குப் பயின்று வந்திருக்கலாம்.

இனி முத்தொள்ளாயிரச் செய்யுட்களில் எடுத்தாளப்பட்டுள்ள ஒரு சில தொடர்களை நோக்குவோம். 'பண்டன்று

பட்டினங் காப்பு' (புறத். 1562) என முத்தொள்ளாயிரத்துள் வருவது பெரியாழ்வார் திருமொழியில் (V, 2, 1 - 10) 'நெய்க்குடத்தை' என்னும் பதிகத்தில் காணப்படுகின்றது. இது போன்றே 'யார்க்கிடுகோ பூசல் இனி' (புறத். 1519) என்பது நாச்சியார் திருமொழியில் (V, 2) 'ஆர்க்கிடுகோ தோழி அவன்தார் செய்த பூசலையே' என வருகின்றது. இவை பெரியாழ்வார் காலத்திற்கு அடுத்தது முத்தொள்ளாயிரம் என்பதை உணர்த்துகின்றன.

முடிவாக, பழமொழி நூலிலிருந்து சில பழமொழிகள் இந் நூலினகத்தே எடுத்தாளப்பட்டுள்ளன. 'நீரொழுகப் பாலொழுகா வாறு' (புறத். 1521—பழமொழி 241. செல்வக்.) என்ற உதாரணத்தைக் காண்க. பழமொழியாயிருத்தலால் இந் நூலிலிருந்துதான் கொள்ளவேண்டும் என்ற நியதி இல்லை எனக் கூறலாம். மறுக்க முடியாதபடி ஓர் உதாரணம் உள்ளது.

'செய்யா ரெனினுந் தமர்செய்வர்
என்னுஞ் சொல்

மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்' (புறத். 1506) என்று முத்தொள்ளாயிரம் கூறுகிறது. இது பழமொழியில் உள்ளது. (பழமொழி. 351. செல்வக்.) ஆதலால் பழமொழி நூலின் காலத்திற்குப் பின்பு முத்தொள்ளாயிரம் தோன்றியது என்பது உறுதி. பழமொழியின் காலம் சுமார் கி. பி. 650 - ஆக இருக்க வேண்டும் என அறுதியிட்டுள்ளேன். (திரிகடுகமும் சிறு பஞ்சமூலமும் - சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு முன்னுரை.)

மேற்காட்டிய காரணங்கள் அனைத்தும் முத்தொள்ளாயிரம் 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது என்று தெளிவிக்கின்றன.



சிப்பியின் காதல்

'சுரபி'

1. ஆழக் கடலுக்குள் நானிருந்தேன் - எங்கும்
அகண்ட வானத்தில் தானிருந்தான்
ஊழைத் தொடும்பஞ்ச பாணனவன் - எங்கள்
உள்ளம் இரண்டையுந் தொட்டுவிட்டான்.

2. விண்ணில் ஒளிர்ந்திடும் சோதியவன் - அலை
வீச்சில் அலைந்திடும் பேதைஇவள்
கண்ணொடு கண்ணிணை நோக்கிவிட்டோம் - அந்தக்
காமன் கணைகொடு தாக்கிவிட்டான்.

3. நீலக் கடலினுக் குள்ளிருந்தே - தலை
நிமிர்ந்து நிமிர்ந்துநான் பார்த்திருந்தேன் - இந்த
வேலையெ லாம்இன்ப வெள்ளம் சுழித்திடும்
வேளையை எண்ணியான் காத்திருந்தேன்.

4. மெல்லத் திரைக்கடல் மீதுவந்தே - அவன்
மின்னும் அழகினில் ஆழ்ந்து நின்றேன்
அல்லும் பகலும்கை ஏந்திநின்றேன் - அவன்
அன்பிற் கலந்திட ஏங்கிநின்றேன்.

5. மோன இரவினில் வந்திடுவான் - அவன்
மோகனச் சோதியில் மூழ்கிடுவேன்
ஈனப் பகல்வரின் ஏகிடுவான் - ஓர்
எல்லையில் லாத்துய ரெய்திடுவேன்.

6. எத்தனை யோயுகம் ஏகியதே - அதை
எண்ணிக் கணக்கிட யாரறிவார் - இன்னும்
எத்தனை பேருகம் ஆகிடுமோ - என
ஏங்கிக் கலங்கிக் கருத்தழிந்தேன்.

7. வீசிச் சுழற்றிடும் பேரலைகள் - என்றன்
விதியை அலைக்க அலைந்துவந்தேன் - குறை
பேசவும் ஓர் துணை அற்றிருந்தேன் - பெரும்
பித்தி யெனத்துயர் உற்றிருந்தேன்.

8. வெந்துயர் மூச்சுத்தான் எட்டியதோ - என்றன்
வேதனைக் கீதமே எட்டியதோ - மனம்
நொந்து படுந்துயர் தீரஅவன் - அருள்
நோக்கம் கிடைக்கும்நாள் கிட்டியதே.

9. வானமெலாம்இந்த மீனினத்தை - யாரோ
வாரி யிறைத்துத் தெளித்ததுபோல்
கானமெ லாம்இன்ப மாமலர்கள் - ஒளி
கான்றிடப் பூத்து நிறைந்ததுபோல்.

10. கோடியாய் மீனினம் மின்னியது - சுடர்க்
கோலத்தை எங்கணும் பின்னியதே இன்பப்
பாடல்பல் லாயிரம் பாடியது - யாரும்
பகரவொண் ணாவெறி மூட்டியது.

11. ஆதவன் கண்டதோர் தாமரைபோல் - அந்த
அம்புலி கண்டதோர் அல்லியைப்போல்
வேதனைத் தீயினில் வாடிய என்னுளம்
வெற்றியை நாடி மலர்ந்ததுவால்.



12. நாணத் திரையினைக் கைவிலக்கி - என்றன்
நாதனை நோக்கிடக் கண்திறந்தேன்
ஆணழகன் அந்த ரேவதியும் - என்றன்
ஆவி குளிர்ந்திடக் கண்திறந்தான்.

13. கள்ளம் பெருகிடும் கண்சிமிட்டில் - என்றன்
கற்பைஎல் லாங்கொள்ளை கொண்டுவிட்டான்
துள்ளி யெழுந்திடும் புன்சிரிப்பில் - நெஞ்சம்
சுற்றிச் சுழன்றிடப் பண்ணிவிட்டான்.

14. தண்ணென் றொருதுளி தட்டிவிட்டான் - என்றன்
தாக விடாயினைத் தீர்த்துவிட்டான்
விண்ணி விழிந்த மழைத்துளியால் - என்றன்
விரக தாபமுந் தீர்த்துவிட்டான்.

15. காதலன் தந்த பரிசதனைச் - சேர்த்துக்
கட்டி யணைத்தே உளம்மகிழ்ந்தேன்
பாதலம் நோக்கி விரைந்துவந்தேன் - தன்னைப்
பார்க்க முடியாமல் கூசிநின்றேன்.

16\. அன்பன் நினைவே நினைவதுவாம் - அவன்
ஆருயிர்ச் சின்னமென் கையதுவாய்
இன்பப் படுக்கை யதிற்கிடந்தேன் - எல்லை
இல்லா மகிழ்ச்சி தனிற்புரண்டேன்.

17\. இன்பங் கலந்ததோர் துன்பமது - சற்றே
என்னை யுறுத்துதல் நானுணர்ந்தேன்
துன்பங் கலந்திட்ட இன்பமதோன் - றென்னைத்
தூக்கத்தில் ஆழ்த்திடக் கண்ணயர்ந்தேன்.

18\. தூக்க மயக்கந் தெளிந்தெழுந்தேன் - அந்தத்
துன்ப மயக்கந் தெளிந்தெழுந்தேன்
பார்க்கவும் நெஞ்சம் பரிமளிக்கும் - சுடர்ப்
பாலகன் தன்னைப் பயந்தெடுத்தேன்.

19\. அன்ப னளித்தபே ரின்பமிவன் - அவன்
அண்டமெ லாம்வீசும் சோதியிவன்
மன்பதை பார்த்திட அன்றவன் தான் - என்றன்
மார்பினில் முத்திய முத்தம்இவன்.

உலகத்தின் கதை

—எஸ்.வி.வி—

உலகத்தின் கதையைச் சொல்ல வேண்டுமென்றால் அது ஆதியில் உற்பத்தியானதிலிருந்து ஆரம்பித்துச் சொல்லவேண்டியதுதான் முறை. உலகம் எப்பொழுது உண்டாயிற்று, எப்படி உண்டாயிற்று என்று ஒருவராலும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. எப்படி நிச்சயமாய்ச் சொல்லுகிறது? அந்தக் காலத்தில் இருந்தவர்கள் இப்பொழுது இல்லை. அவர்கள் அதைப்பற்றி எழுதி வைத்துவிட்டும் போகவில்லை.

இந்த நிலைமையில் பின்னாடி வந்தவர்கள் ஊகிக்க ஆரம்பித்தார்கள். உலகத்தின் பிரம்மாண்டத்தையும், அதன் விசித்திர அமைப்பையும் கண்டு அற்புதம் மேலிட்டு, 'இது சாதாரணமான ஒரு புருஷனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்க முடியாது; இதை இருக்கச் செய்தவன் மஹாபுருஷனாக இருக்கவேண்டும்; அவன்தான் ஈசுவரன்; அவன் சர்வவல்லவன்; சர்வ வியாபி; அவன்தான் அதை ஆக்கினவன், அளிப்பவன், சம்ஹரிப்பவன்' என்ற முடிவிற்கு வந்தார்கள். உலகமக்களில் பெரும்பாலோர் - அநேகமாக எல்லோருமே என்று சொல்லலாம் - இந்த நம்பிக்கையை வெகு தீவிரமாகக் கடைப்பிடித்தார்கள். இந்த ஊகத்தில் சிக்கல் இல்லாமலில்லை. ஈசுவரன் எங்கு உட்கார்ந்து சிருஷ்டித்தான், எந்த ஆதி பதார்த்தத்தைக் கொண்டு இவ்வளவு விசித்திர வேலைப்பாடுகளைச் செய்தான் என்று கேள்வி கிளம்பியது. ஈசுவரன் தன்னையே இந்த விபூதிகளாக மாற்றிக்கொண்டான் என்று பதில் சொன்னார்கள். 'அது இருக்கட்டும்; எதற்காக இந்தச் சிருஷ்டியை அவன் செய்தான்? அவன் நோக்கந்தான் என்ன?' என்று மற்றொரு கேள்வி எற்பட்டது. அதற்குச் சரியான பதில் என்னவென்று ஆராய்ந்தார்கள். 'அவனுடைய சங்கல்பம் அது; அவனுடைய திருவிளையாட்டு' என்று பதிலுரைத்தார்கள்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்,
நிலைநிறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்,
தலைவர்"

என்று கம்பரும் சொன்னார். இதுதான் பெரும்பாலோர் கைப்பற்றியிருக்கும் கொள்கை.



விசுவாமித்திரர்

மற்றும் சிலர் இந்தக் கொள்கையில் திருப்தி அடையாமல் வேறுவிதமாக ஊகித்தார்கள். "ஈசுவரனாவது? அப்படி ஓர் ஆசாமி இருக்கிறானா? விளையாட்டுக்காகச் சிருஷ்டித்தானென்றால் அவன் குழந்தையா, பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதற்கு? இந்த உலக அற்புதத்தைக் கண்டு இதிலிருந்து மனுஷ்யன்தான் ஈசுவரனென்று ஒருவனைச் சிருஷ்டித்திருக்கிறான். இந்த உலகத்திற்கு ஆதிகர்த்தாவென்று ஒருவருமே இல்லை. இந்த உலகம் இயற்கையாகவே உண்டானது. இயற்கையாலேயே நடந்துகொண்டு போகிறது" என்றார்கள்.

"இயற்கை என்றால் என்ன? இயற்கை எப்படி உண்டாயிற்று? என் உண்டாயிற்று?" என்று கேட்டால் அவர்கள் சொல்லும் பதிலும் திருப்திகரமாக இல்லை.

இன்னும் சிலர், "உலகத்தின் ஆதியை விசாரிக்கப்போனால் மதிதான் கலங்கும்; திடமான முடிவு எற்படாது; அந்த ஆராய்ச்சி பயனற்றது; உலகம் இருக்கிறது; அதைத்தான் நாம் காண்கிறோம். அதோடு நிறுத்திக் கொள்ளுவோம்' என்றார்கள்.

நிலைமை இவ்வாறு இருக்க நாமும் உலகம் எற்பட்ட பிறகிலிருந்தேதான் நம் கதையை ஆரம்பிக்கவேண்டும்!

உலகம் ஸ்தூல தசையை அடைந்து அந்தப் பேரைக் கொண்டதிலிருந்து நாளது வரையில் அது ஒரு விதமான மாறுபாட்டையும் அடைந்ததாகத் தெரியவில்லை. அன்று போல் இன்றைக்கும் சூரிய சந்திராதிகள் காலந்தவறாமல் உதித்துக் கொண்டுவருகிறார்கள்; மாங்கொட்டையை நட்டால் மாஞ்செடி உண்டாகிறதே தவிர கொய்யாச் செடி உண்டாகிறதில்லை; மாடு வயிற்றில் மாடு பிறக்கிறது; பூனை வயிற்றில் பூனை பிறக்கிறது; நாய் வயிற்றில் நாய் பிறக்கிறது; பூனைவயிற்றில் மூஞ்சூறு பிறக்கிறதில்லை; நாய் வயிற்றில் நண்டுவாக்கிளி பிறக்கிறதில்லை. மனுஷ்யனும் அன்று இருந்தமாதிரி இன்றைக்கும் ஒரு தலை, இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள், இரண்டு கால்கள் இவைகளோடுதான் இருக்கிறான். புல் பூண்டுகள் முதல் ஜீவராசிகளெல்லாம் அன்றைக்கு ஏற்பட்ட சுபாவத்தோடேயே இன்றைக்கும் இருக்கின்றன. கொசு கடிக்கிறது; குயில் பாடுகிறது. விஞ்ஞான சாஸ்திரத்தைக் கொண்டு மனிதன் அற்புதமான சிருஷ்டிகளை யெல்லாம் செய்திருக்கிறான் என்று நாம் அடங்காப் பெருமை கொண்டிருக்கிறோம். விஞ்ஞான சாஸ்திர எல்லையைக் கடந்தால்கூடப் பூனையைப் பிரசங்கம் செய்யும்படி செய்ய முடியுமா? நாயைத் தியாகையர் கீர்த்தனையையோ, தமிழிசையையோ பாடச் செய்ய முடியுமா? இதிலிருந்து உலகத்தின் சுவபாவமும் தர்மமும் அது உண்டான காலத்திலிருந்து நாளது வரையில் வேறுபாடே இல்லாமல் ஒரேமாதிரியாக இருக்கின்றன வென்றும், மனுஷ்யன் அதில் விசேஷ வேறுபாடுகள் செய்ய முடியாதென்றுமே நாம் அறிகிறோம்.

உலகக் கதையிலிருந்து மற்றொன்றும் நாம் அறிகிறோம். அதாவது, சிருஷ்டியோடு கூடவே ஒவ்வொன்றுக்கும் நோய் என்பது ஆதியிலிருந்தே பிறந்திருக்கிறது என்று. அவரைச் செடி போட்டால் அதை அசடு என்று வழங்கும் பூச்சி கவ்விக் கொள்ளுகிறது. மரங்களுக்கு வேர் அழுகிப்போவது, பட்டுப்போவது என்கிற வியாதிகள் ஏற்படுகின்றன. மாடுகளுக்குக் கோமாரி, தொண்டை நோய். மனுஷ்யனை அவயவம் அவயவமாய் வியாதிகள் பிடிக்கின்றன. தலைக்கு மண்டை நோய், மூளைக் கோளாறு, பைத்தியம்; காதுக்குக் காது குத்தல்; கண்ணுக்குக் காமாலை, மாலைக் கண், பூ விழுகிறது; மூக்குக்கு மூக்கடைப்பு, சளி, ஜலதோஷம்; கைகால்களுக்குக் கீல் வாய்வு, பாரிச வாய்வு - என்று இம்மாதிரி எண்ணற்ற வியாதிகள். இந்த வியாதிகளுக்கெல்லாம் மனிதன் எவ்வளவோ ஆராய்ச்சிகளைச் செய்து மருந்துகளைக் கண்டுபிடித்துச் சிகிச்சை செய்து கொள்ளுகிறான். இவை அவயவங்களைப் பற்றிய வியாதிகள். இந்த அவயவங்களைத் தவிர மனிதனுக்குப் பிரத்தியேகமாக மனசு என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மனசையும் அநேக விதமான வியாதிகள் போய்க் கவ்வுகின்றன. நம் முன்னோர்கள் அந்த வியாதிகளை நன்கு ஆராய்ந்து அவைகளுக்கு ஜாப்தா தயார் செய்து அவைகளைக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று ஆறு பெரிய பிரிவுகளில் அடக்கினார்கள். உடலைப்பற்றிய வியாதிகள் வியாதி பிடித்த ஒருவனை மாத்திரம் பாதிக்கின்றன. ஒருவனுக்கு வயிற்று வலி வந்தால் அதனால் மற்றொருவனுக்கு ஒருவிதமான துன்பமும் ஏற்படுகிறதில்லை. மனத்தைப் பிடிக்கும் நோயின் இயல்போ அப்படி இல்லை. அது மனித சமூகத்தையே பாதிக்கிறது. ஹிட்லருக்கு மதம் பிடித்ததென்றால் அது உலகத்தையே நாசம் செய்கிறது என்கிறதைக் காண்கிறோம்; ஜப்பானுக்கு மனக்கோளாறு ஏற்பட்டிருப்பதால் இந்தியாவில் இருக்கிற நாம் எந்தச் சமயத்தில் ஜப்பான்காரன் வந்து குண்டுகளைப் போடுவானோ என்று தவித்து நித்திரையற்றுக் கிடக்கிறோம். சர்ச்சிலுக்கும் அவனைப்போன்றவர்களுக்கும் சாம்ராஜ்யப் பித்துப் பிடித்திருப்பதனால் இந்தியாவில் இருக்கும் நாம் அடிமைத் தனத்தில் உழன்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.


வசிஷ்டர்

மனத்தைப் பற்றும் வியாதிகளால் விளையும் இம்மாதிரியான விபரீதங்களைக் கண்டு அவைகள் மனத்தை அண்டவொட்டாமல் தடுப்பதிலும், அவைகளுக்குச் சிகிச்சை செய்வதிலுமே நம் முன்னோர்கள் முக்கியமாகத் தங்கள் கவனம் பூராவையும் செலுத்திவந்தார்கள். இந்த வியாதிகள் பஸ்மங்கள், குளிகைகள், லேகியங்கள், இன்ஜெக்ஷன்கள் இவைகளால் போக்கடிக்கக் கூடியவைகளல்ல. அவைகளுக்கு வேறு விதமான சிகிச்சைகள் வேண்டும். அவைகளுக்குச் சிகிச்சையாகத்தான் நம்முடைய தர்ம சாஸ்திரங்களும், புராணக் கதைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு மனிதர்கள் மனத்தில் நல்ல காற்றைப் புகுத்தி ஆரோக்கியத்தை உண்டு பண்ணி அழுக்குகளை விலக்க நம்மவர்கள் முயன்றார்கள்.

இந்த மனத்தைப் பற்றிய வியாதிகளும் அநாதியாக இருந்து விபரீதங்களை விளைவித்துக்கொண்டு வந்தன என்று நம்முடைய புராணக் கதைகளிலிருந்து நாம் அறிகிறோம். இவைகள் யாரையும் விட்டபாடில்லை. தபஸ்விகளை விட்டனவல்ல; ராஜாக்களை விட்டன அல்ல; மற்ற எவரையும் விட்டனவல்ல. மகா தபஸ்வியான விசுவாமித்திரமஹரிஷி இதற்கு உதாரணம். அவர் அவைகளில் சிக்கிக்கொண்டு அநேக விதமான அல்லல்களைப் பட்டார். புராண கால தபஸ்விகளில் வசிஷ்டர், விசுவாமித்திரர் என்று இரண்டு மஹரிஷிகள் பிரசித்தி பெற்றவர்கள். அவர்கள் எந்தக் காலத்தில் இருந்தார்களோ அதை நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. புராணங்களைப் படித்தால் அவர்கள் எப்பொழுதுமே இருந்து வந்தவர்கள் போல் தென்படுகிறது. இவர்கள் ராமன் காலத்திலேயும் இருந்தார்கள்; ஹரிச்சந்திரன் காலத்திலேயும் இருந்தார்கள். இவர்கள் நேர் மாறான சுவபாவஸ்தர்கள். நரைத்த தலைமயிர், நீளமாய்த் தொங்கும் வெள்ளைத் தாடி இவைகளோடு இருப்பவர் வசிஷ்டர்; குட்டையான கறுப்புத் தாடியுடன் கண்ணை உருட்டி உருட்டி விழித்துக்கொண்டிருப்பவர் விசுவாமித்திரர் என்று ஸினிமாவில் நாம் தினம் பார்க்கிறோம்.

இவர்களுக்குள் நீ பெரியவன், நான் பெரியவன் என்று எப்பொழுதுமே போட்டி. சாவர்க்கரும் ஜின்னாவும் ஒன்று சேர்ந்தாலும் சேர்ந்து விடலாம்; இவர்கள் சேரமாட்டார்கள். விசுவாமித்திரருக்கு அநேக விதமான மன நோய்கள் கண்டன. அவைகளின் விளைவாக ஹரிச்சந்திரன் தீராத அல்லல்களுக்கு உள்ளானான். திரிசங்கு நடு ஆகாயத்தில் தொங்கவேண்டி வந்து நேர்ந்தது. தபஸ்விகளும் இந்த நோய்களுக்கு விலக்கில்லை என்று இந்தக் கதை காட்டுகிறது.

ராஜாக்களில் தேவேந்திரன் என்று ஒருவன் இருந்தான். அவன் மகா போகி. வாயு, வருணன், குபேரன் இவர்களெல்லாம் அவனுக்குக் கீழடங்கியவர்கள். அவனுக்கு எப்பொழுது பார்த்தாலும் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை முதலிய அப்ஸரஸ்திரீகள் நாட்டியமாடுவதைக் கண்டு களிப்பதே வேலை. அவனைக் காமநோய் தீண்டியது. கௌதமர் சம்சாரம் அகலிகையின் மேல் மோகம் கொண்டான். அவர் வீட்டிற்குப் போய்க் கோழி போல் கத்தி அவரை விடியற்காலையில் வீட்டை விட்டு வெளிக்கிளப்பினான். அவர்மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு அகலிகையோடு ரமித்தான். கௌதமர் சாபத்தால் அவனுக்கு உடம்பெல்லாம் கண்ணாயிற்று.

இந்திரன்

ராக்ஷஸர்களில் ராவணனுக்கு மதம் பிடித்தது. தபஸ்விகளை எல்லாம் வதைத்தான். அவனைக் காமநோய் தீண்டியது. சீதையை அபகரித்தான். அதன் விளைவாக மகா யுத்தம் ஏற்பட்டது. கௌரவர்கள் பேராசைப் பட்டார்கள். மற்றொரு மகா யுத்தம் ஏற்பட்டது. இம்மாதிரி நோய்வாய்ப்பட்டவர்களின் கதைகள் உலக சரித்திரத்தில் நிரம்பிக் கிடக்கின்றன.

இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடிய நீதி என்ன?

உலகம் ஆதியில் ஏற்பட்டபடியே நாளது வரையில் இருந்துவருகிறது. அதன் அமைப்பில் மாறுபாடு இல்லை. மக்களின் இயற்கையிலும் மாறுபாடில்லை. மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனநோய்களிலும் மாறுபாடு இல்லை. உலகத்தில் உண்டாகும் தீங்குகள் எல்லாம் காமக் குரோத லோப மோக மத மாச்சரியமாகிய வியாதிகளாலேயே ஏற்பட்டுவந்திருக்கின்றன. அவைகளுக்குச் சிகிச்சையும் நம்மவர் அநுபவத்தினால் அறிந்த முறைகளிலேயேதான் அடங்கியிருக்கிறது.

நாடாசை ஒரு வியாதி; ஒரு தேசத்தைச் சுரண்டி ஐசுவரியத்தையும் மற்றப் போகங்களையும் நாமே அநுபவிக்க வேண்டும் என்று ஆசை கொள்வது மற்றொரு வியாதி. ஒரு சமூக ஜனங்கள் மற்றொரு சமூக ஜனங்களை அடக்கியாள்வது என்பது மதம் என்கிற வியாதி. இம்மாதிரி மக்களைப் பிடித்தாட்டும் வியாதிகளால்தான் உலகம் சீர்கெட்டுத் துன்பங்களில் தவிக்கிறது. உலகம் ஒழுங்கு முறையையும் க்ஷேமத்தையும் அடையவேண்டுமென்றால் முதலாவதாக இவைகளுக்குச் சிகித்சை செய்ய வேண்டும்; இவைகளுக்கு டாக்டர்கள் ஏற்படவேண்டும்.

அகலிகை

இந்த உண்மையை நம்மவர்கள் ஆதி காலத்திலிருந்து அறிந்து வந்தார்கள். இந்த நோய்களுக்குச் சிகிச்சை செய்வதிலே கவனம் பூராவையும் செலுத்தி வந்தார்கள். எந்தக் காலத்தில் மக்கள் நோய்வாய்ப்பட்டுத் தர்மம் குலைகிறதோ அந்தக் காலங்களில் நானே வந்து டாக்டராய் அவதரித்து நோய்களைப் போக்கி ஸத்துவ குணங்களை உலகத்தில் நிலைநாட்டுகிறேன் என்று பரமாத்மாவே கூறியிருக்கிறார். அவரும் அவதரிக்கிறார்; வேறு டாக்டர்களையும் அவ்வப்பொழுது அனுப்புகிறார்.

தற்காலத்தில் உலகம் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறது. உலகத்தின் போக்கு அந்த நோய்களையே மேலும் மேலும் விருத்தி செய்துகொண்டு போவதாக இருக்கிறது. உலகம் துன்பத்தில் ஆழ்ந்து பரிதவிக்கிறது.

மஹாத்மா காந்தி பிறந்தார். உலகத்தைப் பிடித்திருக்கும் நோய்களைப் பரிசோதித்து அறிந்தார். அவைகளைப் போக்க, புராதனமான நம் தேசத்தில் ஏற்பட்ட வைத்திய முறைகள்தாம் உத்தமமானவை என்று அவைகளைக் கடைப்பிடித்தார். 'அஹிம்ஸை என்ற தர்மத்தைக் கைக்கொண்டால் காமக் குரோத லோப மோஹ மத மாச்சரிய ஆதி நோய்களெல்லாம் தாமே பறக்கும். ஸத்துவ குணம் தானாகவே தலை எடுக்கும். உலகம் துன்பங்களிலிருந்து விடுபட்டு க்ஷேமத்தை அடையும். ஸத்துவ குணத்தால் உலகம் உஜ்ஜீவிக்க முடியும்' என்று பறை சாற்றினார்.

உலகம் க்ஷேமம் அடைய வேண்டுமென்றால் இந்த வைத்தியத்தால்தான் அடையப் போகிறது என்று உலக சரித்திரத்தினாலேயே நாம் அறிகிறோம். அவருடைய வைத்தியம் உடனேயே பலனளிக்காமற் போகலாம். ஆனால் அந்த மருந்து மனத்தில் ஊறித்தான் உலகத்துக்கு க்ஷேமம் கிடைக்கப்போகிறது. அதைத்தவிர உலகத்தில் ஏற்பட்டிருக்கும் நோய்களுக்கு வேறு மருந்தே இல்லை என்பது திண்ணம்.



பட்டு
புடவைகள்

மைசூர் பிலேச்சர் பட்டில்
செய்தது கண்ணைக் கவரும்
கெட்டிச் சாயங்களில் அச்சடிக்
கப்பட்ட பார்டர்கள் உள்ளது.

முதன் முதலாக இந்தியாவில் பட்டில் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்யும் ஆலை.

ஸவுத் இந்தியன் ஸில்க்ஸ் லிமிடெட்
குடியாத்தம் தென் இந்தியா

SISK-S-TM

ஏன் நம்ம பள்ளிக்கூட வாத்தியார்தான்!

தமக்கும், தம் குடும்பத்திற்கும் இன்ஷ்யூரன்ஸ்தான் சிறந்த பாதுகாப்பு என்பது அவருக்கு வெகு நாளாய்த் தெரியும். ஆனால் அவருடைய சொல்ப வருமானம் அவர் இன்ஷ்யூர் செய்துகொள்ளத் தடையாக இருந்தது.

இதை யோசித்தே நாங்கள் அவர் சொல்ப வருமானத்துக்குத் தகுந்தபடி, சிறு தொகைகள் கட்டுவதற்கு அனுகூலமாக ரூ. 500-க்கும், அதற்குக் குறைந்த தொகைகளுக்கும இனஷ்யூரனஸ் பாலிஸிகள் வெளியிடுகிறோம.

யுனைடெட் இந்தியா

பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்,

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்ஸ்,
எஸ்பிளனேட், மதராஸ்.

உலக அமைதி

ப. சுப்பராயன்

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றால், நமது தாய்நாட்டின் வழியாகத்தான் ஏற்படவேண்டும். மேல் நாட்டிற்கும் நமது நாட்டிற்கும் பல நூற்றாண்டுகளாகச் சம்பந்தம் இருந்த விஷயம் எல்லோரும் அறிந்ததே. நம் தமிழ் நாட்டார் கிரேக்க தேசத்தினருடன் வர்த்தக சம்பந்தம் வைத்திருந்ததை, நம் பழைய நூல்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். தற்போதைய உலக நாகரிகமே நமது நாட்டிலிருந்து உலகம் முழுதும் பரவியதென்பதை நாம் சொல்லாமலே எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் அப்படியிருந்தும் நமது தாய் நாடு இப்பொழுது இருக்கும் நிலைமையை உத்தேசித்துப் பார்த்தால் மிகவும் வருந்தத்தக்கது.

மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து நமது நாட்டிற்கு வந்தது முதல், நமது நாடு சுதந்திரம் அடைந்து உலகத்துக்கே வழிகாட்டியாக இருப்பதற்கு எவ்வகையில் சீர்திருத்தலாம் என்பதைத் தம் வாழ்நாளின் சிறந்த கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதற்காகத்தான் அஹிம்சா வழியாகவும் ஒத்துழையாமையினாலும் நாட்டின் சுதந்தரத்தை அடைவதற்காகக் காங்கிரஸிற்கே புத்துயிர் கொடுத்து, சென்ற 23 ஆண்டுகளாக அரும்பாடு பட்டிருக்கின்றார். நமது ஜனங்களிடத்தில் தைரியமும் சுயமரியாதையும் இப்பொழுது பரவியிருப்பது அவருடைய செயலாலே என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜப்பானியர்கள் ஆசியாக் கண்டத்தில் ஒரு புதிய ஏற்பாடு செய்து அந்தக் கண்டத்தில் தங்கள் ஆட்சியை முழுவதும் நிறுவவேண்டும் என்று சொல்வதைப் பல வருஷங்களாக எதிர்த்துள்ளார். அப்படியிருக்க ஜப்பானியர்களுக்கு உதவியாக இருப்பதற்கு இவர் எண்ணியுள்ளார் என்று சொல்வது மிகவும் தவறு. இதற்கு அத்தாட்சியாக ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கே ஒரு தூணாக நிற்கும் பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் சொன்னதிலிருந்தே அறிந்துகொள்ளலாம்.

அவர், "காந்தியடிகள் உலகத்திற்கே ஒரு பெரு மகான். அவர் சொல்லும் வழியே எல்லோரும் செல்வது கஷ்டமாக இருந்தாலும் அந்த வழி உலகத்தைச் சீர்திருத்தும் வழி என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதுவுமல்லாமல் அவர் ஜப்பானியர்களுக்கோ ஜர்மனியார்களுக்கோ உதவியாக இருக்கிறார் என்று சொல்வது மிகவும் தவறு" என்று லண்டன் மாநகரிலேயே எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படியிருந்தும், அமெரி போன்றவர்கள், அவர் ஒரு புரட்சியை ஏற்படுத்தி இந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்களுக்கும் அவர்களைச் சேர்ந்த ருஷியா, சீனா, அமெரிக்கா தேசங்களுக்கும் எதிராக இருக்கிறார் என்று சொல்லி அவரைச் சிறையிலேயே அடைத்து வைப்பதற்கு வழி தேடுகின்றனர். அதுவும் நமது தேசம் இப்போது பஞ்சப்பிணியில் அகப்பட்டுக் கஷ்டப்படும் சமயத்தில் அவர் வெளியில் இருந்தாராயின், அரசியலை மறந்துவிட்டு, அதைச் சீர்திருத்துவதற்குத் தம்முடைய உடல் பொருள் ஆவி யாவற்றையும் அர்ப்பணம் செய்வார் என்பதை நம் அரசாங்கத்தார் அறியாமல் இருக்கின்றனர்.

நம் வைஸ்ராய் லார்டு வேவல் வந்ததிலிருந்து இந்த உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி தேடி வருகிறார் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆயினும் அதற்குச் சுலபமான வழியை இன்னும் அறிந்து கொண்டார் என்று சொல்ல முடியாது. அமெரியோ, "கிரிப்ஸ் திட்டம் இன்னும் இருக்கிறது. அதை அமுலுக்குக் கொண்டு வராத காரணம் இந்தியர்களுக்குள் இருக்கும் பிளவுகளே" என்று சொல்லி மழுப்பிவிடுகிறார். ஆனால், தேசத்தில் இருக்கும் கஷ்ட நிலையை நிவர்த்திக்கவேண்டுமென்றால் ஆங்கில அரசாங்கந்தான் இதற்கு வேண்டிய

முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சிலர் மறந்து விடுகின்றனர்.

இப்பொழுது இருக்கும் நிலைமை மாறவேண்டுமென்றால் காங்கிரஸ் லீக் ஒப்பந்தம் முக்கியம் என்பதை அமெரியே பல தடவைகளில் சொல்லியிருக்கிறார். அந்த ஒப்பந்தம் வேண்டுமென்றால் காங்கிரஸ் தலைவர்களை வெளியில் விடா விட்டால் இது முடியாதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதைத்தான் மகாத்மா அவர்கள் உண்ணுவிரதம் இருந்த சமயத்தில் லார்டு வின்லித்கோவுக்கு எழுதிய கடிதத்தில் விவரித்துள்ளார். அவர், "ஒன்று என்னை விடுவித்துத் தேசத்தின் நிலைமையை நான் அறிந்துகொண்டு அதற்குமேல் ஏதாவது செய்வதற்கு எனககு வழி காட்டுங்கள்; இல்லாவிடில் இரண்டாவதாக என்னைக் காங்கிரஸ்கமிட்டி அங்கத்தினர்களுடன் சேர்த்துவைத்துக் காங்கிரஸின் பேரில் அரசாங்கத்தாருக்கு இருக்கும் குறைகளை எடுத்துக்காட்டிக் காங்கிரஸின் கொள்கையை மாற்றுவதற்கு வழி தேடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். அதற்கும் அரசாங்கத்தார் இணங்கவில்லை. ராஜாஜி, ஸர். தேஜ் பகதூர் சப்ரு முதலியவர்கள் மகாத்மாவைச் சந்தித்து இப்பொழுது இருக்கும் நிலைமையை மாற்றுவதற்குப் பேச வசதி கொடுக்கவேண்டும் என்று கேட்டதையும் மறுத்துவிட்டனர்.

ஜனரலிஸிமோ சியாங்கே ஷேக் சீனுவுக்கு உதவி புரியவேண்டுமென்றாலும், பர்மா ரோடைக் கைக்கொண்டால்தான் முடியும்; அப்படிச் செய்வதற்கு இந்தியாவில் சமரஸம் எவ்வளவு முக்கியம் என்பதைப் பல தடவைகளில் எடுத்துக்காட்டியுள்ளார். இந்தச் சமரஸத்திற்காகக் காந்தியடிகளுக்கு ஏதோ சொல்லியனுப்பியிருக்கிறார் என்கிற வதந்தி சில நாட்களாகப் பரவியிருக்கிறது. இதிலிருந்தாவது ஏதாவது சமரஸத்திற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா என்ற ஆசை ஜனங்கள் மனத்தில் இப்பொழுது குடிகொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் அரசாங்கத்தாரே வழி தேட வேண்டும். காந்தியடிகளைச் சிறைக் கதவு மூடியிருக்கிறது; அவர் இல்லாமல் இந்த நாட்டில் அமைதி உண்டாகாது என்பது அரசாங்கத்தாரே அறிந்த விஷயம்.

இந்த யுத்தத்தின் லக்ஷ்யம், எல்லா ஜனங்களும் ஒன்றுபட்டு ஜனநாயகம் உலகம் முழுவதும் பரவி, சகோதரத்துவம் வளர்ந்து, உலகம் அமைதி அடைய வேண்டும் என்பதே என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் அநேகந் தடவைகள் சொல்லியிருக்கிறார். இது உண்மையாக இருந்தால் மகாத்மா காந்தியை விடுவித்து, அவர் லீக் தலைவர்களுடன் பேசி, கிரிப்ஸ் திட்டத்தின் வழியாகத் தேசிய அரசாங்கம் நிறுவுவதற்கு வழி தேடவேண்டும்.

அது அரசாங்கத்தாரால்தான் செய்ய முடியுமே ஒழிய மற்ற எவராலும் செய்ய முடியாது. இந்தியாவில் அமைதி ஏற்பட்டால்தான் ஐரோப்பாவும் ஆசியாவும் ஒன்றுபட்டு உலகத்தின் அமைதியை நிறுவுவதற்கு வழி தேடலாம். இதை அரசாங்கத்தார்கள் செய்வார்களா என்பதுதான் இப்போதைய கேள்வி. உலக அமைதிக்கு இது தான் சாவி. இது முடிந்தால்தான் ஜனங்கள் தற்போது நடக்கும். மனிதனை மனிதன் அழிக்கும் வழி நின்று, காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மத்தின் வழியாக உலகம் அமைதி அடையும்.

மூன்று அநுபவங்கள்



அ. ஸ்ரீநிவாஸராகவன்

1

நாடகமேடை இளவரசி குக்குடகான குயிற்குரலி, அரசிளங்குமரியாக ஏதோ ஒரு நாடகத்தில் - எந்த நாடகமானால் என்ன? - நடிக்கிறாள். அரசிளங்குமரி என்றால் அரண்மனை நந்தவனத்தில் தோழியருடன் பூக்கொய்ய வேண்டுமென்பது நாடகப் பிரபஞ்சத்தின் மாறாத விதியாக இருந்த அந்தக் காலம். 'இழைக்கின்ற' அவ்விதி முன் செல்ல, பின் பாட்டுக்காரரின் கட்டைக்குரல் திரைக்குப் பின் 'இரங்கி எங்க', 'வரும், வரும்' என்று 'தழைக்கின்ற உள்ளத்த'ராகி ஆரவாரிக்கும் மகா ஜனங்கள் முன், ஸ்ரீமதி கு. கா. குயிற்குரலி பிரசன்னமாகிறாள்; ஆம், பாடிக்கொண்டுதான்:

"காட்சி கண் காட்சியே - சிங்கார
நந்தவனத்தின்
மாட்சி நல் லாட்சியே."

குயிற் குரலியின் குரல் கீச்சிட்டுத் தாவுகிறது. அதைப் பிடிக்கப் பின் பாட்டின் மூக்கும், ஆர்மோனியக்காரரின் விரலும், தாளக்காரரின் சமயோசித சாதுரியமும் முயல்கின்றன. 'அகா'...'பேஷ்...பேஷ்', 'என்ன போடு போடுகிறாள்', 'இதுதான் ஐயா பாட்டு' என்ற கோஷங்கள் சுருட்டுப் புகைப் படலத்தைப் பிளக்கின்றன. தரைப் பகுதியிலே உற்சாக வெள்ளம் கரை புரண்டு சுழல்கிறது. 'வெந்தூர் சேலாண்டி', 'பண்டித நோதியாள் மேரு', 'மதிச்சியத்துலே', 'வண்ணான் வந்தானே' என்ற கூச்சல்களுக்கிடையே 'ஒன்ஸ் மோர்' என்ற காடி ப்ரகிருதி ஒன்று ஓயாமல் உறுமுகிறது. ஸ்ரீமதி குயிற்குரலி வெற்றிலைக் காவி மின்னும் மோகனப் புன்னகையுடன், மறுபடியம் சோலையின் காட்சியின் மாட்சியைச் சங்கீத ஆட்சியோடு விவரிக்கத் தொடங்குகிறாள். வேதனை தாங்காமல், கொட்டகையிலிருந்து நழுவி விடுகிறேன்.

2

மூங்கிற் பாய்க் கொட்டகை. வரிசை வரிசையாய்ப் பந்தலை அலங்கரித்த சிறிய மடக்கு நாற்காலிகளில், ஒன்றாம் இரண்டாம் வகுப்புப் பெரியவர்கள், ஒற்றைக் காலில் உட்காரும் நவீன பகீரத யோகம் பயின்றுகொண் டிருக்கிறார்கள். மூன்றாம் வகுப்பு ஏழைகளில் நான் ஒருவன். எங்களுக்கென்று பதின்மூன்றாம் பசலி விரிப்புப் போடப்பட்டிருக்கிறது. வர்ணம் மங்கி, ஏகலைவன் நாய்போல் சல்லடைக் கண்ணாய்த் துளைக்கப்பட்டு, என் கடன் பணி செய்து கிழிவதே என்று தத்துவம் பேசித் துவண்டது அந்த விரிப்பு. ஆனால் இதையெல்லாம் கவனிக்க நேரமில்லை. சுருதியின் அலையொலி தூண்டவே, கொட்டகையின் மூங்கில் தூண்மேல் என் உடலைச் சார்த்திவிட்டு, காதில் வந்து அமர்ந்தது என் ஆத்மா. அன்று புல்லாங்குழல் கச்சேரி.

இதோ குழல் நாதம். அடேயப்பா, என்ன ஜிலுஜிலுப்பு! அந்தத் தாரஸ்தாயி ஷட்ஜத்தில்தான் எவ்வளவு நீளமான கார்வை! சுருதியைத்தான் எப்படிச் சிக்கெனப் பிடித்துத் தன்னை இழந்து விடுகிறது! கனவு உலகில் விரிந்த பெயர் தெரியாத நாதக்கடல் ஒன்றை நோக்கிச் செல்லும் ஜீவநதிபோல் பொங்கும் அந்தக் கார்வை சரேலென விரிந்து ஸ்வர ஜாலங்களாகத் துள்ளிப் பெருகுகிறது. "என்ன ராகமோ" என்று தயக்கத்துடன் கேட்கும் என் அறிவை ஒதுக்கித் தள்ளி நிறுத்திவிட்டு, இசை வெள்ளத்தில் பாய்ந்துவிடுகிறேன். அவ்வளவுதான். மூங்கிற்பாய்க் கொட்டகையும், கோணல் தூண்களும், பணக்காரர் தலைப்பாகைகளும், ஜரிகைத் துப்பட்டாக்களும், அழுக்கடைந்து மங்கிப் போன ஜமக்காளமும் மறைந்துவிடுகின்றன. பழைய நினைவுகள் - எத்தனை ஜன்மங்களிலிருந்தோ - உருவில்லாமல் வந்து கவிகின்றன. புதிய ஆதர்சங்கள் - எந்தப் பிறப்பில் அவை முற்றுப் பெறுமோ - பனிப்படலத்தில் ஆடும் காலை ஒளியைப் போல் மங்கலாக மெல்ல அசைந்து எங்கேயோ அழைக்கின்றன. காதின் மூலமாகப் பெற்ற பிரகிருதி இசைகள் -

காற்றின் சலசலப்பு, பிற்பகல் மோனத்தில் குயிலின் கானம், மரங்களின் முனகல், மகளிர் சிரிப்பு, குழந்தைகளின் குதூகலம், - கண்கள் கண்ட காட்சிகள் பல, பலவகை நறுமணங்கள், புலன்கள் வரித்த இன்பமெல்லாம் ஒன்றாக உதயமாகின்றன. உணர்ச்சிகள், மனநிலைகள், கணக்கில்லாமல் அடுக்கடுக்காய் ஒன்றையொன்று தழுவி, இது அது என்று பிரிக்க முடியாமல் ஒரே அநுபவமாகப் பின்னி என் இதய வெளியை நிறைக்கின்றன. ராகக் குழைவுகளும், சஞ்சாரக் கிரம வளைவுகளும், நடைவீச்சுக்களும் அமைத்த மேடையில் ஏறிப் பூரணத்வம் என்ற வான வளையை ஜீவன் தொட்டுவிடுகிறது. மறுபடியும் அந்த மேடை சுருதியில் கரைந்து மறையும்போது மனித வாழ்க்கையின் அநுபவமெல்லாம் பெற்றுவிட்ட உணர்ச்சியுடன், கிழிந்த ஜமக்காளத்தில் கிடக்கும் இந்தப் பைத்தியக்கார உடலுக்கு என் ஆத்மா திரும்பிவிடுகிறது.



3

கச்சேரி முடிவடையும் தருணம். ஜனங்கள் இருந்த நிம்மதியில், கோயிலுக்கருகே புரண்ட கடலின் பிரணவநாதம் தெளிவாகக் கேட்டது. அதன் சாயைபோல் தம்புராவின் ட்ருலும் லும் தொம் இழைந்தது. எதையோ எதிர்பார்ப்பதுபோல், பாடகர் பிடில்காரரைப் புன்னகையுடன் பார்த்தார். அர்த்த பாவத்துடன் பிடில்காரர் தலையசைத்தார். இதைக் கவனித்த மிருதங்க வித்துவான் 'நீ நாம ரூப முலகு' என்ற மங்கள கீர்த்தனத்தை எதிர்பார்த்து, 'தீம்' என்ற ஒலி விரலால் சுருதியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டார்.

அது வரையில், கற்சிலைபோல், தம்மை மறந்து இசையிலே ஈடுபட்டு வந்த கிழவர் திடீரென்று தம் நினைவு பெற்றவர்போல் பேசினார்:

"இருந்தாலும், முருகன் பேரில் ஒரு தமிழ்ப் பாட்டு இல்லாமலா கச்சேரியை முடிக்கிறது?"

'கூடாது' என்று கடல் குமுறியதும், 'தவறுதான்' என்று தம்புரா விம்மியதும் பாடகர் காதில் விழுந்திருக்க வேண்டும்; ஏனென்றால், ஒரு கணநேரத்திற்குத் தம்புராவின் கார்வையில் ஆழ்ந்து, கடலையொத்த கம்பீரமான குரலில் பாடத் தொடங்கினார்:

"வானத்தின் மீது மயிலாடக் கண்
மயில்குயி லாச்சுதடி" [டேன்

தெளிந்த தமிழ்ச்சொற்கள், தாரஸ்தாயி ஷட்ஜமும், மத்யஸ்தாயி காகலி நிஷாதமும் பின்னிய கமக ஊஞ்சலில் ஆடி, மத்யஸ்தாயி பஞ்சமப் பொய்கையில் தள்ளி விழுந்தன. என் மன உலகத்தில், எல்லையற்ற வானவெளி பரந்தது. அதன் நீலப்படலத்திலே, அந்தியும், வைகறையும், இந்திர தனுசும், சூரியனும், சந்திரனும், தாளராகங்களும் ஒன்றாக ஆடி, பிரம்மாண்டமான மயில் தோகையால் விரிந்தன. மயிலின் அலகு அண்ட நிழற் பின்புறத்தில் உள்ள ஒளியை, அடிப்படையான சத்திய தத்துவத்தைத் தொட்டது. அந்தத் தத்துவம் தானே வார்த்தைக்கு அப்பாற்பட்ட இசைவடிவாய் எங்கும் நிறைந்தது. அண்ட நடனம் ஆடும் மயிலாகி, மயில் குயிலாகி, குயிலின் குரல் பிரணவ விந்யாசமாகப் பரிணமித்துவிட்டது.

நான் என் நினைவு பெற்ற பொழுது, கச்சேரி முடிவடைந்து ஜனத்திரள் கலைந்துகொண்டிருந்தது. கனவுக்கும் நனவுக்கும் இடையே உள்ள அற்புத நிலையில் நானும் வெளியே வந்தேன். பால் போன்ற நிலவு வெண் மணற் பரப்பின்மேல் தூங்கியது; தூங்காமல், நித்தியத்துவம் தேடி அலையும் ஞானியைப்போல், கடல் எதையோ தேடி, தரையைத் தொட்டு மயங்கியது. "வானத்தின் மீது..." என்ற சொற்களைத் தொட்டுத் தொட்டு என் நினைவு அலை பொங்கி எக்களித்தது.

4

கலை என்பது மனித அநுபவத்தின் பிரதிபிம்பம். இது சொற்களால் அமைந்தால் கவிதை; ஒலிகளால் அமைந்தால் இசை. சொற்களும் ஒலிகளும் ஒன்றாகக் கலந்து அநுபவ வெளியீட்டுக் கருவிகளாக அமையும்போது இரண்டு கலைகளின் சம்மேளனத்தைப் பெறுகின்றோம். சாதாரணமாக, இவ்விரண்டு கலைகளும் சம அளவில், அதனதன் தனிச் சக்தி குன்றாமல் கலப்பதில்லை. சிறந்த கவிதையோடு இசை கலக்கும்போது, கவிதை ஓங்கியும், இசை குறைந்துமே விவரிக்கின்றன. கம்பனுடைய பாட்டு ஒன்றை இசையோடு பொருத்திப் பாடும்போது, கவிதைக் கலையின் அழுத்தமும் போக்கும் இசைக் கலையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பது தெளிவாகும்.

பொன்னின் ஒளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்
மின்னின்நிழ லன்னவள் தன்
மேனிஒளி மான
அன்னமும் அரம்பையரும் ஆரமு
தும் நாண
மன்னவர் இருந்தமணி மண்டபம்
அடைந்தாள்

என்ற பாடலை நாட்டை ராகத்தில் அமைப்பதாக வைத்துக்கொள்வோம். பாடலில் நான்கு அடிகள்; இந்த வரம்புக்குள்ளே தான் நாட்டை ராகம் சஞ்சரிக்க வேண்டும். பாட்டின் சொற்கள் பெரும்பாலும் கண்ட நடையில் செல்லுகின்றன.

தீம்தகிட தீம்தகிட தீம்தகிட தீம்த
பொன்னினொளி பூவின்வெறி
சாந்துபொதி சீதம்.

சொற்களைச் சிதைக்காமல் பாடவேண்டுமானால் நாட்டை ராகமும் பெரும்பாலும் கண்ட நடையில்தான் செல்ல வேண்டும்.

தீம்தகிட தீம்தகிட தீம்தகிட தீம்த ,,
பொன்னினொளி பூவின்வெறி சாந்து
பொதி சீதம் ,,
ஸா ஸநிப பா பமக கா கமக கா ஸா ,,

ஆகவே நாட்டை ராகத்தின் பல்வேறு நடைகளும் வண்ணங்களும் அவற்றின் மூலம் உணர்த்தக்கூடிய எத்தனையோ வகை பாவங்களும் நமக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றன. கம்பனுடைய அருமையான கவிதைக்கு இசை கையாளாக நின்று உதவுகிறது. அவ்வளவுதான்.

ஏதாவது ஒரு ராகத்தைப்பற்றிச் சிந்தனை செய்து அதன் முழு வடிவையும் கருவியாகக்கொண்டு, அதன் மூலம் தன் அநுபவத்தை வெளியிடக் கலைஞன் முயன்றால், முயன்று வெற்றி பெற்றால், தனி இசைச் சிருஷ்டி ஒன்றை நாம் பெறுவோம். இதற்கு இசையச் சொற்களை அமைத்தால், இசையின் கட்டுப்பாடுகளும், அதன் தனிப் போக்கும், சொற்களின் சுதந்திரத்தைக் குறைத்துவிடக் காண்போம். இந்த நிலையில் இசை அமைப்புக்கேற்ற சொற்களைத் தான் கையாள முடியும். கார்வை ஸ்வரங்களுக்கு நெடில்கள்; தாள ஆவர்த்த முடிவில் உயிர்மெய் நெடில் அல்லது 'ன்', 'ம்' போன்று கார்வை வாங்கக்கூடிய மெய்கள்; இசை நடைக்குத் தகுந்த வார்த்தைகள்; ராகத்திற்கோ சொற்கட்டிற்கோ ஏற்றபடி ஓடிவரும் மோனையும் எதுகையும் - இவ்வளவு கட்டுப்பாட்டுக்குள்ளே சொற்கள் இயங்க வேண்டும்; அதோடு

இசை உணர்த்தும் பாவத்தைத் தழுவிய கருத்தமைந்த சொற்கள் வேண்டும். இப்படி வார்த்தைகளுக்கு விலங்கிட்ட பிறகு அவைகளிடமிருந்து உயர்ந்த கவிதையை எதிர்பார்க்க முடியாது. ஏதோ இசையின் சக்தியைக் குறைக்காமல் வார்த்தைகள் வாய்ந்துவிட்டால் அதுவே பெரிய காரியம்.

இசையிலே முதலில் தன் அநுபவத்தைத் தேக்கிப் பிறகு அந்த இசைக்கும் அநுபவத்திற்கும் பொருத்தமான வார்த்தைகளைக் கலைஞன் தேடுகிறானா, அல்லது சிறந்த சொல் தொகுதியிலே தன் அநுபவத்தை அமைத்து அதன் பாவத்தைக் கூர்மையாக்க இசையைத் தேடுகிறானா என்பதுதான் கேள்வி. முன்னதைச் செய்பவன் சிறப்பாக இசைக் கலைஞன். பின்னதைச் செய்பவன் சிறப்பாகக் கவிஞன். இசையிலும் கவிதையிலும் ஒருங்கே பயிற்சியும் திறமையும் உடைய ஒரு சிலருக்கு அவர்கள் வெளியிடும் அநுபவம் ஒரே காலத்தில் இசை வடிவாகவும், சொல் வடிவாகவும் அமையும். அந்த அபூர்வமான வாய்ப்பினால், சிறந்த நுணுக்கமான இசையும், சொல்லின் மந்திர சக்தி பூரணமாகப் பெற்ற கவிதையும் ஒன்றாகக் கலந்து இரு கலைகளின் அற்புத சம்மேளனம் கிட்டும். இதோ பாருங்கள், நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலிருந்து ஒரு பாடல்:

“கண்டாமணி ஆடுது
கண்டுபிணி வாடுது”

கோயில் மணியின் ஓசை பக்தன் காதில் விழுகிறது. அப்போது அவனுக்குப் பிறவித் துன்பமே நீங்கிவிட்டது என்ற அனுபூதி ஏற்படுகிறது. இதுதான் கருத்து. இக்கருத்து ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள தொனிப்பொருளாலும், கேட்பவர் கற்பனையைத் தூண்டும் சக்தியாலும் அழுத்தம் பெறுகிறது. ‘ஆடுது’ என்ற சொல்லைக் கேட்டதும் மணியின் அசைவு மனக்கண்முன் தோன்றுகிறது. மணி ஒலி காதில் விழுவது போன்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. இதுபோலவே பிணி என்பது ‘நோய்’; ஆனால் இங்கே ‘பிறவி நோய்’ என்ற தொனிப் பொருளில் பிணி என்ற சொல் ஆட்சி பெறுகிறது. சொற்களில் அதிகமாக வரும் ணகர ஒலியும், ‘டாமணி’ ‘ஆடுது’ என்ற ‘தாதக’ பிரயோகமும் மணி ஒலியையே பிரதிபலிக்கின்றன.

பாட்டு கானடா ராகத்தில் அமைந்திருக்கிறது. ‘ரிபகா’ என்ற கானடா ராக மூர்ச்சனை முதல் அடியிலே பிரயோகமாகிறது. கானடா ராகத்தில் தொனிக்கும் தீர்மானமும், கனிவும் பாட்டின் சொற்களுக்கு அழுத்தம் தருகின்றன. இறைவன் அருள் கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கை - இது வார்த்தைகளிலேயே இருக்கிறது. இதையும், வார்த்தைகளில் இல்லாத, “நமக்குக்கூடவா இந்தப் பேறு?” என்ற உருக்கத்தையும் பாட்டில் அமைந்துள்ள கரனடா ராக சஞ்சாரம் வடிவாக்குகிறது.

அருமையான பாடல். கவிதைப் பண்பும், பாவமும் நிறைந்த தமிழ், தமிழ் நாட்டிலே தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த இசைக் கலையின் மேன்மையம் நுட்பமும் வாய்ந்த இசை, இவை இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து சமைத்த கலைக் கலவை. இது கிடைத்தால் தமிழ்ச் சொற்களின் மூலமாக இசையின் அகண்டத்தையும், இசையின் மூலமாகச் சொற்களின் விஸ்தாரத்தையும் அளந்து, இரண்டின் மூலமாகவும் கலைஞன் பெற்ற அநுபவத்தை நாமும் பெறலாம்.

இதற்குச் சாட்சி தொடக்கத்திலே நான் குறித்துள்ள என் மூன்றாம் அநுபவம். சொற்களே இல்லாமல் இசைக்கலை தனியாக இயங்கி, அநுபவத்தின் பிரதிபிம்பமாக அமைந்து கலைஞன் மனநிலையில் நமக்குப் பங்கு தரக்கூடும் என்பதற்கு என் இரண்டாம் அநுபவமே அத்தாட்சி. சாகித்தியம் எனக்குப் புரியாத பாஷையில் இருக்கும்போது இசை உயர்ந்ததாய் இருந்தால் எனக்குக் கிடைக்கும் அநுபவம் இத்தகையதுதான். என் முதல் அநுபவமோ, அதைப்பற்றிப் பேசுவானேன்? என் காதில் விழுந்தது தமிழ்; உண்மைதான்; ஆனால் கலைத் தமிழ் இல்லை. “காட்சி கண்காட்சியே...” இத்யாதிச் சொற்களைத் தமிழ் அகராதியில் வேண்டுமானால் காணலாம்; இந்த ஒரு காரணத்தினால் ஸ்ரீமதி குயிற்குரலி பாடியது தமிழ் என்றும் சொல்லலாம். அவ்வளவுதான். பாடியது என்று சொன்னேன்? அப்படித்தான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவள் பாடவில்லை; கூச்சலிட்டாள். அந்தப் பாட்டில் - அட கடவுளே, அது பாட்டா? - தமிழும் இல்லை, இசையுமில்லை; ஆகவே அநுபவத்தின் பிரதிபிம்பமாக, சொல்லும் ஒலியும் அமையவில்லை; அங்கே கலையும் இல்லை, இரு கலைகளின் சம்மேளனமும் இல்லை. அதைப்பற்றிப் பேசுவானேன்?

தெய்வத்தீர்க்கு மேல்

கி. ஸரஸ்வதி அம்மாள்

"ஜோஸ்யரே, நான் பிழைப்பேனா? ஜாதகம் பார்த்தீர்களே" என்று படுத்த படுக்கையாக இருந்த மீனாக்ஷியின் தாய் ஜோஸ்யரைப் பாா்த்துக் கேட்டாள்.

"அதுதான் இத்தனை நாழி உன் ஆம்படையானுக்கு எடுத்துச் சொல்லிண்டிருந்தேன். உனக்கும் சொல்லித் தைரிய மூட்டச் சொன்னான். உள்ளே வந்தேன். ஆயுஸுக்கு ஒண்ணும் பயமில்லே; கவலைப் படாதே. இன்னும் இரண்டு மாசந்தான் சனிதசையிலே சூரியனுடைய புக்தி படுத்தறது. இரண்டுபேரும் பரம வைரியோன்னோ? சங்கராந்தி ஆகவேண்டியது தான். சூரிய புக்தி முடிந்து சந்திர புக்தி ஆரம்பமாகிறது. அப்புறம் ஒண்ணும் பண்ணாது. படிப்படியா குணந்தான். நான் சொல்றேன்னு பாரு."

"என்னமோ, உங்க வாயாலே சொல்லுங்கோ. பலிக்கட்டும்."

"நானா சொல்றேன்? சாஸ்திரம்னா சொல்லறது?"

"அவர் ஜாதகத்தை, பையன் கிருஷ்ண மூர்த்தி ஜாதகத்தை ரெண்டையும் பார்த்தேளா? அதுலே ஏதாகிலும் எனக்குப் போராதுன்னு இருந்தா?"

"அதையுந்தான் பார்த்தேன். எல்லாத்திலேயும் படுத்தறத்துக்கு வேணுங்கறது இருக்கு. அதுக்குமேலே ஒண்ணுமில்லே." இப்படிச் சொல்லிக்கொண்டே ஜோஸ்யர் அங்கு இவர்கள் ஸம்பாஷணையை ஆவலாய்க் கவனித்துக்கொண்டிருந்த சிறு பெண் மீனாக்ஷியைப் பார்த்து, "இந்தாடி குட்டி, உள்ளே கேட்டுக் கொஞ்சம் மோர்த் தீர்த்தம் வாங்கிண்டு வா, நல்ல ஆம்படையான் வருவன்" என்றார் சிரித்துக்கொண்டு.

"போடி தாத்தாவுக்கு மோர் வாங்கிண்டுவா" என்று அவள் தாய் சொல்லிவிட்டு, "வாஸ்தவமாகவே ஜோஸ்யரே, குழந்தை ஜாதகத்தையும் பார்த்து, எப்படி வாழ்க்கைப்படுவெள், என்னமாயிருப்பள் எல்லாம் சொல்லுங்களேன். இருந்து பார்க்கிறேனோ என்னமோ; காதாலே யாவது கேட்கிறேன்" என்றாள்.

'இருந்து பார்க்கிறேனோ' என்ற தாயின் வாக்கை மீனாக்ஷியின் கண்களில் கலகலவென்று கண்ணீரை வரச் செய்து விட்டது. அதை அவர்கள் பார்க்காமல் இருக்கவேண்டியே அவள் மோர் வாங்கி வர உள்ளே ஓடினாள். அப்பொழுது மீனாக்ஷிக்கு ஏழு அல்லது எட்டு வயசிற்கு மேல் இல்லை. இருந்தாலும் தாய் பத்து மாதமாய்க் காயலாவாகக் கிடப்பது அவளை உளளூறக் கவலைப்படுத்தியது. பாதி சமயம் தன்னோடொத்த பெண்களுடன் விளையாட்டில்கூட அவள் மனம் செல்லவில்லை.

திரும்பி அவள் மோருடன் வந்த பொழுது, ஓர் ஓலைச்சுவடியை வெகு கவனமாய் மூக்குக் கண்ணாடி அணிந்து பார்த்துக்கொண்டிருந்தார் ஜோஸ்யர். அவர் சொன்னது முழுதும் மீனாக்ஷிக்குத் தெரியாவிட்டாலும், "தனாதிபதியும் லாபாதிபதியும் பரஸ்பர வீக்ஷண்யம், அம்மா. குழந்தைக்கு நல்ல தனலாபம் உண்டு" என்று சொல்லிக்கொண்டிருந்தது தெரிந்தது.

ஜோஸ்யர் போனபிறகு மீனாக்ஷியைத் தன்னிடம் அணைத்துக்கொண்டு அவள் தாய், "நல்ல பணக்காரியாயிருப்பயாம்டி கண்ணே! நல்ல மனசாய் தான தருமம் செய்துண்டிரு, தெரியுமா?" என்றாள். பணக்காரி என்ற சொல் பணத்தின் பெருமையை அறியச் சக்தியற்ற அந்தச் சிறுமியைக்கூட ஸந்தோஷத்தால் தலை நிமிரச் செய்தது. அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே வந்த அவள் தமையன் கிருஷ்ணமூர்த்தி, "பணக்காரி என்கிறதுக்குள்ளே ஸந்தோஷத்தைப் பாரு. தலை கழுத்துலே நிக்கல்லே!" என்றான் கிண்டலாக.

"போடா, குழந்தையை ஒன்னும் சொல்லாதே. உனக்குப் பத்து வயசு சின்னவள். உன்னை விட்டா அவளுக்கு யாரு? நீதான் அவளைப் பார்த்துக்கணம். நான் பிழைப்பேன்னு தோணல்லே" என்றாள் அவர்கள் தாய், வருத்தத்துடன்.

"என்னம்மா, ஜோஸ்யர் சொன்னதை வேறு கேட்டுவிட்டு மறுபடியும் இப்படிப் பேசறயே? சாவைப்பத்தியே நினைக்கப் படாதுன்னா, நீ அதுதான் சதா நினைவாயிருக்கே" என்றான் கிருஷ்ணமூர்த்தி. 'அம்மா இருந்தாலும் செத்துப்போவதையே நினைச்சண்டு இருக்கா, அதுதான்

தப்பு' என்று மீனாக்ஷிக்கும் தோன்றிற்று. 'நான் பணக்காரியாவேன்னு ஜோஸ்யர் சொன்னா அம்மா நம்பறா; அவரே அவள் பிழைப்பாள்னு நம்ப மாட்டேங்கறாளே, அது ஏன்?' அவளுக்கு அது புரியவே இல்லை. அதை நினைக்கும்பொழுது வேதனை வேறு தாங்காது உண்டாயிற்று.

கடைசியில் ஜோஸ்யர்கள், வைத்தியர்கள் எல்லாருக்கும் மேலாக அவள் தாய் நினைத்ததுதான் சரியாக இருந்தது. இரண்டுமாதம் கழிந்து சூரியபுக்தி முடிந்து சந்திர புக்தி ஆரம்பிக்கும் அன்று, அவள் கண்மூடியே விட்டாள். சிறுமி மீனாக்ஷியின் மனத்தில் மட்டும் அவள் தாய் அவளை அணைத்துக்கொண்டு அன்று சொன்ன சொல் மறக்காமல் பதிந்தது. 'அவள் பணக்காரியாவாள்; அப்பொழுது தான தருமங்கள் செய்வாள்' என்பதுதான் அது.

அதற்கப்புறம் இப்பொழுது முப்பது வருஷங்கள் சென்றுவிட்டன. 'மீனாக்ஷி' என்ற அம்பாளின் பெயருக்கு இரண்டு பொருள்கள் கவிகள் சொல்லுகிறார்கள். மீன் வடிவைப் போன்ற அகன்று நீண்ட கண்கள் என்பது ஒன்று. மற்றதுதான் பின்னும் விசேஷமானது. மீன் குஞ்சு பொரிக்கும் முறையே தனி. தண்ணீரில் முட்டை இட்டுக்கொண்டே போய், போகும்போதே திரும்பிப் பார்த்துக் கொண்டே போகுமாம். அந்தப் பார்வை பட்டதுமே குஞ்சுகள் உயிர்பெற்றுவிடுமாம். ஸாக்ஷாத் அம்பிகையின் கடைக்கண் பார்வைக்கும் உயிர்களை உஜ்ஜீவிக்கும் சக்தி உண்டாதலால், மீனின் தன்மை பொருந்திய கண்கள் என்று பொருள்பட மீனாக்ஷி என்று பெயர் அமைந்தது என்பதாகச் சொல்லுகிறார்கள். நம் மீனாக்ஷியின் விழிகளும் நீண்டு அகன்றவையே. அதனால் உயிர்ப்பிக்கும் சக்தியொன்றும் அவைகளுக்கு ஏற்பட்டுவிடவில்லை. அதற்கு மாறாக அவளைச் சுற்றி அவள் அன்புக்குப் பாத்திரமானவர்களின் சாவைத்தான் அவை அதிகம் பார்த்தன.

அவள் தாய் இறந்து நாலைந்து வருஷம் கழித்து அவள் கல்யாணம் நடந்த வருஷமே அவள் தந்தை இறந்துபோனார். பிறகு அவள் கணவனுடன் வாழ்ந்ததெல்லாம் நாலைந்து வருஷங்களுக்குள் தான். அதிலும் அவள் முழுதும் ஸந்தோஷமாக இருந்தாளென்று சொல்லுவதற்கில்லை. கணவன் செலவாளியாக இருந்தான் என்பதற்காக அவன் தமையன் சொத்தைப் பிரித்துக் கொடுத்து அவனைத் தனியே அனுப்பிவிட்டான். தன் பங்குச் சொத்தையும் சேர்த்து இழக்க அவன் விரும்பவில்லை.

கணவன் பட்டணத்தில் சொற்ப உத்தியோகத்தில் இருந்தான். குதிரைப் பந்தயம், ஸினிமா இவ்விதம் பல துறைகளில் அவன் பணம் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று ஒரு நாள் இரவு பலத்த காயலாவாகிப் பிதற்றலும் பிடுங்கலுமாக அவன் வீடு திரும்பினான். ஒரு வாரத்திற்கெல்லாம் அந்த ஜுரம் அவனைக் கொண்டே போயிற்று. பிறகு மீனாக்ஷி தமையன் ஆதரவில் வந்து சேர்ந்தாள். "உன்னை விட்டால் அவளுக்கு யாருடா?" என்று அவள் தாய் அவனிடம் சொன்னது அப்படியே உண்மையாயிற்று. எங்கோ சேலம் ஜில்லாவில் அவள் கணவனுக்கு இருந்த வானம் பார்த்த சிறு பூமியிலிருந்து ஒரு காசும் அவளுக்கு வரவில்லை. ரொக்கம் பிரித்துக்கொண்டதை யெல்லாந்தான் அவன் செலவழித்துவிட்டான். அவன் ஜாதகத்திலிருந்த தனயோகத்தின் பலன் அவ்வளவுதான். 'அம்மா இருந்தால் இப்போது தன் நிலைமை கண்டு என்ன நினைப்பாளோ? அவளுக்குப் பெண்ணுடைய தனலாபத்தில் அவ்வளவு நம்பிக்கை இருந்ததே!' என்று மீனாக்ஷி நினைத்தாள்.

அண்ணன் வீட்டில் அவளுக்கு ஒரு குறைவும் இல்லை. அவள்தான் வீட்டிற்கு எஜமானி. அவள் மனம் வருந்தக்கூடாதென்று எதிலும் அவள் இட்டது சட்டமாக அவன் வீட்டில் வைத்திருந்தான். மதனிக்கும் அடிக்கடி பிரஸவித்து உடம்பு துர்ப்பலத்தில் மீனாக்ஷி குடும்ப பாரத்தை முழுதும் வகிப்பது செளகரியமாகவே இருந்தது. அண்ணா குடும்பமும் ஐந்தாறு குழந்தைகளுடன் விருத்தியாகி இருந்தது. அவன் ஸம்ஸாரி என்ற பட்டம் பெற்று வரவு செலவுக் கணக்குப் பார்க்கும் நிலைமையில் இருந்தான். பட்டணத்தில் இருக்கும் பெரிய பிள்ளைக்கு மாதம் பிறந்தால் காலேஜுக்கும் ஹாஸ்டலுக்குமாகப் பணம் அனுப்பவேண்டியிருந்தது. குடித்தனக்காரர்கள் மாதமாதம் சுளை சுளையாக ரூபாய்க்கு எங்கே போவார்கள்! பெண்ணொன்று கல்யாணத்திற்கு வயசு நிரம்பி நின்றது. இன்னும் எவ்வளவோ சில்லறைச் செலவு.

அவன் சிரமப்படுவது மீனாக்ஷிக்குத் தெரிந்துதான் இருந்தது. கடன் வாங்கியும் சமாளித்துக்கொண்டிருந்தான். ஒரு பகுதி நிலத்தை விற்க அவன் அவர்கள்



A War of Transport...

போக்குவரவு யுத்தம்

"இந்தப் போர் இரண்டாவது உலக யுத்தம் என்பதற்கு மாருக, பெருத்த போக்குவரவு யுத்தம் என்ற பெயரெடுக்கும் என்று சில சமயம் நினைக்கிறேன். ஏனெனில், உண்மையில், இது போக்குவரவு யுத்தமாகும்."

—அட்மிரல் ஸர் வில்லியம் ஜேம்ஸ், K.C.B., M.P.,
கடற் படைச் செய்தித் தலைவர்.

நம் ரெயில்வேக்கள் இன்று யுத்த தந்திரத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன. நம் நாட்டின் தற்காப்பும் ஜனங்களின் தினசரித் தேவைகளும், இதற்குமுன் என்றும் இல்லா வகையில், அவற்றையே பொறுத்திருக்கின்றன. சரித்திரத்தில் மிகப் பெரிய "போக்கு வரவு யுத்த"த்தில் போரிடவும் வெற்றி பெறவும் அவை உதவுகின்றன. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு,

அநாவசியமாகப் பிரயாணம் செய்யாதீர்கள்

GIP

DONT TRAVEL UNNECESSARILY !



Morning Freshness

பள்ளத்தாக்கில் உங்கள் படுக்கையிலிருந்து, தொலைவில் காணப்படும் அற்புதமும் ஊக்கத்தைத் தட்டி எழுப்புவதுமான காட்சியைக் கண்டுகொண்டே, காலைத் தேநீரும் கையுமாகக் கண்ணாடி வெளிச்சத்தின் அருகில் உட்கார்ந்திருக்கும் ஆனந்தத்தைச் சற்று நினைத்துப் பாருங்கள். உங்களுக்குப் பக்கத்திலேயே பசும் புல்லுத்தரைகளும், அடர்ந்த புதர்களும் தென்படுகின்றன. உயரப் பார்த்தால், பக்கவாட்டில் கத்தரித்துவிட்டாற்போல, நீண்ட தேவதாரு மரங்களைக் காண்பீர்கள். மரங்களின் மட்டத்துக்குமேல், பனியோடைகள் மெதுவாக உருகி ஓடும்போது மிளிர்வதையும், பனிநீர் மேகங்களில் அமிழ்வதையும் காணலாம். பின்னும் உயரத்தில், இந்தியாவுக்குப் பெருமையளிக்கும் மலையுச்சியை - அந்தச் சிகரத்தைக் - காண்பீர்கள். அதைச் சுற்றிப் பொன்னிற ஒளி டால் வீசுகிறது. இதற்குப் பின்னால் தூய ஆகாயம் தெய்விக மஞ்சள் ஒளியோடு விளங்குகிறது. இதுதான் பொன் கலந்த ரோஜா நிற ஒளி.

பழக்கமான இந்தக் காட்சியிலிருந்து விலகியிருக்கும் வைகறைதோறும், நீங்கள் இந்தக் காலைவேளைப் புதுமையையும், மலைக்காட்சியையும் காண விழைவீர்கள். அப்போது இயல்பாக உங்கள் மனம், இந்தக் காட்சியோடு சம்பந்தப்படுத்தும் காலைத் தேநீரையே நாடும். வேலி வியூ தேயிலையில் இந்தக் குணங்கள் யாவும் மிகவும் கருத்தோடு சேமிக்கப்பட்டுள்ளன. புதுமையையும் மணத்தையும் பாதுகாக்க, மலைப் பிரதேசத்திலேயே நாங்கள் இதைப் 'பாக்' செய்கிறோம்.

Green Label
Golden-Gleam
Brown Label
Golden-Glow
Yellow Label

Valley-View

VALLEY-VIEW TEA CO.: CALCUTTA AND DELHI.

1—8, V/T

அம்மாஞ்சியுடன் யோசனை செய்துகொண்டிருந்தது அவன் சொல்லாவிட்டாலும் அவளுக்குத் தெரிய வந்தது. அவர்கள் குடியானவன் குப்பன் ஒரு நாள் மீனாக்ஷியிடம் வந்து முறையிட்டுக்கொண்டான். "அம்மா, எசமான் நிலத்தை விக்கப் போறாங்களாம். நீங்கதான் கூடாதுன்னு சொல்லித் தடுக்கணும்" என்றான்.

மீனாக்ஷிக்குக் கேட்கத் தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "பணமுடைக்குக் கொஞ்சத்தை வித்தா என்னடா மோசம் போச்சு? கடன் வாங்குவதைவிட அது மேலல்லவா?" என்று சொல்லிப் பார்த்தாள். குப்பன் ஒப்புக்கொள்ளவில்லை.

குப்பனுக்குத்தான் அவர்கள் குடும்பத்தினிடம் எவ்வளவு அபிமானம்! அவர்கள் தந்தை நாளிலிருந்து அவன் அவர்களுக்காகப் பாடுபடுகிறான். "நமது கையை விட்டு நிலம் போயிட்டா அப்புறம் என்னா இருக்கு? கௌரவமே போயிடுமே. கூடவே கூடாது" என்றான் குப்பன். "எப்படியாவது அண்ணாவுக்குச் சொல்லுங்க. நான் சொன்னதுக்கு அவரு கேக்கல்லே. நீங்க சொன்னா கேட்பாருன்னுட்டுத்தான் உங்களிடம் ஓடிவந்தேன்" என்றான்.

அதைப்பற்றி மீனாக்ஷி அண்ணாவைக் கேட்டாள். "குப்பன் கூடாதுன்னு அடித்துக் கொள்கிறானே" என்று சொல்லிப் பார்த்தாள். "கடன் ஏறி, நிலம் முழுதும் போவது தேவலையாமா?" என்று தான் அவள் தமையன் பதில் சொன்னான். அதற்கு மேல் அவள் என்ன செய்வாள்! சமைத்துப் போட்டுச் செட்டாய்க் குடித்தனம் செய்யும் ஒத்தாசை தான் அவள் செய்யக் கூடியது. வேறென்ன அவளால் முடியும்? 'சண்டையினால் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் கிராமத்தைக்கூடப் பீடித்திருக்கிறது. மலிந்து கிடக்கும் கறிகாய், நெய், பால், தயிர் எல்லாங்கூட விலை ஏறிக் கிராக்கியாகிவிட்டது; என்ன செய்வது?' என்று மீனாக்ஷி நினைத்தாள்.

இப்படி இருக்கும்பொழுதுதான் ஒரு நாள் கிருஷ்ணமூர்த்தி கையில் கடிதத்தோடு மீனாக்ஷியிடம் வந்தான். "மீனாக்ஷி, இதற்கு என்ன சொல்கிறாய்? உன் நிலத்தை யாரோ விலைக்குக் கேட்கிறார்களாம். ரூபாய் பதினாயிரம் தருகிறார்களாம்" என்றான்.

பதினாயிரமா! அவள் நிலத்திற்கா! இதென்ன அதிசயம்? அவள் காதுகள் சரியாகக் கேட்கின்றனவா? அவளுக்கு நம்பிக்கையே வரவில்லை.

"அதிலிருந்து காலணா வரவில்லையே, அண்ணா. அதற்கா அவ்வளவு தொகை கொடுக்கிறேன் என்கிறார்கள்?" என்றாள் அதிசயத்துடன்.

"பர்மா போனதில் யாரோ செட்டி பணத்தோடு வந்திருக்கிறான். பாங்கிகளை நம்ப மனமில்லை. உங்கள் ஊரையே வாங்குகிறான்போல் இருக்கிறது. நமக்கென்ன, நல்லதாயிற்று. ஸந்தோஷமாக விற்றுவிடுவோமே" என்றான் அவள் தமையன்.

"பணம் வேண்டாம் என்பாரும் உண்டா? அதுக்குச் சொல்லல்லே, அண்ணா. பாவம்! அதை வாங்குகிறவனுக்கு நஷ்டந்தானேன்னு பாத்தேன்" என்றாள்.

இளமையிலேயே வாழ்க்கையின்பத்தைத் துறந்த அவளுக்குப் புராணக் கதைகளை வாசிப்பதும் நீதி சாஸ்திரங்களைப் பயில்வதும் பொழுது போக்காக இருந்தன. அந்தப் போக்கிலே சென்ற உள்ளத்தில் பாவ புண்

ணியம், நியாய அநியாயம், பிறரிடம் கருணை, தெய்வ பக்தி ஆகியவை குடி புகுந்து நிற்பது இயல்புதானே?

"அவன் கேவலம் உழுது பயிரிட அதை வாங்கியதாகத் தோன்றவில்லை. அங்கு அவர்கள் ஏதோ தொழிற்சாலை ஏற்படுத்துவதாகக் கேள்வி. எதுவாயிருந்தால் நமக்கு என்ன? சரியென்று எழுதி ஏற்பாடு செய்யச் சொல்லிவிடுகிறேன்" என்றான் அவள் தமையன்.

மீனாக்ஷி ஒப்புக்கொள்ளத் தடை என்ன இருக்கிறது? பணம் வந்தால் அண்ணாவுக்காவது உதவலாம் என்று நினைத்தாள். விற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கைக்குப் பணமும் வந்து சேர்ந்தது. 'ஜோஸ்யமும் ஒருவாறு பலிக்கத்தான் செய்திருக்கிறது!' என்று மீனாக்ஷி எண்ணினாள்.

இதற்குள் ஊரெல்லாம் இது விஷயம் பரவி, ஏதோ லாட்டரி விழுந்தமாதிரிதான் அமர்க்களப்பட்டது. எல்லாரும் வித விதமாய் அவளை ஸந்தோஷம் விசாரித்தார்கள். அடுத்த தெருவில் இருக்கும் அவள் அம்மாஞ்சி, "பெரிய பணக்காரியாப் போயிட்டே. இனிமே மீனாக்ஷி அம்மாள் என்றுதான் சொல்லவேணும்! மீனாக்ஷி என்று ஏக வசனத்தில் என்னைப் போன்ற பந்துகூடச் சொல்லப்படாது; இல்லையா?" என்றெல்லாம் வேடிக்கை செய்தான். மீனாக்ஷிக்குப் பணம் வந்ததில் சந்தோஷப்படுபவர்களில் முக்கியமாக அவன் ஒருவன். ஊரிலேயே எல்லோரும், 'லக்ஷக்கணக்கில் கிடைத்துவிட்டதா என்ன?' என்று மீனாக்ஷிக்கே தோன்றும்படி பேசினார்கள்.

அவ்வூர்க் கோவில் தர்மகர்த்தா சுப்பையர் காதிலும் இது விஷயம் விழுந்தது. அவர் வயசு சென்றவர். மீனாக்ஷியைக் குழந்தை முதல் அறிந்தவர். இப்பொழுது அவ்வூரில் இடிந்துகிடந்த கோவிலைப் பல பேர் பண உதவியைக்கொண்டு புதுப்பிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார். புதுப்பித்த பெருமை முழுதும் தம்மையே சேரவேண்டுமென்பது அவர் விருப்பம். அதற்கு ஒரு தடங்கல் இருந்தது. இன்னும் கோவில் கர்ப்பக்கிருகத்திற்கு விமானம் கட்டியாகவேண்டும். அதற்கு வேண்டிய பொருள் அனைத்தும் அவருக்குக் கிடைப்பதாக இல்லை. இப்பொழுது மீனாக்ஷிக்குப் பணம் கிடைத்திருக்கும் செய்தி தெரியவுமே, எப்படியாவது உபதேசம் செய்து அவள் மனத்தைத் தர்மகைங்கர்யத்தில் திருப்ப அவளைத் தேடி அவர் வெகு வேகமாக வந்தார்.

"அம்மா, இந்த அதிசயத்தைப் பாரு. சுவாமி காரியம் முடிவதற்கும் கிட்டத்தட்டப் பதினாயிரம் ரூபாய்தான் வேண்டியிருக்கிறது. உன் கைக்கும் அதே தொகை வந்திருக்கிறது. என்றென்றைக்கும் உன் பெயர் நிலைத்து விளங்கவேதான் இந்த மாதிரி நேர்ந்திருக்கிறது. அதிலும் சுவாமி தலைக்கு மேலிருக்கும் விமானத்துக்கு உன் பணம் உதவப்போகிறதென்றால் அந்தப் புண்ணியமும் பேரும் யாருக்குக் கிட்டும்? நீ எத்தனை ஜன்மமாகத் தவம் செய்தாயோ, இந்த நல்ல சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. உங்கள் அம்மாவுக்குக் கோவில் குளத்தில் இருந்த பக்திதான் இதற்குக் காரணம்."

பொதுக் காரியங்களுக்குச் சந்தா சேர்ப்பதையே தொழிலாகக் கொண்ட தர்மதூதர்களுக்கும், இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளுக்கும் பேசச் சொல்லித்தரவேண்டுமா என்ன? கல்லையும் கரைக்கும் அதிசய சாமர்த்தியம் அவர்களிடமுள்ள மூலதனம்.

தர்மகர்த்தாவின் பேச்சைக் கேட்கக் கேட்க மீனாக்ஷிக்கு மயிர் சிலிர்த்தது. சுவாமியே தன்னிடம் யாசகத்திற்கு வந்தது போல் இருந்தது. அவள் சிறு பிராயம் முதல் ஈசுவர பக்தி மணம் வீசும் இடத்தில் வளர்ந்தவள். அவள் வாழ்க்கையும் அதையொட்டியே அமைந்துவிட்டது. ஏதோ அண்ணா குடும்பத்திற்கு உழைத்தது போக மீதி நேரத்தைப் பகவந் நாமஸ்மரணையில்தான் இதுவரையும் அவள் கழித்துவந்திருக்கிறாள். 'அதனால்தான் எனக்கு இந்தப் பாக்கியம் இப்பொழுது கிட்டுகிறதோ?' என்று அவளுக்குத் தோன்றிற்று.

கோவில் கட்டி முடிவதற்கு வேண்டிய அதே தொகை அவளுக்குக் கிடைத்திருக்கிறது. அவ்விதம் நேர்ந்திருப்பது அவள் கோவிலுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே போலும்! ஜோஸ்யப்படி அவள் பணக்காரியாகிவிட்டாள். அம்மாவின் விருப்பப்படி அவள் தருமம் செய்யவேண்டும். அதற்கு இதை விட்டால் வேறு நல்ல சந்தர்ப்பம் அவளுக்கு எங்கே கிடைக்கப்போகிறது? அவள் வாழ்வு முழுவதற்கும், ஏழு ஜன்மத்திற்கும் இது ஒன்றே போதுமே; வேறு என்ன வேண்டும்! அண்ணாவுக்கு வேண்டுமானால் உபகாரம் பண்ணலாம். அது சுவாமிக்குச் செய்வது

போல் ஆகுமா? ஒருவேளை அண்ணா தனக்குப் பணமுடையாக இருக்கும்பொழுது வேறு ஏதோ செய்கிறாளே என்று நினைப்பானோ? அவன் இவ்வளவு நாளும் அவளை வைத்து ரக்ஷித்திருக்கிறான். அதற்கு ஒரு வாறாகப் பிரதி செய்ய அவள் கடமைப்பட்டிருக்கிறாள். ஆனால் அவன் குடும்பத்திற்குத்தானே இவ்வளவு நாளும் அவள் சரீரத்தால் உழைத்திருக்கிறாள்? இன்னும் உழைக்கிறாள். அது போதாதா?—இவ்விதம் இரண்டு விதமாகவும் அவள் மனம் நினைத்தது.

அண்ணாவிடம் அவள் தன் எண்ணத்தைச் சொன்னபொழுது, அவள் பயந்தது போல அவன் தப்பாக நினைக்கவோ தடுத்துச்சொல்லவோ செய்யவில்லை. 'கைக்குப் பணம் வந்த வேகத்தில் அதை விட்டுப் பிரிய அவளுக்கு எப்படி மனசு வருகிறது?' என்றே அதிசயித்தான். தனக்குக் கொடுக்கக்கூடாதா என்று அவன் சிறிதும் நினைக்கவில்லை. இவ்வளவு நாளும் அவள் ஒத்தாசையை எதிர்பார்த்து வழக்கப்படாத அவன் மனசு இப்பொழுது மட்டும் எதற்காக மாறவேண்டும்? ஏதோ அவள் போகிற வழிக்குப் பெரும் புண்ணியமும் ஸம்பாதித்துக் கொள்வதில் அவனுக்கு வெகு திருப்தி. 'இவ்வுலகில் அவளுக்கு வேறு கிடைக்கக்கூடியது என்ன? நாலுபேர் புகழக் கேட்டாவது அவள் மனசு ஸந்தோஷப்படட்டுமே' என்று நினைத்தான். அதை அப்படியே மனசை விட்டு மீனாக்ஷியிடம் சொல்லவும் செய்தான்.

அண்ணா மனசு தெரிந்தபோது அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது. தான் சிரமப்படும் பொழுது தனக்கு உதவாமல் ஏதோ புகழ்ச்சியை விரும்பிச் சுயநலமாகக் காரியம் செய்வதாகவே அவன் கருதவில்லை. அதற்குமேல் அவள் வேண்டுவது என்ன! கோவில் கட்டி முடிந்து கும்பாபிஷேகம் நடப்பதுபோலவும், சுற்றுவட்ட ஊர்களிலிருந்து வந்து கூடிய ஜனங்கள் அவள் தான் கோவில் பூர்த்தியாகக் காரணமென்று தெரிந்து அவளைப் பிரமாதமாகக் கொண்டாடி அவளை நேரில் பார்க்க அவள் வீட்டு வாசலுக்கே வந்துவிட்டது போலவும், என்ன என்னவோ கற்பனையில் ஆழ்ந்துவிட்டாள். சாமி தலைக்கு நிழல் அவளால்தான் ஏற்படப்போகிறது. அவள் அண்ணா குடும்பத்திற்கு ஒரு குறையும் வரும்படி சாமி செய்யமாட்டார் என்று நிச்சயித்தாள்.

அவளுக்கு இருந்த ஸந்தோஷத்தில், "ஏண்டா, சாமிக்குச் செஞ்சா புண்ணியந்தானே? அவர் பதிலுக்கு நன்னாப் பார்த்துப்பாரோன்னோ?" என்று அண்ணாவின் நாலு வயசுள்ள கடைசிப் பையனிடம் சொல்லிக் கொஞ்சுவாள். அன்று இரவு அவள் தூங்கும்பொழுதுகூட இவ்வளவு நாளும் வராத அவள் தாய் கனவில் வந்து ஸந்தோஷத்தோடு அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பதுபோல் இருந்தது அவளுக்கு. முப்பது வருஷங்களுக்கு முன் சிறுமியான அவளிடம் அவள் தாய் விரும்பிச் சொன்னதை இப்பொழுது அவள் அப்படியே நடத்தப் போகும்போது தாயின் ஆத்மா களிப்புறாமல் என்ன செய்யும்?

மறுநாள் அம்மாஞ்சி வந்தபொழுது அவனிடத்திலும் தன் எண்ணத்தை அவள் தெரிவித்தாள். "உன் தர்மசிந்தை ரொம்பவும் உயர்வானது. வெகு நல்ல காரியந்தான். இருந்தாலும், 'முழுப் பணத்தையும் கொடுத்துவிடவேண்டுமா?' என்றுதான் யோசிக்கிறேன்" என்றான்.

"கோவில் பூர்த்தியாகக் கணக்காய் அந்தத் தொகைதானே வேண்டியிருக்காம்?" என்றாள் மீனாக்ஷி.

"கணக்கெல்லாம் சுப்பையர் சொல்லுகிறதுதானே? உண்மையை யார் கண்டது? பாதி சாமிக்கு, பாதி அவர் குடும்பத்துக்கு!" என்றான் அம்மாஞ்சி.

"அதென்னமா நாம் சொல்லுகிறது! நல்ல காரியம் செய்கிறவர்களை இவ்விதம் தூஷிப்பது கெட்ட வழக்கம்" என்று மீனாக்ஷி அம்மாஞ்சியைக் கடிந்து கொண்டாள்.

"நான் காரணம் இல்லாமலா சொல்லுகிறேன்? ஊருக்கெல்லாம் தெரிந்த ரகசியந்தான். உனக்குத்தான் தெரியாது. இந்த அபவாதத்தினால்தான் பணங்கூட முன் போல இப்பொழுது அவருக்கு வசூலாகமாட்டேன் என்கிறது. அவர் குடும்பம் இருந்த ஏழைமை நிலை நாமெல்லாம் அறியாததா? இப்பொழுது இந்தக் கோவில் வேலை ஆரம்பித்தபிறகு அவர் வீட்டில் லக்ஷ்மி தாண்டவமாடுகிறாளே. வீட்டு ஸ்திரீகள் பொன்னும் புடைவையுமாக ஜமாய்க்கிறார்கள். தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருப்பானோ? பணத்தில் புழங்கும்பொழுது வீட்டிற்கும் கொஞ்சம் எடுத்துக்கொள்வது ஸகஜந்தானே? யாருக்காவது கணக்கு ஒப்பிக்க வேண்டுமா; அதில்லை பாரு!"

இப்படி அவன் சொல்லும்பொழுது, சப்பையரின் பேத்தியைச் சர்வாபரண பூஷிதையாய்ச் சரிகைச் சேலையும் அரையுமாக, சாமி ஸந்நிதியில் அடிக்கடி பார்ப்பது அவள் நினைவிற்கு வந்தது. அடுத்தாற்போல் அதே வயசுடைய அவர் தமையன் மகளுக்கு அதில் கால்வாசி நகைகளோ புடைவைகளோ இல்லையே என்று நினைக்கவும், அம்மாஞ்சி சொல்வது சரியாக இருக்குமோ என்று அவளுக்கு ஸந்தேகம் உதித்தது. சிரமப்படும் அண்ணா குடும்பத்திற்குக் கொடுக்காமல், பிறர் பணத்தில் சௌகரியமாக வாழும் மற்றொரு குடும்பத்திற்கு மேலும் பணம் உதவுவதாக முடியுமோ அவள் செய்யப் போகிற தர்ம காரியம்? வெகு அழகு! அவள் மூளை குழம்பியது; ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தயங்கினாள்.

அந்தச் சமயத்தில், "அத்தை, உனக்குக் கடுதாசு" என்று சொல்லி அவள் மருமகள் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்தாள். "யாரு எனக்கு எழுதறவா?" என்று சொல்லிக்கொண்டே அவள் அதைப் பிரித்துக் கீழே கையெழுத்தைப் பார்க்கவும், "எங்க மச்சினர்" என்று அதிசயத்தோடு சொன்னாள்.

அவள் முழுதும் படிக்கும் மட்டும் பேசாமல் இருந்த அம்மாஞ்சி பிறகு, "என்ன எழுதியிருக்கிறான்?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை. நிலம் விற்றது தெரிந்திருக்கிறது. நல்ல விலைக்குப் போனதற்கு ஸந்தோஷம் விசாரித்திருக்கிறார்" என்றாள்.

"போகிறது. எங்கே அதில் பங்குக்கு வந்துவிட்டானோ என்று பார்த்தேன்" என்றான் அம்மாஞ்சி.

"இத்தனை காலம் திரும்பிப் பாராமல் இருந்துவிட்டு அப்படிக்கூட ஒருத்தர் வருவாரா?" என்றாள் மீனாக்ஷி.

"என் மாட்டான்? அன்று அவன் தம்பியின் உயிர் போய்க்கொண்டிருக்கும்பொழுது அவன் பேரில் வந்த போலீஸ் வாரண்டைக் கண்டு, எங்கே தன்னை என்ன பாதித்துவிடுமோ என்று விலகினவன்தானே அவன்?" என்றான் ஆத்திரத்துடன்.

"போலீஸா? வாரண்டா? அது என்ன?" என்று கேட்டாள் மீனாக்ஷி. பிறகுதான் இவ்வளவு நாளும் அவளுக்குத் தெரியக்கூடாதென்று அவள் தமையன் வைத்திருந்த ஒரு ரகசியத்தை ஆத்திரத்தில் தான் நினைவில்லாமல் சொல்லிவிட்டது அவனுக்குத் தெரிந்தது. இனி விளக்கிச் சொல்லாவிட்டால் மீனாக்ஷி கேட்பாளா? இருபது வருஷத்திற்கு முந்தி நடந்து மறந்துபோன விஷயத்தை இப்பொழுது சொல்லும்படி ஆயிற்று.

அவள் கணவன் ஸினிமா 'நக்ஷத்திரம்' ஒருத்தியிடம் மோகம் கொண்டு அவள் இருப்பிடம் தேடிப் போனான். அங்கு அது போலவே வந்திருந்த மற்றோர் ஆளோடு கலகம் மூண்டு சண்டை போட நேர்ந்தது. அதனால்தான் அன்று அவன் காய்ச்சலோடு ஜன்னி பிறந்து வீடு வந்தான். அந்த ஆள் இவன் தன்னை அடித்துக் காயப்படுத்திவிட்டதாகக் 'கேஸ்' போட்டுவிட்டான். இவன் வீட்டில் நினைவில்லாமல் கிடக்கிறான். அந்தச் சமயத்தில் இவன் பேரில் 'வாரண்ட்' வந்து நிற்கிறது. பிறகு என்ன? கிருஷ்ணமூர்த்தி நிலைமையைச் சமாளித்துப் பணம் கொடுத்துச் சமாதானம் செய்தான்.

"அப்பொழுது நானும் கூட இருந்தேன். அதில் சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாதென்று இந்த மனிதன் தூர விலகியே இருந்தான். அவ்வளவு நல்ல மனசு அவனுடையது" என்றான் அம்மாஞ்சி.

"எனக்கு என் இவ்வளவு நாளும் இத்தனை விவரமும் தெரியவில்லை?" என்று கேட்டாள் மீனாக்ஷி.

"உனக்குத் தெரிந்தால், அவன் அகால மரணத்தில் எற்படும் வருத்தத்திற்கு மேலாக அவன் கெட்ட நடத்தைக்கு அவமானம் தாங்காது உன் இருதயமே வெடித்துவிடுமென்று கிருஷ்ணமூர்த்தி பயந்து பரம ரகசியமாக யாவையும் செய்தான். பின்னாடியும் ரகசியமாகவே வைத்திருந்தான். நான் இன்று அசட்டுத்தனமாய் வெளியிட்டுவிட்டேன். இருபது வருஷம் கழித்து இதற்காக நீ வருந்தமாட்டாயென்று நம்புகிறேன். வருந்தவும் கூடாது" என்றான்.

சென்று போனதை நினைத்து அவள் மனசு வருந்தவில்லை. அண்ணாவின் அன்பை நினைத்துத்தான் உருகிவிட்டது. அவன் அந்தச் சமயத்தில் செய்த உபகாரம் பெரிதல்ல; கணவனின் நடத்தை அவள் இருதயத்தைப் பிளந்து மீளா வருத்தத்தில் ஆழ்த்திவிடும் என்பதற்காக அவன் ரகசியத்தைக் காப்பாற்றியதை நினைக்க நினைக்க நன்றி மேலிட்டு உணர்ச்சி பொங்கியது.

அவள் இந்தக் கோவிலைக் கட்டி முடிக்கப் பணம் உதவ நினைத்தாள். அவன் ஒரு கோயில் இடியாமல் காப்பாற்றினான். வெளிக்கோவிலை யாரும் பண உதவியால் கட்டிவிட முடியும். மனக் கோவிலையோ? அது இடிந்து போனால், அதைச் சரிபண்ணுவது என்பது சாத்தியமா? இப்பொழுது அவள் கணவன் விஷயம், அவளுக்குப் பிரமாதமாகப் படவில்லை. புதிதாய் அப்பொழுது அந்த இள வயசில் கேட்டிருந்தால் அவளால் தாங்கக் கூடியதா? ஏதோ தெய்வமே அவள் தமையன் உருவில் தோன்றி அவளைப் பொறுக்க முடியாத மனக் கஷ்டத்தினின்றும் அப்பொழுது காப்பாற்றியிருக்கிறது. கோவில் தெய்வம் இதைவிட என்ன செய்துவிட முடியும்?

இருபது வருஷத்தில் ஒரு நாள்கூட ஒரு சந்தர்ப்பத்தில் அவன் அதைப்பற்றி ஒரு வார்த்தை சொன்னதில்லையே? அவனே மறந்துபோயிருக்கிறான் நிச்சயம். அவள் அதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறாள்? அவனுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறபொழுது அவனுக்கு இல்லாமல் தெய்வத்திற்கு என்று நினைத்து வேறொரு குடும்பத்திற்குப் பணம் கொடுப்பதையா அவள் செய்வது? தெய்வமேயன்றோ அதற்குக் கோபித்துக்கொள்ளும்! கோவிலுக்கு இல்லை என்னாமல் ஏதோ சிறு தொகை கொடுத்துவிட்டு, மீதத்தை அண்ணா காலடியில் அவள் சமர்ப்பிப்பாள். அவளுக்குத் தெய்வம் அவன்தான். இவ்விதம் அவள் மனசு தானாகவே தீர்மானித்தது.

அதை அம்மாஞ்சியிடம் சொன்னபோது அவன், “உன் இஷ்டம். ஆனால் பழைய சமாசாரத்தை நான் வெளியிட்டதாகக் கிருஷ்ண மூர்த்தியிடம் சொல்லாதே. அவன் என்னிடம் அப்பொழுது சத்தியம் வாங்கிக்கொண்டிருக்கிறான். ஏதோ ஆத்திரத்தில் வாய் தவறிவிட்டது” என்று சொல்லிச் சென்றான்.

அவன் வாய் தவறினதே நன்மை என்று மீனாக்ஷி நினைத்தாள். இல்லாவிட்டால் பெரும் தவறன்றோ அவள் செய்ய இருந்தாள்? அதற்குக் கடவுள்கூட அவளை மன்னித்திருக்கமாட்டார். நன்றி மறப்பது அவர் விரும்பக்கூடியதல்ல. அவள் பணத்திற்கு அவள் தமையன்தான் உரியவன்.

இவ்விதம் தீர்மானித்தபொழுது அவள் பணத்தோடுகூடவே தனக்கு வரவிருந்த கீர்த்தியையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள். அவளுக்கே அது தியாகமென்று தெரியாது. ஒருபுறம் அன்பே உருக்கொண்ட தமையன்; இன்னொரு புறம் எல்லாம் வல்ல கடவுள் என்றல்லவா நிலைமை ஏற்பட்டிருக்கிறது? தமையனுக்குச் செய்வதில் கடமை இருக்கலாம்; புகழ் இல்லை. கடவுளுக்கு இருக்க நிழல் அவளால் என்றாலோ, அதில் அவளுக்குக் கிட்டும் புண்ணியம் அளவிடக்கூடியதா? உலகில் ஏற்படப்போகும் கீர்த்திக்குத்தான் ஓர் எல்லையுண்டா?

ஆனால் என்ன? மெல்ல எண்ணிப் பார்த்தாள். இருதயம் புண்பட்டுத் துடி துடிக்காமல் ஒரு சமயம் காப்பாற்றிய தமையனை எண்ணும்போது, “ஆம், அவன் தெய்வத்திற்கு மேற்பட்டவன்” என்ற முடிவுக்கு வந்தாள்.

எங்கள் பள்ளிக்கூடம்

ஏ. கே. செட்டியார்

எங்கள் பள்ளிக்கூடத்துக்குச் சொந்தமான கட்டிடம் இல்லை. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இல்லை. வருடக்கணக்காகப் படிக்க வேண்டிய அவசியமும் இல்லை; பட்டமளிப்பு விழாப் பிரசங்கமும் இல்லை. அப்படி இருந்தும், ஏராளமான மாணவ மாணவிகள் இங்கே படிக்க வருகின்றனர்.

சாதாரண மாணவன் 320 மணி நேரத்தில் பாடங்களைக் கற்றுக்கொண்டுவிடலாம். மணி ஒன்றுக்கு மூன்று ரூபாய் சம்பளம். புத்திசாலிகளான மாணவர்கள் பெரும்பாலும் 320 மணி நேரத்திற்குள்ளாகப் பாடங்களைக் கற்றுக்கொள்வதில்லை. அவ்வாறு கற்றுக்கொண்டால், அவர்களுக்கும் சாதாரண மாணவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

சம்பளம் முழுவதையும் கட்டிவிட்டு, பள்ளிக்கூடத்துக்குச் சில தினங்களாவது போகாமல் இருப்பதிலே சிலருக்குப் பிரியமுண்டு. நேரங் கழித்துச் செல்வதிலே சில மாணவர்களுக்கு விருப்பம் உண்டு. ஆனால் எங்கள் பள்ளிக்கூடத்தில், அத்தனை மாணவர்களும் பள்ளிக்கூடம் திறப்பதற்குப் பத்து நிமிஷத்துக்கு முன்பாகவே வாசலில் வந்து காத்து நிற்பார்கள். பள்ளிக்கூடம் ஆரம்பமாவதற்கு இரண்டு நிமிஷத்துக்கு முன்புதான் வேலைக்காரன் கதவைத் திறப்பான். கதவு திறந்ததோ இல்லையோ, அத்தனை மாணவர்களும் விழுந்தடித்துக்கொண்டு உள்ளே ஓடுவார்கள்.

எங்கள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் மொத்தம் நான்கு பேர். மாணவ மாணவிகள் சுமார் 120 பேர். ஆனால் இத்தனை மாணவ மாணவிகளும் ஒரே சமயத்தில் வர மாட்டார்கள். சிலர் காலையில் வருவார்கள்; சிலர் பிற்பகலில் வருவார்கள். ஏனையோர் இரவில் வந்து படிப்பார்கள். ஆசிரியர்களுக்கு 40 வயசுக்கு மேல் 50 வயசுக்குள் இருக்கும். ஆசிரியர்களைவிட வயசான மாணவ மாணவிகளும் எங்கள் பள்ளிக்கூடத்தில் உண்டு.

எங்கள் பள்ளிக்கூடம் எங்கிருக்கிறது, தெரியுமா? நியூயார்க் நகரில், மேற்கு முப்பத்து மூன்றாவது வீதியில், பத்தாவது நெம்பர் கட்டிடத்தில் ஆறாவது மாடியில் சில அறைகள் தாம் எங்கள் பள்ளிக்கூடம்.

ஆசிரியர்கள் மிக நல்லவர்கள். அடிக்கமாட்டார்கள்; கோபிக்க மாட்டார்கள். படிப்பில் கவனம் செலுத்தாத மாணவர்களைப் பார்த்து, "புத்தியைச் சிறிது உபயோகியுங்கள்" என்றுதான் கூறுவார்கள்.

மாணவர்கள் படிப்பில் தவறுவது இயற்கை. எங்கள் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் தவறு செய்தால், மாணவர்களுக்கு மட்டும் நஷ்டமல்ல; பள்ளிக்கூடத்துக்குத்தான் அதிக நஷ்டம். மூன்று லட்ச ரூபாய் பெறுமான விலையுயர்ந்த காமிராக்களை, அநுபவமில்லாத புது மாணவர்கள் கையாள ஆரம்பித்தால், அதன் விளைவு என்ன ஆகும்?

பதினெட்டு வயசு முதல் அறுபது வயசு வரையில் உள்ள மாணவ மாணவிகள் ஒரே பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறுவதென்றால் எவ்வளவு விநோதமாக இருக்கும்? இவர்கள்

22 தேசங்களிலிருந்து போட்டோத் தொழில் கற்றுக் கொள்வதற்காக வந்திருப்பவர்கள். இவர்களில் அறுபது வயசான அமெரிக்கப் பாட்டி ஒருவர் என்னுடன் பயின்றுகொண்டிருந்தார். ஒரு நாள் அவரைப் பார்த்து, "இளமை நிறைந்த அம்மையாரே! நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு வீட்டிலேயே இருக்கலாமே! பள்ளிக்கூடத்துக்கு வந்து ஏன் சிரமப் படுகிறீர்கள்? நீங்கள் படிப்பதால் யாருக்கு என்ன பயன்?" என்றேன்.

அந்த அம்மையார், "தம்பி, பிறருக்காக நான் படிக்கவில்லை. எனது திருப்திக்காகவேதான் நான் கற்றுக் கொள்கிறேன். எனக்கு வீடு வாசல் உண்டு. நிறையச் சொத்தும் இருக்கிறது. போட்டோக் கலையில் எனக்கு அதிகமான ஆர்வம் உண்டு. வீட்டில் இருந்துகொண்டு ஊர் வம்பு பேசாமல், எனக்குப் பிரியமான கலையைக் கற்றுக்கொள்வதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். தொழிலில் உங்களோடு போட்டி போடுவதற்காக நான் படிக்கவில்லை" என்று கூறினார். பாட்டியின் சுறுசுறுப்பையும் திறமையையும் கண்டு, பல மாணவ மாணவிகள் வெட்கப்பட்டிருக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் 'நெகட்டிவ்'களைக் கழுவுவதற்குப் பல இருட்டறைகள் உண்டு. இவைகள் மிகச் சிறியவை. ஒரே சமயத்தில் ஏழு அல்லது எட்டுப் பேர்கள் தாராளமாக வேலை செய்யலாம். சில சமயங்களில் பத்து அல்லது பன்னிரண்டுபேர்கள் அறைக்குள் வந்துவிடுவார்கள்.

ஒருவர்மேல் ஒருவர் விழுவதும், மன்னிப்புக் கேட்பதும், எவ்வித நிபந்தனையும் இல்லாமல் மன்னித்துவிடுவதும், இருட்டிலே பக்கத்தில் இருப்பவர் யாரென்று தெரியாமலேயே அவரோடு பல உலக விஷயங்களைப் பற்றிப் பேசுவதும் சாதாரணமாக நடைபெறும்காரியங்களாகும். 'நெகட்டிவ்'களைச் சில நிமிஷந்தான் 'டிவலப்' செய்யவேண்டும். அதிக நேரம் 'டிவலப்' செய்தாலும், அல்லது குறைந்த நேரம் 'டிவலப்' செய்தாலும் படங்கள் எதிர்பார்க்கும் அளவில் நன்றாக இரா. எனவே இருட்டறையில் உள்ளவர்கள் அடிக்கடி "மணி என்ன?" என்று கத்துவார்கள். அறைக்கு வெளியிலே வேலை செய்யும் மாணவர்கள் கடிகாரத்தைப் பார்த்து நேரம் சொல்வார்கள். ஒரு நிமிஷத்துக்குள்ளேயே மூன்று நான்கு பேர் மணி என்ன என்று கேட்பார்கள். இரண்டு அல்லது மூன்று முறை ஒழுங்காகப் பதில் கிடைக்கும். மீண்டும் தொந்தரவு கொடுத்தால், "நரகத்துக்குப் போ" என்ற பதில் தான் கிடைக்கும்.

இருட்டறைகளிலே நெகட்டிவ்களை டிவலப் செய்யும்பொழுது அருகில் இருக்கும் மாணவன், "தயவு செய்து என்னுடைய நெகட்டிவை இரண்டு நிமிஷத்தில் வெளியே எடுத்துவிடு" என்று கூறிவிட்டு, நமது பதிலை எதிர் பார்க்காமலே வேறு வேலை பார்ப்பதற்காக இருட்டறையிலிருந்து ஓடிவிடுவான். அவனுடைய நெகட்டிவிலே கவனத்தைச் செலுத்தினல் நமது நெகட்டிவ் கெட்டுவிடும். நமது நெகட்டிவையே கவனித்தால் அவன் நெகட்டிவ் கெட்டுவிடும். மற்றவர்கள் பேசுகிற விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தால் இரண்டு நெகட்டிவ்களும் கெட்டுவிடும்.

படம் பிடிப்பது கஷ்டமான காரியம். படம் பிடிப்பதைவிட, படம் பிடித்துக்கொள்வதற்காக ஆட்களைத் தேடுவது இன்னும் கஷ்டமான காரியம். பயிற்சி பெறும் மாணவன், படம் பிடித்துக் கொள்பவர்களை அரை மணி நேரமாவது உட்கார வைத்துத் தொந்தரவு கொடுக்காமல், படம் பிடிக்கமாட்டான். படம் பிடிப்பதற்காக யாராவது ஒரு சகோதர மாணவியையோ அல்லது மாணவனையோ கேட்டுக்கொண்டால் அவர்கள் சுலபத்தில் சம்மதிக்கமாட்டார்கள். ஏராளமாகப் பணம் கொடுத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள், தங்கள் வேலையை விட்டுவிட்டு, மற்றொரு மாணவன் படம் பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக அரைமணி நேரத்தை வீணுக்க விரும்புவார்களா? நாம் படம் பிடிக்கும்பொழுது அவர்கள் உட்கார வேண்டுமென்றும் அவர்கள் படம் பிடிக்கும்பொழுது நாம் உட்காருவது என்றும் சில மாணவர்களிடம் ஏற்பாடு செய்துகொள்வது உண்டு. இந்த ஏற்பாடும் பல சமயங்களில் திருப்தி அளிப்பதில்லை. நாம்

படம்பிடிக்கத் தயாராக இருப்போம்; ஆனால் படம் பிடித்துக்கொள்ளும் மாணவனுக்கு வேலை இருக்கும். ஒரு மணி நேரத்துக்குப் பிறகுதான் வர முடியும் என்று கூறுவான். இதற்காக வெளியிலுள்ள நண்பர்களை, வண்டிச் செலவு செய்து, காபி வாங்கிக் கொடுத்து, படம் பிடித்துக்கொள்வதற்காக அழைத்துவருவதும் உண்டு.

சிறிய மரப்பெட்டியில் இருபுறத்திலும் நெகட்டிவ்களை வைத்து, மூடிகள் போட்டுவிட்டுத்தான் படம் பிடிப்பது வழக்கம். படம் பிடிக்கும் பொழுது ஒரு பக்கத்துக்கு மூடியைத் திறந்து சில விநாடிகளில் அதை மறுபடியும் மூடிவிடவேண்டும். எந்தப் பக்கத்தில் படம் பிடிக்கப்பட்டதோ, அந்தப் பக்கத்தில் மூடியைத் திருப்பி மாட்டவேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பக்கத்து நெகட்டிவில் படம் பிடித்தாகிவிட்டது என்று தெரியும். சில மாணவர்கள் அவசரத்தில் இதைக் கவனியாமல் ஏற்கனவே இருந்தது போலவே மூடிவிடுவார்கள். பிறகு பெட்டியைக் காமிராவிலிருந்து எடுத்துவிட்டு, 'போகஸ்' செய்ய வேண்டும். மறுபடியும் பெட்டியைக் காமிராவுக்குள் வைக்கும்பொழுது, எந்தப் பக்கத்தில் படம் எடுத்தோம் என்ற சந்தேகம் உண்டாகிவிடும். சில சமயங்களில் படம் எடுத்த நெகட்டிவிலேயே மறு படமும் எடுப்பதுண்டு, இருட்டறைக்குச் சென்று நெகட்டிவ்களைக் கழுவிவிட்டு, வெளியே வந்து பார்த்தால், ஒரு நெகட்டிவில் இரு படங்கள் ஒன்றின் மேல் ஒன்றாகத் தோன்றும்; மற்றும் ஒரு நெகட்டிவ் வெறும் கண்ணாடியாக இருக்கும். இம்மாதிரி அடிக்கடி நேர்வது உண்டு.

எங்கள் பள்ளிக்கூடத்துக்கு அருகில் 'வில்லோபி' என்ற போட்டோ சாமான்கள் விற்கும் கடை ஒன்று இருக்கிறது. உலகத்திலேயே மிகப் பெரிய போட்டோச் சாமான்கள் விற்கும் கடை இதுதான். பள்ளிக்கூடத்துக்கு எவ்வளவு சம்பளம் கட்டுகிறோமோ, அதே தொகைக்கு 'வில் லோபி'யில் சாமான்கள் வாங்க வேண்டும்.

படிப்பு நான்கு மாதத்தில் முடிந்து விடுகிறது. எனது படிப்பைப் பொறுத்த வரை முக்கியமான அம்சம் ஒன்றுதான். எவ்வளவு விரைவாகக் கற்றுக்கொண்டேனோ, அவ்வளவு விரைவில் அத்தனையையும் மறந்து விட்டேன்!

உத்தரவாதமுள்ள

எமது பிரசித்திபெற்ற

கிருஷ்ண பிராண்டு

நெய்

நல்ல ருசியும், நீடித்த மணமும் ஒருங்கே அமைந்தது.

அன்றாடம் புத்தப் புதிய வெண்ணெயைக்கொண்டு முறைப்படி தயாரித்தது.

உங்களூர் ஸ்டோர்களிலும், மளிகைக் கடைகளிலும் எங்கள் "கிருஷ்ண பிராண்ட்" நெய்யையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்;

A. N. A. அளகிரிசாமி நாயுடு பிரதர்ஸ்

வெண்ணெய் — நெய் — வியாபாரம்

கோயமுத்தூர்

சாயத்திற்கு உத்தரவாதமுள்ள

ஜான்னடி & சூரத் சாட்டின் சுந்தடி ஜவுளிகள்—ஆர்யமாலா சேலை, சித்து,தாவணிகள்—பர்மா லுங்கிகள்—மனோன்மணி பிரிண்ட் தினுசுகள்—மற்றும் ஹிந்துக்களும் முகம்மதியர்களும் உபயோகிக்கக்கூடிய ஜவுளிகள் கிடைக்கும் இடம்.

K. R. ராமய்யர் ஸன்ஸ்

48, லக்ஷ்மிபுரம் குறுக்குத்தெரு : : மதுரை.

தந்தி: 'புவன'　　ஸ்தாபனம் 1906　　டெலிபோன் 3510

சுதேசி டைப் பவுண்டரி

51, குருவப்ப செட்டித் தெருவு

சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

தமிழ், ஹிந்தி, மலேயாளம், தேவநாகரி, தெலுங்கு, கன்னடம், உருது, கிரந்தம், மஹாராஷ்டிரம், ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பதினொரு பாஷைகளிலும் எழுத்துக்கள் தயாரிக்கப்படும் பவுண்டரி இது ஒன்றேதான்.

இதர எந்தத் தயாரிப்புகட்கும், தலைசிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும், கவர்ச்சியும், பொருந்தியனவாகும். விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால் மேனாட்டு முறைப்படி தயாரிக்கப் பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும், "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும், புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும், அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றவையாகும்.

"இம்மலரிலும் எங்கள் 'கணபதி புதிய தமிழ்' எழுத்துக்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன"

பூரா விவரங்களுக்கு எழுதவும்

T. A. சுப்பிரமணிய முதலியார்,
உரிமையாளர்.


ஊக்கம், உற்சாகத்துடன் தமது இயற்கையழகையும் கெடாமல் காக்க விரும்பும் ஸ்திரீகள் நரஸூஸ் காபி, டீயையே விரும்புகிறார்கள். ஏன்? அவை ஆரோக்கியத்தையும், சுறு சுறுப்பையும் அளிக்கும் உயரிய பானங்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். நரஸூஸ் காபி, டீ இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தவை என்பது தெரிந்தது தானே.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
சேலம் தென்னிந்தியா
MNK-23-TM

S. K. & Co.

ஜூன்னடி & கலர் சேலைகள்

S. K. & Co,

எங்களால் ரசாயன முறைப்படி தயாரிக்கப்பட்ட நம்பிக்கையும் உத்தரவாதமுமுள்ள

★ ஆஞ்சநேயர் ★ கிருஷ்ணன்

★ சுப்பிரமணியர் ★ சிங்கம் & போட்டோ

பில்லைகள் ஒட்டிய கெட்டிச்சாய ஜூன்னடி & கலர் சேலைகள் ஏராளமாக விற்பனையாகி வருகின்றன. விலை சகாயம். ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். சரக்கு வாங்குபவர்கள் மேற் கண்ட எமது பில்லைகளைக் கவனித்து வாங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:—உயர்தர ஜவுளிகளுக்குரிய கியாரண்டியுள்ள எமது S. K. & Co. ஜரிகை மார்க்குகளையே வாங்கி உபயோகியுங்கள்.

சுவாமி கிருஷ்ணா & கோ.,

20, லக்ஷ்மிபுரம் 2-ஆவது தெரு : : மதுரை.

சினிமா?

பி. எஸ். ராமய்யா எழுதியது.

சினிமாக் கலை சம்பந்தமான முதல் தமிழ் புஸ்தகம்.

சினிமாவில் சேர விரும்புகிறவர்களுக்கும் சினிமாவை நன்கு ரஸிக்க விரும்புகிறவர்களுக்கும் உதவியான நூல். கதை, டைரக்ஷன், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, எடிட்டிங், டெக்னிக் ஆகிய எல்லாம் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

300 பக்கங்கள். 12 முழுப் பக்கங்கள் படங்கள் விலை ரூ. 3-8-0

எதிர்பாருங்கள்

சர்வதேசக் கதைகள்

மாதம் ஒரு புஸ்தகம்

ஜனவரி முதல் வெளிவருகிறது

விலை அணா எட்டு : : வருட சந்தா ரூ. 6

ஏஜெண்டுகள் தேவை

விவரங்களுக்கு:

ஜோதி நிலையம்

74, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

"அவர் நம்பற்றி யோசித்திருந்தால்"

அவர்களிடம் அவருக்கு மிகுந்த அன்பு இருந்தது; ஆனால் அது மட்டும் போதாதே. அவர்கள் இப்போது அவதிப்படும் நிலையை அவர் முன்னதாகவே கண்டு, அதற்கேற்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அவர் ஒரு **பிரித்வி பாலிசி** வாங்கியிருந்தாரானால் அவர்கள் இப்போது புன்முறுவலோடு ஆனந்தமாக இருந்திருப்பார்கள்.

உங்கள் பிறந்த தேதியையும், உங்கள் குடும்பத்துக்கு ஏற்பாடு செய்ய விரும்பும் தொகையைப் பற்றியும் எங்களுக்கு விவரங்கள் அனுப்பினால், எவ்வளவு நன்றாக அதைச் செய்ய முடியும் என்பது பற்றி ஆலோசனைகள் கூறுவோம்.

பிருத்வி பரிபூர்ண பாதுகாப்பை அளிக்கிறது ★

தி பிருத்வி

★ இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ★

120. அரமனைக்காரன் தெரு., ஜி.டி. சென்னை

லிங்கம் கம்பெனி

நெய்

முதல் தரம் பெற்றிருப்பதற்கு

1. புத்தப் புதிய வெண்ணெய் உருக்குவதாலும்.

2. நல்ல மண்வாக்குள்ள இடத்திலும், பருத்தி விதை வரதட்டு ஏராளமாகக் கொடுத்து வளர்த்தக்கூடிய, பசு, எருமை வெண்ணெய்களால் தயார் செய்வதாலும்.

3. லாபமே பெரிதென்று கருதாமல், நெய் எந்த விதத்தில் நாள் பட்டாலும் கெடாமல் மேன்மைப்படும் என்னும் விஷயத்தை சிலவுகள் பொருட்படுத்தாமல, முறைகளைக் கை ஆளுவதாலும்.

4. புரப்ரைட்டர் 25 - வருடம் அனுபவம் வாய்ந்த N. K. சொக்கலிங்கம் அவர்களால் வெண்ணெய் பரிசோதனை செய்வதும், காய்ச்சும் பதம் பார்வை இடுவதாலும்.

லிங்கம் & கம்பெனி

ஒப்பண்ணக்காரத் தெருவு,

கோயமுத்தூர்.

கொள்ளைலாபம் அடிப்பவர்களைத் தடுப்பதற்கு நல்லவழி

அவசியமல்லாத சாமான்களை யுத்த காலத்தில் வாங்குவது புத்தியீனமான காரியம். கொள்ளைலாபம் அடிப்பவர்களுக்குத்தான் இது அனுகூலம். ஆகையால் நீங்கள் அதிகப்படியான விலையில் வாங்கும் ஒவ்வொரு தடவையும் நஷ்டம் அடைகிறீர்கள். இன்றே பணத்தைச் சேர்த்து வையுங்கள்! முக்கியமான தேவைகளுக்கு மட்டிலும் செலவு செய்யுங்கள். நாம் ஜெயம்பெற்றபின் சாமான்கள் சாதாரண விலைகளுக்குவரும். அதுவரை ஆடம்பரப்பொருள்கள் வாங்குவதை நிறுத்திவையுங்கள்.

உஷாராயிருங்கள் சேர்த்து வைத்தபணத்தை மதிப்பு குறையாத இடத்தில் போட்டுவையுங்கள். கூட்டுறவு சங்கம், இன்ஷூரன்ஸ், பாங்கி சேமிப்புநிதி, அல்லது போஸ்டாபீஸ் சேமிப்பு நிதி இவைகளில் பணத்தைப் போட்டுவையுங்கள். எல்லா வற்றிலும் மேலானது அரசாங்கக்கடன் பத்திரங்களும் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளும் வாங்குவதுதான்.

ஒரு நாளைக்கு எட்டணா மிச்சப்படுத்துங்கள்.

உங்கள் ரூபாய்களை கொள்ளை லாபக்காரர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு உண்டிப் பெட்டியில் போடுங்கள். ஒரு நாளைக்கு எட்டணாவோ அல்லது கூடுமானால் அதற்கு மேற்கொண்டோ சேர்த்து வைக்க முயலுங்கள். பிறகு இங்கு குறிப்பிட்டிருக்கும் வட்டி கொடுக்கக் கூடிய பாதுகாப்பான முதலீடுகளாக நிர்மமாய், பணத்தைமாற்றுங்கள்.

பாதுகாப்புடன் சேர்த்துவையுங்கள் ஜாக்கிரதையாய் இருங்கள் நீங்கள் சேர்த்து வைக்கும் பணத்தைக்காப்பாற்றும் விஷயத்தில். தங்கம், வெள்ளி, நகை, நிலம், கட்டிடம், சரக்குகள் முதலிய வற்றில் பணத்தைப்போடுவது புத்திசாலித்தனமல்ல. ஏனென்றால், அவைகளின் தற்காலவிலைகள் ஒருநாள் ஒரேயடியாய் கூட திடீரென இறங்கிவிடும்.

எதிர்காலத்துக்கு சேர்த்துவையுங்கள்

தேசியப் போர்முனையின் தேசிய வேண்டுகோள்.

CPU—297 *14

புதிய புத்தகங்கள்

காற்றிலே மிதந்த கவிதை

நாட்டுப்பாடல் பற்றிய அழகிய, இனிய கட்டுரைகள் - மு. அருணாசலம் எழுதியது. ரூ. 1 0 0

அரசியல் விமோசனம்

தற்கால இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் சிக்கலைத் தீர்ப்பதற்கு வழி காட்டி ராஜாஜி எழுதியது. ரூ. 0 8 0

நமது பிற்போக்கு

எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருப்பதாக நாம் ஆனந்தக் களிப்பெய்துகிறோம். ஆனால் எந்தத் துறையிலாயினும் முன்னேறியிருக்கிறோமா? துளியும் இல்லை. என்ன காரணம்? அவைகளை நிர்தாக்ஷண்யமாய் விளக்குகிறார் வெ. சாமிநாத சர்மா. ரூ. 1 0 0

அட்லாண்டிக் சாஸனம்

இந்தச் சாஸனத்தால் உலக சமாதானத்துக்கு வழி இருக்கிறதா என்பதை ஆராய்ந்திருக்கிறார் தி. ஜ. ர. ரூ. 0 8 0

தபால் செலவு தனி

இவை

சக்தி

வெளியீடுகள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY R. NARAYANASWAMI IYER,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, 55/56, MUNDAKANNI AMMAN KOIL STREET, MYLAPORE,
ASSOCIATE EDITOR: K. V. JAGANNATHAN.

ஜெனரல் பேடர்ஸ் ரோடு, மௌண்ட் ரோட், சென்னை.
மதுரை, காரைக்குடி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சினப்பள்ளி

பூர்ணப் பொலிவு

அஜாந்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூரணப் பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. பானம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

டீ தயாரிக்கும் முறை:—சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் விதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

குடும்பத்திற்கு ஏற்ற

ஒரே பானம் இந்தியன் டீ

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்ட்டாரால் வெளியிடப்பட்டது IK-2008 TR